118

THE

# LIFE OF JAMES. A. GARFIELD.

# ஜேம்ஸ். எ. கார்பீல்டு

## சரித்திரம்.

OFFICE OF THE REGISTRAR OF PUB...
6 APR 1914
MADRAS.

BY

A. SUBRAHMANYA AIYAR, B.A., L.T.,
*Assistant Master,*
TOWN HIGH SCHOOL, KUMBAKONAM.

446

PRINTED AND PUBLISHED BY
**T. KRISHNASWAMI AIYAR,**
**Hindu Educational Trading Company,**
**AT THE SRI KRISHNA VILASA PRESS,**
**KUMBAKONAM.**
**1914.**

V73, 1y7M31
N14
68169

[Registered.] [*Price As 10.*

THE

# LIFE OF JAMES. A. GARFIELD.

# ஜேம்ஸ். ஏ. கார்பீல்டு

## சரித்திரம்.

---

BY


A. SUBRAHMANYA AIYAR, B.A., L.T.,

*Assistant Master,*

TOWN HIGH SCHOOL, KUMBAKONAM.


---


OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - APR 1914
MADRAS



PRINTED AND PUBLISHED BY

**T. KRISHNASWAMI AIYAR,**

**Hindu Educational Trading Company,**

**AT THE SRI KRISHNA VILASA PRESS,**

**KUMBAKONAM.**

**1914.**


---

*Copy-Right Registered]* *[Price As 10*

TO

THE SUPREME BEING,

**THE AUTHOR OF EVERY THING IN THIS WORLD**

THIS WORK IS DEDICATED

BY HIS HUMBLE DEVOTEE

THE AUTHOR.

இம்மண்ணுலகில் எல்லாவற்றிற்குங் காரணமான

எல்லாம் வல்ல கடவுளுக்கு.

இப்புத்தகம் பணிவுள்ள பக்தனாகிய ஆசிரியனால்

மனோதத்தம் செய்யப்பட்டது.

# PREFACE.

This book is based upon William M. THAYER'S excellent book, "*From Log-Cabin to the White House*". To do full justice to the work would require another Thayer, well-versed in Tamil. In preparing this book I have constantly kept in view, nay, have been reminded, at every step, of the fact, that what is elegantly expressed in English cannot be as elegantly and adequately put in Tamil. The genius of the Tamil language is different in every way And it has been my humble aim to place before the Tamil reading public, an account in Tamil, however imperfect it may be, of the life of JAMES A. GARFIELD, the *Martyred President of the United States of America*, whose phenomenal career must be of perennial interest to all, be they Americans, Europeans, Asiatics, or even the semi-civilised people of the interior of Africa.

Rousseau in his "*Emile*" would not allow his hero to read books, but see that he learnt everything from the book of Nature; even he would allow *Emile* to read "*Robinson Crusoe*", that excellent book which is fresh to every one, whenever it is taken up, even though for the hundredth time. I have had occasion to read the book, "*From Log Cabin to the White House*", a number of times, and everytime found it new and interesting, So, hoping that it would be found to be interesting and instructive to my Tamil speaking brethren, I have ventured to bring out this book in Tamil.

This book has a peculiar charm, dealing, as it does, with *fact* and not with *fiction*, while it has all the fascination of *fiction.* There is the charm lent to *manual labour* by the fact that our hero, who was engaged in it, ennobled it by finding the true key to the mysterious and much-dreaded domain of what is called *drudgery.* The personality of Garfield gave a dignity to the work he took up whether it was the menial service of the sweeper or the exalted function of the President of the United States of America.

The *grand* lesson, which one cannot but gather from the life of James A. Garfield, is that *manual labour* has a value and a dignity that may not be found in any other field. Castes there are many in India; perhaps there are as many in other countries also But the noblest caste to which one should like to belong is, it will be admitted, on all hands, the class of men who will never shirk work, never be ashamed of doing what falls to their lot, be ever ready to put their shoulder to the wheel, show indomitable pluck, and reach, if possible, the top-most rung of the social ladder. All honour to *manliness* and *manual labour* !

The people of *India* cannot be told *too* often that they do not fully realise the importance and dignity of *manual labour.* No offence is meant to those bright exceptions that appear now and then

It is my earnest wish that this book should make the Tamil students of Southern India and the Tamil-knowing public realise the grand lesson that *manual labour* always goes to *make* a man and not *mar* him. There are many other virtues which our hero possessed, and that, in so striking manner that those who read the book cannot but be the better for reading it.

With regard to the style adopted in this book, it will be found that it is neither the high-flown and rigid style of the ancient Tamil scholars, not easily comprehended by the common run of people, nor the loose and vulgar Tamil that violates all rules of grammar and idiom.

With regard to the words borrowed from Sanskrit, I have put them in the Tamil garb wherever possible, in preference to the Sanskrit form in Tamil characters which, in my humble opinion, does not appeal to those Tamil scholars who have drunk deep at the fountain of Tamil *undefiled*.

With regard to the English words, their Tamil equivalents have, in almost all cases, been used. Words, the equivalents for which may not be found in Tamil, may and must be imported; and they are likely to be imported in large numbers, if the signs of the times are read aright. Ere long, we shall have translations of the important books in all the branches of Science into Tamil, which means a large addition of *foreign* words to the Tamil vocabulary. Such being the case, it is hoped that the existing Tamil equivalents of of English words will be given a chance to exist without being superseded by their more fortunate English compeers.

Every chapter has a suitable quotation from our Tamil poets. These quotations have been taken mostly from "*The Sacred Kural*", and "*Naladiyar*".

The book, as a first attempt, may have many shortcomings; but I hope that the indulgent public would take the good found in the book, and overlook the faults.

In this connection, I must not omit to acknowledge my indebtedness to the enterprising publisher Mr. T.Krishnaswami Aiyar, but for whom the work would not have been

placed before the public. It was at his instance that the work was taken up; and he has spared no pains to make the book as neat as possible.

I also take this opportunity to express my thanks to Mr. K. VENKATARAMA AIYAR, B. A., late of the Town High School, Kumbakonam, for his having kindly gone through the proofs and the many valuable suggestions he has made.

KUMBAKONAM, 1—3—14.

*A. Subrahmanya Aiyar.*

# முகவுரை.

இப்புத்தகம் ஆங்கிலபாஷையில் வில்லியம். எம். தேயர் என்ற பெயர்பூண்ட நூலாசிரியரால் எழுதப்பட்ட "*From Log Cabin to the White House,*" என்ற புத்தகத்தை முதனூலாகவைத்து எழுதப்பட்டது. முதனூலாசிரியர் எழுதியவிதம் மற்றொருவர் எழுதுவது முடியாதவிஷயம். ஆயினும் ஜேம்ஸ் ஏ. கார்பீல்டு சரிதையை யொருவாறாக எழுதி, சதிகாரனாற்கொலை செய்யப்பட்ட அந்த மானிடப்பிறப்பிற் சிறந்தவரான அமெரிக்காகண்டம் ஐக்கியமாகாணங்கட் கதிபதியாய் விளங்கியவரின் விசித்திர சரிதையைத் தமிழ்தெரிந்தவர்கள் வாசித்து நன்மையுமிலாபமுமடைந்து களிப்படைவார்களென்ற நம்பிக்கையுடனிப் புத்தகம் வெளியிடலானேன். இச்சரித்திரத்தை யெக்காலத்திலுமெத்தேயத்தா ரெவ்வளவுமுறை வாசித்தாலும், படிக்கும்பொழுதெல்லாம் மனத்துக்கின்பமேயொழிய வேறொன்று முண்டாகாது.

இப்புத்தகத்தை ஆங்கிலபாஷையிற் பன்முறை யான் வாசித்து அவ்விதம் வாசித்தபொழுதெல்லாம் மனத்துக்குற் சாகமடையலானேன். ஆனதுபற்றித் தமிழ்தெரிந்த மாணவர்களும் மற்றவர்களும், யான் ஆங்கிலபாஷையி லிப்புத்தகத்தை வாசித்து மனங்களித்தவிதம், வாசித்துக்களித்துப் பலனடைவார்களென மனந்துணிந்து, இப்புத்தகம் யான் வெளியிடலானேன். இப்புத்தகத்தில் கட்டுக்கதை யொன்றுமில்லாமல், உண்மையில்நடந்த சரித்திர மெழுதப்பட்டிருக்கிறது. மன உல்லாசங்கொடுக்கும் விஷயத்திற் கட்டுக்கதையிலுஞ் சிறந்ததாயிருக்கிறது. உடம்பு சிரமப்பட உழைத்தலொருவருக்கும் பிடிக்காதவிஷயம். ஆனால் இப்புத்தகத்தில், கதாநாயகர் உழைப்புக்கொரு வனப்பும் மரியாதையுமுண்டாகும்விதம், எவரையும்வெருளச்செய்யும் உழைப்பினதியற்

கையையறிந்து, அதனுருவத்தை வெளியிற்காட்டினுரெனச் சொல்லக்கூடும். கதாநாயகராகிய கார்பீல்டு எடுத்தவேலை, பெருக்கும் வேலையைப்போ விழிவானதா யிருந்தாலும், ஐக்கியமாகாணங்கட் கதிபதிவேலையைப்போற் போற்றத்தக்கதாயிருந்தாலும், அவரது சுபாவமானது அதற்கொரு மகிமைகொடுத்ததென்றே சொல்லவேண்டும்.

அவர் சரிதையிலிருந்து யாவருங் கற்றுக்கொள்ளவேண்டிய விஷயமொன்றுண்டு. 'உழைப்பினுஞ் சிறந்ததொன்று மில்லை' என்பது அவர் சரிதையிலிருந்து நன்கு வளங்குகிறது. நமது பரதகண்டத்தில் பலசாதிகளிருக்கின்றன. ஒருக்கால் பிறதேயங்களிலு மிவ்விதமிருக்கலாம் ஆனல் சாதிகளிற் சிறந்தசாதியார் வேலைக்குப் பின்வாங்காமல், தங்களுக்கேற்பட்ட வேலையைச் செய்து, விடாமுயற்சியோடு வந்தவேலையைச் செய்துமுடித்து, முடியுமானல் வேலைத்திறமையால் சிறந்த பதவியடையும் மனிதர்களே யொழிய வேறில்லை.

உழைப்பின் மகிமையைப்பற்றி யெவ்வளவுமுறை இந்துக்களுக்கு எடுத்துச் சொன்னுலும் போதாதென்பது யாவருக்குந் தெரிந்தவிஷயம். ஆனல் இப்படிச் சொல்லுவதால் உழைப்பின் மகிமையை இந்துக்களொருவரு மறிந்தாரில்லையென்று நினைக்கக்கூடாது. மேற்சொல்லி யதப்படி யறிந்தவர்கட்காகமாட்டாது. இப்புத்தகத்தைப் படிக்குந் தென்னிந்தியாவிலிருக்குந் தமிழ்தெரிந்த மாணவர்களும் மற்றவர்களும் உழைப்பினுற் கேடொருபொழுது மொருவனடையாமற் பெருமையே யெப்பொழுது மடைவானென்பதுநன்கு அறிவார்களென நம்புகிறேன். மேலும் இப்புத்தகத்தில் அரிய பெரிய குணங்களனேக மனுபவத்தி லரிய பலனளிப்பதைக் கண்டு அக்குணங்களைப் படிப்போ ரனுசரிக்கக் கூடுமென்பது மொருவிருப்பம்.

இப்புத்தகத்திலடங்கிய தமிழ் வசனமுறை யாவருமெளிதிலறியக்கூடியதாயும் தமிழ்மாணவர் வாசித்துப் பயனடையக்கூடியதாயு மிருக்குமென்று நம்புகிறேன். பலவிடங்களிற் சந்திசேர்த்து எழுதாமலிருப்பினும், சிற்சிலவிடங்களிற் சேர்த்தெழுதியுங் காட்டியிருக்கிறேன். ஸம்ஸ்கிருதபாஷையிலிருந்து வந்தசொற்

களை ஆன்றோரெடுத் துபயோகித்தபடித் தமிழிலெழுதும் விதத்திலேயே இயன்றமட்டும் எழுதியிருக்கிறேன். தமிழிற்சிறந்த புலவர்கள் ஸமிஸ்கிருத வார்த்தைகளை யவ்விதமே தமிழிலெழுத விரும்புகிறார்களில்லை. எவ்விதமேனும் விஷயம் எளிதில் நன்கு விளங்கவேண்டும் தமிழ்நூலார் சொல்லும்விதஞ் செய்வதிற் குறை யொன்றுமில்லையென்பதும், விஷயம் நன்றாகத் தெரிய வருகிறதென்பதும் எல்லோரு மொப்புக்கொள்ளக் கூடியவையானபடியா லவ்விதஞ்செய்யலானேன்.

ஆங்கில பாஷையிலுள்ள வார்த்தைகளுக்குக் கூடியமட்டிற் றமிழிலுள்ள சரியானபதங்களையே உபயோகித்திருக்கிறேன். ஆங்கிலவார்த்தைகளுக்குச் சரியான தமிழ்வார்த்தைக ளில்லாவிடின் ஆங்கிலவார்த்தைகளையே தமிழிலுமுபயோகிக்கலாம். நெடுநாட் செல்லுமுன் தமிழ்ப்பாஷையில் ஆங்கிலபாஷையினின்று எண்ணிறந்த வார்த்தைகள் நியாயமாக வரப்போகின்றன வென்பதற் கையமில்லை. அனேக ஆங்கிலசாஸ்திரங்கள் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுத் தமிழ்மட்டுந் தெரிந்தவரெல்லோருங் கற்கும் படியாகச் செய்யப்படப்போகின்றன வென்பது நமக்குத் தெரிந்த விஷயம். ஆனதுபற்றி ஆங்கில பதங்கட்குச் சரியாயுள்ள தமிழ்ப் பதங்களை யுபயோகித்து அவற்றையும் நமது நண்பர்களாக நடத்திக் கொண்டாட வேணுமென்ப தென தபிப்பிராயம்.

ஒவ்வோரத்தியாயத்திலும் முதலில் ஒருசெய்யுளாவது, பழமொழியாவது அச்சிடப்பட்டிருக்கிறது. அப்படி அச்சிட்டிருப்ப தவ்வத்தியாயத்துக்குப் பொருந்தியதா யிருக்குமென்று நம்புகிறேன். மேற்சொல்லிய செய்யுட்களெல்லாம் 'திருவள்ளுவநாயனார் திருக்குறள்,' 'நாலடியார்,' 'ஔவையார் செய்துள்ளபாடல்கள்' முதலியவற்றினின்று எடுக்கப்பட்டிருக்கின்றன.

முதன்முதல் சிறியேன்எழுதிய விப்புத்தகத்திற் குறைகள் பலவிருக்கும். பெரியோர்கள் சிறியேன்செய்த பிழைகளைத்தள்ளிக் குணத்தைக் கிரகிக்கும்படி யான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மேலும், ஊக்கத்துடன் புத்தகங்க ளச்சிட்டுவரும் மகா-ா-ா-ஸ்ரீ டி. கிருஷ்ணஸ்வாமி அய்யர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க இப்புத்தக மெழுதப்பட்டிருக்கிறது. அவரது

முயற்சியன்றி யிப்புத்தகம் வெளியிடப்பட்டிருக்காது. ஆகையால் யான் அவருக்கு வந்தனமளிக்கிறேன்.

மேலும் இப்புத்தக மச்சிட்டுவந்தகாலையில், கும்பகோணம் 'டவ்ன் ஹைஸ்கூல்' என்ற வித்தியாசாலையில் உபாத்தியாயர் வேலையிலிருந்த மகா-ள-ள-ஸ்ரீ கே. வேங்கடராமய்யர் அவர்கள் செய்த உதவிக்காக அவருக்கும் வந்தனமளிக்கிறேன்.

கும்பகோணம்,
1—3—14.

அ. சுப்பிரமணிய அய்யர்.

THE

# LIFE OF J. A. GARFIELD.

## "குடிசையினின்றுங் கோயினுட் சென்றது"

அல்லது

## "ஜேம்ஸ் ஏ. கார்பீல்டு" சரித்திரம்.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 6 - APR 1914 MADRAS.

### 1 - அத்தியாயம்.

தாமரைபோன்முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன்பட்டுப் புனுதசவ்வா-தாமழன் மற்
றெங்கேபிறந்தாலுமெள்ளாரே நல்லோர்கள்
எங்கே பிறந்தாலுமென்.

"ஒரு பொழுதும் வாழ்வதறியார் கருதுப
கோடியும் மல்லபல"

**1799**-வருடத்தில் தாமஸ்கார்பீல்டு என்னும் பெயருள்ளவர், அமெரிக்கா தேசத்தில் ஆஸ்டீகோ ஜில்லாவில் வொர்ஸெஸ்டர் என்னுமிடத்தில் விவசாயத்தொழில் செய்து வந்தார். அந்த வருஷத்தில் அவருக்கு ஒரு பிள்ளை பிறந்தது. அந்த மகவுக்கு அப்ராம் என்னும் பெயர் வைத்தார். இந்தக் குழந்தையுடன் அவருக்கு அனேக குழந்தைகளுண்டு. ஆகையால் அவர் பெரிய குடும்பி. அப்பிள்ளைக்கு இரண்டு வயது ஆவதற்கு முன் தந்தை திடீரென்று நோய் கண்டு இறந்தார். அவர் இறந்த பொழுது அவருடைய மனைவியும் பல குழந்தைகளும் பணமின்மையால் திக்கற்றவர்களானார்கள். அப்ராம் தாயாருக்கு அவ்வளவு குழந்தைகளை வைத்துக்கொண்டு போஷிக்க முடியவில்லை. ஆகையால் அயல் வீட்டுக்காரனொருவன் அப்ராமென்னுங் குழந்தையைத் தன் வீட்டில் வளர்த்துவந்தான்.

அந்தக் குழந்தைக்குப் பத்து வயதான பொழுது, மிகுந்த தெய்வபக்தி, தைரியம், விடாமுயற்சி, புத்திகூர்மை, உபாயம், வேலை செய்விக்குந்தன்மை முதலிய நற்குணங்கட்குப்பெயர்போன, (France) பிரான்ஸ் தேசத்தினின்று (America) அமெரிக்கா தேசத்திற்குக் குடியேறிச் சென்ற பாலு (Maturin Ballou) வம்சத்தில் வாழ்க்கைப்பட்டுக் கணவனை இழந்த பாலு அம்மாள், அந்தப்பக்கத்திற்குக் குடியேறி, அயலில் வசிக்க ஆரம்பித்தாள். அவளுக்கு ஜேம்ஸ் பாலுஎன்று ஒருபிள்ளை, எலிஸா என்று ஒருபெண். அந்தப்பெண் அப்ராம் என்பவனுக்கு ஒரு வயது சின்னவள். எலிஸாவும் அப்ராமும் சேர்ந்து விளையாடுவது வழக்கமாயிற்று. எலிஸா மிகவும் அழகுள்ளவள். நல்ல நிலைமைக்கு வருவாளென்று சொல்லக் கூடிய பெண். இருவருக்கும் நேசமுண்டாயிற்று.

எலிஸாவுக்குப் பதினன்கு வயதாயிற்று. அப்பொழுது எல்லாரும் (Ohio) ஓஹியோ என்னுமிடத்திற்குக் குடியேறுவதில் ஆசையுள்ளவர்களா யிருந்தார்கள். பாலு அம்மாளுக்கும் அந்த ஆசையுண்டாயிற்று; அவள் பிள்ளைக்கும் அந்த விஷயத்தில் மிகுந்த அவா எற்பட்டது. ஆகையால் தங்களுடைய வீடு முதலியவற்றை விற்றுவிட்டுச் சாமான்களை ஒரு வண்டியில் போட்டுக்கொண்டு ஓஹியோவிற்குப் புறப்பட்டுப்போனார்கள். எலிஸாவும், அப்ராமும் மிகவும் விசனத்துடன் பிரியவேண்டியதாய் நேரிட்டது.

அந்தப் பிரயாணம் ஆறுவாரம் ஆயிற்று. இப்பொழுது ஈராறு மணியில் முடியும். அவர்கள் வழியில் பட்டகஷ்டம் சொல்லி முடியாது. ஆனால் தைரியம், விடாமுயற்சியுள்ளவர்களானபடியால், தாங்களெண்ணின விடஞ்சேர்ந்து அங்கே வசிக்கத்தொடங்கினார்கள். ஐந்தாண்டு கழிந்தபின், அப்ராம் கார்பீல்டுக்கும் ஓஹியோசுரம் உண்டாயிற்று.—அதாவது அவனும் ஓஹியோவுக்குப் போக ஆவலுள்ளவனானன். அப்படிப் போவதற்குத் தான் கூடி விளையாடிக்கொண்டிருந்த எலிஸாவைப் பார்க்கவேண்டுமென்பதுங் காரணமாயிருந்திருக்கக்கூடும். ஆகையால் அவனும் புறப்பட்டுப் போய் நியூபாக் என்னுமிடத்தில் வேலையிலமர்ந்தான். அப்பொழுது அவன் எல்லாஞ்செய்யத் துணிவுள்ளதும் அபஜயம் இன்ன

தென்று தெரியாததுமான இருபது பிராயம் உள்ள வாலிபன். அங்கு வேலை செய்துகொண்டிருக்கையில் எலிஸாவிருக்குமிடத்தைப்பற்றி விசாரித்துக்கொண்டிருந்தான். அவர்களிருந்தவிடத்தை யறிந்துகொண்டு அவ்விடத்திற்குப் போனான். போகவும் பானு அம்மாள் அவனை யுபசரித்தாள். எலிஸா அவன் வரவைப்பார்த்து மனதுவந்தாள். அவனுக்குண்டான திருப்தியோ அளவிறந்தது. எலிஸாவுக்கும் கார்பீல்டுக்கு முண்டான பாலிய நேசம் வரவர அதிகமாயிற்று. இரண்டு வருடமாவதற்கு முன் 1821-வருஷம் பீப்ரவரி மாதம் 3-தேதியில் அப்ராம் கார்பீல்டு எலிஸாவென்னும் மாதுசிரோமணியை மணம்புரிந்தான்.

கல்யாணமானவுடன் இருவரும் நியூபாக் என்னுமிடத்தில் 20-அடி நீளம் 18-அடி அகலமுள்ள ஒரு மரக்குடிசையில் வசிக்கப் போய்ச்சேர்ந்தார்கள். அவர்களொருவருக்கொருவரிருந்த நேசமானது குடிசையைக் கோயிலாக்கிற்று. அவர்களிருந்த குடிசையில் இக்காலத்தில் நாகரீகமுள்ள ஜனங்களால் உபயோகிக்கப்படும் யாதொரு சாமானுமில்லாமலிருந்தது. அவ்வீட்டிலிருந்தவையெல்லாம் கார்பீல்டு என்பவரால் செய்யப்பட்டவை.

இவ்விடத்தில் ஒன்பது வருஷகாலம் அவர் வசித்தார். இவ்விடத்தில் விவசாயத்தொழில் செய்ததுமன்றி அப்பொழுது வெட்டப்பட்ட ஓர் ஆற்றில் வேலையேற்றுக்கொண்டு பணம் சம்பாதித்தார். இக்காலத்தில் அவருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. ஆனால் அவர் அவ்விடத்திலேயே இருப்பதில் திருப்தியற்றவராய்த் தன்னுடைய பெரும் குடும்பத்திற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய விரும்பினார். அதற்காக ஆரெஞ்சு என்னுமிடத்தில் 50-எகரா பூமி வாங்கினார். அவ்விடத்தில் அவர் சகலன் ஆமாஸ் பாயின்டன் என்பவரும் பூமி வாங்கியிருந்தார். முதலில் ஒருகுடிசை கட்டப்பட்டது. மற்றொன்று கட்டும் வரையில் அதில் இரண்டு குடும்பத்தாரும் வசித்தார்கள். இரண்டாவதும் கட்டிமுடிந்தது. அப்பொழுது அவர்களைச்சுற்றி எழு மைலில் வரையில் வேறுவீடில்லை: அப்ராம் கார்பீல்டு தன் புதுவீட்டுக்கு 1830-வருஷம் ஜனவரி மாதத்தில் குடிபோனார். முன்னிருந்த குடிசையைவிடப் புதுக்குடிசை பெரியது. இக்குடிசையிற்றான் 1831-வருஷம்

நவம்பர் மாதம் 19-தேதியில் (James. A. Garfield) ஜேம்ஸ் ஏ கார்பீல்டு பிறந்தார். அப்ராம் என்பவன் ஆஜானுபாகு, அழகிற் சிறந்தவன். வைத்த சுமை தாங்கக்கூடிய பலமுள்ளவன். இவ்வித மான நிர்யானுஷமானவிடத்தில் வீடு கட்டிக்கொண்டு காட்டை யழித்துச் சாகுபடிக்குப் பூமியுண்டுபண்ணி விவசாயஞ் செய்து சாப் பிடும் திறமையுள்ளவன். அவனுக்கிருந்த புத்திக்குச் சாதாரண மான நிலையிலிருந்திருந்தாலே அவன் பெயரும் கீர்த்தியும் நாட்டி யிருக்கக்கூடும். ஆனால் அவனிருந்த சஷ்டதசையில் தன்னுடைய குடும்பத்தைத் தவிர மற்ற யாதொன்றைப்பற்றியும் கவனித்த வனல்ல. தேகவலிமை எவ்வளவு அவனுக்கிருந்தும், அவன் மனி தனைையால் நோய்வராமல் காத்துக்கொள்ளச் சக்தியற்றவனாயிரு ந்தான்.

ஒரு நாள் திடீரென்று காட்டில் "நெருப்பு! நெருப்பு!!" என்னும் சப்தம் அவன் காதில்பட்டது. கோடை காலத்தில் காட்டில் தீப்பற்றிக் காடு, வீடு, பயிர் முதலியன எரிபட்டு அழி வதுண்டு. அந்தச் சப்தத்தைக் கேட்டவுடன் நெருப்பு வரும் வழி யைப் பார்த்து "நம்முடைய வீட்டை நோக்கி வருகிறது. நம்மைக் கஷ்டப்படுத்துமென்று நினைக்கிறேன். (Mehetabal) மேகத வல்லி, வீட்டுக்கு ஓடிப்பாரையைக்கொண்டுவா," என்று கார்பீல்டு சொன்னார். பெண் தகப்பனுக்கு உதவி செய்து கொண்டிருந் தாள். ஐந்து நிமிஷத்திற்குள் பாரை வந்துவிட்டது. கார்பீல்டு மனைவியும் கைக்குழந்தைதவிர மற்றைக் குழந்தைகளும் வீட்டிற்கு வெளியில் வந்து நெருப்பு வருவதைக் கவனித்தார்கள்.

"நெருப்புடன் போர் செய்து வெல்லவேண்டும், இல்லா விடில் சூரியாஸ்தமனத்திற்குள் வீடு சாம்பலாய்விடும்," என்று கணவன் சொல்ல, "அப்படித்தான் ஆகும் போலிருக்கிறது, இந் தக் காட்டுத்தீ பயங்கரமானது," என்று மனைவி சொன்னாள்.

"மேகதவல்லி, நீயும் தாமஸும் என்பின் வாருங்கள்," என்று சொல்லிக்கொண்டு வீட்டண்டைக்கு நெருப்பு வராமலிருக்கச் செய்யத் தன்னுடைய வீட்டைச்சேர்ந்த கொல்லையைத் தாண்டிக் காட்டோரத்தை விரைவிலடைந்தார்.

தாமஸும் அவன் சகோதரியும் பின் சென்றார்கள். அவர் அங்கு சென்றதும், நெருப்பு அவ்விடம் நெருங்கி விட்டது. நெருப்புடன் போர் தொடங்கிற்று. கார்பீல்டு தன்னுடைய குழந்தையைக் காப்பாற்றத் தகப்பன் போடும் சண்டை திறத்துடன் போட்டுத் தன்னுடைய வீடு எரிபடாமலிருக்கும் பொருட்டு மனுஷாதீத முயற்சி செய்தார். சுமார் இரண்டு மணி காலம் ஜூலை மாதத்துக் கடும் வெயிலில் தன்னுடைய வலிய புயத்தால் நெருப்புடன் போர் புரிந்தார். ஒரு சமயத்தில் இவருக்கு ஜயம் உண்டாகும் போற்றோன்றிற்று. மற்றொரு சமயம் நெருப்பு ஜயித்துவிடும் போலிருந்தது. ஆனால் கடைசியில் நெருப்பு வீட்டைப் புசியாமல் வேறு வழியில் துரத்தப்படவே, இவரே வென்றாரென்று சொல்லலாம்.

இப்படி வேலை செய்து களைத்து ஒரு வெட்டுண்ட மரத்தின் மீது களைப்பாற உட்கார, குளிர்ந்த காற்று வீசவும் அவர் உடம்பு நிலைமைகெட்டு அன்று இரவில் அவருக்குத் தொண்டைக் கட்டும் ஜ்வரமும் வந்து உடம்பு முழுவதும் நோவக்கிடைகொள்ளாமல் படுக்கையில் அங்குமிங்கும் புரண்டு கொண்டிருந்தார். சீக்கிரத்தில் உயிர்துறந்து விடுவார்போலிருந்தது. விடியற் காலத்தில் மேகதவல்லி பாயின்டன் வீட்டிற்கும், தாமஸ் மற்றொருவர் வீட்டிற்கும் அவர்களுடைய உதவிக்காக அனுப்பப்பட்டார்கள். சுற்றி அனேக மயிலுக்கு வயித்தியன் இல்லை. உதவிக்கு அழைக்கப் பட்டவரிலொருவர் தனக்கு வைத்தியம் தெரிந்தவராகச் சொல்லிக்கொண்டு வைத்தியம் செய்ய, நோயாளி சீக்கிரத்தில் மரித்தார். எலிஸா அவரைப் பிழைக்கும்படி செய்ததெல்லாம் பயனற்றதாய்ப் போயிற்று. இறக்கு முன் தன்னுடைய அருமை மனைவியை நோக்கி, "நான் இந்தக் காட்டுப் பிராந்தியத்தில் நான்கு கன்றுகள் நட்டுவைத்திருக்கிறேன். இப்பொழுது உன்னுடைய கையில் அவைகளை ஒப்புவித்துவிட்டுப் போகிறேன்," என்று சொன்னார். அப்படிச் சொன்னது தன்னுடைய நான்கு குழந்தைகளைக் குறித்தது.

"விதிவலிது" என்பது மெய்யென்பதற்கு உதாரணமாய் இந்தக் குடும்பத்தலைவன் தன்னுடைய மனைவி மக்களைக் கதியற்று

நீத்துவிட்டு உயிர் துறந்தான். சந்தோஷமாய்க்காலங்கழித்தவர்கட்கு இந்தக் கஷ்டம் நேரிட்டது. கடைசிக் குழந்தை ஜேம்ஸுக்கு ஒன்றரை வயது. தந்தையை இழந்த கஷ்டமறியக்கூடாத குழந்தையாதலால், அந்த வருத்தத்தை யடையவில்லை.

அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் துக்கம் விசாரிக்க வந்தார்கள். அவர்கள் நாலைந்து குடும்பத்தார்களே. சுற்றுப் பத்து மைல் தூரத்திலுள்ள வீடுகள் நாலைந்துதான். அவர்களுடைய உதவியைக் கொண்டு ஒருவிதமான பெட்டியில் அந்த உயிரற்ற உடலை அடக்கஞ்செய்து வீட்டண்டையிருந்த கோதுமை வயலின் ஓர் புறத்தில் புதைத்தார்கள். அவர்களிருந்த கதியற்ற நிலைமையைச் சொல்லி முடியாது. கண்ணுக்கு எட்டினமட்டும் காடு; நடுவிலொரு குடிசை; வீட்டைக்காத்த தலைவன் உயிர் துறந்தான்! துக்க சாகரத்தில் முழுகியிருந்த கணவனிழந்த மனைவியும், தந்தையிழந்த மக்களும் அந்தக் குடிசையில் கதறிக்கொண்டிருந்தார்கள். அவர்களிருந்த திக்கற்ற நிலைமையைப்பற்றி வாசிக்க மனம் பதைக்குமானால், அவர்களுக்கு எப்படியிருந்திருக்கும்? "திக்கற்றவருக்குத் தெய்வமே துணை" என்றபடி, அவர்கள் ஒருவாறு ஆறுதல் கொண்டு காலங் கழித்து வந்தார்கள். அப்பொழுது மாரிகாலம் நெருங்கிற்று. சுற்றிலும் மாரிகாலத்துப் புயலடிக்க பூமிமேல் பனியுறைந்துகிடக்க, எங்கும் பயம் உருவெடுத்தாற்போல் வியாபித்து நிற்கக் காட்டுப் பிராந்தியத்தில் கணவனை இழந்து ஆடவருதவியற்று ஒண்டியாய்க் குழந்தைகளுடன் ஏழைத் தன்மையிலிருத்தல் மகா அசாத்தியமான செயல். இவ்விதமான நிலைமையில் இரவெல்லாம் ஓநாய் முதலிய காட்டு மிருகங்கள் ஊளையிடக் குழந்தைகள் தூங்காமல் பயப்பட்டு விழித்திருக்கும். ஆனால் கைக்குழந்தை ஜேம்ஸோ யாதொன்றும் அறியாமல் குழந்தைப் பருவமானபடியால் சாதாரணமாக வளர்ந்து வந்தான். அந்த மாரிகாலத்தில் அவர்கள்பட்ட கஷ்டம் அளவிறந்தது. வேனிற்காலம் வாராதென்றே அவர்கட்குத்தோன்றிற்று. ஆனால் காலம் செல்வது ஒரே விதமானபடியால் வேனிற்காலமும் வந்தது. அக்காலத்துக்குரிய மனத்துக்கு இனிமையான தோற்றம் எங்கும் புலப்படவாரம்பித்தது. மூடுபனியும் உறைபனியும்

உடன் சென்றன. ஆற்றில் ஜலம் ஓட ஆரம்பித்தது. பட்டமரஞ் செடிகள் துளிர்விட்டன. வெளியில் எல்லாம் கண்ணுக்கு அழகாய் நின்றும், அவர்களுக்குச் சந்தோஷம் உண்டாகவில்லை கையிலோ பணமில்லை; கடனுமதிகரித்தது. வீட்டில் சாப்பாட்டுக்கு ஆகாரம் குறைந்துகொண்டு வந்தது. குழந்தைகளுக்கு ஒரு வேளைச்சோறுகூடக் கிடைக்காமல் போய்விடலாமென்று நினைக்கும்படியாயிருந்தது.

இந்தக்கஷ்ட நிலைமையில் கார்பீல்டு அம்மாள் தனக்கு ஆறுதல் சொல்லியன்புடன் பழகிய பாயின்டன் என்பவரிடம் யோசிக்கப் போனாள்.

" உன்னைப்போல் நான்கு குழந்தைகளை வைத்துக்கொண்டு ஒரு ஸ்திரீ விவசாயத்தொழிலைச் செய்து ஜீவனம் செய்ய முடியாது. ஆகையால் நீ உன்னுடைய இடத்தை விற்றுவிட்டு வேண்டியவர்களிடம் வந்திருப்பது உசிதம் என்று நினைக்கிறேன், " என்று பாயின்டன் சொன்னார்.

" அப்படியானால் நான் என்னுடைய கணவனைக் கோதுமை வயலில் ஒண்டியாய் விட்டுவர வேண்டியிருக்குமே, அது என்னாலாகாது, " என்று சொன்னாள்.

" ஆனால் வேறு யாது செய்யக்கூடும் ?"

" நீர் சொன்னபடி நான் நிலத்தை விற்றுக்கடனைத் தீர்த்து வேண்டியவர்களிருக்குமிடத்திற்குக் குடிப்போவதற்குண்டாகும் செலவைச் செய்துவிட்டால், கையில் பாக்கிப்பணம் மிகக்கொஞ்சமாயிருப்பதோடு கூட, பயிரிட ஒரு குழி நிலங்கூட இல்லாமல் போய்விடுமே ! "

" உன்னைச் சேர்ந்தவர்கள் உன்னைக் கைவிடுவார்களா? அவர்களுடைய உதவியிருக்குமல்லவா ? உனக்கேன் கவலை ?"

" யாசகப் பிழைப்பு ஒரு பிழைப்பா ?"

" இழித்தக்க செய்தொருவனுரவுணலிற்
பழித்தக்க செய்யான் பசித்தறவன்றே
விழித்திமைக்கு மாத்திரையன்றேயொருவ
னழித்துப் பிறக்கும் பிறப்பு."

என்னுடம்பில் பலமிருக்கிற வரைக்கும் என் குழந்தைகளைக் காப்பாற்ற எனக்குக் கடவுள் சக்திகொடுத்தருள்வார். இதற்கு அச்சமில்லை. என்னருமைக் கணவன் இந்த வீட்டைத் தன்னுயிரைக்கொடுத்துக் கட்டினார். இந்த வீட்டைவிட்டுப்பிரியேன்.''

'' அப்படியானால் உனக்கு வீடு நிலத்தை விற்க மனமில்லை போலிருக்கிறது?'' ''முழுவதும் விற்கவேண்டியதில்லை. கடனைத் தீர்க்கவேண்டிய வளவு விற்றால் போதுமே!''

'' அப்படி எனக்கு இதுவரையில் தோன்றவில்லை. ஒருகால் அப்படித்தான் செய்யவேண்டியிருக்கலாம். நாம் அதைப்பற்றி யோசிப்போம். அதற்குத் தகுந்த ஏற்பாடு நான் செய்கிறேன்,'' என்று சொல்லிப் பாயின்டன் தன் வீட்டுக்குச் சென்றார்.

''தனக்குவமையில்லாதான் றாள்சேர்ந்தார்க்கல்லால்
மனக்கவலை மாற்றலரிது''

என்றபடி, அந்தஅம்மாளுக்குக் கடவுளின்தியானத்தால் தைரியம் பிறந்தது.

பதினொருபிராயமுள்ள தன்னுடைய பிள்ளை தாமஸ் என்பவனையழைத்து வைத்துக்கொண்டு அவனை வயதுமுதிர்ந்த பெரியவனாகப்பாவித்து, அவனிடத்தில் விஷயங்களையெல்லாம் விஸ்தாரமாய்ச் சொன்னாள். அந்தப் பிள்ளையும் நன்றாய்விஷயங்களை அறிந்துகொண்டு ''அம்மா, நான் உழுது நடவுசெய்யமுடியும்; மேலும் கோதுமைதெளித்து, விறகுவெட்டி, மாடுகறந்து உனக்கு உதவி புரிவேன். பயப்படவேண்டாம்,'' என்று சொன்னான். '' குழந்தாய், அவ்வளவுசெய்ய உனக்கு வயதாகவில்லை. ஆனால் நாருமிவரும் சேர்ந்து ஒருவாறாகக் காரியத்தைநடத்தலாம்.''

''முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை
யின்மை புகுத்திவிடும்''

என்று திருவள்ளுவநாயனார் திருவாய் மலர்ந்தருளியது திண்ணமென்பதற்கு இவர்செய்து பலனடைந்தது தகுந்த உதாரணம்.

''எனக்கு இவ்விடத்தைவிட்டுப் போகமனமில்லை,'' என்று தாய்சொன்னாள்.

"நாம் போகவேண்டிய அவசியம் ஒன்றுமில்லை. எனக்கு இங்கிருக்கத்தான் இஷ்டம். நான் கஷ்டப்பட்டு வேலைசெய்கிறேன்," என்று சிறுவன் மொழிந்தான்.

"அளவுக்குமிஞ்சிக் கஷ்டப்பட்டுச்செய்வது உனக்குமுடியாது. கோதுமை வயலைச்சுற்றி வேலிமுழுவதும் போட்டுவிடவேண்டும். அது சிரமமாயிருந்தாலும் நாமிருவரும் வேலைசெய்துமுடிக்கலாம் என்று நினைக்கிறேன்," எனத் தாய்கூறினாள்.

இவ்விதமாய்த் தாயும்பிள்ளையும் ஆலோசனைசெய்து அதற்குத்தகுந்த ஏற்பாடுகள் செய்தார்கள்.

# 2- அத்தியாயம்.

"அழன்மண்டு போழ்தினடைந்த வர்கட்கெல்லா
நிழன்மரம்போனே ரோப்பத்தாங்கிப்-பழுமரம்போற்
பல்லார்பயன்று ய்ப்பத்தான்வருந்தி வாழ்வதே
நல்லாண்மகற்குக்கடன்"

கார்பீல்டு அம்மாள் நிலம்விற்கிற சமாசாரம் பாயின்டன் மூலமாய் அவ்விடத்தில் குடியேறவிரும்பிய ஒருவர் கேள்விப்பட்டு அந்த அம்மாள் நிலத்திலொருபாகத்தை வாங்கினர். விற்றுவந்தபணம் கடன்தீர்க்கத்தான் சரியாயிருந்தது.

"கடன்றீர்ந்தாற் கவலைபோம்," என்றபடி இவர்கட்குக்கவலை நீங்கிற்று. விற்கப்பட்டதுபோக பாக்கிநிலத்தை வ்வஸாயத்திற்குத் தயார்செய்ய அந்தச்சிறுவன் ஆரம்பித்தான். கிட்டவசித்த ஒருவர் தன்னுடைய குதிரையை வேலைக்குக் கொடுத்துதவ, தாமஸ் பகல்முழுவதும் சிரமப்பட்டு வேலைசெய்து பூமியைச்சீர்திருத்தி, விதை விதைத்து நடவுபோட்டு, வயதுவந்த குடியானவன் செய்யும் விதம்செய்தான். அவனுடையதாயார் வயலுக்கு வேலிசட்டுவதில் தன்சிரமத்தைப் பாராமல் வேலைசெய்தாள். இவ்விதமாக இருவரும் வேலைசெய்ய வயல்வேலை சரியாய் நடந்துவந்தது. தாமஸ் அவனுடைய சகோதரிகள் போய்வாசிக்கப் பள்ளிக்கூடம் அவ்விடத்திலில்லை. "பட்டகாலிலே படும்" என்றபடி இவ்வளவு கஷ்டத்துடன் மற்றொருகஷ்டம் இவர்களுக்கு நேர்ந்தது. வீட்டிலிருந்த கோதுமை குறைந்துவிட்டது. அதிகம்வாங்கப் பணமில்லை. இத்தகைய நிலைமையில் கையிலிருந்த தான்யத்தை அளந்து மாசூல்காலம் வரையிலிருந்த நாட்களை எண்ணிப்பார்த்ததில் நாளொன்றுக்கு வழக்கம்போல் சாப்பிடக் கையிலிருப்பது போதாது என்றுதெரிந்துகொண்டு, உடனே தாயானவள் தினம் இரண்டுவேளைச் சாப்பாட்டுடன் வசிக்க ஆரம்பித்தாள். சிலவாரங்கள் இவ்விதமாய்ச்சென்றன. அப்பொழுது தான் செய்தகணக்குப் பிழையென்று தாயானவள் அறிந்து தனக்குத் தினம்ஒருவேளைச் சாப்பாடு சாப்பிட்டுக் குழந்தைகளுக்குச்சரிவர ஊணூட்டிவந்தாள்.

குழந்தைகளருமை தாய்க்கல்லவோ தெரியும்? இப்படிக்கஷ்டப்பட்டு வசித்த தாயைக்காப்பாற்றிவந்தது கடவுளென்பது திண்ணம்.

"வறுமையி லொருவற் கடவுளைத்தொழிற்
பெறுவது திண்ணம் பேணுவதெல்லாம்"

என்று சொல்வது பொய்யாகுமோ?

ஆனால் மாசூல் காலம் வந்தது. தானியம் நிரம்பக்கிடைத்தது. தானியத்தைக்காணவும் தரித்திரம் பறந்தது. தாயும் குழந்தைகளும் சந்தோஷப்பட்டார்கள். வயிறார உண்ண உணவு கிடைத்துவிட்டது. இம்மாதிரியான கஷ்டம் இந்தக்குடும்பத்தாருக்கு இனிமேல் கடவுள் கிருபையால் வராமலிருந்தது.

1835–வருஷத்தில், இவர்களிருந்த விடத்திற்கு அருகில் ஒரு குடும்பத்தார் வசிக்கவந்தார்கள். அவர்களுக்கு விதைவிதைக்க வேண்டியிருந்தது. கார்பீல்டுஅம்மாள் அந்தக்காரியத்தைச்செய்து கொஞ்சம் பணம் சம்பாதிக்க இடம் ஏற்பட்டது. அவர்களுக்கு உழுவதற்கும் அடிக்கடி மரம் வெட்டவும் ஆள்வேண்டியிருந்தது. அந்த வேலையைத்தாமஸ்செய்து பணம் முதல் முதலில் சம்பாதித்தான். ஆகையால் அந்தக்குடும்பம் அந்தப்பக்கம்வந்தது இவர்கட்கு உதவியாயிருந்தது.

முதல்முதல் சம்பாதித்த பணத்தைத் தாயாரிடத்தில் கொண்டு வந்து கொடுத்து ஆனந்தத்தையடைந்து தாயைநோக்கி,

"இப்பொழுது சக்கிலியன் வந்து நம்முடைய ஜிம்மிக்குக் ஒரு ஜோடி பாதரக்ஷை செய்யலாம்" என்று தாமஸ் சொன்னான்.

"சரிதான். உன்தம்பிக்கு முதல் முதல் ஜோடுபோடுவதற்கு நீ சம்பாதித்தபணம் உபயோகப்படுகிறதற்கு உனக்கு ஒரு நாளும் வருத்தம் உண்டாகாது" என்று தாய்சொன்னாள்.

"எனக்கு வருத்தம் உண்டாகாது, திருப்தியேதான் உண்டாகும். ஜிம்மிக்கு நிரம்பநாளுக்கு முன்னமே நான் ஜோடு போட்டிருப்பேன். ஆனால் பணம் இதுவரையிலும் சம்பாதிக்க வழியில்லாமல் போயிற்று" என்று தாமஸ் சொன்னான்.

" சக்கிலியனுக்குச்சொல்லியனுப்பு; சீக்கிரம் செய்" என்று தாய் கூறினாள். அப்பொழுது ஜிம்மிக்கு மூன்றரைவயது. அது வரையிலும் அந்தக்குழந்தை ஜோடு போட்டதில்லை ஆகையால் இந்த விஷயத்தில் ஜிம்மிக்குச் சந்தோஷம் உண்டாயிற்று. அந்தப்பிரதேசத்தில் சக்கிலியனகப்படுவது கஷ்டம். ஆனாலும் ஒருவன் அகப்பட்டான். ஜோடு செய்து முடிக்கப் பெற்றது. ஜிம்மி அதைப் போட்டுக்கொண்டு அளவிறந்த ஆனந்தமடைந்தான்.

இவ்விடத்தில் சொல்லவேண்டிய தொன்றுண்டு. ஆப்ராம் கார்பீல்டும் அவர் மனைவியும் தெய்வ பக்தியுள்ளவர்கள். தினந்தோறும் கடவுளைத்தியானம் செய்துவிட்டுத்தான் மற்றைக்காரியம் செய்வது அவர்களுக்கு வழக்கம்.

# 3-ம் அத்தியாயம்.

''எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்.

இப்படி யிருக்கும் பொழுது ஒருநாள் அவர்களிருந்த விடத்திற்கு ஒன்றரைமைபில் தூரத்திலிருந்த கிராமத்தில் பள்ளிக்கூடம் வைக்கப்போகிறார்களென்று ஒரு சமாசாரம் வந்தது. அந்தசமாசாரம் உண்மைதானென்று ஒரு வாரத்தில் தெரியவந்தது.

''அம்மா, ஜிம்மிபள்ளிக்கூடத்திற்குப்போகவேண்டும்''என்று தாமஸ்சொன்னான்.

''ஜிம்மி போகவேண்டியதுதான். நீயும் போனால் என்மனத்துக்குத்திருப்தியாயிருக்கும்.''

''எனக்கும் போக ஆசையிருக்கிறது. ஆனால் நான்போனால் வீட்டில் விவசாய முதலிய வேலைகள் செய்ப ஒருவருமில்லையே. என் சகோதரிகளும் ஜிம்மியும் போகலாம். நான் வீட்டிலிருந்து வேலைசெய்து நம்முடைய சாப்பாடு முதலிய செலவுக்கு வேண்டியது சம்பாதிக்கிறேன்'' என்று தாமஸ் தன்னுடைய மனம் தன் சகோதரிகளும், ஜிம்மியும் படிப்பதிலும் தான் வீட்டில் விவசாயத்தைப் பார்ப்பதிலும் களித்திருத்தலைக் காட்டும்படி மறுமொழி சொன்னான். இதைக்கேட்டதாய் 'என்னருமைக்குழந்தாய், நீசொல்லுவது சரிதான்'' என்றுமனங்களித்துக்கூறினாள்,

''இதுஜிம்மிக்குத்தகுந்தசமயம்'' என்று தாமஸ் சொன்னான். அந்த வார்த்தையிலிருந்து தாமஸ் தன்னுடைய தம்பியைப்போல் புத்திசாலிகள் அகப்படமாட்டார்களென்று நினைத்து அவன் நல்ல நிலைமைக்கு வருவானென்று எதிர்பார்த்தா னென்பதற்கு ஐயமில்லை. அயலார்களும் தாமஸ் அப்படி யெண்ணினானென்று சொல்லுவதுவழக்கம். பள்ளிக்குக் குழந்தைகளை யனுப்பஎற்பாடுகள் சுருசுருப்பாய் நடந்தன. தாமஸும் சகோதரிகளும் இந்தப் பிரதேசத்துக்கு வருமுன்பள்ளிக்குப் போய் வழக்கமுண்டு. ஆகை

யால் இது புதிதல்ல. மேலும் தாயார் அவர்களுக்கு நிரம்பப்போதித்து இருந்தாள். ஜிம்மிக்கோ தாயார்கதைசொல்லுவதும் அவன் கேட்ட பலகேள்விகளுக்குப்பதில் சொல்லுவதும் வழக்கம். அப்படியானாலும் ஜிம்மிக்கு சற்றேறக்குறைய எல்லா எழுத்துக்களும் தெரியும். மேலும் அவர்கள் வேதபுஸ்தகத்திலுள்ள கதைகள் அனேகம் அவனுக்கு நன்றாய்த்தெரியும். அக்குழந்தை ஒரு முறை கேட்டதைமறவான், எப்பொழுதும் பரபரப்பும் விருவிருப்பும் உள்ளகுழந்தை. தாய்மட்டும் மல்ல, மற்ற எல்லாரும் அக் குழந்தை முன்னுக்கு வருங்குழந்தை யென்றே நினைத்தார்கள். அவனிருந்த விடம் பிரகாசமாயிருந்ததென்று சொல்லலாம்.

"ஜிம்மி பாதிவழிகூட நடக்க முடியாதே! என்னசெய்கிறது?" என்று தாமஸ்சொன்னாள்.

"அதைப்பற்றி நான்பார்த்துக்கொள்ளுகிறேன். அவன் களைப்பன்றி பள்ளிக்குப் போவான்" என்று அவன் தமக்கை மேகதவல்லி சொல்ல "அதெப்படி?" என்று தாமஸ் கேட்க, "நீ சும்மா பார்த்துகொண்டிரு, தெரியும்" என்று விஷயத்தைக்காட்டாமல் அவள் சொன்னாள். உடனே தாமஸ் "நீ என்ன ஏற்பாடு செய்திருக்கிறாய்?" என்று வினவ, "அவன் நான் ஜிம்மியைப்பள்ளிக்கு முதுகின்மேல் சுமந்து கொண்டு போகப்போகிறேன்" என்று விடைமொழிந்தாள்.

அதற்குத்தாமஸ் "உன்னால் தூக்கமுடியுமா? கஷ்டமாயிருக்குமே" என்று சொல்ல "அவன் கஷ்டமென்ன? எனக்கு எளிதாகவேயிருக்கும்" என்று கூறினாள்.

பள்ளிக்குப் போக வேண்டிய நாள்வரவே மேகதவல்லியும் அவள்தங்கையும் ஜிம்மியும் காலையில் புறப்பட்டுப்பள்ளிக்கூடத்திற்குப் போனார்கள். ஜிம்மிமேகதவல்லி முதுகில் சவாரிசெய்ய ஆனந்தப்பட்டான். தாயார் மிகவும் சந்தோஷப்பட்டாள். தாமஸோ ஆனந்தக்கடலில் முழுகியிருந்தான் என்றே சொல்ல வேண்டும்.

# 4 - அத்தியாயம்.

## விளையும் பயிர் முளையிலே.

கார்பில்டு அம்மாள் இராட்டினம் வைத்து நூற்றுக் கொண்டிருந்தபொழுது குழந்தைகள் பள்ளியிலிருந்து திரும்பி வீட்டுக்குவந்தார்கள். வீட்டுக்கு வேண்டிய வஸ்திரங்களை வீட்டிலேயே நெய்து கொள்ளவேண்டியிருந்தபடியால் இராட்டினமும் தறியும் வீட்டிலே இருந்தன. அவைகள் இவர்களைப் போலொத்தவர்களுக்கெல்லாம் இன்றியமையாதன.

"அம்மா, நல்ல காலங்கழித்தோம்" என்று மேகதவல்லிசொல்லிக்கொண்டே தங்கையையும் ஜிம்மியையும் அழைத்து உள்ளே வந்தாள்.

"இருபத்தொரு மாணாக்கர்கள்!" என்று அவள் தங்கை மிகுந்த உற்சாகத்தோடுசொன்னாள். "லாண்டருடைய குழந்தைகளும் அங்கு வந்தன. அவர்கள் நம்மைப்போல் இரட்டிப்புத்தூரம் நடக்க வேண்டியிருக்கிறது."

"நம்முடைய ஜிம்மி பள்ளியில் எப்படியிருந்தான்?" என்று தாய்வினவ "அவனுக்கு அதுபிடித்ததாயிருந்தது. அவன் எழுத்துக்களை வரிசையாகச் சொன்னான். பிறகு உபாத்தியாயரை ஒரு எழுத்தைக் காட்டி அந்த எழுத்துப்பெயர் யாதுகாரணத்தால் அதற்குக் கொடுக்கப்பட்டது? என்று கேட்டான்" என்று மேகதவல்லி மறுமொழிகூறினாள்.

"வழக்கம்போல்தான் அவன் கேட்டான்" என்று தாமஸ் கலகலவென்று சிரித்தான். குழந்தைகள் திரும்பிவந்ததைப் பார்த்து அப்பொழுதுதான் தாமஸ் தோட்டத்திலிருந்து உள்ளே வந்தான் "வாத்தியாயருக்கு வேண்டியவேலை ஜிம்மி கொடுப்பான்— வாத்தியாயர் பதிலென்ன சொன்னார்?"

"ஜிம்மியைப்போல்அவரும் சிறு பிள்ளையாயிருந்தபொழுது எழுத்துப்பெயர் அவர் கற்றுக்கொண்டதாகச்சொன்னார்" என்று

மேகதவல்லிசொன்னாள். அப்பொழுது தாமஸ்ஜிம்மியைத் தூக்கியெறிந்து பிடித்துச் சந்தோஷமாயிருக்க, ஜிம்மி தன்னுடைய மழலைச்சொல்லால் தான் செய்தகாரியங்களைச்சொல்ல முயன்றான்.

“ஜிம்மி உனக்குச் சவாரி பிடித்திருந்ததா?” என்று தாமஸ் வினவ “எனக்குப்பிடித்தது” என்று உற்சாகத்துடன் சொன்னாள்.

“மேகதவல்லிக்குப் பிடித்ததைவிட உனக்குப் பிடித்திருக்கும்,” என்று தாமஸ்கூற, மேகதவல்லி, “எனக்கும் வேடிக்கையாய்த்தான் இருந்தது” என்று சொல்ல, “உனக்கு மிகுந்த களைப்பு உண்டாகவில்லையா?” என்று தாமஸ் கேட்டான்.

“எனக்குக்களைப்பு அதிகமாயுண்டாகவில்லை,” என்று விடைதரத் தம்பி தாமஸ் “வழிமுழுவதும் சுமந்து வந்தாயா?” என்று கேட்டான்.

“அனேகமாய் வழிமுழுவதும் என்று சொல்லலாம். ஆனால் திரும்புகாலில் கொஞ்சதூரம் நடந்து வந்தான் அவன் தூக்குவதற்குப்பளுவாயில்லை” என்று மறுமொழிசொன்னாள்.

“பள்ளியில் சும்மா இருந்தானா?”

“சும்மாவிருந்தானென்றே சொல்ல வேண்டும், ஒருதரம் தன்னிடத்தை விட்டு மற்றொரு பிள்ளையிடம் சிநேகம் செய்யப் போனான்.”

“உபாத்தியாயர் என்னசொன்னார்?”

“அவனைக்கையைப் பிடித்து அவனுடைய இடத்திற்குத் திருப்பி யழைத்துக் கொண்டு விட்டார். ஒவ்வொரு மாணாக்கனும் தனக்குண்டான விடத்தை விட்டுப்போகக் கூடாதென்று சொன்னார்.”

“இவ்விதமாய்க் குழந்தைகள் பேசுவதைத்தாய் ஆனந்தமாய் கேட்டுக் கொண்டிருந்தாள். பிறகு “குழந்தைகாள் பள்ளிக்கூடத்தை நீங்கள் பிரியத்தோடு கொண்டாடுவது எனக்கு மனம் களிக்கச்செய்கிறது. நீங்கள் பள்ளியில் உள்ள பலனை முழுவதுமடையமுயலவேண்டும். இப்பக்கத்தில் பள்ளிக்கூடம் எளிதில் கிடைக்கிற விஷயமல்ல,” என்று தாய் சொன்னாள்.

பள்ளிக்கூடங்கள் இக்காலத்திலுள்ளவை போலவல்ல. முதலில் உபாத்தியாயருக்குத் தெரிந்தது மட்டு. பிள்ளைகள் மைலில் கணக்காய் நடந்து பள்ளிக்குப் போக வேண்டியிருந்தபடியால் வருஷத்தில் சிலகாலத்தில் மட்டும் தான் பள்ளிக்கூடமிருக்கும். அனேகபள்ளிக்கூடங்களில் எழுதப்படிக்கத்தான் கற்றுக்கொடுத்தார்கள். சிலபள்ளிகளில் கணிதசாஸ்திரமும் பூகோளசாஸ்திரமும் கற்றுக்கொடுப்பதுண்டு. பின்சொல்லிய பள்ளிகளொன்றுக்கு கார்பீல்டு குழந்தைகள் கல்வி பயிலச்சென்றார்கள்.

இப்பள்ளிகளில் சிறந்தவைகளில் உபயோகிக்கப்பட்ட புத்தகங்கள் நான்கு :— (1) எழுத்துக்கூட்டப்பியாசப்புத்தகம் (2) ஆங்கிலவியாச புத்தகம் (3) ஒரு கணக்குப்புத்தகம் (4) ஒரு பூகோள சாஸ்திரப்புத்தகம்.

இந்நான்கு புத்தகங்களும் அவர் கற்றுக்கொண்டதற்கு நான் கெல்லைகள் போலமைந்தன. இப்புத்தகங்களெல்லாம் கார்பீல்டு வீட்டிலிருந்தன. இவைகளைத்தவிர வேறு சில புத்தகங்களுமிருந்தன. ஆனால் அவ்விடங்களில் புத்தகங்கள் அருமையானவைகள். அவர்களுக்குப் புத்தகங்களில்லாவிட்டாலும் புத்தியதிகமாயிருந்ததென்பது பின்வரும் சரித்திரத்தில் நன்றாய் விளங்கும்.

ஜிம்மி பள்ளிக்குப்போன முதல்பக்ஷத்தில் நடந்தவைகளையெல்லாம் சொல்லுவது சாத்தியமில்லை. இரண்டு விஷயங்களை மட்டும் கூறுவோம். ஜிம்மிக்கு வேதபுத்தகக் கதைகள் நன்றாய்த் தெரியும். தனக்குத் தெரியாததைக் கண்டால் அதை அறிந்துகொள்ளவிரும்புவான். அவன் கேட்கும் கேள்விகள் உசிதமாய்ப் பிறருக்குத் தோன்றாதவையாயுமிருந்தமையால் உபாத்தியாயர்களும் மாணாக்கர்களும் ஆச்சரியப்பட்டுச் சந்தோஷித்தார்கள். கேட்பவன் குழந்தை யென்று கொண்டாடினார்கள்.

ஒரு நாள் மத்தியானம் ஒரு பெரியமாணாக்கன் ஜிம்மியை மேஜையின் மீது உட்காரச்செய்து, "ஜிம்மி, இப்பொழுது நீ வாத்தியாராயிரு ; கேள்விகள்கேள். நாங்கள் மாணாக்கராயிருந்து மறுமொழிசொல்லுகிறோம்," என்று சொன்னான்.

"அப்படியானால் உங்களிடங்களில் உட்காருங்கள்" என்று ஜிம்மி பரமசந்தோஷத்துடன் சொன்னான்.

பிள்ளைகளும் பரமசந்தோஷத்துடன் உட்கார, "ஜிம்மி, கஷ்டமான கேள்வி போடாமல், காரியத்தை நடத்து," என்று ஒரு மாணாக்கன் சொன்னான்.

ஜிம்மி தனக்கு மிகவும் நன்றாய்த்தெரிந்த வேதபுத்தகக்கதைகளைப்பற்றியகேள்விகள் கேட்கச் சில கேள்விகள் சுலபமாயிருக்க எல்லாரும் பதில் சொன்னார்கள். சில கேள்விகளுக்கு விடை அவர்களுக்குத் தெரியாமல் போகவே, அவனே விடை கூறினான்.

இம்மாதிரியாக நான்குவயதாகாத குழந்தை சுமார் பதினைந்து நிமிஷகாலம் தன்னைச் சுற்றிலுமிருந்தபிள்ளைகளைக் கேள்விகேட்டது மிகவும் அற்புதமான காரியம். அச்சிறுபிள்ளை கண்டது கேட்டது மறவாமல் விஷயங்களை யறிந்து கொண்டதைப்பார்த்தால் அவனை ஏகசந்தைக்கிராகி யென்றே சொல்லவேண்டும்.

"கண் கண்டது கைசெய்யும்," என்று சொல்லுவது அந்தப்பிள்ளைக்குத்தகும். நல்லதைப்பாத்தாலும் செய்வான், கெட்டதைப்பார்த்தாலும் செய்யாமலிரான். ஆகையால் அவனெதிரில் கெட்டது செய்து காண்பிப்பது அபாயகரமான குற்றம்.

ஒரு நாள் மேகதவல்லி முதல் பக்ஷம் முடியும் சமயத்தில், "மாரிகாலம் முழுவதும் பள்ளிக்கூடம் இருக்கும் போலிருக்கிறது. ஜேகப்பு தகப்பனார் வாத்தியார் சம்பளத்துக்குப் பணம் சேகரிக்கிறார்," என்றுசொன்னாள்.

"உனக்கு யார்சொன்னார்கள்? நான்கேள்விப்படவில்லையே."

"அநேக பிள்ளைகள் சொன்னார்கள். அவர்கள் எல்லாரும் பள்ளிக்குப் போகப்போகிறார்களாம்."

"உங்களுக்கு வாவு விடப்போகிறார்களா?"

"ஆம்: இரண்டு அல்லது மூன்றுவாரம் விடப்போகிறார்கள். மாரிகாலத்திற்குப் பள்ளிக்கூடம் டிசம்பர் மாதத்திலாரம்பிக்கும்."

"உங்களுக்குப் பள்ளிக்கூடம் இருப்பதைப்பற்றி எனக்குச் சந்தோஷம்."

"அப்படியானால் நான் போகக்கூடுமோ?"

"ஆம். ஜிம்மியைத் தவிர நீங்களெல்லாரும் போகலாம் அவன் குழந்தை; அவ்வளவுதூரம் மாரிகாலத்தில் போக அவனால் முடியாது. நீயும் அவனைத் தூக்கிக்கொண்டு போவது கஷ்டம்."

"தாமஸ் வருவானா?"

"அவன் பள்ளிக்கு வருவானென்று நினைக்கிறேன். உங்களுக்காக அவன் நிரம்ப உழைத்திருக்கிறான். இப்பொழுதாவது அவன் போகவேண்டும்."

பத்து நிமிஷங்கழித்துத் தாயாரும் பிள்ளையாகிய தாமஸ் என்பவனும் பள்ளிக்குப் போவதைப்பற்றியோசனை செய்து தாமஸ் வீட்டிலேயே வாசிப்பதாய்ச் சொல்ல, அவன் பள்ளிக்குப் போகாமலே முடிந்தது. மாரிகாலத்தில் இரண்டு பெண்களும் பள்ளிக்குப்போனார்கள்.

காட்டுப்பிரதேசத்தில் நீடித்த மாரிகாலத்து மாலைப்பொழுதில் அடுப்பு எரியும் வெளிச்சத்தில் வாசிப்பது சௌகரியமாயிருக்கும். அவர்களுக்கு விளக்கு வைத்துக்கொண்டு வாசிப்பது முடியாத காரியம். இந்தமாரிகாலத்தில் ஜிம்மி எழுத்துக் கூட்டிப்படிக்கக் கற்றுக்கொண்டான். அடுத்த கோடைகாலத்தில் அவன் கையில் ஒருசிறுவர்க்கானபுத்தகம் கிடைத்தது. அப்புத்தகத்தில் பின்வரும் பொருளுள்ள வாக்கியத்தை வாசித்தான்.

"மழை கூரையின் மீதுபடபடவென்று அடித்துக்கொண்டு வந்தது," உடனே தாயாரிடத்தில் ஓடிவந்து, "அம்மா, மழை படபடஎன்று அடிப்பதை நானே கேட்டிருக்கிறேன்," என்று பரபரப்புடன் சொன்னான்.

"அப்படியா?" என்று தாயார் கேட்க, "ஆம், ஆம், நான் கேட்டிருக்கிறேன்," என்று மறுபடியும் அதைஉரக்க வாசித்து, "அம்மா, அப்படித்தான் மழை அடிப்பதை நான் கேட்டிருக்கிறேன்," என்று மிக்கயோசனையோடு சொன்னான். அப்பொழுது தான் அவன் வார்த்தைகளைக்கொண்டு விஷயங்களைத் தெரிவிக்கிறோம், என்று அறிந்துகொண்டான்.

அது முதற்கொண்டு மனத்தாலறியக்கூடியவிஷயங்களையறிய ஆரம்பித்தான். விஷயங்களில் விருப்பம் உண்டாகவே, விஷயங்களைக்குறிக்கும் வார்த்தைகளடங்கிய புத்தகங்கள் விரும்பத்தக்கவையாயின. ஆகையால் புத்தகம் என்ருல் போதும், மற்றவையொன்றையும் மதியான். எப்பொழுதும் முன்கூறின புத்தகத்தையே கையில் வைத்துக்கொண்டு வாசித்துக்கொண்டிருப்பான். இதெல்லாம் அவனைந்து பிராயமாவதற்குப் பின் அவன் ஆறு வயதாவதற்குமுன் அந்தப்புஸ்தகம் அனேகமாய் அவனுக்குப்பாராமல் வந்துவிட்டது. அவனுக்கு அச்சிறு பிராயத்திலேயே உண்டான புத்தக ஆசையைப்பார்த்த அவன் தாயார் அவன் கல்விகேள்விகளிற் சிறந்து வித்வானுவானென்று சொல்லும்படியாயிருந்தது. அவனுடைய நிலைமைக்கும் அப்படி வித்வானுவதற்கும் வெகுதூரம் என்று நினைத்தும், அவள் அப்படி நினைக்கும்படி நேரிட்டது.

# 5-அத்தியாயம்.

"இம்மை பயக்குமா லீயக்குறை வின்றுந்
தம்மை விளக்குமாற்று முள்ளராக் கேடின்று
லெம்மை யுலகத்தும் யாங்கணேங் கல்விபோன்
மம்மரறுக்கு மருந்து."

ஒரு நாள் கார்பீல்டு அம்மாள் தனக்குச்சொந்தமான பாயின்டன் என்பவரைப்பார்த்து, "நமக்கருகில் ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தினுல் ஜிம்மிக்குச் சௌகரியமாயிருக்கும். அது மிகக் கஷ்டமான காரியமல்ல. அனேக குழந்தைகளுக்குக் கஷ்டம் குறையும். எட்டு அல்லது பத்து குடும்பத்தார் சேர்ந்தால் அது நடந்துவிடும். வீடுகட்ட பூமி தருகிறேன். ஏழெட்டு வேலைக்காரர் மூன்றுநாளில் கட்டிவிடுவார்கள்" என்றுசொன்னுள்.

அதற்குப் பாயின்டன். "சரி, நான் வேண்டியமுயற்சி செய்கிறேன்; எனக்கும் அது சந்தோஷமான விஷயந்தான்," என்று சொல்லி வீடுசென்றார்.

மேற்குறித்தபடி, மாரிகாலம் வருவதற்குமுன் ஒரு பள்ளிக்கூடம் கார்பீல்டு அம்மாள் நிலத்தில் கட்டப்பட்டது. அயலார்களெல்லாம் அந்த விஷயத்தில் மிகுந்த சந்தோஷத்தோடு ஏற்பட்டுக் காரியத்தை முடிவுபெறச் செய்தார்கள். ஏனென்றால், கார்பீல்டு அம்மாளுக்குச் சௌகரியம்செய்ய எல்லாரும் தயாராய் இருந்ததுமன்றி அந்த அம்மாளிடத்தில் மரியாதையும் இரக்கமும் உள்ளவர்களாயிருந்தார்கள்.

கட்டப்பட்ட பள்ளிக்கூடம் 25 பிள்ளைகள் வாசிப்பதற்கு இடமுள்ளதாயிருந்தது. கார்பீல்டு அம்மாள் பிறந்த இடமாகிய நியூஹாம்ஷயர் என்னுமிடத்திருந்து ஒருவர் உபாத்தியாயராக வரவழைக்கப்பட்டார். இவ்விதமான பள்ளிக்கூட வாத்தியார்கள் பள்ளிக்குவரும் பிள்ளைகளுடைய குடும்பங்களில் முறையாய்ச் சாப்பிட்டு வருவது வழக்கம்;

டிசம்பர் மாதம் வருவதற்குமுன் தாமஸ் வீட்டுக்கு மாரிகாலத்துக்கு வேண்டியவற்றைச் சேகரித்துவைத்தான். டிசம்பர் மாதமும் வந்தது, வாத்தியாரும் வந்துசேர்ந்தார். அவர்பெயர் பாஸ்டர், 20-வயது உள்ளவர். அவர் பள்ளிக்குப்போகாமல் படிப்பும் அதிகமில்லாயல் அனேக விஷயங்கள் அங்குமிங்கும் கற்றவர். கொடுத்த சம்பளத்துக்கு அவரைவிடக் கற்றவராகப்படுவது அசாத்தியம். ஆனால் அவர் நல்லகுணமுள்ளவர்.

முதலில் கார்பீல்டு அம்மாள் வீட்டில் சாப்பிட ஆரம்பித்தார். தாமஸ், ஜிம்மி இவருடன் பரணில் அவர் படுத்துக்கொள்ளுவது வழக்கம்.

சீக்கிரத்தில் ஜிம்மியுடைய புத்திகூர்மை அவருக்கு நன்றாய்த் தெரிந்தது. அவருக்கு ஜிம்மியிடத்தில் பிரியமுண்டாயிற்று. முதல் முதல் இரண்டுபேரும் பள்ளிக்குப்புறப்பட்டுப் போனபொழுது ஜிம்மியைத்தட்டிக்கொடுத்து, "நீ நன்றாய்வாசித்தால், வயதானபொழுது சேனைத்தலைவன் ஆவாய்," என்று அவர் சொன்னார்.

சேனைத்தலைவன் என்பதற்கு அர்த்தம் அவனுக்குத்தெரியவில்லை. ஆனால் உபாத்தியாயர்சொன்னபடியால் அதுபெரிய விஷயமாயிருக்கவேண்டுமென்று நினைத்தான். அதற்குத் தன்னாலியன்றமட்டும் அர்த்தம் பண்ணிப்பார்த்தான், ஆனால் அவனுக்குத்தெரியவில்லை.

ஆகையால் மாலையில் வீடு வந்தவுடன், "அம்மா, சேனைத்தலைவன் என்றாலென்ன?" என்று தாயாரையவன் கேட்டான்.

"என்னகேட்கிறாய்?"

"சேனைத்தலைவன் என்றாலென்ன?"

"ஓ! சேனைத்தலைவனா! அதற்கா அர்த்தம் கேட்கிறாய்?"

"ஆம், இன்றையதினம் வாத்தியார் நான் வாசித்தால் சேனைத்தலைவன் ஆகலாம் என்றார்."

"அப்படியா சமாசாரம்? அப்படியாதல் உனக்குப்பிடிக்குமோ பிடிக்காதோஎன்று தெரிந்துகொள்வதற்கா கேட்கிறாய்?"

"அதற்கு அர்த்தம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்."

"குழந்தாய், நான் சொல்லுகிறேன் கேள். உன் பாட்டனுருடைய தகப்பனுர் சேனைத்தலைவரின் கீழ்நின்று பெரியசண்டையில் போர்செய்தார். உனக்கு அதைப்பற்றித் தெரியவேண்டியது அவசியம். உன்னுடைய முன்னோர்களைப்பற்றியும் சேனைத்தலைவரைப் பற்றியும் உனக்குச் சொல்லுகிறேன். எட்வேர்ட் கார்பீல்டு அனேகர்களோடு ஆங்கிலநாட்டைவிட்டு மத உபத்திரவம் பொறுக்கமாட்டாமல் வாட்டர்டௌன் (Watertown) என்னுமிடத்திற்குக் குடியேறி வந்தார்கள். வந்தஇடத்தில் சுதேசிகளிடமிருந்து, பூமி வாங்கிக்கொண்டு சமாதானமாய் வசித்தார். அங்கே அவரும் அவர் சந்ததியார்களும் வசித்து வந்தனர். சிலர் மற்றையபட்டணங்கட்குப் புறப்பட்டுப்போய் வாசம்செய்தார். இப்படியிதுநிற்க, ஆங்கில தேசமாகிய தாய்நாடு இவர்களோடு சண்டைசெய்ய காங்கார்டு பிரிட்ஜ் (Concord Bridge) சண்டை 1775ஆ எப்பிரல்மீ 19உ நடந்தது. ஆங்கில ராணுவர்கள் சிவப்புச்சட்டை போட்டுக் கொண்டு சண்டைசெய்யவந்து இவர்கள் ஆங்கிலநாட்டார் சொல்லும்படி கேட்காவிட்டால் கொலையுண்டு சாவார்களெனச்சொல்ல, இவர்களதற்குச் சம்மதியாமல் தாங்களும் சண்டைசெய்ய ஆரம்பித்தார்கள். உன்னுடைய முன்னோராகிய ஆப்ரஹாம் கார்பீல்டு காங்கார்டு பிரிட்ஜூ (Concord Bridge) சண்டையில் போர்செய்த வீரரிலொருவர். இதுதான் அந்தப்பெரிய யுத்ததின் ஆரம்பம். அந்த யுத்தத்தில் அனேகர் சண்டைசெய்தார்கள். அப்படிச்செய்தவரில் உன்னுடைய தகப்பனுர் பாட்டனுராகிய ஸாலோமன் கார்பீல்டும் ஒருவர். நம்முடைய பக்கத்து ராணுவ வீரர் நீலச்சட்டை போட்டுச் சண்டைபோட்டனர். அவர்களுக்குத் தலைவராய் ஜியார்ஜ் வாஷிங்டன்போலொத்த அநேகப்பிரசித்திபெற்றவீரர்கள் ராணுவ வீரர்களை யுத்தத்தில் நடத்தி வெற்றியும் கீர்த்தியும் அடைந்தார்கள். சேனைத்தலைவர்கள் சரிகைவைத்துத்தைத்து அலங்கரிக்கப்பட்ட உடுப்புகள் தரித்துக்கொண்டு கையில் கத்திபிடித்துக் குதிரையின்மீது சவாரிசெய்து யுத்தகளத்தில் ராணுவவீரர்களைச் சண்டைக்கு நடத்துவார்கள். எனக்குச்சண்டையில் தலைமைவகிக்கும் தலைவர்கள்பிடிக்கவில்லை. அனேகமனிதர்கள் சண்டையில்கொல்லப்படுகிறார்கள். ஆனல் படிப்பினுலும் கல்வியினுலும் நீ சேனைத்தலைவருக்குச்சமமாய் மனிதரைக் கொலைபுரியாமல் கீர்த்தியடையக்கூடும். அந்தப்பெரியசண்டை முடிவுபெறவே, உன்னுடைய தந்

தையின் பாட்டனார் தன்னுடைய தாமஸ்என்ற ஒருபிள்ளை இருந்து நியூயார்க் என்னுமிடத்திற் குடியேறிச் சென்றார். தாமஸ்என்பவருக்கு ஒருபிள்ளை அப்ராம் என்று பெயருள்ளவர். இந்த அப்ராம் தான் உன்னுடைய தகப்பனார். ஆகையால் நமக்குத்தெரிந்தமட்டில் நம்முடைய வம்சத்தில் சேனைத்தலைவரில்லை. சிலர் சாமர்த்தியத்திலும் தைரியத்திலும் சேனைத்தலைவருக்குச் சமானமானவர்களாயிருந்தார்கள்.''

இவ்விதமாய் ஜேம்ஸ் தன்னுடையவம்ச சரித்திரத்தைக்கேட்டுத் தன்னுடைய முன்னோர்கள் கீர்த்திபெற்றவர்களெனத்தெரிந்து மனஉற்சாகமடைந்தான்.

வாத்தியாரும் ஜிம்மியும் ஒருவருக்கொருவர் நேசமும் நம்பிக்கையுமுள்ளவர்கள். ஜிம்மி பெரியவனாய்க் கீர்த்திபெறுவானென்று வாத்தியாருக்கு மனத்திற்பட்டது. அவ்விதமான பையன் தன்னிடத்தில் வாசிப்பது அவருக்குச் சந்தோஷம். ஆனால் பின் வரும் விஷயத்தால் அவருக்கு மனங்கலங்கிற்று.

பள்ளியேற்பட்ட இரண்டா நாள் வாத்தியார் மாணாக்கர்கள் வாசிக்கும் காலத்தில் அங்குமிங்கும் பார்க்கக்கூடாது என்று ஒரு விதி ஏற்படுத்தினார்.

பிள்ளைகளுக்கு அது புதுமையாயிருந்தது. முக்கியமாய் ஜிம்மிக்கு அது முடியாதகாரியமாயிருந்தது. இந்தக் குழந்தை கண்ணும் காதும் சதாகாலம் உபயோகித்துப் புது விஷயங்கள் ஒவ்வொரு நிமிஷமும் கற்றுக்கொண்டு வந்தது. பரபரப்புள்ள குழந்தை சும்மாயிருப்பது அதற்குத்தெரியாது. ஆனால் ஏற்படுத்திய முறைப்படி நடக்க ஜிம்மி முயன்றான். பலதடவை தவறி யங்குமிங்கும் பார்த்தான். வாத்தியார் அடிக்கடி சொன்னார். பையனும் அடிக்கடி முயன்றான். வாத்தியார் சொன்னபடி செய்யவேண்டுமென்பதில் கவனம் வைக்கவே, பாடத்தில் கவனம் குறைந்தது. படிப்பில் தவறு செய்ய ஆரம்பித்தான்.

வாத்தியார் மற்றொரு வீட்டுக்கு முறைச்சாப்பாட்டுக்குப் போகுமுன் கார்பீல்டு அம்மாளிடத்தில் ஜிம்மியை வைத்துக்கொண்டு பின் வருமாறு சொன்னார்.

"அம்மா எனக்கு உம்முடைய மனத்தைவருத்த இஷ்டமில்லை. ஜிம்மியோ நல்லபிள்ளை. ஆனால் நான் உம்மிடத்தில் சொல்ல வேண்டியது ஒன்று உண்டு. அது—"

"மேலே சொல்லும்."

"நான் எதிர்பார்த்தபடி ஜேம்ஸ் இருக்கமாட்டான் போலிருக்கிறது!"

"அஃதெப்படி? நீர் சொல்லுவது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது!"

"உமது மனம் புண்படும். ஆனால் உம்மிடத்தில் சொல்வது என்னுடைய கடமையென்று நினைக்கிறேன்."

"பயப்படாமல் சொல்லும்."

"இதுதான்; வேறொன்றுமில்லை. ஜேம்ஸ் பள்ளியில் சும்மா இருக்கிறானில்லை. பாடம் படிக்கிறானில்லை. அவனை வித்துவானாக்க முடியாதென்று நான் நினைக்கிறேன்" இதைக்கேட்ட தாய் இடிவிழுந்தாற்போல் "ஓ! ஜேம்ஸ்!" என்று அலறி மனம் நொந்தாள். பள்ளிக்குப்போய் வித்துவானாவானென்றவெண்ணம் போகும்படியாய் வாத்தியார் வார்த்தைகள் செய்தன.

ஜேம்ஸ் உடனே "நான் நல்ல பையனாயிருப்பேன். நான் நல்ல பையனாய்த்தான் இருக்கப்போகிறேன்," என்று சொல்லிக் கொண்டு கண்ணீர்விட்டுத் தாயார்மடியில் முகத்தைவைத்து விம்மி விம்மியழுதான். இந்த விஷயத்தில் வாத்தியார் ஒரு பிழைசெய்தார். குழந்தையின் சுபாவத்தை மாற்றமுயன்றார். அது யாவர்க்கும் அசாத்தியமான காரியமென்று அவர் அறியவில்லை.

"ஒருக்கால் அவனுக்குச்சும்மா இருக்கமுடியாமலிருக்கலாம். அவன் ஒருபொழுதும் சும்மாயிருந்து நானறியேன்" என்று கார்பீல்டுஅம்மாள் சொல்ல, "நான் சும்மா இருப்பேன்" என்று ஜிம்மி விம்மி விம்மியழுதுகொண்டு வாத்தியார் பதில்சொல்வதற்கு முன் சொன்னாள்.

"ஒருக்கால் அப்படியிருந்தாலுமிருக்கலாம்" என்று வாத்தியார் அந்த அம்மாள்சொன்னதில் தனக்கு ஒருவிஷயம் தெரிந்துகொண்டதுபோல் யோசனையோடு பதில் சொன்னார்.

"இதுவரையில் அவன் படிப்பில் தவறினதில்லை" என்று கார்பீல்டுஅம்மாள் சொன்னாள்.

"நான் தவறாமல் பாடம் கற்பேன்," என்று ஜேம்ஸ் உரக்கச் சொன்னான்.

"குழந்தாய் அழாதே, கண்ணைத் துடைத்துக்கொள். நீயும் நானும் நல்ல சிநேகிதர்களல்லவா? இனிமேல் கஷ்டமில்லை. நகை, பார்க்கலாம்," என்று வாத்தியார் சொன்னார்.

வாத்தியார் தான்செய்த பிழையைக்கண்டு, தான் ஏற்படுத்திய விதியைக்கவனியாமல் ஜிம்மியைவழக்கம்போல் இஷ்டப்படியிருக்க விட்டார். உடனே ஜிம்மி மேல்மேல் விருத்திசெய்ய ஆரம்பித்தான். பள்ளியில் முதல் பிள்ளையானான்.

பலநாட்கழித்து வாத்தியார் கார்பீல்டு அம்மாளிடத்தில் சந்தோஷ சமாசாரம் சொல்லப்போனார்.

வாத்தியாரைக்கண்டவுடன் "பையனெப்படி?" என்று அந்த அம்மாள் கேட்க, வாத்தியார் 'ரொம்ப நன்றாய்ப் படிக்கிறான்' என்றுகூற, "எனக்குச் சந்தோஷம்" என்று தாயார் சொல்லி மனமுவந்தாள்.

"அவன் பள்ளியில் எப்பொழுதும் பரபரப்புடன் அசைந்துகொண்டே இருக்கிறான்; ஆனால் அவன் நன்றாய் விஷயங்களைக் கிரகிக்கிறான். வேறொரு பையனும் அவ்வளவு சீக்கிரமாய்க் கற்கிறானில்லை."

"அப்படியானால் உம்முடைய ஏற்பாட்டை விட்டுவிட்டீரா?"

"ஆம். உம்முடைய அபிப்பிராயம் சரி. அவ்விதமான விதிப்படி அவனால் நடக்க முடியவில்லை. ஆனால் அப்படிச்செய்ய மிகவும் அவன் சிரமப்பட்டது மெய்யே."

"குழந்தைகளெல்லாம் ஒரு விதமாய் இருக்கிறார்களில்லை. ஜிம்மி மற்றைய குழந்தைகளைப்போல இராமல் எப்பொழுதும் பரபரப்பாயிருக்கிறான்: நல்ல நிலைமைக்கு வருவானென்று நம்புகிறேன்."

"அதைப்பற்றிச் சந்தேகம் வேண்டியதில்லை. உலகத்தில் கீர்த்தியடைவானென்று நான் உறுதியாய்ச் சொல்லுவேன்."

"ஸ்வாமி அப்படி கடாக்ஷிப்பாராக," என்று கார்பீல்டு அம்மாள் சொன்னாள்.

ஜேம்ஸ் பரபரப்பாயிருப்பதைப் பற்றி அடிக்கடி யெல்லாரும் குறித்துச்சொல்வதுண்டு. தாமஸும் சிலவேளையதைப்பற்றிச்சொல்வதுண்டு. தாமஸும் ஜேம்ஸும் ஒரு இடத்தில் படுப்பது வழக்கம், இராத்திரியில் தன்னுடைய உடைபோர்வையை உதைத்துத் தள்ளித் தன்னுடைய தமையனையும் எழுப்பிவிடுவான். அப்பொழுது தமையனுக்குக் கஷ்டமாயிருக்கும். சிலவேளைகளில் திரும்பிப் படுத்துக்கொண்டு தன்னுடைய படுக்கை உடைபோர்வையை உதைத்துத் தள்ளித் தூங்கிக்கொண்டே, "அண்ணா, எனக்குப் போர்த்திவிடு," என்று சொல்வான். உடனே தாமஸ் போர்த்திவிடுவான். சிறிதுநேரத்திற்கெல்லாம் முன்போல் "அண்ணா, போர்த்திவிடு" என்று சொல்வான். தமையனும் போர்த்திவிடுவான். 25வருஷத்திற்குப் பிறகு ஜேம்ஸ் சேனைத்தலைவனாய் ஒரு இராத்திரி பெரிய சண்டைநடந்த பிறகு வேறு சில உத்தியோகஸ்தரோடு தூங்குகையில், தன்னுடைய போர்வையை உதைத்துத் தள்ளிவிட்டு ஒருக்களித்துக்கொண்டு, "அண்ணா, போர்த்திவிடு," என்று சொன்னார். பக்கத்திலிருந்த ஒரு உத்தியோகஸ்தர் போர்வையை மேலிழுக்கவே, ஜேம்ஸ் விழித்துக்கொண்டார். அவர் தூக்கத்தில் சொன்னதைப் பக்கத்திலிருந்தவர் சொல்லவே, தன்னுடைய மரக்குடிசையையும் அண்ணனையும நினைத்து வருத்தப்பட்டார்.

பள்ளிக்கூடம் ஆரம்பித்தபொழுது ஒரு வேதபுஸ்தகத்தைக் கையில் வைத்துக்கொண்டு, "இந்த புத்தகத்தை இந்த பட்சத்தின் கடைசியில் யார் எல்லாவிதத்திலும் சிறப்புள்ளவனாயிருக்கிறானோ அவனுக்குக் கொடுக்கப்போகிறேன்," என்று வாத்தியார் சொன்னார்.

அனேக பிள்ளைகள் அந்த வெகுமதியையடைய சிரமப்பட்டார்கள். ஆனால் பட்சம் முடிவதற்கு முன்னமே யாருக்குப் புத்தகம் கிடைக்குமென்பது எல்லாருக்கும் தெரிந்துவிட்டது.

ஆகையால் பட்சத்தின் முடிவுநாளில் வாத்தியார், "ஜேம்ஸ் இங்குவா." என்று சொன்னார். ஜேம்ஸ் போனவுடன் "இந்தப் புஸ்தகம் உன்னுடையது-மற்றைய பிள்ளைகளெல்லாம் குற்றமொன்றும் செய்தாரில்லை. ஆனால் நீ தான் எல்லோருக்கும் மேலாய்ப் படிப்பில் அபிவிர்த்தி செய்தாய்." பிள்ளைகளெல்லாருக்கும் சந்தோஷம். ஜிம்மிக்கோ சந்தோஷம் சொல்லவேண்டியதில்லை. தாயார் ஆனந்தக்கடலில் மூழ்கினாளென்றே சொல்லலாம். ஜேம்ஸைச் சுவேச்சையாய் இருக்கும்படி விட்டது முதற்கொண்டு பையன் அசாதாரணமான அபிவிர்த்திசெய்ய ஆரம்பித்தான். அவனுக்குச் சொல்லிக்கொடுத்த ஒவ்வொரு வாத்தியாரும் அவனை மேதாவியென்று நினைத்தார். ஒவ்வொரு பிள்ளையும் அவனிடத்தில், காந்தமிரும்பையிழுப்பதுபோல், ஒட்டிப்பிரியமாயிருந்தார்கள். யாசகமாயாவது கடனாகவாவது வாங்கிப் படிக்கக்கூடிய புத்தகத்தைப் படித்துவிடுவான். அப்படியிருந்தும் அவன் ஆறுவயதில் தாமஸுக்கு விவஸாயத்தில் உதவி செய்வான். பள்ளியிருந்த பொழுதெல்லாம் வாசிக்கப்போனான். அது வருஷத்தில் சில வாரந்தான். ஒழிந்தவேளையில் காலத்தை வீண்போக்காமல் கையிலிருந்த புத்தகங்களை அடிக்கடி வாசித்தபடியால் அப்புத்தகங்கள் அவனுக்கு முகஸ்தமாய் வந்துவிட்டன. அவன் படிப்புக்கு எவ்வளவு புத்தகம் கிடைத்தாலும் போதாமலிருந்திருக்கும்.

# 6 - அத்தியாயம்.

"ஆடுகோடாகிய தரிடை நின்றதூஉங்
காழ்கொண்ட கண்ணேகளிறணைக்குங் கந்தாம்
வாழ்தலு மன்னதகைத்தே யொருவன்றன்
றாழ்வின்றி தன்னைச்செயின்."

எட்டுப் பிராயத்தில் ஜேம்ஸ் தன்னுடைய தமையன் தாமஸ் என்பவனைப்போல் தினசரி வேலைசெய்ய வேண்டியதாயிருந்தது. தாமஸ் அடிக்கடிப்பணம் சம்பாதிக்க வேலை பக்கத்தில் சப்பட்டால் போவதுண்டு. அப்பொழுது வீட்டுவேலை ஜேம்ஸ் செய்யும்படி நேர்ந்தது. விறகுவெட்டுதல், மாடுகறத்தல், தானியம் குத்தி உமி நீக்குதல் பயிர்க்குழி போடுதல், இன்னம் குடியானவர் செய்யவேண்டிய பலவேலைசெய்ய அவனால் முடியும்.

தாமஸ் சம்பாதித்த பணம் அவசியமாய்த்தானிருந்தது. ஜோடுகள் புத்தகங்கள் வாங்கவும் பள்ளிக்கூடச்சம்பளங் கொடுக்கவும், இவ்விதமான பலசெலவுகளுக்குப் பணம் வேண்டியிருந்தது.

ஒரு நாள் கார்பீல்டு அம்மாள் தன்னுடைய குழந்தை ஜிம்மியைப் பார்த்துப் பின்வருமாறு சொன்னாள். "என்னருமைக் குழந்தாய், உனக்கு இப்பொழுது எட்டுவயது. தாமஸுக்குப் பதினேழு பிராயம். உன் தந்தை யிறந்தபொழுது தாமஸுக்குப் பதினொரு வயது. அவன் அந்தவயதில் உன்தகப்பனார் வேலையை யேற்றுக்கொண்டான். நீ தாமஸ் வேலையை யேற்றுக்கொள்ளத் தயாராக வேண்டும். ஏனெனில் தாமஸ் வயதுள்ள வாலிபனாய் வெளியில் போய்ச் சம்பாதிக்க வேண்டியிருக்கும்."

"நானும் அந்தக்காரியம் செய்யக்கூடும்." "பழக்கமில்லாமல் முடியாது." "பழகப்பழகத் தேர்ச்சியுண்டாகும்."

"தாமஸ் செய்யக்கூடுமானால் நானும் செய்யக்கூடுமென்று நினைக்கிறேன்."

"ஆம், அவன் வயது உனக்கு வந்தபொழுதல்லவா?"

"அப்படித்தான் நான் நினைத்துச் சொன்னேன்."

"விவசாயத்தொழிலைவிடச் சிறந்தவேலை உனக்கு உண்டாகலாம் என்று நினைக்கிறேன்."

"குடியானத்தொழிலைவிடச் சிறந்ததென்ன?"

"கல்விபோதித்தல் மதவிஷயமாய்ப் பிரசங்கித்தல் சிலருக்குச் சிறந்தவையாய் இருக்கலாம். உனக்கு வாத்தியார்வேலை பிடிக்கவில்லையா?"

"எனக்கு வயது வந்தபொழுது வாத்தியாராயிருக்க விருப்பப்படுவேன்."

"அது சீக்கிரத்திலேயே உண்டாகலாம். உனக்கு வேண்டிய யோக்கியதை யுண்டானால்; நீ பதினேழு வயதில் பள்ளிக்கூடம் போடலாம்."

"அஃதெப்படி அம்மா!"

"அனேகவாலிபர்கள் அந்த வயதில் வாத்தியார் தொழில் செய்கிறார்கள். ஆனால் நாம் இருக்கிற நிலைமையில் முதலில் விவசாயம் கற்றுப்பழகவேண்டும்"

"சரிதான். பசுக்களை வீட்டுக்கு ஓட்டிக்கொண்டு வருகிற தருணமாகிறது" என்று சொல்லிக்கொண்டு வேலையைப்பார்க்கப் போனான்.

ஜேம்ஸ் எந்தக் காரியத்திலும் தானே முயன்று பிறருடைய உதவியை எதிர் பாராமல் செய்கிற சுபாவமுள்ளவன். "என்னலாகாது" என்று ஒரு பொழுதும் அவன் சொன்னதில்லை. எந்த விஷயத்திலும் "என்னலாகும்" என்றே சொல்லிக் காரியத்தைச் செய்யத்துணிவான். இப்படிச்செய்வது அவனை ஒரு சமயத்தில் நகைக்கத்தக்க நிலைமையில் கொண்டுவிட்டது.

ஒரு நாள் அவனும் அவன் தோழன் எட்வின்மேப்ஸ் என்பவனும் கோழிமுட்டைகளைக் களஞ்சியத்தில் தேடிக்கொண்டிருந்தார்கள்.

"இதோ பார், ஜிம்மி, நான் ஒருமுட்டை கண்டுபிடித்தேன்." என்று மேப்ஸ் சொன்னான்.

"நீ அதிர்ஷ்டசாலி" என்று சொல்லி ஜேம்ஸ் முட்டையைக் கையில் வாங்கினான்.

"மூட்டையை உருஞ்சு; சில பிள்ளைகள் முட்டைகளை யுரிஞ்சுகிறார்கள்."

"நான் ஒருபொழுதும் உரிஞ்சினதில்லை."

"நானும் செய்ததில்லை; ஆனால் நான் செய்யக்கூடுமென்று நினைக்கிறேன்."

"பிறர் செய்யக்கூடுமானால் நானுந்தான் செய்யக்கூடும்," என்று வழக்கம்போல் ஜேம்ஸ் சொன்னான்.

"உன்னால் முடியாது. முடியுமானால் செய் பார்க்கலாம்," என்று மேப்ஸ் கூறினான்.

அப்படித் தோழன் சொல்லவே, அவனுக்கு ஆவேசம்பிறந்தது. "இதோ பார், உரிஞ்சுகிறேன்," என்று சொல்லிக்கொண்டு முட்டையைப் பச்சையாய் உரிஞ்சினான். சமைத்தமுட்டை அவனுக்குப் பிடிக்கும். ஆனால் இதுவோ குடலைப்புரட்டும்படியிருந்தது. விழுங்குவதற்கு அசாத்தியமாயிருந்தது.

"இறங்கமாட்டாது போலிருக்கிறது," என்று சொல்லி; மேப்ஸ் சிரித்தான்.

வாய் நிரம்ப முட்டையிருந்தபடியால் ஜேம்ஸ் பதில் சொல்லாமல் வயிறு அசைய, முகம் கறுக்க, வீட்டைநோக்கி ஓடிப்போய் அங்கு ஒரு ரொட்டித்துண்டையெடுத்து வாயில் போட்டுக்கொண்டு கடித்துத்தின்று ரொட்டியையும முட்டைச்சாரத்தையும் உள்ளுக்கு இறக்கினான். தோழனோ இடிமுழக்கம்போல் சிரித்தான். கார்பீல்டு அம்மாள் பிள்ளைசெய்வது இன்னதென்று தெரியாமல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் விஷயத்தையறிந்தவுடன் புன் சிரிப்புக்கொண்டு "அசட்டுப்பயல்" என்று சொன்னாள். காரியம் அசட்டுத்தனமானதாயிருந்தாலும் அந்தக் காரியத்தைச்

செய்த சுபாவம் மேன்மையானது. தொட்டகாரியத்தைக் கையாலாகவில்லை என்று சொல்லிவிடாமல் செய்து முடித்தல் அரிய பெரிய குணமென்பதற்கு ஐயமில்லை.

ஜேம்ஸ் கர்வமென்பது தெரியாதபிள்ளை. தான் செய்யக் கூடிய காரியத்தைச் செய்யக்கூடுமென்று சொல்லுவான்.

ஒரு சமயத்தில் கார்பீல்டு அம்மாள் தன் பிள்ளை ஜேம்ஸைப் பார்த்து, "அப்பா, ஒரு காரியத்தைச் செய்யமுடியும்என்று நிச்சயம் செய்வதில் பாதிக்கஷ்டம் நிவர்த்தி ஆய்விடும். ஒருவன் மனம் வைத்தால் நடக்காதகாரிய மொன்றுமில்லை," என்று சொன்னாள்.

"அப்படியென்ருலென்ன?"

"ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யவிரும்பி அதை நடத்தத் தீர்மானித்தால், காரியம் நடந்துவிடும். ஒரு பையன் செய்ய வேண்டிய காரியத்தைப் பிறருதவியை யெதிர்பார்க்காமல் செய்ய முயன்ருல் காரியத்தைச் செய்தே முடிப்பான். அப்படி நீ செய்வாயல்லவா?"

"நான் செய்வேன்."

"எல்லாக்காரியத்திற்கும் உன்னையே நம்பு. செய்யவேண்டிய வேலை செய்யக்கூடுமென்று நினை. அந்தக்காரியம் எளிதாய் முடியும். சுயமுயற்சியுள்ளவர்களைக் கடவுள் உதவிசெய்கிருர்.

முயற்சி திருவினை ஆக்கும்
முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்.

என்று சொல்வது உண்மையே. உன்னுடைய தகப்பன் காலஞ் சென்றது முதற்கொண்டு எனக்குக்கடவுள் அற்புதமான உதவி செய்திருக்கிருர். நாமியன்றமட்டும் முயன்ருல் கடவுள் உதவி செய்யாமலிரார்."

"நாம் இயன்றமட்டும் செய்யாமலிருந்தால், கடவுள் என்ன செய்வார்?"

"அவருடைய கிருபை நமக்குக்கிடைக்காது. ஈசுவர கிருபையன்றி ஒன்றும் நாம் செய்யமுடியாது."

"கடவுள் மனிதர்களை நல்லவர்களாயிருக்கும்படி மட்டும்தான் செய்கிறார் என்று நினைத்தேன்."

"கடவுள் ஜனங்களை எல்லா விஷயத்திலும் நல்லவர்களாயிருக்கும்படி செய்கிறார். நல்லபிள்ளைகளாகவும், நல்லமனிதர்களாகவும், நல்லவேலையாளிகளாயும், நல்லஆலோசனையுள்ளவர்களாயும், நல்லகுடியானவர்களாயும், நல்லவாத்தியார்களாயும், ஒவ்வொரு விஷயத்திலும் சிறந்தவர்களாய்ச் செய்கிறார். அவருடைய உதவியன்றி நாம் ஒரு விஷயத்திலும் சிறப்பு அடையமுடியாது."

இவ்விதமாய்த் தாயார் சொல்லுவதை நன்றாய் ஜேம்ஸ் கவனித்து விஷயத்தைக் கிரகித்தான். தாயார் மேலும் பின்வருமாறு சொல்லிமுடித்தாள்:—"ஒன்றை நன்றாய்ச்செய்தால் நீ மற்றொன்றையும் நன்றாய்ச்செய்வாய்-இவ்விதமாய் எல்லாவற்றையும் நன்றாய்ச் செய்வாயென்பதற்கு ஐயமில்லை. நீ காரியம்செய்ய சுயமுயற்சி வேண்டுமென்று அறிவாய். அப்படி அறிந்தாயானால் மற்றொருவரையும் நம்பாமல் நீயே சுவேச்சையாய்ச் செய்யவேண்டியவையெல்லாம் செய்துமுடிப்பாய்."

மேற்சொல்லியபடி தாயாரிடமிருந்து ஜேம்ஸ் தகுந்த புத்திமதிகளைத் தகுந்த தருணத்தில் கேட்டுத் தகுந்தபடி புத்தியிற்சிறந்த சிறுவனானென்று நமக்குத் தெரியவருகிறது. இவ்விதமாக நீதி தாயிடமிருந்து கற்றவன் ஒருபொழுதும் சிறப்படைவதற்குச் சந்தேகமில்லை.

இவ்வத்தியாயத்தை முடிக்குமுன் ஜேம்ஸ் சமய உசிதமாய் செய்யுந்திறமையுள்ள பிள்ளையென்பது விளங்க ஒருவிஷயங் கூறுவோம். அவனுக்குச்சுமார் பத்துவயது. ஒருநாள் பள்ளியில் அவனுடைய உறவினனை ஹென்ரி பாயின்டன் உடன்சேர்ந்து உட்கார்ந்திருந்தான். இரண்டுபெயரும் விஷமஞ்செய்ய ஆரம்பித்தார்கள். கண்ஜாடைகாட்டவும், வாத்தியாருக்குத் தெரியாமல் சிரிக்கவும், உபாத்தியாயர் கண்டுபிடித்து இருவரையும் பார்த்து "நீங்கள் புத்தகங்களை வைத்துவிட்டு இருவரும் வீட்டுக்குப்போகலாம்,"

என்றார். இரண்டு பிள்ளைகளும் இடிவிழுந்தாற்போற் பயந்து தயங்கிநின்றார்கள்.

"நிற்கவேண்டாம், உடனே போகவேண்டும்"

"நான் போகிறேன்," என்று ஜேம்ஸ் சொல்லி வெளியில் போனான். ஹென்றி ஒன்றும் சொல்லாமல் போனான். ஜேம்ஸ் ஒரு ஓட்டம்பிடித்து வீட்டுக்குப்போய்த் திரும்பிப் பள்ளிக்கு ஓட்டமாய் ஓடிவந்து சுமார் எட்டு நிமிஷத்திற்குள் வகுப்பில் வந்து இரைக்க இரைக்க உட்கார்ந்தான்."

"ஜேம்ஸ், நான் உன்னை வீட்டுக்குப் போகச்சொல்லவில்லையா?" என்று வாத்தியார் கோபித்துக்கேட்டார்.

"நான் வீட்டுக்குப் போய்விட்டுத்தான் வந்தேன்," என்று ஜேம்ஸ் தயங்காமல் பதில் சொன்னான். வாத்தியார் சொன்னபடி உடனேவீடுபோய், ஆனால் தாயார் தன்னைக்காணமல் திரும்பினது உண்மை.

"வீடு போய்விட்டு வந்தாயா?" என்று ஆச்சரியத்துடன் வாத்தியார் கேட்டார்.

"ஆம், ஐயா, நான் வீடுபோய் வந்தேன். நீங்கள் வீட்டிற்குப்போய் அங்கிருக்கும்படி சொல்லவில்லையே?" என்று ஜேம்ஸ் சொன்னான்,

"அப்படியானல் இங்கேயே இரு," என்று வாத்தியாரும் பையன் புத்திகூர்மையைக் கண்டு மனமுவந்து புன்சிரிப்புடன் அவனை மறுபடியும் சிக்ஷிக்கவில்லை. ஹென்றியோ பள்ளியைச் சுற்றியலைந்துவிட்டு வீடு போய்ச்சேர்ந்தான். ஒருநாள் படிப்பு ஹென்றி இழந்தான். சமய உசிதம் என்பது ஜேம்ஸ் நன்றாய் அறிவான்.

# 7 - அத்தியாயம்.

"இனிது இனிது ஏகாந்தமினிது
அதனினுமினிது ஆதியைத்தொழுதல்."

கிறிஸ்தவர்களில் எல்லாரும் ஞாயிற்றுக்கிழமை, அவர்கள் மதத்தில் சொல்லியபடி, ஸ்வாமியைத் தியானஞ்செய்து சன்மார்க்கத்தில் கழிக்கவேண்டிய நாள். ஆகையால் கார்பீல்டு அம்மாள் அன்றையதினம் கடவுள் தியானஞ்செய்து, வேதபுத்தகம் பாராயணம் பண்ணி, ஸத்காலக்ஷேபம் செய்துவந்தாள். சாதாரணமாய்ப் பட்டணங்களில் கடவுளைத்தியானிக்கக் கோயிலுண்டு. கோயில்மணிகள் அடித்த ஓசைகேட்டு மனிதர்கள் கோயிலுக்குப் போவார்கள். இவர்களிருந்த காட்டுப் பிராந்தியத்திலோ கோயிலுமில்லை, இவர்களைக் கூப்பிடக் கோயில் மணியுமில்லை. பட்டணங்களிலும் ஜனங்களடர்ந்த மற்றவிடங்களிலும் கோயிலில் பாதிரிமார்கள் மதவிஷயங்களைப்பற்றிப் பிரசங்கஞ்செய்து ஜனங்களை மதாசாரணையிலும் நல்வழியிலும் இருக்கும்படிசெய்ய முயலுவார்கள்.

நம்முடைய காட்டுவாசிகளாகிய கார்பீல்டு அம்மாள் முதலியவர்கட்கு மேற்சொல்லிய பிரசங்கம் கேட்பது அரிது. ஆனால் இவர்களுக்கு ஊரூராய்ப்போய்ப் பிரசங்கம் செய்துவந்த சிலர் மதவிஷயத்தைப்பற்றிப் பிரசங்கஞ்செய்ய எப்பொழுதாவது வருவார்கள். வந்தபொழுது சுற்றிலும் பத்துமைலுக்குட்பட்டு வசிப்பவர்களெல்லாம் ஒருங்குசேர்ந்து அந்தப் பிரசங்கத்தைக் கேட்பார்கள். அப்படிப் பிரசிங்கித்தவர்கள் படிப்பில் தேர்ச்சியதிகமில்லாதவர்களாயினும் நற்குண நற்செய்கையுள்ளவர்கள். உண்மையான பக்தியுள்ள சிலர்கள். அவர்கள் போனவிடங்களிலவர்கட்குத் தகுந்த மரியாதை ஜனங்கள் செய்துவந்தனர்.

பிரசங்கமிருந்தாலுமில்லாவிட்டாலும் கார்பீல்டுஅம்மாள் முன் சொல்லியபடி ஞாயிற்றுக்கிழமை வேதபுத்தகம் பாராயணம் செய்வாள். அந்த அம்மாள் ஒவ்வொருதினமும் வேதபுத்தகம் பாராய

ணம் செய்வதுண்டு அப்பொழுதெல்லாம் ஜேம்ஸ் வேதபுத்தகத்தைப்பற்றிக் கேள்விகள் கேட்பான். வேதபுத்தகத்தைக் கார்பீல்டு அம்மாள் கடவுள் புத்தகம் என்று சொல்வதுண்டு.

ஒருநாள் ஜேம்ஸ், "அம்மா, அந்தப்புத்தகம் கடவுள் புத்தகமென்று உனக்கு எப்படித்தெரியும்? "என்று கேட்டான்.

"அது மனிதரால் எழுதப்பட்ட புத்தகங்கள்போலில்லாததினால் நான் அப்படிச்சொல்லுகிறேன்"

"முன்னரே, மோஸஸ், இஸையா, டேவிட், மாதியூ, பால் முதலியவர்களெழுதினதாய்ச் சொன்னாயே, அஃதெப்படி?"

"ஆம், மெய்தான். அவர்கள் கடவுளால் ஞானபோதம்பெற்று, அவர் ஏவுதலாலெழுதினார்களேயொழியச் சுயமாயெழுதவில்லை."

"ஆகையால்தான் கடவுள் புத்தகமென்று சொல்லுகிறாயென்று நினைக்கிறேன்."

"ஆமாம். அப்படித்தான்."

"அதில் சொல்லியுள்ளகதைகளெல்லாம் உண்மையானகதைகளா?"

"ஆம். ஒவ்வொருகதையும் உண்மையானதுதான்"

"ஜோஸெப் என்பவன் பலவருணமுள்ளசட்டை போட்டிருந்ததாகச் சொல்லியிருப்பது உண்மையா?"

"உண்மையென்றுதான் நான் நினைக்கிறேன்."

"அவனென் ஒரு வருணச்சட்டை போட்டுக்கொள்ளவில்லை? அது மிகச்சுலபமாயிருந்திருக்குமே."

"அவன் தகப்பனார் மற்றையகுழந்தைகளைவிட அவனிடத்தில் பிரியம் வைத்தபடியால் அவனுக்கு அப்படிச் சட்டைதைத்துக் கொடுத்தார்."

"அப்படி அவர் பட்சபாதம் செய்தது சரியா?"

"இல்லை! பிழைதான்."

"அவர் நல்லவரா?"

"ஆம், நல்லவர்தாம். சில நல்லமனிதர்கள் தவறிநடப்பதுண்டு"

"நல்லவர் பிழைசெய்தால், கெட்டவரல்லவென்று நமக்கு எவ்விதமாய்த் தெரியும்?"

"கெட்டவரைப்போல் அவ்வளவுபிழை செய்யார்."

"நல்லோர் பிழைசெய்யாமலிருக்க முடியாதா?"

"கடவுள் உதவியால் செய்யாமலிருக்க முடியும்."

"கடவுள் எப்பொழுதும் அவர்களுக்கு உதவிசெய்யாமலிருப்பாரா?"

"சிலகாலம் உதவிசெய்யாமலிருக்கலாம்."

"அதேன்?"

"ஒருக்கால் அவர்கள் அவ்வுதவிக்குத் தகுதியற்றவராயிருக்கலாம்."

"கடவுளுதவியன்றி மனிதர் நல்லவர்களாயிருக்கமுடியாதா?"

"முடியாது. மேலும் அவர்களிரார்."

"ஏன் அப்படியிரார்?"

"ஏனென்றால், அவர்கள் கெட்டவர்கள்."

"அப்படியானல் அவர்கள் எப்படி நல்லவராவார்?"

இவ்வாறு தாய்க்கும் பிள்ளைக்கும் நடந்த சம்வாதத்தில் ஜேம்ஸ் என்பவனுடைய புத்திக்கூர்மை நன்றாய் விளங்கும். அவனுடைய கேள்விகள் நுட்பமானவையாயிருந்தபடியால் அநேக சமயங்களில் தாயார் பதிலளிக்க முடியாமற்போயிற்று. இவ்வளவு சிறியபிள்ளை இவ்வித நுட்பமானக்கேள்விகேட்பது வயது முதிர்ந்தால் பெரியபுத்திமானும் பலவானுமாவானென்பதற்கு அறிகுறியாயிருந்தது.

அப்பொழுது மதுபான மிகுதியால் உண்டாகும் கஷ்டத்தைக் கண்டு சிலர் சேர்ந்து குடிமிகுதியைத் தடுக்கும்பொருட்டு ஒரு சீர்திருத்தம் செய்யமுயன்றார்கள். இந்த விஷயம் கார்பீல்டு அம்மாளிருந்த பிராந்தியத்திற்கும் எட்டியது. கார்பீல்டு அம்மாள் ஞாயிற்றுக்கிழமைதினம் இதைப்பற்றியும் எடுத்துச்சொல்வதுண்டு. இப்படித் தாய்சொல்வதினின்று ஜேம்ஸ் குடியினாலுண்டாகுங் கெடுதிலையச் சிறுபிராயத்திலேயே மனத்தில் நன்றாய்ப்பிடித்துக் கொண்டு மதுபானத்தையச்சிறுவயது முதற்கொண்டே வெறுக்க ஆரம்பித்தான்.

ஞாயிற்றுக்கிழமைதினம் அவன் அநேக விஷயங்களோடு கற்றுக்கொண்டது மற்றொன்றுண்டு. அது தன்னுடைய ராஜாங்கத்திற்கு உறுதியானபக்தி. அமெரிக்காதேசத்தார் பிறருக்குட்படாமல் தாமே தந்தேசத்தையாளப் பிரயாசப்பட்டதெல்லாம் கார்பீல்டு அம்மாளுக்கு நன்றாய்த்தெரியும். ஆகையால் அதைப்பற்றி நடந்த விஷயங்களையெல்லாம் நன்றாயெடுத்துச்சொல்லுவார். ஆனது பற்றி ஜேம்ஸ் இந்த விஷயங்களைக் கேட்டு, ராஜபக்தியென்னும் விஷயத்தை நன்றாய்க்கைப்பிடித்துப் பிறகு அவன் வயதானபொழுது இந்தவிஷயத்தில் பிறருக்குப் பின்வாங்காமல் சிறப்புப்பெற்றான்.

ஒருநாள் கார்பீல்டுஅம்மாள் பின்வருமாறு ஜேம்ஸைநோக்கிச் சொன்னாள்:—"நியாயமான காரியத்தைச்செய்ய ஒருபொழுதும் அஞ்சாதே. நியாயமான காரியத்தைச்செய்ய பயப்படுகிறவன் பெரிய பயங்காளி."

"மனிதர்கள் நியாயமான காரியஞ் செய்யப் பயப்படார்களென்று நினைக்கிறேன்."

"சிறுவர்களும் பயப்படக்கூடாது. பிள்ளைகள் சில வேளைகளில் நியாயமானவைசெய்யப் பயப்படுகிறார்கள்."

"எப்பொழுது?"

"அவர் தாயார் அல்லது வாத்தியார் சொல்வதைத்தங்கள் தோழர்கள் வருத்தப்படுவார்களென்று, செய்யத்துணிகிறார்க

ளில்லை." இப்படிச்சொல்லுவதில் ஜேம்ஸ்செய்த சிலவிஷயங்களை நினைவூட்டுவது அவளுடைய அபிப்பிராயம்.

"நான் பெரியவனானபொழுது செய்யவேண்டியது என்று நீ நினைத்ததாக எண்ணினேன்."

"நான் சொன்னது சிறுவர்களும் செய்யவேண்டியதற்காகத்தான். சிறு வயதில் நியாயத்தைக் கடைப்பிடியாவிட்டால், வயதானபொழுது ஒருக்காலும் அந்த விஷயம் வரமாட்டாது. ஐந்திலிராதது ஆறைந்தில் வாராது என்று சொல்வது உண்மையே. பயங்காளிச்சிறுவன் வயது முதிர்ந்த பயங்காளியவ்வளவு நிந்திக்கப்படத்தக்கவன் தான். தாயார் வாத்தியார் சொற்படித் தோழர்கள் உன்னைப்பார்த்துச் சிரித்தால்கூடச், செய்யத் துணிந்து செய்ய வேண்டும்.

"நான் அப்படித்தான் செய்கிறேன்."

"நீ சொல்வது உண்மையே. சிற்சில வேளைகளில் தவறிப்போகிறாய் போனகாரியத்தைப்பற்றிச் சொல்லவில்லை. வயதாக வயதாக நீயதைக்கவனிக்கும் பொருட்டுச்சொன்னேன். பிழை பிழையெனச்சாதிக்கவும் நியாயம் நியாமெனத் தைரியமாய்ச் சாதிக்கவுங் கற்றுக்கொள்ளவேண்டும். அந்த விஷயம் இப்பொழுது முதற்கொண்டே பழகி நீ தேர்ச்சியடையவேண்டும்."

இவ்விதமாய்க் கார்பீல்டுஅம்மாள் பிள்ளைக்குப்புத்தி கற்பித்து வந்தாள்.

# 8 - அத்தியாயம்.

"விரூப்பரூச் சுற்றமியை யினருப்பரூ
வாக்கம்பலவுந்தரும்."

"ஜிம்மி, இப்பொழுது நீ உண்மையாகவே குடியானவனாய் இருக்கவேண்டும்; நான் மிச்சிகன் (Michigan) என்னுமிடத்திற்குப் போகப்போகிறேன்; அங்கே ஒருவேலை எனக்குக் கிடைத்திருக்கிறது," என்று ஒருநாள் தாமஸ் ஜிம்மியைப் பார்த்துச் சொன்னான்.

"எவ்விடத்திற்கு?" என்று ஜேம்ஸ் அவன் அண்ணன் போகுமிடந்தெரியாமல் கேட்டான்.

"மிச்சிகன் என்னுமிடத்திற்குப் போகிறேன். இவ்விடத்தைவிட அது காட்டுப்பிரதேசம்," என்று தாமஸ் கூறினான்.

"அது எனக்குத்தெரியும். அவ்விடத்தில் நீ என்ன செய்யப் போகிறாய்?" என்று ஜிம்மிகேட்டான்.

"காடழிக்கப்போகிறேன். மாதம் 12-டாலர் சம்பளங்கிடைக்கும்," என்று தாமஸ் மொழிந்தான்.

"உனக்கு அவ்வளவு சம்பளம் கொடுப்பார்களா?" என்று ஜிம்மி கேட்டான்.

"ஆம் கொடுப்பார்களென்பதைப்பற்றிச் சந்தேகமில்லை. ஆனால்கஷ்டமானவேலை. விடியற்காலையிலெழுந்துமாலைப்பொழுதுவரையில் வேலை செய்யவேண்டியதாயிருக்கும். இனிமேல் அம்மாவுக்கு நல்ல மரத்தாற்கட்டிய வீடு கட்டிக்கொடுக்கலாம்." என்று தாமஸ் கூறினான்.

"சிறந்த விஷயந்தான்," என்று ஜேம்ஸ் மனமுவந்துமொழிந்தான்.

இப்பொழுது ஜேம்ஸுக்குப் பன்னிரண்டுவயது; தாமஸுக்கு இருபத்தொன்று. தாமஸ் வயதுவந்த பிள்ளையாய்விட்டபடியால் வெளியில்போய்ச் சம்பாதிக்கவேண்டுமென்பது தாயாருடைய

அபிப்பிராயம். ஜிம்மி வீட்டிலிருந்து விவசாயத்தைப் பார்த்துக் கொள்ளலாமென அவள் நினைத்தாள். ஆகையால்தான் தாமஸ் கிளீவ்லாண்டு (Cleveland) என்னுமிடத்திற்குப்போய் அங்கே மேற்குறித்த வேலையை யொப்புக்கொண்டுவந்தான். தாயாரிடத்திலும் இந்த சமாசாரம் தாமஸ் சொல்லவே, அவள், "எல்லாம் நன்றாய் முடியுமென்று நினைக்கிறேன். ஆனால் நான் நினைத்ததைவிட அதிகதூரம் போகவேண்டியிருக்கிறதே!" என்று சொன்னாள்.

"ஆம், ஆம், தூரத்தில்தானிருக்கிறது. நல்லசம்பளம் கிடைக்கிறபடியால் அதைக்கவனிக்க வேண்டியதில்லை." என்று தாமஸ் மொழிந்தான்.

"அது எவ்வளவு தூரத்தில் இருக்கிறது?" என்று ஜேம்ஸ் அக்கரையுடன்கேட்டான்.

"அது நன்றாய் எனக்குத் தெரியாது. ஆனால் எதிர்பார்த்ததைவிட அதிகந்தான்," என்று தாயார் பகர்ந்தாள்.

"அண்ணா. நீ மரக்குடிசையில் வசிக்கவேண்டியிருக்குமா?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"ஆம், மரக்குடிசையில் தானிருக்கவேண்டும். ஆனால் அது நம்முடைய குடிசையைக்காட்டிலும் சிறிது, சௌகரியத்திலும் கீழ்ப்பட்டது."

"நீ எவ்வளவுகாலம் அங்கு போயிருப்பாய்?"

"ஆறுமாதம் நிச்சயம்; ஒருக்கால் அதிகம் ஆனாலுமாகலாம்," என்று தாமஸ் சொன்னான்.

"இப்பொழுது வீட்டில் தாமஸ் செய்துகொண்டிருந்த வேலையை நீயொப்புக்கொள்ளவேண்டும். அது உனக்கு வேலையில் ஒருபடி உயர்ந்ததாகச் சொல்லலாம்," என்று தாயார் ஜேம்ஸைப் பார்த்துச சொன்னாள்.

"நான் அதுசெய்யக்கூடும். ஆனால் அண்ணன் தாமஸ் புறப்பட்டுப்போவது எனக்கு மனவருத்தங்கொடுக்கும்," என்று ஜேம்ஸ் விடைமொழிந்தான்.

"நம்மெல்லோருக்கும் அவன்போவது வருத்தமாய்த்தானிருக்கும். அவன்போனால் வீடு வெறிச்சுவெறிச்சு என்றிருக்கும். ஆனால்

நாமெல்லாம் இருப்பதைக்கொண்டு சந்தோஷப்பட வேண்டியது தான்,'' என்று தாயார் மொழிந்தாள்.

"முழுவதும் யோசித்துப்பார்த்தால் நான் செய்யத்துணிவது தான் நல்ல வழியாயிருக்கும். அப்படிச் செய்தாற்றான் நமக்கு மரத்தால்கட்டிய வீடுகிடைக்கலாமென்று நினைக்கிறேன்,'' என்று தாமஸ் சொன்னான்.

"அது நன்றாயிருக்குமல்லவா?'' என்று ஜேம்ஸ் தாயாரை நோக்கிக்கேட்டான்.

"அது நன்றாய்த்தானிருக்கும். ஆனால் நமக்குக் கிடைப்பது அருமை,'' என்று தாயார் சொன்னாள்.

"அது அருமையில்லாமல் நமக்கு உண்மையிலுண்டாகும்,'' என்று தாமஸ் உறுதியோடு கூறினான்.

சென்ற ஐந்து வருஷகாலமாய் வீடுகட்டுவதற்குவேண்டிய மரம் தாமஸ் சேகரித்துவந்தான். அவனுக்கு இருபத்தொன்று வயதானபொழுது வேண்டியமரம் சேகரிக்கப்பட்டிருந்தது. ஆனால் தச்சனுக்குக் கூலிகொடுக்கப் பணமில்லை. ஆகையால் அந்தப்பணஞ் சம்பாதிக்கத்தான் மிச்சிகன் என்னுமிடத்திற்குப்போய் வேலைசெய்ய அமர்ந்தான்.

அவன் புறப்பட்டுப்போகத் தயார்செய்யும்பொழுது தன்னுடைய தம்பிக்கு விவசாயவிஷயமாய்த் தெரியவேண்டியவைகளைப் பற்றி யெல்லாம் சொல்லிக்கொடுத்தான் பலநாட் கழிப்பதற்கு முன் ஒருநாள் புறப்பட்டு மிச்சிகனுக்குப்போனான்.

அவன்போனது தாயாருக்கு நிரம்பவும் மனத்துக்கு வருத்தமாயிருந்தது. தம்பிக்கோ இந்தவருத்தத்தைச் சொல்லிமுடியாது. ஆனாலும் ஜேம்ஸ் தன்னுடையவேலையை முயன்றுபார்க்க ஆரம்பித்தான். ஒருநாள் பக்கத்தில்வசித்த மேப்ஸ்என்னும் பெயருள்ளவர் கார்பீல்டுஅம்மாள் வீட்டுக்கு வந்தார்.

"உம்முடைய சிறுவன் குடியானத்தொழிலில் சுறுசுறுப்பாய் வயதுமுதிர்ந்த எங்களைப்போல் கருவிகளை அலட்சியமாயுபயோகிக்கிறான்.''

"உங்களவ்வளவு சிரமப்பட்டு வேலை செய்கிறானல்லவா?"

"அப்படித்தான் எங்களுக்கெல்லாம் கஷ்டமான வேலைக்குக் குறைவு இல்லை."

"இப்படிக் காட்டுப்பிரதேசத்தில் முதல்முதல் குடியேறிவசிப்பவர்கட்குக் கஷ்டங்களுண்டு. ஆனால் வறுமை இவ்விடங்களில் பட்டணங்களில் போலல்லாமல், ஜனங்களை வருத்தாது."

"நீர் அப்படிநினைப்பது மெய்தானா?"

"நான் அப்படித்தான் நினைக்கிறேன்."

"அதற்குக் காரணம் யாதோ?"

"நீர் நம்மைச் சுற்றிலும் பணக்காரர்களில்லாதிருப்பதறிவீர். அப்படித்தனவந்தரை நாம் பார்க்காவிட்டால் நாம் ஏழைஎன்பது நமக்குப்படாது. ஆகையால்தான் அப்படிச்சொன்னேன்."

"எல்லாரும் ஒருங்குசேர்ந்து ஏழையாயிருப்பது மனத்துக்குத் திருப்தி கொடுக்குமென்று நினைக்கிறீரா?"

"ஆம் அப்படித்தான் நினைக்கிறேன். கஷ்டப்படுகிறவர்கள் ஒன்றுசேர்ந்திருப்பதில் களிக்கிறார்கள். அப்படியே ஏழைகளும் ஒன்றுசேர்ந்திருப்பதில் திருப்தி யடைவார்களென்று எனக்குத் தோன்றுகிறது."

"அப்படிநினைத்தால் நாமெல்லாரும் ஏழைகள்தான். நீர்சொல்லுகிறபடி நாமெல்லாரும் சற்றேறக்குறைய சந்தோஷமாயிருக்கவேண்டும்."

"சாதாரணமாய் மானிடப் பிறப்புள்ளவர்களுக்கு எவ்வளவு சுகமுண்டோ அது நமக்கிருக்கிறது; ஒருக்கால் கொஞ்சம் நமக்கதிகமாயிருக்கிறதென்றே நாம் நினைக்கலாம். அந்தவிஷயத்தில் நாம் எவ்வளவு குறைசொன்னபோதிலும், கடவுள் எங்கும் மனிதர்கள்சுகம் ஒரே அளவாயடையும்படி செய்கிறார்."

"அப்படி யெண்ணுவதில் மனத்துக்கு ஆறுதலொருவாறுண்டாகலாம். ஆனால் நீர் சொல்லும்விதம் நினைக்க உடன்படேன். நம்மைப்போல் முதல் முதலில் காட்டுப் பிராந்தியத்தில்

குடியேறி வசிப்பவர்கட்குக் கஷ்டம் மிதமிஞ்சியிருக்கிறதென்பது என்னுடைய அபிப்பிராயம்,'' என்று மேப்ஸ் என்பவர் சொல்லிய பொழுது வயலிலிருந்து ஜேம்ஸ் வீட்டிற்குட்புகுந்தான். உடனே அவர் ஜேம்ஸைநோக்கி, "ஜேம்ஸ், அதைப்பற்றி உன்னுடைய அபிப்பிராயம் என்ன?'' என்றுவினவ, ஜேம்ஸ் "ஐயா, எதைப்பற்றிக் கேட்கிறீர்?'' என்று சொல்ல, "நம்மைப்போலொத்த காட்டுவாசிகள் மற்றஜனங்களைவிட அதிகக் கஷ்டப்படுகிறார்களா இல்லையா?'' என்று மேப்ஸ் கேட்டார்.

அதற்கு ஜேம்ஸ், "அதைப்பற்றி எனக்கு அதிகமாய்த்தெரியாது. மற்றவர்கள் படும் கஷ்டம் எவ்விதமாயிருக்குமென்பது எனக்குத்தெரிந்தால் நான் சொல்லக்கூடும். ஆனால் அந்தவிஷயம் ஒன்றும் எனக்குத்தெரியாது,'' என்று கூறினான்.

ஜேம்ஸ் சொன்னது உண்மை. அவன் பிறந்தது காட்டுப்பிரதேசம்; வளர்ந்ததுமவ்விடமே. அவன் ஜனங்கள்வசிக்கும் கிராமமும் பார்த்ததில்லை. பட்டணமும் பார்த்ததில்லை. ஆகையால்மற்றவர்கள் அவனைவிடச் சுகமாயிருந்தார்களென்பது அவனுக்குத்தெரியவிடமில்லை. அவனுக்கு வசிக்கச்சொந்தவீடு குடிசையாயிருந்தபோதிலும், தன்னுடையதாய் தமயன் சகோதரிகளுடன் அவ்வீட்டில் வசித்துச் சந்தோஷத்தையடைந்தான். அரண்மனையில்வசிப்போர்க்குக்கூட அவ்வளவு சந்தோஷமிருக்காது. அந்தப்பையன் தன்னுடையநிலைமையில் திருப்தியடைந்தவனாயிருந்தான். கஷ்டமென்பது அவனுக்குத்தெரியாது. தன்னுடைய தமயன்போனது முதற்கொண்டு வேலையதிகந்தான். வேலைக்கு அஞ்சினவனவனல்ல. கடும்வேலைகஷ்டமல்ல. பணக்காரர் சிலர் பணத்தைக் காப்பாற்றப் படும்கஷ்டம் ஏழைகள்பலர் ஜீவனோபாயம்தேடப்படும் கஷ்டத்தைவிட அதிகமாயிருக்கிறது.

ஜேம்ஸ் கடுமையாய் வேலைசெய்வதைக் கஷ்டமென்றுநினைக்கவில்லை. தமயன் வெளியில்புறப்பட்டு வேலைக்குச்சென்றுவிட்டபிறகு மிகுந்த சிரமத்துடன் அவன் வேலைசெய்தது அவனுக்கு மனமகிழ்ச்சியுண்டாக்கிற்று. வீட்டின்பாரத்தையேற்று வேலைபார்ப்பது அவனுக்கு மனவுற்சாகத்தை யுண்டுபண்ணிற்று. வேலைசெய்யும் பொழுதெல்லாம் சந்தோஷமாய்ச்செய்து, அதிருப்தி யென்பதற்

கிடங்கொடாமல் காலத்தைக்கழித்த ஜேம்ஸ் கஷ்டமென்பதுயாதென்று அறியான்.

ஒருநாள் ஜேம்ஸ், 'அம்மா, லாம்பர் என்பவரும் நானும்வேலை மாற்றிக்கொண்டு செய்யப்போகிறோம்,'' என்று சொன்னான்.

"அஃதெப்படி?" என்று தாயார் கேட்க,

"ஏதாவது ஒருசமயத்தில் அவருக்கு அதிகவேலைசெய்ய ஆள் வேண்டியிருக்கிறது. எனக்குந்தான் அப்படி வேண்டியிருக்கிறது; மேலும் சிலவேளைகளில் எனக்கு அவருடைய எருதுகள் வேண்டியிருக்கின்றன,'' என்று ஜேம்ஸ் கூறினான்.

"அவரைப்பார்த்தாயா?"

"பார்த்துமாய்விட்டது. ஏற்பாடும் செய்துகொண்டுவிட்டோம்."

"அது நல்லஏற்பாடுதான். மேலும் அவர் உன்னைவிட அநுபோகமுள்ளவர் உனக்குத்தெரியாத சிலவிஷயங்களை யவருனக்குக் கற்றுக்கொடுக்கக்கூடும்."

வேலைமாற்றிக்கொண்டு வேலைபுரிதல் ஜேம்ஸ் உண்டாக்கிய புதிய ஏற்பாடு; அதுவரையில் யாருமப்படிச் செய்ததில்லை. இந்த ஏற்பாட்டினால் ஜேம்ஸ் சௌகரியம் நிரம்ப அடைந்தான். அவனுக்குச் சமயத்தில் லாம்பர் என்பவர் தகுந்த உதவி செய்துவந்தார். அதற்கீடாக ஜேம்ஸ் அவருக்கு வேண்டியவேலை செய்துதவினான்.

வயலில் வேலைசெய்து ஜேம்ஸ் கற்றுக்கொண்ட விஷயங்கள் பல. பள்ளியிற் கற்றுக்கொள்ளுமனேக நற்குணங்கள் அவன் தன் வேலையில் கற்றுகொண்டான். ஆகையால் அவன் வேலையுவனுக்கு உபாத்தியாயராயிருந்ததெனக் கூறலாம்.

இப்படி வேலை செய்துவந்த மாதங்களிலெல்லாம் ஜேம்ஸுக்கு வாசிக்க ஒழியவில்லை. வாசிக்க ஆசையோ அளவிறந்ததாயிருந்தது. அவகாசமோ இல்லை. சில வேளைகளில் பள்ளிக்குப் போகவேண்டுமென்று நினைப்பான். தான் கல்விகற்க வழியாதென்று நினைத்துப் பார்ப்பான். சிலசமயங்களில் தாயார் பின் வருமாறு சொல்லுவாள் :—'ஜேம்ஸ், எப்பொழுதும் நீ விவசாயத்தொழில் செய்யும்படி இருக்காது என்று எனக்குத் தோன்றுகிறது."

“அப்படிச்செய்யாவிடில் நான் என்ன செய்ய நீ விரும்புகிறாய்?”

“எனக்கு ஒன்றுந்தெரியவில்லை. மனிதராலாவதொன்றுமில்லை. எல்லாமீசன் செயல். உனக்கு எப்பொழுதாவது மேல் படிப்பு ஏற்படுமென்பது என்னுடைய நம்பிக்கை.”

“அப்படியுண்டாவது நன்மையானால், நானும் அதை விரும்பாமலிரேன்.”

“அது உனக்கு நன்மைதான். ஒருநாளும் நீ கற்றுக்கொள்ளுவது உனக்கு அதிகமாய்விடாது.”

“நானும் அப்படியே நினைக்கிறேன். விவசாயஞ்செய்ய எவ்வளவறிந்தாலும் போதாது. அநேக வருடங்கள் நான் கற்கமுயன்றால்கூட முழுவதும் கற்கமுடியாது.”

“நீ சொல்வது சரிதான். ஆனால் நான் விரும்புவது நீயொரு வித்துவானாகவேண்டுமென்பது. சிலவேளை எனக்கு அந்த விஷயத்திலுண்டாகும் ஆவல் அடக்கமுடியாததாயிருக்கிறது. ஆகையால் உனக்கு அது கிடைக்குமென்று நினைக்கிறேன்.”

“எனக்கு அப்படித்தோன்றவில்லை.”

“உனக்குப்படித்துக் கல்விமானாக ஆசையில்லையா?”

“ஆம், அதை விரும்புவதுபோல மற்றொன்றையும் இச்சிக்கிறேனில்லை. ஆனால் அது கிடைக்கும் வழியொன்றையும் காணவில்லையே!”

“எனக்குந்தெரியவில்லை. என் மனம் கஷ்டப்படுகிறது. எனக்கு இப்படிக் கடவுள் மனக்கவலை கொடுக்கக்கூடாது. கடவுள் நமக்கு அது நன்மை தருவதாயிருந்தால் வழிகாட்டுவார்.”

“ஆகிலும் இப்பொழுது அது முடியாதகாரியம்,” என்று ஜேம்ஸ் சொல்லிமுடித்தான்.

# 9 - அத்தியாயம்.

## "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்"

"அண்ணன் வருகிறான்! அண்ணன் வருகிறான்!!" என்று கூவிக்கொண்டு தோட்டத்தைத் தாண்டிக் குதித்துக் கொண்டு ஜேம்ஸ் ஓடினான்.

நிசமாகவே தாமஸ் வீட்டை நோக்கி வந்தான். ஜேம்ஸ் எதிர்கொண்டுபோய்த் தமயன் வரவை முகமலர்ச்சியுடன் கொண்டாடிக்கை குலுக்கி ஆனந்தப்பட்டான். தமயனே தம்பியைவிட அந்த விஷயத்தில் ஆனந்தித்தான். தமயனும் தம்பியும் கைகோத்துக்கொண்டு பல விஷயங்களைப்பற்றி உரையாடிக்கொண்டு வீட்டையணுகினார்கள்.

"இப்பொழுது நமக்கு மரத்தால் கட்டப்பட்ட வீடு ஏற்படப் போகிறதா?" என்று முதல் முதலில் ஜேம்ஸ் தமயனைக்கேட்டான்.

"ஆம், அப்படித்தான் வீடு ஏற்படப்போகிறது. இனிமேல் இந்தக்குடிசையில் கோழிகள் வசிக்கட்டும்," என்று தாமஸ் சொன்னான்.

"அவைகளுக்குத்தகுந்த வீடாகும். கோழிகளிருக்கச் சௌகரியமான வீடாயிருக்குமென்பதற்கு ஐயமில்லை," என்று ஜேம்ஸ் கூறினான்.

"இதுவரையிலு மவர்கட்கிருந்ததைவிட மேலான வீடாகும். நமக்குப் புதுவீடு எப்படியிருக்குமோ அப்படியவைகட்கு இந்தக் குடிசை சிறந்ததாயிருக்கும்," என்று தாமஸ் மொழிந்தான்.

இதற்குள் அவர் வீட்டருகிற்சேரவே தாயாரும் வீட்டைவிட்டு வெளியே வந்து தான் எழுமாத காலமாய்ப்பாராத தன்னுடைய மகனைக் கட்டியணைத்து மனதுவந்தாள். அது மிகவும் சந்தோஷகரமான சந்திப்பு என்று சொல்லவேண்டும். தாயும் மகனும் எழு

மாதப் பிரிவுக்குப்பிறகு சந்தித்தல் இருவருக்கும் திருப்தியுண்டாகும். அரண்மனைகளில் வசிக்கும் தாய்களும் மக்களும் இவ்விதமான ஆனந்தத்தையறியார். இவர்கள் இப்பொழுது அனுபவித்த ஆனந்தம் இவ்வளவு நாள் பிரிந்து இருந்ததினாலுண்டான வருத்தத்தை மறக்கும்படிச் செய்தது. தாயும் மக்களும் ஒன்றுசேர்ந்து சந்தோஷமாய் இருத்தல் அதிர்ஷ்டவசமானகாரியம்.

அவர்கள் வீட்டிற்குள்போய் உட்கார்ந்தவுடன், ஒருபிடி தங்க நாணயங்களைத் தாயார் மடியில்போட்டுத் தாமஸ், "அம்மா இப்பொழுது உங்களுக்கு ஒரு மரத்தால் கட்டப்பட்டவீடு நன்றாய் ஏற்படக்கூடும். நாம் அதைச்செய்யக் காலதாமதமன்றி ஆரம்பிப்போம்," என்று குதூகலத்துடன் சொன்னான்.

"அப்பா! எவ்வளவுபணமடா!" என்று ஜேம்ஸ் சொல்லிக்கொண்டு தன்னுடைய தாயார் மடியில் கிடக்கும் சொலிக்கும் தங்க நாணயங்களைக் கணக்கிடத்தொடங்கினான்.

"அண்ணா, எவ்வளவு பணம் கொணர்ந்தாய்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"75 டாலர்கள் இருக்கின்றன."

"நீ யவ்வளவும் சம்பாதித்தாயா?"

"ஆம், அவ்வளவும் சம்பாதித்தேன்."

இதுவரையில் ஜேம்ஸ் தங்கநாணயத்தைப் பார்த்ததில்லை. ஆகையால் புதிய தங்கநாணயத்தைப்பார்த்து ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்தான்.

அப்பொழுது கார்பீல்டுஅம்மாள் ஆனந்தக்கண்ணீர்விட்டுப்பேசமுடியாத ஆனந்தக்கடலில் மூழ்கியிருந்தாள். இப்படிப்பேசாமல் கண்ணீர்விடுவது ஜேம்ஸுக்கு இன்னதென்று தெரியவில்லை. ஆனால் சிறுவர்களுக்குத் தாயார் பிள்ளையிடத்தில் வைக்கும் அருமையும், அப்படி அருமையாய் வளர்த்தபிள்ளை தாயாருடைய சௌகரியத்திற்காகத் தன்னுடைய சௌகரியத்தைப்பாராமல் பணம் சம்பாதித்துக்கொண்டுவந்து கொடுக்கும் தருணத்தில் அனுபவிக்கும் ஆனந்தமும் அறிவது எளிதல்ல.

"அம்மா, புதுவீடுகட்டிக் கிரகப்பிரவேசமானவுடன் நான் புறப்பட்டுப்போகவேண்டும். மிச்சிகன் என்னுமிடத்தில் வேண்டிய வேலைபகப்படும். வேலைகிடைக்கும்பொழுது பணம் சம்பாதிக்க வேண்டும்."

"சௌகரியப்படி செய்துகொள்ளலாம். தச்சன் வீடுகட்டுவ தற்கு வேண்டியபொழுது அகப்படுவான் என்று நினைக்கிறேன்." அவ்விடத்திலிருந்த தச்சனுடைய பெயர் ட்ரீட் (Treat.)

"நான் விசாரிக்கிறேன். நானும் தச்சனுடன் வேலைசெய்து வேலையைச் சீக்கிரத்தில் முடிக்கமுயலுவேன்."

"நானும் சும்மாவிராமல் வேலைசெய்துதவுவேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"நான் க்ளீவ்லாண்டு (Cleveland.) என்னுமிடத்திற்குப்போய் சுண்ணாம்பு, கல், ஆணி முதலியவை வாங்கிவரப்போகிறேன்," என்று தாமஸ் சொன்னான்.

"நானும் உன்னுடன் வரலாமா?"

"வரலாம். உன்னுதவி எனக்கு வேண்டியிருக்கலாம்."

ஜேம்ஸ் க்ளீவ்லாண்டு என்னுமிடத்திற்கு அதுவரையிற்போன தில்லை. ஆகையால் அவன்போக விரும்பினான். க்ளீவ்லாண்டுக் குப்போய் எவ்வளவு நாளிருக்கும்படியாயிருக்கும்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"ஒரேநாளில் போய்வரவேண்டும்—அதிககாலம் செலவுசெய்ய முடியாது."

"எப்பொழுது போகப்போகிறாய்?"

"ட்ரீட் என்பவரை வேலைக்கு அமர்த்திவிட்டவுடன் புறப்பட வேண்டும்."

ட்ரீட் என்பவர் வேலைக்கு அமர்ந்தார். தமயனும் தம்பியும் க்ளீவ்லாண்டுக்குப்போய் வேண்டிய ஆணி முதலிய சாமான்கள் வாங்கிவந்தார்கள்.

சிலநாள் சென்றபிறகு தாமஸ் என்பவனும் ட்ரீட் என்பவரும் வீடுகட்ட ஆரம்பித்தார்கள். ஜேம்ஸ் சும்மாவிருக்கவில்லை. தன் வேலைசெய்தபின் மிகுந்தநேரத்தை வீடுகட்டுவதில் உதவிசெய்து கழித்தான். அந்தவிஷயம் அவனுக்கு விளையாட்டாயிருந்தது.

"ஜிம்மி, உனக்குவேலைசெய்ய வேண்டுமென்கிற ஆசையிருக்கிறதல்லவா? இந்த உளியையும் கொட்டாப்பிடியையும் எடுத்துக்கொண்டு இந்த இரண்டு மரத்துண்டுகளையும் நான் செய்துவந்தது போல் சேர்த்துக்கொடு," என்று ட்ரீட் என்பவர் சொல்ல, உடனே ஜிம்மி சொன்னபடி செய்தான். செய்தவேலை நன்றாயிருந்தபடியால் பலதுண்டுகளைச் சேர்த்துக்கொடுத்து ட்ரீட் என்பவருக்கு உதவிசெய்தான்.

இந்தவேலை செய்ததைப்பார்த்து, "இனிமேல் இழைப்புளி பிடித்து இழைக்கவேண்டும். நீ அந்தவேலைசெய்யச் சிறியவனாயிருந்தாலும் செய்துமுடிப்பாய் என்று நினைக்கிறேன்," என்று ட்ரீட் சொல்லி ஒருபலகையைச் சரியாய்வைத்து இழைக்கச்சொன்னார்.

ஜேம்ஸ் வேலையைச் சரியாய்ச் செய்தான். ட்ரீட் என்பவரும் அவன்தமயனும் இழைப்பதைப்பார்த்து அவர்கள் செய்தவிதம் அவனும் செய்தான்.

"கண்பார்த்தது கைசெய்யும்," என்பது அவனுக்கேபொருந்தும். உலகத்தில் சாதாரணமாய்ப் பிள்ளைகள் கண்ணால் பார்த்தும் காதால்கேட்டும் காரியங்கள் சரியாய்ச் செய்கிறார்களில்லை.

"இந்தவேலை எனக்குப் பிடித்ததாயிருக்கிறது," என்றுசொல்லிக்கொண்டு ஜிம்மி தச்சனிடம் தானிழைத்த பலகையைக்காட்டினான்.

"நாள்முழுவதும் இந்தவேலைசெய்தால் வேடிக்கை அதிகமாயொன்றுமிருக்காது. நெற்றித்தண்ணீர் நிலத்தில்விழும்படி உழைக்கவேண்டியதாயிருக்கும்," என்று ட்ரீட் என்பவர் சொன்னார்.

"நெற்றித்தண்ணீர்மட்டும் நிலத்தில் விழுந்தால் போதாது," என்று ஜிம்மிசொல்லிப் புத்தியும் வேண்டுமென்று குறிப்பிட்டான்.

"புத்தியும் வேண்டும், உழைக்கவும்வேண்டும்," என்று ட்ரீட் சொன்னார்.

"வேலைநன்றாய்ச் செய்வதற்கு வியர்வைநிரம்பவழிதல் அடை யாளமாயிருப்பின், நான்வேலை நன்றாய்ச் செய்திருக்கவேண்டும்; ஏனென்றால் என்னுடம்பு முழுவதும் வியர்வைதாரைதாரையாய்ப் பொழிகிறது," என்று ஜிம்மி சொன்னான்.

ஜிம்மிசெய்த வேலையைப்பார்த்து "யான் எவ்வளவு நன்றாய்ச் செய்டக்கூடுமோ, அவ்வளவுநன்றாய் நீயும் செய்திருக்கிறாய். தச்சனாக உனக்குப் பிறப்பிலேயே அமைந்திருக்கிறது," என்று ட்ரீட் சொன்னார்.

"எனக்கு தச்சனாக ஆசைதான்," என்று ஜிம்மி சொல்ல, "நீ அப்படியாவதற்குத் தடையென்ன?" என்று ட்ரீட் சொன்னார்.

"அஃதெப்படி? அதற்குத்தகுந்த சமயம் வாய்த்தாலல்லவோ முடியும். என்னைப்போன்றவனுக்குச் சமயம் எப்படிநேரிடும்" என்று ஜிம்மி கேட்டான்.

"நீ சொல்வது சரிதான். ஆனால், மனமுண்டெனின் வழியு முண்டு' என்பதை மறக்கக்கூடாது," என்றுட்ரீட் மறுமொழி கூறினார்.

"அப்படித்தான் தாயாரும் அடிக்கடி சொல்லுகிறாள்."

"அதுதான் தடைகளைத் துரத்தியடித்துக் காரியங்களைச்சரி யாய் நடத்துவது. ஆனால் வேலைநிரம்ப இருக்கிறது. உனக்குப் பிடித்தால் அதோபலகைகள் கிடக்கின்றன, இழைக்கலாம்," என்று சொல்லி ட்ரீட் தன் வேலையைக்கவனிக்க ஆரம்பித்தார்.

மற்றொருபலகையை யிழைத்தான். அந்தவேலையில் ஒன்றரை மணிகாலம் அமர்ந்து செய்தான்—அதிகநாழி ஒரு வேலையையும் கவனித்துச்செய்ய அவனால் முடியவில்லை. எந்தக்காரியத்திற்கும் அவன் ஓடியாடித்திரிந்து செய்யவேண்டியதாயிருந்தது—"அங்கு போய்வா," "இங்குபோய்வா," "அதையெடு," "இதைக் கொண்டுவா" என்றுசொல்வதும் அவன் தடையின்றியில் உற்சா கத்துடன் சொன்னபடி செய்வதுமாயிருந்தது;

இவ்விதமாய் ஜிம்மி பலவிதத்திலுதவிபுரிய, வீடு கட்டிமுடிந்தது. வீடு கட்டிமுடிவதற்குள் ஜிம்மி அநேக தச்சுவேலைக்கருவிகளுபயோகிப்பதில் சமர்த்தனானான்.

வீடுகட்டிமுடியவே, புதுவீட்டுக்குக் குடிபோனார்கள். தாமஸ் மிச்சிகனுக்கு வேலைசெய்யப்போய்விட்டான். ஜேம்ஸ் வீட்டு விவசாயத்தைப் பார்த்துவந்தான்.

தச்சுவேலைசெய்து பணம் சம்பாதிக்கவேணுமென்கிற எண்ணம் ஜேம்ஸுக்கு உண்டாயிற்று. அதை ஒருவருக்கும் சொல்லாமல் தானே ஆலோசித்து வந்தான். எப்பொழுதும் இந்த விஷயத்தைப்பற்றி நினைத்துக்கொண்டேயிருந்தான்.

ஒருநாள் தன் தாயைநோக்கி, "அம்மா, பணம் சம்பாதிக்க ஒரு ஏற்பாடு செய்யலாமென்று நினைக்கிறேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"அதென்ன?"

"தச்சுவேலைசெய்து சம்பாதித்தலே."

"அது முடியாதகாரியம்."

"ஏன்?"

"உனக்கு வயலில் செய்யவேண்டிய வேலையே அதிகமாயிருக்கும். நீ யிரண்டுவேலைகளும் செய்யமுடியாது."

"வயலில் வேலையில்லாதபொழுதுதான் தச்சுவேலைசெய்ய நினைத்தேனேயொழிய வேறில்லை. அப்படி யொழிந்தபொழுதில் வேலைகிடைத்தால்தான்."

"அப்படிக்கிடைப்பது அருமை."

"ஒருக்கால் அருமையாயிருக்கலாம். நான் எப்படியிருந்தாலும் முயற்சிசெய்து பார்க்கிறேன். நீ அடிக்கடி, முயற்சிசெய்வதைப்போல் சிறந்தது வேறொன்றுமில்லையென்று சொல்வதுண்டல்லவோ!"

"ஆம், நீ சொல்வது சரிதான். நீ சொல்லுகிறபடி முயற்சி செய்."

"நான் ட்ரீட் என்பவரிடம் போகிறேன். ஒருக்கால் நான் செய்யக்கூடிய வேலையிருக்கலாம். உனக்காகத்தாமஸ் பணம் சம்பாதிப்பது போல் நானும் கொஞ்சம் சம்பாதிக்க விரும்புகிறேன். அவனவ்வளவு வயது எனக்கு ஆகிறபொழுது நானும் மிச்சிகனுக்குப் போய்ச் சம்பாதிப்பேன்."

"ஒருபிள்ளை மிச்சிகனுக்குப் போயிருப்பதுபோதும். மேலும் மரம்வெட்டுவதையும் பலகையிழைப்பதையும்விட உயர்ந்தவேலை ஒருக்கால் உனக்கு ஏற்படும்நாள் வரக்கூடும்."

"அது இருக்கட்டும். இன்றைப்பதின்மே தச்சுவேலை கிடைத்தால் அதைச்செய்து பணம் சம்பாதிக்க நினைக்கிறேன். அதற்காகீ ட்ரீட் என்பவரிடம் போய்விட்டுவருகிறேன்."

இப்படிச்சொல்லிவிட்டு ட்ரீட் தச்சுவேலைசெய்யுமிடம் போய்ச் சேர்ந்தான்.

இவனைப்பார்த்தவுடன். "ஜிம்மியா, வா. தாயார் சௌக்கியமா?" என்று ட்ரீட் வழக்கம்போல் சந்தோஷத்துடன் கேட்டார்.

"என் தாயார் சௌக்கியமாயிருக்கிறாள்."

"இப்பொழுது வயல்வேலை யதிகமில்லை போலிருக்கிறது."

"அதிகவேலையிப்பொழுது இல்லை. ஏதாவது வேலையகப்படுமாவென்று உங்களைக் கேட்கலாமென்று வந்தேன்."

"அப்படியா? சரிதான். நீ யெந்தவிதமான வேலை செய்ய விரும்புகிறாய்?"

"நீங்கள் செய்யும் தச்சுவேலைதான்."

"சரி. நீ சோம்பலில்லாமல் வேலைசெய்யமுயலுவது எனக்குச் சந்தோஷம். சோம்பேறியைக் கண்டாலெனக்குப் பிடியாது. நீ சோம்பேறியல்லவென்பது எனக்குத்தெரியும்."

"நான் சோம்பேறியல்லவென்று நினைத்துக்கொண்டிருக்கிறேன். அது நிற்க, ஒழிந்தபொழுதில் வேலையகப்பட்டால் அதைச்

செய்து பணம் சம்பாதித்து என் தாயாருக்குதவி புரியலாமென்று எண்ணினேன்.''

"தாயாருக்குதவிபுரிவது பெருந்தன்மையுள்ள காரியம். தாய்க்குதவிபுரிவார், தலைமையடைவார். உன்னைப்போலொத்தவர்கட்குத்தான் நான் வேலைகொடுக்கவிரும்புவேன்."

"நீர் வேலையொன்று கொடுக்கக்கூடுமா?"

"ஆம். கொடுக்கக்கூடும். இழைக்கவேண்டிய பலகைகள் அதோ அனேகமிருக்கின்றன. நீ நன்றாயிழைத்துக்கொடுப்பாய். நீ உங்கள் வீடு கட்டினபொழுது செய்தவேலைத்திறத்தை நான் மறந்தேனில்லை."

"சம்பளமெப்படி?"

"ஒரு பலகையிழைப்பதற்கு ஒரு சென்டு (cent) கூலி."

"எப்பொழுது வேலைசெய்து முடிக்கவேண்டும்?"

"உன்னால் கூடிய சீக்கிரத்தில் செய்தால் போதும்."

"நாளையதினம் வந்து வேலை செய்யத்தொடங்குகிறேன்."

"குழந்தாய், நீ சொல்லுகிறபடி நாளையதினந்தொடங்கி உனக்கிஷ்டப்பட்டபொழுது வேலையை முடித்துக்கொடு"

"ஒருமாதகாலம் நான் செய்து கொண்டிருந்தால் உமக்குப் பிடிக்குமா?"

"கூடியமட்டும் சீக்கிரத்தில் நீ முடிப்பாயென்பது எனக்குத் தெரியும். அது போதுமானது. வேலை முடிந்ததும் கூலிதயாராய்க் கொடுக்கப்படும்"

"நாளைக் காலையில் வேலைக்கு வருகிறேன்" என்று சொல்லி டிரீட் என்பவரிடம் விடைபெற்று ஜிம்மி வீட்டுக்குத்திரும்பினான்.

ஜேம்ஸ் திரும்பி வரும்பொழுது மனமகிழ்ச்சியும் சந்தோஷமும் மேலிடத் தாயிடம் வந்து தனக்கு உண்டான அதிர்ஷ்டவசத்தைத்தெரிவித்தான்.

"அம்மா, நான் சம்பாதிக்கப்போகிற பணம் முதல் முதலில் சம்பாதித்த பணமாயிருக்கும்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"பணம் சம்பாதிக்க வயது உனக்கு ஆகவில்லை. உனக்கு வேலை கிடைத்தது எனக்குச்சந்தோஷம். உனக்கு வேலை கிடைக்குமென்று நான் நினைக்கவில்லை."

"முயற்சி செய்ததால் கிடைத்தது,"

"ட்ரீட் என்பவர் உனக்காக இந்தவேலை ஏற்படுத்திக்கொடுத்திருக்கலாம்; அவர் உனக்கு நல்லசினேகிதரல்லவா? தன்னாலியன்ற மட்டும் வேலைகள் உனக்குக்கொடுப்பார். எப்பொழுது வேலை தொடங்கப்போகிறாய்?"

"நாளையதினம் காலையில் வேலை செய்யப்போகிறேன்,"

"ஜாக்கிரதையாய் வேலை செய்; மிதமிஞ்சி வேலைசெய்யாதே. ஒரு நாளுக்கு இரண்டு மணி இழைப்புளி வேலை செய்யக்கூடும். அதிகப்பட்டால் மூன்று மணி வேலை செய்யலாம். அதற்குமேல் வேலை செய்யலாகாது."

"நான் ஆறு மணி நாளையதினம் வேலை செய்யப்போகிறேன். இரண்டு மணி வேலை செய்வது எனக்கே நகைப்பாயிருக்கும்; மேலும் ட்ரீட் என்பவரும் நகைப்பார்."

"நான் சொல்வது ட்ரீட் சரியென்று சொல்லுவார். சிறுவன் மிதமிஞ்சி வேலை செய்யலாகாது. உனக்கு ஒருவர் எச்சரிக்கை செய்யாவிட்டால், அறியாமலே வேலை செய்யவேணுமென்ற ஆசையால் மிதமிஞ்சி வேலைசெய்து விடுவாய்,"

"எவ்விதத்திலும் நான் நாளையதினம் ஆறுமணிக்குக்குறையாமல் வேலை செய்தேவருவேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

மறுநாட் காலை ஜேம்ஸ் ஒப்புக்கொண்ட வேலை செய்யப் போனான். ட்ரீட் கையில் இழைப்புளியைக்கொடுத்து வேலை செய்யச்சொன்னார். வயது முதிர்ந்தவன்போல் வேலை செய்யத் தொடங்கினான். ஒவ்வொரு பலகையும் 12 அடி நீளம். பலகை பலகையாயிழைத்து வந்தான். நாள் முழுவதும் ஓயாமல் வியர்வை

உடம்பு முழுவதும் பொழிய, சிரமத்தைப்பாராமல் வேலை செய்தான். சூரியன் அஸ்தமிக்குமுன் இழைப்புளியைக் கீழே வைத்துவிட்டு, "ஐயா, நூறு பலகைகள் இழைத்திருக்கிறேன். எண்ணிப்பாரும்," என்று ஜேம்ஸ் ட்ரீட் என்பவரிடம் சொன்னான்.

"நூறென்று சொன்னாய்? உண்மையாகவே நூறு பலகைகள் இழைக்கப்பட்டனவா?"

"எண்ணிப்பாரும்; என் கணக்கின்படி நூறுதான்."

"அப்படியானால் ஒரு நாளுக்குத் தகுந்த வேலை செய்திருக்கிறாய். எண்ணிப்பார்த்ததில் நூறு இருக்கின்றன. உன்னைப்போலொத்த சிறுவனுக்கு வேலையதிகம். ஒரு நாளுக்கு இதில் பாதி நீ செய்தால் போதும்."

"எனக்கு உடம்பு அதிக களைப்படையவில்லையே!"

"இப்பொழுது தெரியாது. இதனுடைய பலன் முப்பது வருடங்கழித்துத்தெரியும்."

"அப்படியானால் இதைப்பற்றியிப்பொழுது கவனிக்கவேண்டியதில்லை," என்று ட்ரீட் சொன்னதையறியாமல் சிறுபிள்ளைத்தனமாய் மறுமொழி கூறினான்.

"இப்பொழுது உன் சம்பளம் எவ்வளவு ஆகிறது பார்ப்போம். நூறு பலகைகட்கு நூறு செண்டு (cents) அதாவது ஒரு டாலர். (dollar) எண்ணிக்கொள், நான் நூறு எண்ணிக்கொடுக்கிறேன்."

அப்படிச்சொல்லி நூறு செண்டு எண்ணி ஜேம்ஸ் கையில் கொடுத்தார்.

அளவிறந்த சந்தோஷத்துடன் ஜேம்ஸ் வீட்டுக்குத்திரும்பினான். வீட்டுக்குப்போகும் வழியில் இப்படி ஒரு நாளில் ஒரு டாலர் வீதம் எழுபத்தைந்து நாளில் தன்னுடைய அண்ணன் தாமஸ் வெளியூருக்குப் போய்ச்சம்பாதித்து வந்த எழுபத்தைந்து டாலரும் ஊரிலிருந்தே அண்ணன் செலவழித்த காலத்தில் பாதியில் சம்பாதித்துவிடலாம் என்று நினைக்க அவனுக்கு மனங்களித்தது.

அண்ணன் செய்ததுபோல் தானும் செய்ய விரும்பினானே இல்லையோ என்று நாம் சொல்லமுடியாது. வீடு சேர்ந்தவுடன் தன்னுடைய தாயார் மடியில் தான் சம்பாதித்து வந்த செப்பு நாணயங்களை 'அம்மா, உனக்குச் சம்பாதித்து வந்தேன்,'' என்று சொல்லிக்கொண்டு கலகலவென்று கொட்டினான்.

'' இவ்வளவுமா?'' என்று தாயார் கேட்டாள்.

'' ஆம், நூறு பலகைகள் இழைத்தேன்.''

இதைக்கேட்ட கார்பீல்டு அம்மாள் பேச நாவெழாமல், தன்னுடைய குழந்தை ஜேம்ஸைக்கட்டி முத்தமிட்டுத் தன்னுடைய சந்தோஷத்தையும் அன்பையும் காட்டினாள்.

# 10 - அத்தியாயம்.

## களஞ்சியம் கட்டுதல்.

"செய்வன திருந்தச்செய்"

ஜேம்ஸ் ட்ரீட் என்பவரிடத்தில் முதலில் வேலைக்குப்போன நாள் பிறகு தச்சுவேலையில் பல அவனுக்குக்கிடைத்தன. மாரி காலத்துப் பள்ளிக்கூடம் ஏற்படவே, ஒருநாள் விடாமல் ஜேம்ஸ் பள்ளிக்குப்போய் வந்தான். பள்ளிக்கூடம் சாத்தின மறுநாள் ட்ரீட் ஜேம்ஸ் வீட்டிற்கு வந்தார்.

"அம்மா, நான் ஜேம்ஸைத்தேடி வந்தேன். பாயின்டன் என்பவருக்கு ஒரு களஞ்சியம் கட்டவேண்டியதாயிருக்கிறது. விவசாயவேலை ஆரம்பிப்பதற்குமுன் ஜேம்ஸுக்கு வேலை கொடுக்கலாமென்று வந்தேன்," என்று ட்ரீட் கார்பீல்டு அம்மாளிடத்தில் சொன்னார்.

"அது அவனுக்கு ஒத்திருக்கும். விவசாயத்தைவிட ஜேம்ஸ் தச்சுவேலையை விரும்புகிறான் என்று நினைக்கிறேன்," என்று கார்பீல்டு அம்மாள் பதில் சொன்னாள். அப்பொழுது ஜேம்ஸ் அவ்விடம் வந்தான்.

"பையா உன்னைத்தேடி வந்தேன்," என்று ட்ரீட் சொன்னார்.

"யாது காரணம் பற்றி?"

"மற்றொருவேலையுனக்குக்கொடுக்கும்பொருட்டு."

"பலகையிழைக்கவா?"

"இல்லை. அதைவிடச்சிறந்தது"

"யாது?"

"பாயின்டன் என்பவருக்கு ஒருகளஞ்சியம் கட்டுதல்."

"அது எனக்குப் பிடித்ததுதான். எனக்குங் களஞ்சியம் கட்டக்கற்றுக்கொள்ள ஆசையுண்டு."

"நீ எளிதில் கற்றுக்கொள்ளலாம். அது ஒரு கஷ்டமான வேலையல்ல."

"நான் எப்பொழுது வரவேண்டும்?"

"தாமதமன்றி முடியுமானால் நாளையதினமே வந்தாலும் சரி தான்."

"அப்படியானால் நாளையதினமே வருகிறேன்."

"விவசாயவேலை ஆரம்பிக்கிறவரைக்கும் என்னிடத்தில் வேலைசெய்துகொண்டிருக்கலாம்."

"அதுதான் எனக்கும் வேண்டியது. நாட்கூலிக்கு வேலை செய்கிறதா?"

"ஆம், உனக்கு இஷ்டமிருந்தால் அப்படியே செய்யலாம். நாளொன்றுக்கு 40 ஸென்டுக்குட்படாமலும் 50 ஸென்டுக்கு மேற்படாமலும் உன்வேலைக்குத்தகுந்தபடி கூலிபோடுவேன்."

"அதுபோதுமானது; நாளையதினம் காலையில் வேலைக்கு வருகிறேன்." என்று ட்ரீட் என்பவர் திரும்பிப்போகும்பொழுது, ஜேம்ஸ் சொன்னான்.

"அம்மா, முயற்சிசெய்தலைப்போலுள்ளது மற்றொன்றுமில்லை. சென்றபக்ஷம் வேலைசம்பாதிக்க முயன்றிராவிட்டால், இந்தவேலை எனக்குக்கிடைக்க இடமிருந்திருக்காது."

"ஆம், நீ சொல்வது மெய்தான். முதல்வேலையை நீ நன்றாய்ச் செய்யாவிடின், இந்தவேலை உனக்கு வந்திருக்காது. எந்தவேலை செய்தாலும் நன்றாய்ச்செய்யவேண்டியது. அதைப்போற்சிறந்தது மற்றொன்றுமில்லை. அதையும் நீ மனத்தில் வைக்கவேண்டும்."

"அது முயற்சிசெய்வதற்குச் சற்றேறக்குறையச் சரியல்லவா?" என்று ஜிம்மி பரிகாசமாய்க்கேட்டான்.

"ஒருக்கால் அதற்குமேலாகவேயிருக்கலாம். வேலைநன்றாய்ச் செய்கிறவர்களுக்குத்தான் வேலையகப்படும். ஊழல்வேலை செய்கிறவரை யொருவரும் விரும்பார்."

"ஊழ்ல்வேலை யென்றாலென்ன?"

"வேலையைச்சரியாய்ச் செய்யாமலிருத்தல். உன் தகப்பனார் செய்யத்தகுந்தவேலையை நன்றாய்ச் செய்யவேண்டும், என்று அடிக்கடி சொல்லுவார். அவர்சொன்னது சரியே. மற்றொன்றுமவர் சொல்வதுண்டு. அது 'ஒருவிஷயம் நீயறிந்தால், அதை ஐயந்திரிபறக்கற்றுக்கொள்,'' என்பது.

"எவ்விதமாக ஒருவன் ஒரு விஷயத்தையறிந்தால்; அதை நன்றாயறியாமல் இருக்கக்கூடுமே? எனக்கு ஏதாவதுதெரியுமானால் அது எனக்கு நன்றாய்த்தெரியும்."

"சில வேளைகளில் ஒரு பாடத்தை மற்றையவேளைகளைவிட நன்றாயறிவாயல்லவா?"

"ஒருக்கால் அப்படியிருக்கலாம்; ஆனால் ஒரு பாடம் நன்றாய் எனக்குத் தெரியாவிட்டால், அந்தப் பாடத்தைப்பற்றி எனக்கு அதிகமாய்த் தெரியாதென்றே சொல்லவேண்டும். பாடம் நன்றாய்த்தெரியவில்லையென்று சொல்ல எனக்கு வெட்கமாயிருக்கும்''

"அப்படியே நீ எப்பொழுதும் நினைப்பாயாக. ஒத்துக்கொண்ட வேலையைச் சரியாய்ச் செய்யாமலிருக்க எப்பொழுதும் வெட்கப்படுவாய் என்று நம்புகிறேன்."

"களஞ்சியங்கட்டக்கற்றுக்கொள்ளலாமென்று நான் எண்ணுகிறேன்."

"அதை எளிதில் நீ கற்றுக்கொள்ளக்கூடும் என்று நினைக்கிறேன். அதைப்பற்றி எனக்கு அதிகமாய்த்தெரியாதுதான். ஆனால் அது எனக்கு அதிகக் கடினமான வேலையாய்த் தோன்றவில்லை."

"என்னால் கற்றுக்கொள்ளமுடியுமென்று எனக்குத்தோன்றுகிறது."

"உன்னபிப்பிராயத்தைத் தெரிவித்தால் ட்ரீட் என்பவர் கற்கும் வகையையுனக்குக் காண்பிப்பார்."

"அப்படியே அவரிடம் நான் தெரிவிக்கப்போகிறேன்."

சொன்னபடி மறுநாள் ஜேம்ஸ் வேலை தொடங்கினவுடன் தன்னுடைய விருப்பத்தை ட்ரீட் என்பவருக்குத் தெரிவித்தான்.

"ஐயா, நான் ஒரு களஞ்சியங் கட்டக் கற்றுக்கொள்ள விரும்புகிறேன். நான் கற்றுக்கொள்ள முடியாதா?" என்று ஜேம்ஸ் ட்ரீட் என்பவரிடம் சொன்னான்.

"அந்தக்காரியஞ்செய்ய நீ மிகவும் சிறுபிள்ளை; ஆனால் நீயுங் கற்றுக்கொள்ள முயலக்கூடும் வேலை நடக்கையில் நன்றாய்க் கவனிப்பாயானால், அந்தக்காரியம் சுலபமாயறியலாம்."

"நானப்படியே கவனிக்கிறேன்.

"முதல் முதலில் கட்டவேண்டிய விதத்தைக்காட்டும் படத்தினர்த்தத்தை நீ சிறிது அறியவேண்டும்," என்று சொல்லித்தன்னுலியன்றமட்டும் ட்ரீட் என்பவர் படத்தை விரித்துக்காட்டி விஷயத்தை எடுத்துச்சொன்னார். ஜேம்ஸ் முக்கியமான விஷயத்தைக் கிரகித்துக்கொண்டு களஞ்சியங் கட்டுவதில் அதிக அறிவுடன் உதவி புரிந்தான். ட்ரீட் என்பவர் பையனைத் தன் கண் முன்பாக வேலை செய்யச்செய்து வேலை கற்றுக்கொடுத்தார். படத்துக்கும் கட்டடத்துக்கும் உள்ள சம்பந்தத்தைக் காட்டிப் படத்தினுடைய உபயோகம் தச்சனுக்கு யாது என விளங்கச்செய்தார்.

வேலை செய்துகொண்டே ட்ரீட் என்பவர் ஜேம்ஸுக்குப் புத்தி கற்பித்துக்கொண்டு வந்தார்.

களஞ்சியமும் கட்டி முடிந்தது. ஜேம்ஸ் களஞ்சியம் கட்டும் விதம் ஒருவாறாகக் கற்றுக்கொண்டானென்றே சொல்லலாம்.

களஞ்சியங்கட்டி முடிந்தநாள், நாளொன்றுக்கு 50-ஸென்டு வீதம் ஜேம்ஸுக்குச் சம்பளம் 20 டாலர் கொடுத்து, "நீ யவ்வளவும் சிரமப்பட்டு சம்பாதித்த பணம்," என்று திருப்தியாய்ச் சொன்னார்.

இதற்கு முந்திய மாரிகாலத்தில் படிப்பில் மிகவும் விருத்தியடைந்தான். பள்ளியில் கற்றுக் கொள்ளக் கூடியவையெல்லாம் அவனுக்கு நன்றாய்த்தெரியும், ஆனால் மாரிகாலத்தில் பள்ளிக்குப் போகாமலிருக்கவில்லை கணக்கில் ஆடெம்ஸ் (Adams) கணித

புத்தகத்திலுள்ள எல்லா விஷயங்களும் அவனறிவான். பள்ளிக் கூடத்து வாத்தியாரைவிட அவன் கணக்கிற் றேர்ந்தவனென்று சொல்லவேண்டும்.

ஒருநாள் பள்ளியில் வாத்தியார் ஒரு கணக்கைப் பிள்ளைகளுக் குக் கொடுத்துவிட்டுத் தானும் போடத்தெரியாமல் கஷ்டபட்ட பொழுது ஜேம்ஸ் அந்தக் கணக்கைப் போட்டுவிட்டதாயும், வாத்தி யார் அவமானப்பட்டதாயும் பிள்ளைகள் சொன்னார்கள்:

"புத்தகத்திலுள்ள விடை பிழையாயிருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்; ஹென்ரி, நீ போடுப்பார்க்கலாம் போட்டான வுடன் உன்னுடையஸ்லேட்டுப்பலகையை என்னிடம்கொண்டுவா, என்று வாத்தியார் ஒரு கேள்வியைப்போட முடியாமல், கணக்கில் நன்றாய்ப்போடுகிற ஒ்பயனுன் ஹென்ரி பாயின்டனை நோக்கிச் சொன்னார். ஹென்ரியும் போட்டுப்பார்த்ததில் புத்தகத்திலுள்ள விடை அவனுக்கும் வரவில்லை.

"என்னால் முடியவில்லை; எனக்குப் புத்தகத்திலுள்ளவிடை வரவில்லை," என்று ஹென்ரி சொன்னான்.

"உன்னுடைய பலகையைக் கொண்டுவா" என்று வாத்தியார் சொன்னார்.

வாத்தியார் பலகையைப்பார்த்துப் பிழையொன்றும் காட்டா மல், "புத்தகத்திலுள்ள விடை பிழையாய்த்தானிருக்கவேண்டும்," என்று வாத்தியார் பகர்ந்தார்;

உடனே ஜேம்ஸ், "நான் அந்தக்கேள்வியை யொருதரம் போட்டேன்," என்று சொல்ல, வாத்தியார் "உனக்குப் புத்தகத் திலுள்ள விடை வந்ததா?" என்று கேட்டார்.

"ஐயா நான் அந்த விடை வந்ததாகத்தான் நினைக்கிறேன்."

"அப்படியானால் நீ போடு பார்ப்போம். போட்டவுடன் உன் பலகையை யென்னிடம் கொண்டுவா"

ஜேம்ஸ் அந்தக்கணக்கைப்போட்டு முடித்தான்.

"நான் கணக்கைப் போட்டுவிட்டேன்," என்று சொல்லிக் கொண்டு வாத்தியாரிடம தன்னுடைய பலகையைக்கொண்டு போனான்.

உபாத்தியாயர் ஜேம்ஸ் போட்டவிதத்தை நன்றாய்ப்பரிசோதித்துப்பார்த்து அவன் செய்தவிதம் சரியென்று அவருக்குத்தெரிய வந்தது.

"ஜேம்ஸ், நீ கணக்குப்போட்டது சரிதான்," என்று வாத்தியார் மனச்சங்கடம் வெளிப்படச்சொன்னார். அப்படி அவர் சொல்வது பள்ளியிலிருந்த பெரிய பிள்ளைகளுக்குச் சந்தோஷம்.

வாத்தியார் போடக்கூடாத கணக்கை ஜேம்ஸ் போட்டு வாத்தியாரைத் தோல்வியடையச்செய்தலவர்கட்கு வேடிக்கை. இதற்கு முன்பே அவர்கட்கு அவன் மேதாவியெனத்தோன்றிற்று. இதற்குப்பிறகு கேட்க வேண்டியதில்லை. அவன் சொல்லுவது அவர்கட்கு வேதவாக்காய்விட்டது. அவன் அவர்கட்குத்தோழனாயிருந்தபோதிலும், அவனிடத்திலவர்கள் மரியாதை வைத்து நடந்து வந்தார்கள்.

அந்த மாரிகாலத்திலவன் வாசித்த புத்தகம் ஒன்றுண்டு. அது ராபின்ஸன் க்ரூஸோ ( Robinson Crusoe ) என்னும் புத்தகம். இரவும் பகலும் அந்தப் புத்தகத்தைப் படித்துக்கொண்டேயிருப்பான். அப்புத்தகத்திலடங்கியது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது

அப்புத்தகம் வாசிக்கவே, அம்மாதிரிப்புத்தகம் வேறுண்டோவெனக்கேட்க ஆரம்பித்தான். புத்தகம்வாசிப்பதிலவனுக்கிருந்த ஆசையைப்போல் மற்றொன்றிலுமவனுக்குப் பிரியமில்லை.

அடுத்தகோடைகாலத்தில் ஜேம்ஸுடைய குணங்களை விளக்கும் இரண்டு விஷயங்கள் நேர்ந்தன. அவற்றைக் கூறுவோம்:

ஒருநாளவன் தோழனொருவன் ஞாயிற்றுக்கிழமைதினம் அவர்களிருந்தவிடத்திற்கு மிகத்தூரத்தில் வசித்த தங்களிருவருக்கும் சிநேகிதனான ஒருவனைப் போய்ப்பார்த்துவிட்டு வரலாமென்று சொன்னான்.

"ஞாயிற்றுக்கிழமைதினம் போகக்கூடாது.," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"ஏன்?" என்று தோழன் கேட்டான்.

"அது சரியல்ல."

"நீயும் நானும் அதைவிட ஒழுங்கற்ற காரியத்தைச் செய்யாமலிருந்தாலே, நாம் நல்லபிள்ளைகளென்று பெயர்வாங்கலாமே."

"அதைச்செய்வதினால் நமக்கு நல்லபெயர் வரப்போகிறதில்லை."

"கெட்டபெயரும் வரப்போகிறதில்லை"

"என் தாயார் அதற்குச் சம்மதிக்கமாட்டாள்."

"என் தாயாரும் சம்மதிக்காமலிருக்கலாம். ஆனால் அவளைக் கேட்டுச் செய்யப்போகிறதில்லை."

"நான் தாயார் சொல்லுக்கு விரோதமாய் எப்பொழுதுமொரு இடத்திற்கும் போகமாட்டேன் அவளுக்கு ஞாயிற்றுக்கிழமையைப் பற்றியிருக்கிற அபிப்பிராயம் எனக்குத்தெரியும். அவள்மனம் புண்படும்படி யொருபொழுதும் செய்யேன்."

"பாக்கிநாட்களில் வேலையிருக்கிறபடியால், நீ போகமுடியாது. ஆகையால் நாம்போவதை நிறுத்திவிடவேண்டியதுதான்."

"ஞாயிற்றுக்கிழமை போவதைவிடப் போகாமலிருத்தலே எனக்குப்பிடித்தது. மற்றநாளில் போகமுடியாதென்பது நிச்சயமல்ல. பொறுத்துப் பார்ப்போம்."

"அப்படியானல் எப்பொழுதும் பொறுத்துக்கொண்டு சும்மாவிருக்கவேண்டியதுதான்."

"ஞாயிற்றுக்கிழமைபோவதைவிட நான் அனேகநாள்பொறுத்துச் சும்மாவிருக்க விரும்புவேன். என்னுடைய அபிப்பிராயமெப்படியிருந்தாலும் என் தாயார்சொல் மீறிநடப்பதற்குடம்படேன்."

தன்னுடைய பரமசினேகிதன் வேண்டிக்கொண்டால்கூட ஜேம்ஸ் ஒழுங்கற்ற காரியஞ்செய்யான். பயமன்றி உள்ளதையுள்ளபடி சொல்லுவான்.

மற்றையவிஷயம் நடந்தது அவனுடைய ஜீவகாருண்ணியத்தைக் காட்டுகிறது.

வீட்டிலிருந்த பூனையும் ஜேம்ஸும் பரமசினேகிதர்களென்று சொல்லலாம். ஒருநாள் ஜேம்ஸ் தோட்டத்திலிருந்தான்; பூனையும் பக்கத்திலிருந்தது. முன்குறித்த சினேகிதன் தோட்டத்திற்கு வந்து பூனையின்மீது கல்லைவிட்டெறியப், பூனைபயந்து வீட்டிற்குள்ளோடிற்று. தன்மேல் கல்வீசினால் எவ்வளவு கோபம்வருமோ அவ்வளவு கோபாவேசம் தன்னுடைய பூனையின்மீது கல்லைவிட்டெறிந்ததனாலுண்டாயிற்று.

உடனே "நீ செய்தது துஷ்டத்தனம்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
5 APR 1914
MADRAS.

"பூனைதானே."

"பூனையின்மேல் கல்லெறிவது இரக்கமின்மையைத்தவிர வேறில்லை."

"உன்னுடைய பூனையென்பது எனக்குத்தெரியாது."

"யாருடைய பூனையாயிருந்தாலென்ன? பூனைபூனையல்லவா?"

"ஒருஎலி எலியென்னும் பிராணி," என்று சொல்லி விஷயத்தை விளையாட்டாக மாற்ற முயன்றான்.

"பிராணிஹிம்ஸை நான் சகிக்க முடியாது."

"நானெறிந்த கல் அதன்மேல் படவில்லையே."

"அதற்காகச் சந்தோஷிக்க நியாயமில்லை. நீயதையடிக்க நினைத்தாயல்லவா? நீயதை மதிகெடும்படி பயமுறுத்திவிட்டாய்."

"அதற்கு மதியேது? ஒரு சாமானியப்பூனைதானே."

"நீ சொல்லும் விதம் பூனைதானே, நாய்தானே, கழுதைதானே, குதிரைதானே, என்று சொல்லிக்கொண்டு எந்தப்பிராணியையும் நீ வருத்துவாயென்று நினைக்கிறேன். நானொருபொழுது மப்படிச்செய்யேன்."

"ஜிம்மி, நீ யப்படிச் செய்யமாட்டாயென்பது நானறிவேன். நீ மிகவும் இரக்கமுள்ளவன். உன்னுடைய சுபாவமறிந்தால் ஒரு சுண்டெலி உன் முகத்தின்மீது விளையாடக்கூடும்."

"உன்னுடைய சுபாவமறிந்தால் உன் முகத்தின்மீது அது விளையாடாது என்பதற்கு ஐயமில்லை."

"சரி, ஜிம்மி நான் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதாக உன்னுடைய பூனையிடத்தில் சொல்லு. இனி பூனைகளைக்கண்டால் மரியாதையாய் நடந்துகொள்ளுகிறேன்," என்று சொல்லிக்கொண்டு ஜேம்ஸினுடைய தோழன் தன்வழியை நோக்கிச் சென்றான்.

ஜீவகாருண்ணிய மென்பது அவனுக் கியற்கையாயமைந்த குணம். மனிதர்களிடத்தில் எவ்வளவு பிரியமாயிருந்தானோ அவ்வளவு அன்புடன் மிருகங்களிடத்திலும் அவன் பழகி வந்தான். மற்றொரு விஷயம் நேர்ந்தது. அதையிவ்விடத்தில் சொல்லுவோம்.

பள்ளியிலிவனைப்போல் சந்தையற்ற பையனொருவனிருந்தான். அவன் சிறு பையன். சில பெரிய மாணாக்கர்கள் அவனையுபத்திரவிக்கிறது வழக்கம். ஒருநாள் ஜேம்ஸ் அப்படிச்செய்தல் சரியல்லவென்றுசொல்லி, யாராவது அச்சிறுவனையுபத்திரவித்தால் தன்னையுபத்திரவித்தற்குச்சமானமென்று சொன்னான்.

அங்கிருந்த பெரிய மாணாக்கனொருவன், "நீ சொல்லுகிறபடியே இருக்கட்டும்," என்று சொல்லி அப்படியுபத்திரவிக்கப் போகிறதுபோல் ஜாடை செய்தான்.

"உன்னிஷ்டப்படி செய்; நீ யுன் கைவரிசையை என்னிடத்தில் காட்டு. என்னைவிட பலமுள்ளவனாயிருந்தாலொழிய நான் உன்னை அச்சிறுவனை யுபத்திரவிக்கும்படி விடேன். உனக்குச்சமானமானவர்களுடன் எதிர் நில், அல்லது சும்மா இரு."

"ஜிம்மி அந்தப்பையனிடத்தில் நீ மிகவும் மோகம் கொண்டிருக்கிறாயே! அவனிடத்தில் விசேஷம் ஒன்று காணப்படவில்லையே," என்று மற்றொரு பெரிய பையன் சொன்னான்.

"எனக்கு அவனிடத்தில் விசேஷம் இருக்கிறதாகத்தான் தோன்றுகிறது. அவனுக்குத் தகப்பனுமில்லை, தமயனுமில்லை. ஆகையால் இந்தப்பள்ளியில் நான் அவனுக்கு அந்த ஸ்தானத்திலிருக்கப்போகிறேன்."

"ஓ! ஓ! அப்படியானால் தகப்பனார் அண்ணன் ஸ்தானத்தில் வந்துவிட்டாய் போலிருக்கிறது!" என்று ஒரு பெரிய பையன் பரிகாசமாய்ச்சொன்னான்.

"அச்சிறுவனை யுபத்திரவிக்காமல் என்னை யெப்படிவேண்டுமோ அப்படிக்கூப்பிடலாம். நான் அதைக் கவனிக்கவில்லை," என்று ஜேம்ஸ் சொன்னான்.

மாஸஉல் முடிந்து நவம்பர் மாதமும் வந்தது; ட்ரீட் என்பவரும் "ஜேம்ஸ், மற்றொரு களஞ்சியம் கட்டவேண்டியதாயிருக்கிறது. வேலை வேண்டுமா?" என்று சொல்லிக்கொண்டுவந்தார்.

"வேலையெங்கே கிடைக்கப்போகிறதென்று வேலை செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன்."

"எல்லாம் தயாராயிருக்கிறது, நீ யுடனே ஆரம்பிக்க முடியுமா?"

"நாளையதினம் வேண்டுமென்றாலும் வரத்தயாராயிருக்கிறேன்."

"நான் இந்தக் களஞ்சியத்தைச் சீக்கிரத்தில் கட்டிமுடிக்க விரும்புகிறேன்."

"யாருக்காக கட்டப்போகிறீர்?"

"பர்நார்டு என்பவருக்கு,"

"அப்படியா?"

"ஆம்; முன் கட்டியதைவிடப் பெரிதாயிருக்கும்."

"நிரம்பப் பெரிதா?"

"இல்லை. முன் கட்டியதைவிடப் பெரிதென்று சொல்லக் கூடியதேயொழிய மிகப் பெரிதென்று சொல்ல நியாயமில்லை. நாளையதினம் உன்னைப் பார்க்கலாமென்று நினைக்கிறேன், சம்பளம் முன் கொடுத்தபடிதான்," என்று சொல்லி டிரீட் என்பவர் வீடு சென்றார்.

இரண்டாவது களஞ்சியமும் கட்டிமுடிந்தது. ஜேம்ஸ் களஞ்சியங் கட்டும் விதத்தைக் கற்றுக்கொள்ள இந்தவேலை இடங்கொடுத்தது.

வேலை முடிந்தவுடன், "ஜேம்ஸ், நீ செய்த வேலையில் பிழையொன்றுமில்லை; வேலையுனக்குச் சுலபமாய் வருகிறது. உனக்குக் கொடுக்கிற கூலி வீணல்ல."

"நான் களஞ்சியம் கட்டும் விதத்தைக் கற்றுக்கொள்ளலாமென்றெண்ணுகிறேன்."

"அப்படியானால் உன்னாலிப்பொழுது கட்டமுடியாதென்று நினைக்கிறாய் போலிருக்கிறது.?"

"முடியாதென்றுதான் நினைக்கிறேன்."

"அதைக் கற்றுக்கொள்ள ஊக்கமும் புத்தியும் வேண்டும். இரண்டு முன்னிடத்திலிருக்கின்றன. சீக்கிரத்தில் இதேமாதிரி வேலையுனக்குக்கொடுக்கப்போகிறேன் அப்பொழுது அதை முழுவதும் நீ கற்றுக்கொள்ள முயற்சி செய்யலாம், உனக்குச் சம்பளம் 15 டாலர் ஆகிறது," என்று ட்ரீட் என்பவர் சொல்லிக்கொண்டு பையனுக்குப் பணத்தை யெண்ணிக்கொடுத்தார்.

ஜேம்ஸுக்கு 13-வயது. பார்வைக்கு அவன் அதிக வயதானவனென்றே சொல்லும்படியிருந்தது. மாரிகாலத்துப் பள்ளிக்கூடம் திறக்கவே, வழக்கம்போல் பள்ளிக்கூடம் போய்வந்தான். அவனுக்கு அந்தப் பள்ளியில் கற்றுக்கொள்ளவேண்டியது அதிகமாயில்லாவிட்டாலும், தெரிந்தவற்றை மறுபடியும் திருப்புதல் நல்ல பழக்கமென்று அவன் பள்ளிக்குப் போய்வந்தான்.

அந்த மாரிகாலத்தில் படிப்பில் மிகத்தேர்ச்சியடைந்தான். மற்றொரு புத்தகம் புதிதாய் அவனிந்த மாரிகாலத்தில் வாசித்தான்.

ஜேம்ஸ் தான் வெளியில்போய் வேலைசெய்தால் பணமதிகம் சம்பாதிக்கலாமென்பதறிந்து, ஒரு நாள் தன் தாயாரை யப்படிச் செய்ய வனுமதிகேட்கத் தாயாரவனை விட்டுப்பிரிய மனமில்லாமல் பிறகு பார்த்துக்கொள்ளலாமென்று சொன்னாள். அன்னைமொழிக் கிணங்க, ஜேம்ஸ் வீட்டிலேயே இருந்து தன் விவசாயவேலை வழக்கம்போல் பார்த்துவந்தான். ஒழிந்தவேளையில் பிறருக்கு வேலை செய்தும், களஞ்சியங்கட்டுவதில் அமர்ந்தும் பணம் சம்பாதித்து வந்தான். 15-பிராயமாவதற்குமுன் அவனுக்கு ட்ரீட் என்பவர் முன் சொல்லப்பட்டதைத்தவிர மூன்று களஞ்சியங்களும், ஒரு கொட்டகையும் கட்டுவதில் வேலைகொடுத்தார். ஆகையால் அவனிஷ்டப்படி களஞ்சியங்கட்டக் கற்றுக்கொண்டான். எடுத்த வேலை யெதாயிருந்தாலுமதைச் செய்ய வல்லமையுள்ளவனாயிருந்தபடியாலவனுக்குச் செய்ய வேலை நிரம்ப அகப்பட்டது. ஆகையால் விளையாட நேரமதிகமவனுக்குக் கிடையாது.

விளையாட்டென்றால் மற்றப்பிள்ளைகளுக் கெவ்வளவு விருப்பமோ அவ்வளவு விருப்பம் ஜேம்ஸுக்கு முண்டு. பிறரை யுல்லாசப்படுத்தும் சுபாவமும், சமயசிதப்பேச்சும், பெருந்தன்மையும் விளையாடுகிறவர்களவனைக் கொண்டாடும்படி செய்தன. அவனன்றியவர்கட்கு விளையாட்டிலுற்சாகமில்லை.

முன்சொல்லியபடி, ஜேம்ஸ் மிக்க வளர்த்தியுள்ள பிள்ளை. 15-வயதிலப்பக்கத்திலிருந்த தேகவலிமையிற் சிறந்த வயதுமுதிர்ந்தவன் தூக்குஞ்சுமையை யலட்சியமாய்த் தூக்குவான்.

ஜேம்ஸுக்கு 14-வயது சென்றபிறகு நடந்த ஒரு விஷயத்தைச் சொல்லியிந்த அத்தியாயத்தை முடிப்போம்.

ஒரு நாள் எட்வின் மேப்ஸ் (Edwin Mapes) என்னும் பெயருள்ள நண்பனொருவன் ஜேம்ஸ் வீட்டுக்குவந்து க்ளீவ்லாண்டுக்கு மறுநாள் தன்னுடன் ஜேம்ஸை வரும்படி கேட்டுக்கொண்டான்.

ஜேம்ஸும் க்ளீவ்லாண்டுக்குப்போகச் சம்மதித்தான். மறுநாட் காலையிலிருவரும் புறப்பட்டு க்ளீவ்லாண்டு போய்த் திரும்பினார்கள். திரும்புகையில் ஒரு குடியன் இவர்களுக்குப்பின் வண்டியில்

சவாரிசெய்துகொண்டு வந்து இவர்களை வழியைவிட்டு வண்டியை யொதுக்கிக்கொள்ளும்படி சொல்லிக்கொண்டு தன்னுடைய வண்டியையிவர்களுடைய வண்டிக்கு முன்னேட்ட முயன்றான். உடனே, "வா. பார்ப்போம்," என்று எட்வின் சொல்லிக்கொண்டு தன்னுடைய குதிரையைச் சவுக்காலடித்தான். அடிக்கவே, குதிரை பாய்ச்சலில் செல்லத்தொடங்கிற்று. இரண்டு வண்டிகளும் சுமார் ரைமயிலளவுசேர்ந்து சென்றன. சீக்கிரத்திலிவர்களுடைய வண்டி முன்செல்லத்தொடங்கவே, அந்தக்குடியன் வெறிபிடித்து வாயில்வந்தபடி யிவர்களைவைதான். இவர்களுக்குண்டான களிப்பிவ்வளவ்வளவென்று சொல்லமுடியாது. இருவரும் குலுங்கக்குலுங்கச்சிரித்தார்கள். மூன்று மயில் தூரம் சென்றபின் ஒரு சத்திரத்திலிறங்கிக் குளிர்காய்ந்து கொண்டிருந்தார்கள். சற்றுநேரத்திற்குள் வெறிபிடித்த குடியனுமங்குவந்து சேர்ந்தான்.

"பிள்ளைகாள், உங்களை நன்றாயடிக்க எனக்கு மனமிருக்கிறது," என்று உரக்கச் சொல்லிக்கொண்டே அந்தச்சத்திரத்தினுட் குடியன் புகுந்தான்.

"யாது காரணம்பற்றி நீரெங்களையடிக்கப்போகிறீர்?" என்று எட்வின் கேட்டான்.

"எதற்காவென்று கேட்கிறீர்கள்? மரியாதைகெட்ட பிள்ளைகாள், இதோ தெரிவிக்கிறேன்," என்று சொல்லிக் கோபமாய்க் கையை யசைத்துக்கொண்டவர்களிடமணுகினன்.

"புளித்தனமுள்ள சிறுவர்காள், நீங்களேனெனக்குப்போக வழிவிடவில்லை?" என்று குடியன் கேட்டான்.

"உமக்குப் போகவிடம் வேண்டியதிருந்ததே! எங்களுக்கெவ்வளவிடம், ரஸ்தாவில் போவதற்கு பாத்தியமிருந்ததோ அவ்வளவு உமக்குமிருந்தது," என்று ஜேம்ஸ் நிதானமாய் மறுமொழி சொன்னான்.

"என்னால் போகமுடியவில்லை," என்றுகுடியன் சொன்னன்.

"அது எங்களுடைய குற்றமாகமாட்டாது. உம்முடைய குதிரையைக் கோபித்துக்கொள்ளும்," என்று ஜேம்ஸ் விடையளித்தான்.

இப்படி ஏளனமாய் ஜேம்ஸ் சொல்லவே. ஜேம்ஸுடன் எட்வினும் சிரித்தார்கள். உடனே குடியனுக்கு கோபாவேசம் பிறந்து அவர்களிருவரையு முடம்பு நோவ வடிப்பதாய் உபக்கக்கத்தினன்.

"அப்படி யடிப்பதாயிருந்தால், முதலிலென்னை யடித்துப்பார்," என்று ஜேம்ஸ் நிமிர்ந்து பார்த்துக்கொண்டு கெம்பீரத்துடன் சொல்லவே, வாய்ப்பேச்சைத்தவிர தைரியமொன்றுமில்லாத குடியன் ஜேம்ஸை நோக்கி வெறித்துப்பார்த்தான்.

"முதலிலுன்னையடித்துப் பார்ப்பானேன்?" என்று அவன் பயந்தது விளங்கக்கேட்டான்.

"ஏனென்றால், பிறகு அவனையடிக்க விரும்பமாட்டாய்." என்று ஜேம்ஸ் இடிமுழக்கம்போற் கர்ச்சித்தான். உடனே குடியன் வெருண்டு மருண்டு, வண்டியிலேறி வீட்டை நோக்கிக் குதிரையை விரட்டினன்.

சிறுவரிருவரும் வீட்டை நோக்கிச் செல்லுகையி லிதைப்பற்றிப் பேசிக்கொண்டே போனார்கள்.

# 11 - அத்தியாயம்.

"ஊழியஞ் செய்வார்க்கில்லை
யுணர்ச்சி யுற்சாகமென்பர்."

ஸ்மித் (Smith)என்னும்பெயருள்ள குடியானவர் கார்பீல்டு அம்மாள் வீட்டிற்கு ஒருநாள் வந்து, "நான் ஜேம்ஸை மறுபடியுந்தேடி வந்திருக்கிறேன். *பெப்பர்மின்ட் தோட்டத்தில் களையெடுக்க அவனன்றி முடியவில்லை," என்று சொல்லிக் கொண்டே வீட்டிற்குள் வந்தார்.

"முடியுமானால், ஜேம்ஸ் சந்தோஷமாயுமக்குதவி புரிவான். ஆனால் இப்பொழுது அவனுக்கு விவசாய வேலைத்தொந்திரவதிகமாயிருக்கிறது," என்று கார்பீல்டு அம்மாள் சொன்னாள்.

"ஒருக்கால் இப்பொழுது இரண்டு மூன்றுநாள் அவன் வந்து வேலையோடு வேலையாய்ச செய்தால், எனக்குப்போதும். நான் இருபது பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தியிருக்கிறேன்."

"அவ்வளவு பிள்ளைகளிருந்தால் ஜேம்ஸ்வேண்டியதில்லையே!"

"அவனில்லாமலவ்வளவு பிள்ளைகளிருந்தும் வேலையதிகமாய் நடக்காது. ஜேம்ஸ் அவர்களுடன் தலைவனாய் வேலை செய்தால் அவர்கள் இரட்டிப்பு வேலை செய்கிறார்கள்"

"அது எனக்குத் தெரியாது."

"அப்படித்தான் நடக்கிறது. ஜேம்ஸ் வேலை செய்துகொண்டே வேடிக்கை விநோதமாய்க் கதை சொல்லிக்கொண்டு முன் போகப் பிறரும் அவன் சொல்வதைக்கேட்க வேகமாய்வேலைசெய்து அவன்பின் செல்வார்கள். அவன் வேலை பரபரப்பாயும் சுருசுருப்பாயும் செய்கிறான்: மற்றவர்களுமப்படியே செய்கிறார்கள்: அவனைப்பற்றிப் பிள்ளைகளுக்கு நல்ல அபிப்பிராயம்."

---

* ஓர்வகைவாசனைப்பூண்டு: அதனின்றுந் தைலமிறக்கி யனேககாரியங்களுக் கந்தத்தைலத்தை ஜனங்களுபயோகிக்கிறார்கள்.

"அவனைப்பற்றி இப்படி நல்ல அபிப்பிராயமிருப்பதைக்கேட்க எனக்குச் சந்தோஷம். அவனால் கூடுமானால் உமக்கு உதவி செய்வதிலெனக்கு இஷ்டந்தான்."

"அவன் வந்தால், அவனுக்கு அதிகச்சம்பளம் கொடுக்கத் தயாராயிருக்கிறேன். அப்படிச்செய்வதில் எனக்கு நஷ்டமொன்றுமில்லை. ஒவ்வொரு பிள்ளையுமிருமடங்கு வேலை செய்வார்கள்; இருபது பிள்ளைகளிருக்குமிடத்தில் அப்படியதிகவேலை நடப்பது எனக்கு இலாபமாகும்."

"சரி, நீர் ஜேம்ஸைக்கண்டு கேட்கலாம். அவன் வரச்சம்மதித்தால் எனக்கும் இஷ்டந்தான்."

ஜேம்ஸ் வயலில் வேலைசெய்துகொண்டிருந்தபொழுது ஸ்மித் அவனைப்பார்த்துத் தான் வந்த காரியத்தைத் தெரிவித்தார். முதலில் ஜேம்ஸ் ஒரு வாரத்திற்கு ஒழியாதென்று சொல்ல, ஸ்மித் கேட்டுக்கொண்டதின்பேரில், ஜேம்ஸ் மறுநாள் வருவதாக ஒப்புக்கொண்டான்.

இந்த ஸ்மித் என்பவர் ஒரு குடியானவர். அவருடைய பூமி பெப்பர்மின்ட் விவசாயத்துக்குத்தகுந்தது. ஆகையால் அவர் பெப்பர்மின்ட் ஏராளமாய்ப் பயிரிட்டு வியாபாரஞ் செய்துவந்தார். அந்தப்பயிரைச் சரியாய்க்களையெடுத்து வைத்துக்கொள்ளவேண்டியதற்காக, அடிக்கடியவர் சிறுவர் பலரை வேலைக்கமர்த்துவதுண்டு. ஜேம்ஸ் அவரிடத்தில் இதற்கு முந்தி இரண்டொருதடவை வேலை செய்ததுண்டு. ஜேம்ஸ் களையெடுக்கும்பொழுது கதை சொல்லிக்கொண்டே சுருசுருப்பாய் வேலை செய்வான். பிறரும் கதை கேட்பதற்காக அவனுடன் சுருசுருப்பாய் வேலை செய்து பின்செல்வார்கள். ஆகையால் வேலையதிகமாய்ச் செய்யப்படும். இந்த விஷயமறிந்துதான் அந்தப் புத்திகூர்மையுள்ள குடியானவர் ஜேம்ஸைத் தேடிவந்தார்.

டீரீட் என்பவர் பல களஞ்சியங்களும் ஒரு கொட்டகையும் கட்டுவதில் ஜேம்ஸுக்கு வேலை கொடுத்துதவினாரென்று முன் சொன்னோம். அந்தக்கொட்டகை கட்டுவதில் வேலை செய்தது டீரீட் என்பவரிடம் செய்தவேலையில் கடைசியானது. அது வீட்

டிலிருந்து பத்துமயில் தூரத்தில் க்ளீவ்லாண்டுக்குச் சமீபத்தில் நடந்தது. அந்தக்கொட்டகை அந்த பக்கத்திலிருந்த மிகப் பெரியதான உப்புக்கிடங்குக்கு இடம் போதாமல் கட்டப்பட்டது.

உப்புக்கிடங்கில் சாம்பலைப் பெரிய தொட்டிகளில் கரைத்து வைத்துப் பிறகு அந்தச் சாம்பலினின்று இறங்கிய உப்புச்சலத்தைப் பெரிய பாத்திரங்களில் காய்ச்சி உப்பு எடுப்பார்கள்.

கொட்டகை கட்டச்சொன்ன உப்புக்கிடங்குக்காரர் ஜேம்ஸி னிடத்தில் மோகங்கொண்டு அவனைத் தன்னிடத்தில் வேலை செய்ய அமர்த்திக்கொள்ள விரும்பினர். ஆகையால் ஒருநாள் ஜேம்ஸைப் பக்கத்திலழைத்துக்கொண்டுபோய், "உனக்கு என்னிடம் வேலை செய்ய இஷ்டமிருக்குமா?" என்று அவர் ஜேம்ஸைக் கேட்டார்.

அப்பொழுது ஜேம்ஸுக்கு வயது பதினேழு. அப்படியவர் கேட்டது அவன் எதிர்பார்க்காத விஷயம்; ஆகையால் அவன் பதில் சொல்லத்தயங்கினன்.

"உன்னைப்போலொத்த சிறுவன்தான் எனக்குவேண்டும்,' என்று பார்டன் மறுபடியும் சொன்னர். உப்புக்கிடங்குக்காரர் பெயர் பார்டன். (Barton

"அதைப்பற்றி நான் யோசித்ததில்லை. நான் எப்பொழுது வந்து வேலை யொப்புக்கொள்ள விரும்புகிறீர்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"நீ எப்பொழுது வந்தாலும் சரி. எவ்வளவுக்கெவ்வளவு சீக்கிரத்தில் வருகிறாயோ அவ்வளவுக்கவ்வளவு எனக்குச் சந்தோஷம்."

"அதைப்பற்றி யென்னுடைய தாயாரைக் கேட்டபிறகுதான் நான் சொல்லக்கூடும். ஒருக்கால் அவள் தடையேதாவது சொல்லலாம்,

"நீ தாய் சொல் மீறி நடவாதபையன் என்றுதான் நான் நினைத்தேன். அப்படிச் செய்வதில் எனக்குச் சந்தோஷம்."

"நீர் எவ்வளவுநாள் எனக்கு வேலை கொடுக்க நினைக்கிறீர்?"

"நீயிருக்கிற வரைக்கும்; உன் வாழ்நாள் முழுவதுமிஷ்டமிருந்தால் நீ வேலையிலிருக்கலாம்."

"நீர் என்ன சம்பளம் கொடுப்பீர்?"

"நான் உனக்கு மாதத்துக்கு 14 டாலர் சம்பளம் கொடுப்பேன். அப்படிக் கொடுப்பது பிறருக்குக் கொடுத்ததைவிட இரண்டு டாலர் அதிகம்."

"நான் வீட்டுக்குப் போனவுடன் என் தாயாரிடம் யோசித்து உமக்குத் தெரிவிக்கிறேன்."

கொட்டகை வேலை முடிந்தவுடன் ஜேம்ஸ் வீட்டுக்குப்போகப் புறப்பட்டான். அப்பொழுது, "நீ வேலைக்கு வருவாயென்று நான் எப்படியறிந்து கொள்ளுகிறது?" என்று பார்டன் ஜேம்ஸைக் கேட்டார்.

"நான் வேலை யொப்புக்கொள்ள என் தாயார் சம்மதித்தால், அடுத்த திங்கட்கிழமை நான் வருவேன். நீர் திங்கட்கிழமை யென்னையிங்கு காணவிட்டால், நான் வரவில்லையென்று நீர் அறிந்து கொள்ளலாம்."

"சரி, நீ சொல்வதுதான் வேலைக்கழகு. உனக்கு வேண்டியதை நான் செய்வேனென்று உன் தாயாரிடஞ் சொல்."

இப்படி ஜேம்ஸுக்கு வேலை கிடைத்தது அருமையான விஷயம். வயது பதினைந்துள்ள பிள்ளைக்குப் பதினான்கு டாலர் சம்பளங் கிடைப்பதருமை. ஒரு வருடத்திற்கு 168 டாலர் சம்பளம் கிடைப்பதை நினைக்க ஜேம்ஸுக்கு உற்சாகமுண்டாயிற்று. வீடு சேர்ந்ததும், அம்மா, "மாதமொன்றுக்கு 14-டாலர் சம்பளத்திற்கு எனக்கு வேலையொன்று கிடைத்திருக்கிறது. வேலையிப்பொழுதே ஆரம்பிக்கலாம். நமக்கிஷ்டப்பட்டவரையில் வேலையிலிருக்கலாம்," என்று ஜேம்ஸ் தாயாரிடம் சொன்னான்.

"எங்கே?" என்றுதாயார் ஆச்சரியத்துடன் வினவினாள்.

"உப்புக்கிடங்குக்காரர் பார்டன் என்பவரிடத்தில்."

"ஜேம்ஸ், உனக்குத்தகுந்த வேலையல்லவென்று நினைக்கிறேன்."

"சம்பளந் தகுந்ததுதானே! அம்மா, ஏனந்த வேலை எனக்குத் தகுந்ததல்லவென்று சொல்லுகிறாய்?"

"அந்தவேலை செய்கிறவர்கள் சரியான மனிதர்களல்ல. அவ்விடத்தில் துன்மார்க்கங்கள் பல உன்னைத் தூண்டிச் சன்மார்க்கத்தைத் துறக்கவடிக்கும்"

"துன்மார்க்கமில்லாவிடமில்லை. நானென்வேலையைக் கவனிக்கப் போகிறேனேயொழியத் துன்மார்க்கத்தைக் கவனிக்கப் போகிறேனில்லை."

"என்னருமைக் குழந்தாய், அதைப்பற்றி யெனக்குச் சந்தேகமில்லை. உன்னுடைய எண்ணமெப்படி யிருந்தபோதிலும் நீ துன்மார்க்க வழியில் தூண்டப்படக்கூடும்."

"அப்படியானால் நான் மனவலிமை போதாதவனாயிருக்க வேண்டும்."

"உலகத்திலெல்லாருமவர்கள் நினைப்பதைவிடப் பலவீனர்களாய்த் தானிருக்கிறார்கள். நிற்பதாக நினைக்கிறவன் விழாமலிருக்கும்படி ஜாக்கிரதையாயிருக்கடவன், என்னும் சொல்லை நாம் மறவாமலிருக்கவேண்டும்."

"அப்படியானால், நான் போவதில் உனக்கிஷ்டமில்லையா?"

"நான் அப்படிச்சொல்லவில்லையே!"

"அப்படியாகிலுன்னபிப்பிராயமென்னை?"

"தீர்க்காலோசனை செய்துகொண்டு இந்தக்காரியத்தைச்செய்யத்தொடங்கு."

"அதிககாலமாலோசனை செய்து கொண்டிருக்கமுடியாது. நான் வேலைக்கு வருவதாயிருந்தால் அடுத்த திங்கட்கிழமை வருவதாகச் சொல்லி வந்திருக்கிறேன்."

"அவ்வளவு சீக்கிரத்திலா ?"

"ஆம், நான் விவசாயவேலையைவிட்டு வெளியில் போய்ப் பணமதிகஞ் சம்பாதிக்கச் சமயம் வந்துவிட்டதென்று எனக்குத் தோன்றுகிறது."

"சரி; கடவுளபிப்பிராய மப்படியிருக்கிறதுபோற் றோன்றுகிறது. வேலை செய்யப் போனவிடத்தில் துன் மார்க்கர்களை நீக்கி சன்மார்க்கத்திலே இருப்பாயாகில் நீ புத்திமானென்ற பெயர் வாங்கலாம்."

"அப்படியானால் நான் போவதற்கு நீ சம்மதிக்கிறாயா ?"

"எனக்குச் சம்மதம். நீ போவது ஈசன் கிருபையால் நன்றாய் முடியுமென்று நினைக்கிறேன்"

மறு திங்கட்கிழமை ஜேம்ஸ் தன்னுடைய உடுப்பு முதலியவற்றை ஒரு கைக்குட்டையில் கட்டிக்கொண்டு பார்டன் என்பவரிடம் சென்றபொழுது பார்டனுக்குண்டான சந்தோஷமளவிறந்தது.

ஜேம்ஸுக்கு ஒரு படுக்கையறையைக் காட்டியதிலவனுடைய சாமான்களை வைத்துக்கொள்ளும்படி அவர் சொன்னார்.

அந்தவிடத்து வேலை அழுக்கானது. சாம்பல் தள்ளுவதும், உப்புச்சேர்த்து வைப்பதும், உடம்புக்குச் சுத்தத்தைக் கொடுக்கவிடமில்லை. சில வேளைகளில் ஜேம்ஸ் இந்தவேலை செய்யவேண்டியதாயிருந்தது. சாதாரணமாய்க் கணக்கு வைத்துக்கொள்வதும், சாம்பல் வாங்கி உப்பு விற்பது மிவனுக்கேற்பட்ட வேலை. பார்டன் பிள்ளைபோலவன் வேலை பார்த்தான்; வேலைக்குக்காலையில் முதலில் வருவதும் இரவில் வேலைவிட்டுக் கடைசியில் போவது மிவனே.

பார்டனிடத்தில் வியாபாரஞ் செய்தவர்களனேகர் பொய் சொல்லியவரை மோசஞ்செய்து வந்தார்கள். ஜேம்ஸ் வேலையொப்புக்கொண்ட பிறகு மோசக்காரர்களைக் கண்டுபிடித்து அவர்கள் மறுபடியும் மோசஞ்செய்யாதவித மேற்படுத்தினான்.

உப்புக்கிடங்கில் வேலைசெய்தவர்கள் சரியான மனிதர்களல்ல. அவர்கள் பேசும் பேச்சுக் காதால் கேட்கத் தகுதியற்றதாயிருந்தது. மேலும் அவர்கள் நாகரீகமற்றவர்கள். அப்படியிருந்த போதிலும் அவர்கள் ஜேம்ஸிடத்தில் பிரியமும் மரியாதையும் வைத்து வந்தார்கள்.

பார்டன் என்பவருக்கு ஒரு பெண். அவள் புத்தகங்கள் வாங்கி வாசித்துவிட்டு அவைகளை வீட்டில் வைத்திருந்தாள். புத்தகம் வாசிப்பதிலளவற்ற ஆசையுள்ள ஜேம்ஸ் புத்தகங்களைக் கண்டவே அவைகளை வாசிக்க ஆரம்பித்தான். ஆனால் அப்புத்தகங்கள் சிறுவர் வாசிக்கத்தகுந்தவைகளல்ல. ஜேம்ஸ் அதையறியவிடமில்லாமல் புத்தகம் புத்தகமாய் வாசித்து முடித்தான். அப்படி வாசித்ததில் அவனுக்கு ஒரு மாலுமியாக ஆசையுண்டாயிற்று இந்த ஆசை இரவும் பகலும் அவன் மனத்தில் குடிகொண்டது. ஒருநாள் அவன் விருப்பத்தைப் பார்டனிடத்தில் சொன்னான். பார்டன் அப்படி மாலுமியாய்ப்போதல் சௌகரியமல்லவென்று தன்னாலியன்றமட்டும் சொல்லியவன் விருப்பத்தை மாற்ற முயன்றார்.

ஒருநாள் ஜேம்ஸ் வழக்கம்போல் வேலைசெய்துவிட்டுப் புத்தகம் வாசித்துக்கொண்டிருந்தான். அப்பொழுது பார்டன் பெண் ஜேம்ஸைக்கூலிக்கு வேலை செய்பவனென்று நிந்தனையாய்ச் சொல்லும்படி நேர்ந்தது. உடனே ஜேம்ஸுக்கு அளவிறந்த கோபமுண்டாயிற்று. அவன் அந்த வேலையை விட்டுவிடத்தீர்மானித்தான். மறுநாட் காலையில் பார்டனிடத்தில் தன்னுடைய அபிப்பிராயத்தைச்சொல்ல, அவர் ஜேம்ஸ் சொல்லதை மாற்றத் தன்னாலியன்றமட்டும் முயன்றும் பயன்படவில்லை. ஆகையால் அவனுக்குள்ள சம்பளத்தைக் கொடுத்தனுப்பினார். ஜேம்ஸ் அன்றைய தினமே வீடுவந்து சேர்ந்தான்.

# 12 - அத்தியாயம்.

"உடைய ரெனப்படுவ தூக்கமஃதில்லா
ருடைய துடையரோ மற்று."

"அம்மா, வீடுவந்து சேர்ந்தேன். உப்புக்கிடங்கு வேலை வேண்டியது செய்தாய்விட்டது," என்று சொல்லிக்கொண்டே ஜேம்ஸ் வீட்டினுட் புகுந்தான்.

"உன்னைப்பார்க்க எனக்குச் சந்தோஷம்; ஆனால், யாது காரணம்பற்றி வந்துவிட்டாய்?"

"காரணமில்லாமல் வரவில்லை. வீட்டிலிருக்க நான் வந்துவிட்டேன்."

"எனக்கு நீ வந்தது மனக்களிப்புண்டாக்குகிறது."

"நான் கூலியாளாயில்லாமல் வேறு நிலைமையுள்ளவனாகக்கூடுமென நினைக்கிறேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"என்ன? அப்படியானால் பார்டன் என்பவரால் உபத்திரவம் உனக்கு ஏதாவது உண்டாயிற்றா?"

"அப்படியொன்றுமில்லை. அவரைப்போல் நல்ல மனிதரைக் காண்பது அருமை."

"அப்படியானால் சம்பளத்தைப்பற்றி யேதாவது சங்கடமேற்பட்டதா?"

ஜேம்ஸ் முதல்நாள் நடந்த விஷயங்களை யொன்றுவிடாமல் தாயாரிடத்தில் சொன்னான். சொல்லிவிட்டுத் தாயாரிடத்தில் தான் கொண்டுவந்த 56 டாலர் பணத்தைக் கொடுத்தான்.

"நீ பணம் கொண்டுவந்ததைப்பற்றி யெனக்குச் சந்தோஷம். ஆனால், வேலையைவிட்டு வந்ததில், நீ யோசிக்காமல் வந்துவிட்டா யல்லவா?"

"எப்படியோ, நான் வேலையை விட்டுவிட்டு வந்துவிட்டேன். அதைப்பற்றிப்பேசுவதில் பயனென்ன ?"

"பார்டன் உன்னிடத்தில் வைத்திருந்த பிரியத்தையும், நீ விட்டுவருவதிலவருக்குண்டாகும் வருத்தத்தையும் சற்று நீ யோசித்துப் பார்த்திருக்கவேண்டும்."

"அவருடைய பெண் செய்த நிந்தனையைக் கவனிக்காமலிருந்துவிடவேண்டுமா ?"

"அந்தப் பெண் வார்த்தையைக் கவனிக்கவேண்டியதில்லை. மேலும் ஒருவன் கூலிக்கு வேலை செய்வதில், வேலையைச் சரியாய் செய்யும்பக்ஷத்தில், இழிவொன்றுமில்லை.

"அம்மா, அப்படியல்ல. கூலிக்கு வேலை செய்தலிழிவென்று நானும் நினைக்கவில்லை. அந்தப்பெண், "கூலிக்கு வேலை செய்பவன்" என்று சொன்னவிதமானது என் மனத்தை வருத்திற்று. ஆகையால்தான் இவ்விதம் செய்து வந்துவிட்டேன்."

"குழந்தாய், எல்லா மீசன் செயல். உனக்கு நன்மையின் பொருட்டுத்தான் கடவுளிப்படிச் செய்தாரென்று நம்புகிறேன்."

"இப்பொழுது வேறுவேலை யகப்படுமாவென்று பார்க்கவேண்டும்"

"வீட்டிலிருக்காமல் வெளியில் போய் வேலை செய்ய நினைக்கிறாயா ?"

"வீட்டிலிருப்பதில் பயனென்ன ? வெளியில் போய் வேலை செய்தால் நானதிகப்பணம் சம்பாதிக்கக்கூடும்."

"சரி; உன்னிஷ்டப்படி செய். உனக்கு வேண்டிய வேலை யகப்படுமென்று நினைக்கிறேன்."

"அம்மா, 'திரைகடலோடித் திரவியந்தேட' நினைக்கிறேன்."

"அந்த எண்ணமெப்படி யுனக்கு வந்தது?" என்று கார்பீல்டு அம்மாள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

"நானதைப்பற்றி யோசித்துக்கொண்டிருந்தமையால் அதைச் சொன்னேன்."

"அதைப்பற்றி நினைக்கக் காரணம் யாது? அப்படி நினைக்க உனக்கு ஏதாவது பிடித்திருக்கவேண்டும். நீ சொல்வதைக் கேட்க என் மனம் வருந்துகிறது."

"உன் சொன்மீறி நடக்கமாட்டேன்."

"நீ கடல் யர்த்திரை செல்ல நான் ஒருபொழுதும் சம்மதியேன். எந்த வேலை புரிந்தாலும் சரி, கடல் யாத்திரையைமட்டும் நினைக்காதே."

"அம்மா, ஏனப்படிச் சொல்லுகிறாய்?"

"கடல் யாத்திரை செய்வதால் நீ விரும்புகிற நிலைமை யுனக்கு வரமாட்டாது."

"ஏனப்படிச் சொல்லவேண்டும்? நான் ஒரு கப்பற்றலைவனாகலாம். ஒருக்கால் கப்பல் சொந்தமாய் வாங்கக்கூடும். அப்படி முடியாதென்று யாா சொல்லமுடியும்?"

"நீ யொரு மாலுமியானால் எந்த நிலைமைக்கு வரமாட்டா யென்று யார் சொல்லமுடியும்? என்னிஷ்டப்படி நடப்பாயாகில் அதைப்பற்றி மேல் பேசவேண்டாம்."

அந்தப்பேச்சை நிறுத்திவிட்டு ஜேம்ஸ் வயல் வேலையைப் பார்க்கப்போனான். வீட்டில் காரியங்களை ஒழுங்கு படுத்தி வைப்பதில் பலநாள் சென்றன. வேலை கிடைக்கும் வகையையுங் கவனித்துவந்தான். கடைசியில் அவனுடைய அம்மான் ஒருவர் நியூபர்க் (Newburg) என்னுமிடத்தில் காடழிக்க ஆட்கள் அமர்த்தப் போகிறார் என்று அவனுக்குத் தெரியவந்தது. தன்னுடைய தாயாரபிப்பிராயத்தைக் கேட்டுப் பாயின்டன் என்பவருடைய அபிப்பிராயத்தையும் கேட்டுக்கொண்டு நியூபர்க் என்னுமிடத்திற்குப் போகத்தீர்மானித்தான். அவ்விடத்திற்குப்போவதில் தாயாருக்கு இஷ்டந்தான். அவ்விடத்தில் ஜேம்ஸுடைய சகோதரி

மேசதவல்லி வாழ்க்கைப்பட்டுப் புருஷனுடன் வசித்துக்கொண்டிருந்தாள். ஆகையால் ஜேம்ஸ் தமக்கை வீட்டில் சாப்பிட்டுக் கொண்டு வேலை செய்யலாம். மூன்றுநாட் சழிந்தவுடன் ஜேம்ஸ் தன்னுடைய அம்மானிடஞ்சென்று தன்னுடைய அபிப்பிராயத்தையவரிடஞ் சொன்னன்.

"ஜேம்ஸ், உன்னைப்பார்க்க மனங்களிக்கிறது. நான் முன் உன்னைப்பார்த்ததற்கு இப்பொழுது நிரம்பவும் வளர்ந்துவிட்டாய்! மரம்வெட்டிக் காடழிக்கும் வேலை வேண்டியிருக்கிறது. வேலைசெய்ய ஆளைத்தான் காணவில்லை," என்று அம்மான் சொன்னர்.

"எனக்கு மரம் வெட்டப்பிடிக்கும்."

"அனேகருக்குப் பிடிக்கவில்லை. மரம் வெட்டுதல் கஷ்டமான வேலையென்பது திண்ணம். மிகக்கஷ்டமான வேலையிலிதொன்று."

"எனக்கப்படித் தோன்றவில்லை. நான் பலகைகளிழைத்திருக்கிறேன். பலகையிழைப்பதில் களைப்புண்டாவதுபோல் மரம் வெட்டுதலி லெனக்குக் களைப்புண்டாவதில்லை."

"சரி, பார்ப்போம். வெட்டுவேலை யெவ்வளவு நீ யொப்புக்கொள்ளக்கூடும்? உஷ்ணகாலம் வரப்போகிறது. நிரம்ப உஷ்ணமாயிருக்கும்பொழுது உன்னல் வெட்டுவேலை செய்யமுடியுமா?

"ஒருக்கால் முடியாதுதான். இரண்டு மாதம் வேலை செய்யலாமென்று நினைக்கிறேன்."

"நூறு சுமை மரம் வெட்டுவதாய் ஒப்புக்கொள்ளலாமென்று நினைக்கிறேன்."

"எனக்குச் சம்மதம். ஒரு சுமை வெட்டுவதற்குக் கூலி யென்ன?"

"ஒரு சுமைக்கு 50 செண்டு (cents) கொடுக்கிறேன். 100 சுமை வெட்டியானவுடன் 50 டாலர் (dollars) உனக்குத்

தயாராய்க் கொடுக்கப்படும். அவ்வளவும் வெட்டிமுடிக்க உனக்கு எவ்வளவு நாளாகும்?"

"50 நாள்."

"அவ்வளவு சீக்கிரத்திலா? உன்னாலாகாது. நீ நிரம்பவும் வேலையில் சமர்த்தனாயிருந்தாலொருக்கால் செய்யக்கூடும்."

"நாளொன்றுக்கு இரண்டு சுமை வெட்டித் தள்ளுவேன். அப்படிச் செய்வதிலெனக்குக் கஷ்டமொன்றுமில்லை."

"அப்படியானால் சாதாரணமாய் வெட்டுகிறவர்களைவிட நீ மிகச் சமர்த்தனாயிருக்கவேண்டும்."

வேலையைப் பேசி முடித்துக்கொண்டு, ஜேம்ஸ் தமக்கை வீட்டுக்குப் போனான். போகவே, தமக்கை தம்பி வரவைப்பார்த்து மனங்களித்துத் தன் வீட்டில் சாப்பிட்டுக்கொண்டு வேலை செய்யச் சம்மதித்தாள். மறுநாட்காலையில் ஜேம்ஸ் மரம் வெட்டுகிற வேலை செய்யத் தொடங்கினான்.

"ஜேம்ஸ் வேலை செய்யுமிடம் ஈரி (Erie) என்னும் ஏரியின் முன் இருந்தது. ஏரியின்மீது மரக்கலங்கள் பாய்விரித்து யெப்பொழுதுஞ் சென்றுகொண்டிருந்தன.

ஜேம்ஸுக்கு கப்பலில் யாத்திரைசெய்ய ஆசையிருந்தது என்பது நமக்குத்தெரிந்தவிஷயம். ஈரிஏரியின்மீது செல்லும் மரக்கலங்களைப்பார்க்க அவனுக்கு அந்த அவாவிருத்தியடைய விடமுண்டாயிற்று. கப்பல் தண்ணீரின்மீதுசெல்வது அவனுக்கொரு அருமையானகாட்சி. அந்தக் காட்சியைக்காண அவன் மனம் பொங்கிற்று. தானுமந்த ஏரியின்மீது ஒருநாள் கப்பலில் செல்லவேண்டுமென்ற ஆசை அவன் மனத்தில் குடிகொண்டது.

அநேகர் அவன்பக்கத்தில் அவனைப்போல் மரம்வெட்டிக் கொண்டிருந்தார்கள். அவர்களிலொருவன் ஜர்மனி (Germany) தேசத்திலிருந்துவந்தவன். அவன் புத்திகூர்மையுள்ளவன். ஆங்கிலபாஷை தட்டுத்தடுமாறிப் பேசுவான். அவன் மெதுவான

வேலைக்காரன் என்று ஜேம்ஸ் நினைத்தான். அதற்கேற்றபடி அந்த ஜர்மனிதேயத்தான் கோடரி சுருசுருப்பாய்ப் போகவில்லை ஆனால் அந்தவாரமுடிவில் ஜேம்ஸைப்போல் அந்தமனிதனும் நாளொன்றுக்கு இரண்டுசுமைவீதம் மரம் வெட்டிச்சேர்த்ததாகத் தெரியவந்தது.

"எனக்குக் காரணந்தெரியவில்லை. ஜர்மனிதேயத்தான் ஒரு வெட்டுப்போடுவதற்குள் நான் இரண்டுவெட்டு வெட்டுகிறேன். அப்படியிருந்தும் இந்தவாரத்திலவன் நான்வெட்டினவளவு வெட்டியிருக்கிறான்," என்று வீடுசென்றவுடன் தன் தமக்கையிடம் ஜேம்ஸ் சொன்னான்.

"ஒருக்கால் அவன் உன்னைவிட வலுவானவெட்டுவெட்டலாம்," என்று அவன்தமக்கை சொன்னாள்.

"எனக்கு அப்படித்தோன்றவில்லை. நான் காரணத்தைக் கண்டுபிடியாமல்விடேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்

மறுநாள் வேலைக்குப்போய்த் தன்தமக்கையிடம் சொன்னபடி ஜர்மனிதேயத்தான் தான்வெட்டுமளவு வெட்டுவதற்குக் காரணங்கண்டுபிடிக்க முயன்றான். காரணம் சீக்கிறத்தில்வெளிப்பட்டது. ஜர்மனிதேயத்தானுக்கு ஏரிஎரியிடத்தில் ஜேம்ஸுக்கிருந்த மோகமில்லை. காலைமுதல் மாலைவரையில் வெட்டுவெட்டிக்கொண்டேயிருந்தான். ஜேம்ஸோ அப்படிச்செய்யாமல் யிடையே ஏரியைப்பார்த்துக் காலத்தை வீணாய்க்கழித்தான். இந்த விஷயத்திலிருந்து ஜேம்ஸ் ஒரு புத்திமதிகற்றான். விடாமுயற்சியுடன் ஒருகாரியத்தைச் செய்வது நன்று என்பது ஜேம்ஸ் ஜர்மனிதேயத்து வெட்டுவேலைக்காரனிடங் கற்றதுமன்றி அந்த நீதியை யுடனே தன்வேலையில் உபயோகித்தான். இந்தவிஷயமானது அவனுக்குக் கப்பல்யாத்திரைமீதிருந்த அவாவைக்கொஞ்சம் குறைத்ததென்று சொல்லலாம். மாலையில் வீடுவந்தவுடன் தன் தமக்கையிடம் தான் கண்டுபிடித்த காரணத்தைச்சொல்லுவதோடுகூடத் தனக்கு ஒருமாலுமியாகஇருந்த அவாவையுந் தெரிவித்தான்.

இதையவன்தமக்கை கேட்கவே, அவள் அவனப்படிநினைப்பது தகுதியல்லவென்றும், அவனுடைய சிறந்தபுத்திக்குத் தகுந்த தொழிலதல்லவென்றும், தாயாரொருபொழுதுமதற்குச் சம்மதிக்க மாட்டாரென்றும், மாலுமிவேலையைவிட எந்தவேலையுஞ் சிறந்ததென்றும் சொன்னாள்.

இவ்விதமாய்த் தாயார்சொன்னவிதம் தமக்கையும் மாலுமித் தொழிலையிகழ்ந்துசொல்லவே ஜேம்ஸுக்கு அந்தவிஷயத்திலிருந்த அவா தற்காலம் குறைந்து நின்றது.

தான் செய்ததா யொப்புக்கொண்டபடி தினம் ஒன்றுக்கு இரண்டுசுமைவெட்டி யதிக சிரமமின்றி வேலைசெய்துவந்தான். முயன்றால் நாளொன்றுக்கு அவனிரண்டரைசுமை வெட்டுவான். ஆனால் ஜேம்ஸ் ஏற்பாடொன்று ஒரு தரம் செய்வானானால் அதைப்பிறகுமாற்றுவது அவன்சுபாவத்திற் கேற்றதல்ல.

தமக்கையகத்தில் சில புத்தகங்களிருந்தன். அம்மான்வீட்டிலும் சில புத்தகங்களிருந்தன. தன் வேலையொழிந்தவேளைகளில் இப்புத்தகங்களை வாசித்துக்கொண்டிருப்பான். மேலும். அவனுடைய அம்மான்வரவழைத்த ஒரு பத்திரிகை வாசித்துமுடிக்குமளவு அவன்கையிலிருக்கும். இவ்விதமாக வேலைசெய்துமிருந்த காலத்தில் மாலையிலும் இரவிலும் படிப்பிலே காலத்தைக்கழித்து வந்தான். சிலவேளைகளில் வீட்டிலெல்லாருந் தூங்கின பிறகு நெடுநேரம் வாசித்துக்கொண்டிருப்பான். தான்பேசினபடி 50 நாளில் 100சுமை மரம் வெட்டிமுடித்தான். சம்பளங்கொடுக்கும் பொழுது, "ஜேம்ஸ், நீ சொற்படி வேலைசெய்துமுடித்தாய். நீயெப்பொழுதும் இந்தவேலை செய்யவேண்டியதில்லை என்றுநினைக்கிறேன். இந்தவேலையி லிழிவொன்றுமில்லை. ஆனால் இதைவிட உயர்ந்தவேலைசெய்யத் தகுதி உன்னிடத்தி லிருக்கிறதென்பதென்னுடைய வபிப்பிராயம். வித்தை சம்பாதிக்க வழியுனக்கு ஏற்படுமென்றெண்ணுகிறேன். வித்தைசம்பாதிப்ப துனக்கிஷ்டந்தானா?" என்று அம்மான்கேட்டான்.

"எனக்கிஷ்டந்தான்," என்று ஜேம்ஸ் மறுமொழிசொன்னான்.

சம்பளத்தை வாங்கிக்கொண்டு அம்மானிடத்திலும் தமக்கையிடத்திலும் விடைபெற்றுச் சாப்பாட்டுச்செலவுக் கொடுக்கவேண்டியதுபோக பாக்கிப்பணத்தை யெடுத்து திரும்பி வீடு வந்து சேர்ந்தான். தன்பிள்ளை திரும்பிவரவே தாயார் மனங் களித்தாள்.

அப்பொழுது ஜூன்மாதம் முடியுந்தருணம். கோடைகாலத்தில்செய்ய வேலையகப்பட்டால் ஜேம்ஸ் மனத்துக்கொத்திருக்கும். ஐந்தாறு மயில்தூரத்திலுள்ள ஒரு குடியானவனுக்கு வேலைக்கு ஆள்வேண்டுமென்று கேள்வியுற்று ஜேம்ஸ்போய் நான்கு மாதங்கட்குவேலை செய்ய ஏற்றுக்கொண்டான்.

ஜூலைமாதம் முதல்தேதிபோய் வேலையொப்புக்கொண்டான். வயதில்பால்யனாயிருந்தாலும் வேலையில் பெரியஆள்செய்யும் வேலைக்குக்குறையாமல் வேலைசெய்து தனக்கு வேலை கொடுத்தவர் மனம் மகிழ நடந்துகொண்டான். எந்தவேலை செய்யப்புகுந்தாலும் களைப்பு என்பது இல்லாமல் வேலையைச் சரியாய்ச் செய்து முடிப்பது அவனுடைய இயற்கை.

தனக்கு மாலுமியாகவிருக்கவிருப்பதை அந்தக் குடியானவனிடம் சொல்ல, அவனும் அத்தொழில் ஜேம்ஸுக்குத் தகுதியல்லவென்று சொன்னான்.

நான்கு மாதங்கள் முடிந்தன. மாதமொன்றுக்கு 12-டாலர் வீதம் 48-டாலர்சம்பளம் ஜேம்ஸுக்குக் கொடுக்கும்பொழுது "பிள்ளாய், நீ உன் வேலையைச் சரியாய்ச்செய்தாய்," என்று அந்தக்குடியானவன் சொன்னான்.

# 13 - அத்தியாயம்.

"கற்றது கைம்மண்ணளவு
கல்லாத துலகளவு."

ஜேம்ஸ் திரும்பி வீடுவந்து சேர்ந்தான். வந்த பிறகு வழக்கம்போல் வீட்டு வேலை பார்த்து வந்தான். ஆனால் அவனுக்கு மனத்தில் திருப்தியில்லாமல் வேலைசெய்து வந்ததாக அவனுடைய தாயாருக்குப்பட்டது. அவன் மனமெப்பொழுதும் கடல் யாத்திரையின்மீது சென்று கொண்டிருந்தது. அவனுக்குத் திரைகடலோடித் திரவியந்தேடவுண்டான ஆசையை அவனாலடக்கமுடியவில்லை. இந்த விஷயம் தாயாருக்கும் தெரிந்தது. ஆனால் இதைப்பற்றி முதலில் பேச அவளுக்கு இஷ்டமில்லை.

ஒருநாள். "அம்மா, எனக்குக் கப்பலேறிச்செல்லும் ஆசையடக்க முடியாததாயிருக்கிறது. நானேனப்படிச் செய்யக்கூடாது?" என்று ஜேம்ஸ் தாயாரைக்கேட்டான்.

"எவ்விடத்திற்குப்போக விரும்புகிறாய்?"

இவ்விதமான மறுமொழி ஜேம்ஸ் எதிர்பார்த்தானில்லை. வழக்கம்போல் தாயார் தடுத்துச் சொல்வாளென்றெண்ணினான். இப்படிச்சொன்னதால் தாயார் அபிப்பிராயம் மாறியிருந்ததென்றெண்ணித் தைரியமாய் மேல்சொல்லத் தொடங்கினான். ஆனால் தாயார் எண்ணத்தில் மாறுதலொன்றுமில்லை. அவள் புத்திசாலியானபடியால் வேறுவிதமாய்ப் பையனிடம் பேசினாள்

தாயப்படிக்கேட்கவே, "எங்கு போனாலுஞ் சரிதான். உலகத்தில் சில தேசங்களையாவது பார்க்க விரும்புகிறேன்," என்று ஜேம்ஸ் மறுமொழி சொன்னான்.

"உன்னைப்போல் சமர்த்தனை பிள்ளைதான் போக விரும்புமிடந் தெரியாமல் பேசுவது ஆச்சரியமாயிருக்கிறது. நான்

வெளியில்போக வேண்டுமென்று விரும்பினல். முதலில் எவ்விடத்தூக்குப் போவதென்பதையறிந்து கொள்வேன். உனக்கு எந்தக் கண்டத்துக்குப் போனாலுஞ் சரிதானா ?"

"அம்மா, அப்படியல்ல; அட்லாண்டிக் (Atlantic) மகா சமுத்திரத்தைத் தாண்டிப்போக இச்சிக்கிறேன்."

"அப்படிச் செய்ய முயன்றால், பாதிதூரம் செல்லுமுன் உனக்கு அது கசந்துவிடும், சிறுவர்களுக்குத் தங்களுக்கு வேண்டியதென்னவென்பது தெரியாது."

"நான் விரும்புவது எனக்குத் தெரியாமலில்லை. அதைத் தானுன்னிடத்தில் தெரிவிக்க முயன்றேன். எனக்கு மகாசமுத்திரத்தின்மீது செல்ல விருப்பமிருக்கிறது. அது எனக்குப் பிடிக்காவிட்டால், நான் அதை விட்டு விடுவேன்."

"விட்டுவிடுதல் நீ நினைக்கிறதவ்வளவு எளிதல்ல. கப்பலேறி நீ தூரதேசம் சென்றால், அதை விட்டுவிட்டுச் சீக்கிரத்தில் வீடுவந்து சேரமுடியாது. அப்பொழுது தாயார் சொல்லைக் கேட்கவில்லையே என்று நீ வருத்தப்படுவாய்."

"நான் அனுபவத்தில் பார்த்தாலொழிய எனக்குத் தெரியமாட்டாது. ஆனல் உன் அனுமதியன்றி நானெங்கும் போகேன்."

"சரி ஏரியின்மீது செல்லும் மரக்கலத்தில் பிரயாணம் செய்து, அது உன் மனத்துக்குப் பிடித்ததாவென்று பார். ஒருக்கால் உனக்குப் பிடிக்காமலிருக்கக்கூடும். வீட்டினின்று வெகுதூரம் போகாமலே யிந்தக்காரியத்தை யறியலாமல்லவா ?"

"நான் அப்படிச் செய்வதுனக்கு இஷ்டந்தானா ?" என்று ஜேம்ஸ் முகமலர்ச்சியுடன் கேட்டான்.

"அட்லாண்டிக் (Atlantic) மகா சமுத்திரத்தைத் தாண்டிப் போவதைவிட இது சிறந்ததென்று எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் நீயப்படிச் செய்வது எனக்கும் சம்மதம்," என்று தாயார் தயங்கி மறுமொழி கூறினள்.

"அப்படியானால் நீ சொல்லுகிறபடியே செய்கிறேன். கூடிய சீக்கிரத்தில் ஈரி ஏரிக்குப் புறப்பட்டுப்போக ஏற்பாடு செய்கிறேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

கார்பீல்டு அம்மாள் உபாயம் பலித்தது. ஜேம்ஸ் கப்பல் யாத்திரை செய்ய அவாக்கொண்டது அவளுக்குத் தெரிந்தது. அதை முழுவதுந்தள்ள முடியாதென்றுணர்ந்து இந்த உபாயந் தேடினாள். இப்படிப் பக்கத்திலுள்ள ஏரியின்மீது செல்வதிலே ஜேம்ஸுக்குண்டான கப்பல் யாத்திரைப் பைத்தியம் அவனைவிட்டு விடுமென்று அவள் நினைத்தாள்.

அதிக தாமதமின்றி ஜேம்ஸ் புறப்பட்டுப்போக ஏற்பாடு செய்தான். செலவுக்கு வேண்டிய பணமெடுத்துக்கொண்டு தன்னுடைய பிரயாண மூட்டையுடன் தாயார் ஆசீர்வாதம் பெற்று ஈரி ஏரிக்குப் புறப்பட்டுச் சென்றான்.

17-மயில் தூரம் கால் நடையாய்ச்சென்று பகல் பன்னிரண்டு மணிக்கு ஏரியின் கரையை யணுகினான்.

உடனே அங்கிருந்த முதல் கப்பல் மீதுசென்று, கப்பல் வேலைக்காரரொருவரைப்பார்த்து, "ஐயா, கப்பலில் ஒரு ஆளுக்கு வேலையகப்படுமோ?" என்று கேட்டான்.

"கப்பற்றலைவர் வருவார். அவரைக் கேட்கவேண்டும்," என்று மாலுமி சொன்னான்.

ஆகையால் கப்பற்றலைவர் வரவை எதிர்பார்த்துக்கொண்டு நின்றான். சற்று நேரத்திற்குள் முன்சொன்ன மாலுமி, "கப்பற்றலைவர் வருகிறார்," என்று சொன்னான்.

அப்பொழுது கீழிருந்து பெரிய சப்தம் கேட்டது; ஏதோ சண்டை சச்சரவு நடந்தாலுண்டாகும் முழக்கம்போற்றோன்றிற்று. பிறகு ஒரு மனிதக்குரல் பயங்கரமான வெஞ்சினமும் கடுஞ்சொல்லும் சொல்லிக்கொண்டுவருவதை யவன்கேட்டான். அப்படிவந்தது நரகத்தலைவன் வருவதுபோற்றோன்றிற்று. அவனுக்கு அதற்குக் காரணந்தெரியவில்லை. இப்படி மதிமயங்கி அவன் நிற்கை

யில், கப்பற்றலைவர் தோன்றினார். அவரைப்பார்த்தால், கால் முளைத்த சாராயப்பீப்பா எனத்தோன்றிற்று; அவருடையவாய் பீப்பாவினுடைய வாயினின்று சாராயம் வருவதுபோல் எப்பொழுதும் காதிற்கு இசையாதகடுஞ்சொல் கொட்டிக்கொண்டே இருந்தது. ஜேம்ஸ் பலவிதமான மனிதர்களைப் பார்த்ததுண்டு. ஆனால் இவரைப்போலொத்த ஒருவரையும் பார்த்திலன்.

ஜேம்ஸ் கப்பற்றலைவனென்று நின்ற பிராணியைப் பார்த்தான். அந்தப் பார்ப்பதற்கருவருப்புண்டாக்கும்பிராணியு மவனைப் பார்த்தது. அச்சமயம் ஜேம்ஸ் அவனிடம் அணுகி மரியாதையாய் வார்த்தையாட முயன்றான்.

"கப்பற்றலைவரா?" என்று வணக்கமாய் ஜேம்ஸ் கேட்டான்.

"ஆம்; உனக்கென்ன வேண்டும்?"

"உம்முடைய கப்பலுக்குப் புது ஆள் அமர்த்தப்போகிறீரா?"

"நாட்டுமுண்டமே, நான் அமர்த்தினால் உனக்கென்ன? இந்தக் கப்பலைவிட்டு ஓடு. இல்லாவிடில் உன்னைத்தூக்கி எறிந்துவிடுவேன்," என்று கப்பற்றலைவன் சொல்லி, வாயில்வரத்தகாத வெஞ்சினமும் கடுஞ்சொல்லும் சாமாரியாய்ப் பொழிந்தான்.

ஜேம்ஸ் மரியாதையாய்த் தன்மேல் கோபிக்க நியாயமில்லாததை எடுத்துச்சொல்ல முயன்றான். ஆனால் அந்தக் கோபங்கொண்ட பாதகன் பயங்கரமாய்த் தன்னுடைய கையைமுஷ்டி யுத்தத்துக்கு வருவதுபோலங்குமிங்கு மசைத்துக்கொண்டு ஜேம்ஸ் சொல்வதைக்கேட்கவே, அதிகமாய் வாயால் பிதற்றவாரம்பித்தான்.

"அடே, வெளியில்போகிறாயா, இல்லையா? போகாவிடில் உன்னையமலோகமனுப்புவேன். உன்னைப்போலொத்த நாட்டுமுண்டத்தை என் கப்பலைச்செலுத்த மாலுமியாக அமர்த்துவேனென்று நினைக்கிறாயா?" என்று சொல்லிமுடிக்க, அவன் வாயினின்று கடுஞ்சொற்கள் ஆறாகப் பெருகிவழிந்தன.

உடனே ஜேம்ஸ் கப்பலினின்று விரைந்தோடினான். இப்படியவனுக்கு நேரிடுமென்று சொற்பனத்திற்கூட அவன் நினைக்க

வில்லை. இவ்விதமாக எங்காவது நடக்கக்கூடுமென்று நினைக்குங் கூட நியாயமில்லை. புத்தகங்களில் மாலுமிகள் கப்பற்றலைவர்களைப் பற்றி யவன் வாசித்திருந்தான். ஆனாலிவன் பார்த்த கப்பற்றலைவனைப் போன்றவனைப்பற்றி வாசித்ததில்லை. முதல் முதல் இப்பொழுதுதான் அவனுக்குப் புத்தகங்களில் வருணித்திருக்கிறபடியே உலகத்தில் ஜனங்களிருக்க மாட்டார்களென்று தெரியவந்தது. இந்தக் கப்பற்றலைவன் செய்தது அவனுக்கு மாலுமியாக வேண்டுமென்றிருந்த அவாவைக் குறைத்தது. இது பையனுக்கு நல்லதென்றே சொல்லவேண்டும். மனத்துக்குப் பிடிக்காததுகூட சிற்சில சமயங்களில் நன்மை பயக்கும் என்பது மெய்யே.

ஒரு மரக்குவியல்மீது ஜேம்ஸ் உட்கார்ந்துகொண்டு உலகத்திலுள்ள ஜனங்கள் சுபாவம் பலவிதமாயிருப்பதைப்பற்றி யோசித்துப்பார்த்துக்கொண்டே தான் வீட்டிலிருந்து கொண்டுவந்திருந்த சிற்றுண்டியைத்தின்றுமுடித்தான். அப்படி யோசித்தபொழுது, அந்தக் கப்பற்றலைவன் நடத்தையின் காரணமவனுக்கு விளங்கவில்லை. கப்பற்றலைவனுக்குக் கோபம்வரும்படியவன் ஒன்றும்செய்தானில்லை. கப்பற்றலைவன் கோபத்தோடே வந்திருக்கிருக்கவேண்டுமென்று அவனுக்குத் தோன்றிற்று. அவனைப்பார்த்தால் நாட்டுப்புறத்தான் என்று நினைக்க நியாயமிருந்தது என்றும் ஒருக்கால் தனக்குப் பழக்கமில்லாததால் கப்பற்றலைவன்முன் போய்ப்பேசும் விதம் தெரியாமலிருந்திருக்கலாமென்றும் நினைத்தான். யோசிக்க யோசிக்க, அவனுக்குக் குற்றமெல்லாந் தன்மேலிருந்ததாயும் கப்பற்றலைவன்மேல் பிழையதிகமில்லையென்றும் தோன்றிற்று. அப்படித்தோன்றவே, மாலுமியாகவேண்டுமென்ற ஆசை மறுபடியும் அவனை அடிமையாக்கிற்று.

உடனே எழுந்திருந்து ஏரி கரையின்மீது ஒன்றுந்தோன்றாமல் அங்குமிங்குமுலாவினான்.

அப்பொழுது, "ஜிம், ஜிம்," என்று தன்னைக் கூப்பிடும் குரலைக் கேட்கத்திடுக்கிட்டான்.

உடனே குரல் வந்த வழியை நோக்கித் திரும்பினான். ஒரு கால்வாய்ப் படகினின்று குரல் வருவதையறிந்தான்.

"ஜிம்! நீயிங்கே யெவ்விதம் வந்தாய்?" என்று அவனைப் படகிலிருந்து கூப்பிட்டுக் கேட்டது அவனுடைய உறவினனான ஆமாஸ் லெச்சர் (Amos Letcher) என்பவன்.

"ஆமாஸ், நீ இங்கெக்கு வந்தாய்!" என்று ஜேம்ஸ் சொல்லிக்கொண்டு விரைவில் படகிற்சென்று தன்னுடைய உறவினனும் பழைய நண்பனுமான ஆமாஸ் லெச்சருடன் கைகுலுக்கி யுரையாடினான்.

"நீ இங்கு வந்த விதம் என்ன? நான் கேள்விப்பட்டவரையில் நீ மரம் வெட்டிக்கொண்டிருந்ததாக எனக்குத் தெரிய வந்தது," என்று ஆமாஸ் சொன்னான்.

"ஈரி ஏரியின்மீது செல்லும் கப்பலில் வேலையகப்படுமோ வென்று பார்க்கவந்தேன்."

"ஏதாவது வேலை கிடைத்ததா?"

"இதுவரையிலும் ஒன்றையுங்காணேன்."

"யாரையாவது பார்த்தாயா?"

ஜேம்ஸ் கப்பன்மீது தனக்கு நேர்ந்த விஷயத்தை நடந்தபடி சொல்ல, ஆமாஸ் கேட்டு நகைத்தான்.

ஜேம்ஸ் சொல்லி முடித்தவுடன், "உனக்குப் பிடிக்காதவிதம் கப்பற்றலைவன் உன்னை நடத்தினான். சில கப்பற்றலைவர்கள் பழகுவதற்கு கஷ்டமானவர்கள் தான்," என்று ஆமாஸ் சொன்னான்.

"நீ சொல்லுகிற பெயரவனுக்குத்தகாது. பார்வைக்கு மனிதனாய்த்தோன்றினபோதிலுமவன் சுபாவத்தில் பிசாசு."

"அவ்விதமான மிருகத்துடன் மாலுமிவேலைசெய்ய உனக்கு மனமிருக்காதென்று நினைக்கிறேன்."

"நீ நினைப்பதுசரி; அதைவிட நான் மரம் வெட்டிக்காலங் கழிக்க விரும்புவேன்."

"கால்வாய்ப்படகில் வேலைசெய்ய நீ விரும்புவாயா?"

"எனக்கு ஒன்றுந்தோன்றவில்லை. அப்படிச்செய்தால் கப்பலில் மாலுமி வேலையெனக்குப் பிறகு கிடைக்குமா?"

"ஒருக்கால் கிடைக்கக்கூடும்"

"இந்தப்படகில் வேலைக்கு மற்றொரு ஆள் தேவையா?"

"ஆம், மற்றொருஆள் படகோட்டுவதற்கு வேண்டும்."

"படகுத்தலைவனெங்கே?"

"நான் தான் தலைவன்."

"நீ தலைவனா?" என்று ஆச்சரியத்துடன் ஜேம்ஸ்கேட்டான்.

"ஆம், நான் தலைவன்தான்; உன்னைவேலைக்கமர்த்த எனக்குச் சந்தோஷமுண்டாகும்."

"நீ யெங்குபோகிறாய்?"

"பிட்ஸ்பர்க் (Pitts burg.) என்னுமிடத்திற்கு."

"எந்தசாமான் கொண்டுபோகிறீர்கள்?"

"சுரங்கத்திலிருந்தெடுக்கப்பட்ட செப்புலோகம்."

"நான் வேலை யொப்புக்கொள்ளலாமென்று நினைக்கிறேன். நீ என்ன சம்பளம் கொடுப்பாய்?"

"மாதமொன்றுக்கு 12 டாலர். ஓட்டும் வேலை செய்பவர்க்கு அதுதான் சம்பளமேற்பட்டிருக்கிறது."

"சரி; நான் வேலை யொப்புக்கொள்ளுகிறேன். என்னாலியன்றமட்டும் வேலை சரியாய்ச் செய்கிறேன்."

"ஒவ்வொருவருமியன்றமட்டும் செய்தால் போதும். நாளைய தினம் நாங்கள் புறப்படுகிறோம்."

"நல்லதுதான்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

அந்தக்காலத்தில் ஏரி எரிக்கும் ஓஹியோ ஆற்றுக்கும் அந்தக் கால்வாய் போக்குவரவுக்குச் சாதனமாயிருந்தது. ஸுபீரியர் ஏரி (Lake Superior) அருகாமையில் ஏராளமாய்ச் செப்புச் சுரங்கத்தில் செப்புலோக மெடுக்கப்பட்டது. அப்படி யெடுக்கப்பட்ட உலோகத்தை க்ளீவ்லாண்டுக்கு கப்பலில் கொண்டு வந்தார்கள். அங்கிருந்து பிட்ஸ்பர்க் என்னுமிடத்திற்குப் படகில் கால்வாய் வழியாய்க் கொண்டு சேர்த்தார்கள்.

ஆமாஸ் லெச்சர் தலைவனாயிருந்த படகுக்கு *ஈவனிங் ஸ்டார் (Evening Star) என்று பெயர். ஒவ்வொரு படகிலும் தலைவனைச்சேர்த்து எழுபெயருண்டு. நான்கு கோவேறு கழுதைகளைக்கொண்டு படகைச்செலுத்துவது வழக்கம். இரண்டு கழுதைகளைக்கட்டி யொருவன் கரையின்மீது ஓட்டிக்கொண்டு போகப் படகு செல்லும்.

பிறகு மற்றைய விரண்டு கழுதைகளையும் கட்டி மற்றொருவன் படகைச் செலுத்துவான். முதலில் ஜேம்ஸ் கழுதைகளைக் கட்டிப் படகைச்செலுத்த ஆரம்பித்தான். சிலமயில் சென்றபின் ஜேம்ஸும் அவனோட்டின கோவேறு கழுதைகளிரண்டும் கால்வாயில் தவறி விழுவே, படகிலிருந்தவர்கள் அவனையும் கழுதைகளையும் கரை யேற்றினார்கள்.

இன்னுஞ்சிறிது தூரஞ்சென்ற பிறகு ஜேம்ஸும் அவனுடைய கழுதைகளும் படகில் சென்றார்கள். மற்றவன் படகோட்டத் தொடங்கினான்.

ஜேம்ஸ் படகில் செல்லவே, ஆமாஸ் லெச்சர் அவனைக்கூப்பிட்டுத், தான் உபாத்தியாயர் வேலைசெய்து சிலகாலங் கழித்திருந்ததாய்ச் சொல்லிக்கொண்டு அவனைப் பரீக்ஷிக்க விரும்பினான்.

"வேண்டிய கேள்விகள் போடு. ஆனால் மிகக்கடினமான கேள்விகள்மட்டும் போடாதே," என்று ஜேம்ஸ் சொன்னான்.

ஆமாஸ் தனக்கு நிரம்பத் தெரிந்ததாக நினைத்து செருக்குக்கொண்டு கேள்விகள்கேட்டான்.

---

*மாலை நக்ஷத்திர மெனப்பொருள்.

ஒவ்வொருகேள்விக்கும் தவறுமல் விடையளித்தான்.

"நீ நிரம்பச்சிறந்தவன். உன்னைப்பற்றி பலரிடமிருந்து கேள்விப்பட்டபடியால் நான் உண்மைதெரிந்துகொள்ள இப்படிக் கேள்விகள்கேட்டேன். உன்னுடைய உறவினர்களுக்கு ஒருநாளும் நீ யவமானங்கொண்டுவரமாட்டாய். உன்னையுறவினனென்று கொண்டாட எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது," என்று ஆமாஸ் சொன்னுன்.

"இப்பொழுது நான் உனக்குச்சில கேள்விகள்போடலாமா?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"வேண்டினஅளவு கேட்கலாம்."

ஜேம்ஸ் கேட்ட முதல்கேள்விக்கு விடையளிக்க ஆமாஸ் என்பவனுல் முடியவில்லை. இரண்டாவது கேள்வியுமப்படித்தானிருந்தது. மூன்ருவதும் அவனுக்குத் தெரியவில்லை. பலகேள்விகள் கேட்டும் ஒன்ருவது ஆமாஸுக்குத் தெரியவில்லை. ஆமாஸ் ஒன்றுந்தெரியாமல் விழித்தான். ஜேம்ஸ் கற்றவிஷயமெல்லாம் நன்ருய்க் கற்றிருந்தான். அவன் கேட்டகேள்விகட்குப் புத்தியுள்ளவர்கள்தான் விடையளிக்கக்கூடும்.

"ஜேம்ஸ், நீ யென்னைக் கேள்விகள் கேட்காமல் சும்மா விட்டால், நானும் உன்வழிவரவில்லை," என்று ஆமாஸ் கர்வபங்கப்பட்டுச் சொன்னுன்.

பேச்சும் கேள்விகளும் முடிந்தவுடன், 'ஜிம், உனக்கிருக்கிற புத்திசாலித்தனத்துக்கு மரம்வெட்டுதலும் படகோட்டுதலுந் தகுதியற்றவையென் எனக்குத்தோன்றுகிறது," என்று ஆமாஸ் சொன்னுன்.

"உண்மையாகவே உனக்கு அப்படித் தோன்றுகிறதா?"

"நான் சொல்வது சத்தியம்."

"அப்படியானுல் நானென்ன செய்யலாமென்று நீ நினைக்கிருய்?"

"உபாத்தியாயர் வேலை செய்யலாம். அந்த வேலையிலிருந்து வேறு உனக்கிஷ்டமான வேலை ஒத்துக்கொள்ளக்கூடும்."

"சொல்வதெளிது செய்வது கஷ்டம். அதிருக்கட்டும். நான் மாலுமி வேலை செய்வதைப்பற்றி நீ யென்ன நினைக்கிறாய்?"

"அது உனக்குத் தகுதியல்ல. உன்னுடைய புத்திகூர்மைக்குத் தகுந்தபடி சிறந்தவேலை நீ பார்க்கவேண்டுமேயொழிய இந்தக் கஷ்டமானதும் புத்தியில்லாத முரட்டுத்தனமுள்ளவர்கள் செய்யும் வேலையைக் கனவிலும் நினையாதே," என்று ஆமாஸ் சொல்லவே, ஜேம்ஸ் தன்னுடைய தாயாருமவ்விதமே சொல்லுவதாகச் சொன்னான்.

"உன் தாயார் சொல்வது சரி, நீ யொரு உபாத்தியாயராக வாவது அல்லது ராச்சியம் ஆளும் தலைவனாகவாவது ஆகவிடமிருக்கும்பொழுது, மாலுமியாகவிரும்பாதே," என்று ஆமாஸ் மறுபடியும் சொன்னான்.

"உண்மையாகவே நீ யப்படி நினைக்கிறாயா?"

"அதிலென்ன சந்தேகம்? நான் சொல்வது சத்தியம். உன்னைப்போலிருந்தால், நான் அடுத்தபக்ஷத்தில் பள்ளிக்குப்போய் வேண்டியவற்றைக்கற்றுப் பின்வரும் வருடத்தில் உபாத்தியாயர் வேலைபுரிவேன். இப்பொழுது நீ சம்பாதிக்கிற பண மதற்குப் போதுமானது," என்று ஆமாஸ் சொன்னான்.

இதைக் கேட்கவே ஜேம்ஸ் ஆலோசனை செய்யலானான். 'பலபெயர் வாக்குச் சரியாயிருக்கும்,' என்றபடி ஜேம்ஸ் தான் கேட்கும் மனிதர்களெல்லோருஞ்சொல்வதொரேவிதமாயிருத்தலைப் பார்த்து, மாலுமியாக விரும்புவது சரியல்லவோ என்று நினைக்க ஆரம்பித்தான். ஆகையால் ஆமாஸ் சொன்னது அவனுக்கு நன்மையுண்டாக்கிற்றென்றே சொல்லலாம்.

# 14-அத்தியாயம்.

---

"ஈசன் செயலறிவதேவற்கு மரிது"

படகில் வேலைசெய்தவர்களெல்லோரும் முரட்டுத்தனமுள்ளவர்கள்தாம். சாராயம், புகையிலை, கடுஞ்சொல் இவைகளிலேதாவதொன்று அவர்கள் வாயிலெப்பொழுது மிருந்துகொண்டேயிருக்கும்.

இரண்டு படகுகள் அவைகள் மேட்டிலிருந்து பள்ளத்திலும், பள்ளத்திலிருந்து மேட்டிலுஞ் செல்வதற்காகக் கட்டப்பட்ட (Lock) லாக்மதகைச் சற்றேறக்குறைய ஒரே காலத்திலணுகினல் முன்வந்தபடகு முதலில் செல்வதும், பின்வந்தது பின்செல்வதும் நியாயம். ஆனல் படகுகாரர் முரடரானபடியால் சண்டையிட்டு ஜயித்த படகுகாரர் முன் செல்வதியல்பாயிருந்தது.

இப்படி யொருதடவை ஜேம்ஸிருந்த படகுகாரர் சண்டையிட முயன்றபொழுது, அப்படிச் செய்வது சரியல்லவென்று ஜேம்ஸ் சொல்லவே, சண்டை நின்றது. இம்மாதிரியாக இவனிருந்தவரைக்குஞ் சண்டை யந்த படகுகாரர் போடாமலிருக்கும்படி நேர்ந்தது.

படகில் வேலை செய்தவர் சாராயம் சுருட்டுக் குடிப்பதும், மயக்கத்திலொருவரை யொருவரடிப்பதும், வெறி பிடித்தபொழுது கடுஞ்சொல்லாற் பிறரைக்கடிப்பதும் சாதாரணமாய் நடந்துவந்த விஷயம். ஜேம்ஸிருந்த படகிலுள்ளவர்களும் அவ்விதமானவர்களே. அவர்களையெல்லாம் ஜேம்ஸ் நடத்தையாலும் வார்த்தையாலும் சீர்திருத்த முயன்றான்.

அப்படகிலிருந்தவர்களெல்லோரும் ஜேம்ஸ் சொல்வது சரியானதென்றறிந்தபோதிலும், ஜேமஸ் சொல்லி நடந்துகாட்டிய விதம், சாராயம் புகையிலையைவிட அவர்களால் முடியவில்லையென்று ஒப்புக்கொண்டார்கள். உலகத்தில் மனிதர்கள் கெட்ட

நடத்தைகட்குட்படுவரேல், அவர்கள் ஒருபொழுதும் அக்கெட்ட நடத்தைகளைவிட முடியாதவர்களாய்க் கஷ்டப்பட்டு மாளுகிறார்கள்.

ஆனால் படகிலிருந்தவர்களெல்லோரும் ஜேம்ஸைக்கண்டு பெருமை பாராட்டியவனிடத்தில், அவனென்ன சொன்னபோதிலும், பிரியம் வைத்து நடந்து வந்தனர். ஜேம்ஸ் தைரியமும் தேகபலமும் ஒழுங்கான நடத்தையு முடையவனாயிருந்தது புத்திஹீனமான முரட்டுத்தனமுள்ள படகு வேலைக்காரர்கூட அவனை மரியாதையுடன் நடத்தும்படி செய்தது.

ஜேம்ஸ் தன்னுடைய வேலையைக் குற்றங் குறையன்றித் தாமதமில்லாமல் செய்வான். மேலும் மனச்சாட்சிக்கு விரோதமன்றி யுறுதியாய்க் கொடுத்த காரியத்தைச் சன்மார்க்கம் தவறாமல் செய்வான்.

ஜேம்ஸ் படகில் வேலை செய்தகாலத்தில் வாசிக்கப் புத்தகங்களவனுக்குக் கிடைக்கவில்லை. சிற்சில சமயங்களில் ஆமாஸ் லெச்சர் சில பத்திரிகைகள் வாங்கிக்கொடுப்பதுண்டு. அவைகளை முழுவதும் நன்றாய்த் திருப்பித்திருப்பிப் பன்முறை வாசித்துவிடுவான். வாசிக்கப் புத்தகமில்லாவிடினும் விஷயங்கள் கற்க இடமில்லாமல் போகவில்லை. உலகத்தில் மனிதர்கள் புத்தகங்களினின்று கற்றுக்கொள்வது சிறிது. கண்ணால் ஜனங்கள் பிராணிகள் முதலியவற்றைப் பார்த்தும், விஷயங்களைக் காதால் கேட்டும் அனுபவத்தில் கற்றுக்கொள்வது பெரிது. அவ்விதமே ஜேம்ஸ் கண்ணால் பார்த்துக் காதால் கேட்டவற்றைப்பற்றியடிக்கடிப் படகுத்தலைவனைக் கேள்விகள் கேட்பதுண்டு. அந்த ஆமாஸ் லெச்சரும் பொறுமையாய்க் கேள்விகளுக்கு விடை தரவே, ஜேம்ஸ் புத்தகமின்றி பற்பல விஷயங்களைக் கற்றான்.

ஜேம்ஸுக்கும் ஜலத்திற்கும் சொந்தமதிகமாயிருந்தது என்று சொல்லவேண்டும். கால்வாய்ப்படகில் வேலையாயிருந்த இரண்டுமூன்று மாதங்கட்குள் பதினான்குமுறை தண்ணீரில்விழுந்தான். அப்படிவிழுந்தது வேலைத்திறமின்மையாலாவது, பட

கில் மற்றவர்களைப்போல் விழாமலிருக்கத் தெரியாததாலாவது உண்டானதல்ல; ஆனால் வேலையைக் கவனித்தகாலத்தில் தன்னுடைய உடம்புக்குநேரக்கூடிய அபாயத்தைக்கவனியாது வேலை பார்த்ததாலுண்டானதென்றே சொல்லவேண்டும்.

கடைசியில் கால்வாயில் விழுந்தபொழுது அவனுயிர்க்கபாயம் நேரிடும்போற்றோன்றிற்று. ஓரிரவில் மழையதிகமாய்ப்பெய்தது. இவன் தூங்கிக்கொண்டிருந்தான். இவனையெழுப்பி வேலைபார்க்கச்சொல்லிவிட்டு மற்றவர் தூங்கினார்கள். இவன் அரைக்கண் விழித்துக்கொண்டு தூக்கக்கலக்கத்துடன் வேலைசெய்யத்தொடங்கினான். லாக்மதகுஒன்று எதிர்ப்படவே, அதற்காக ஒருபெரிய கயிற்றையவிழ்க்க ஆரம்பித்தான். ஆனால், கயிறுசிக்கிக்கொண்டு இழுக்க இழுக்க அவிழாமல்நின்றது. திடீரென்று அவிழவே இவன் தண்ணீரில் தானிழுத்த வேகத்தினாலேயே தள்ளப்பட்டான். அவனப்படிவிழுந்த தொருவனுக்கும் தெரியாது. காலமோ இருட்டு. மழையோ விடாமல் பெய்துகொண்டிருந்தது. இச்சமயத்தில் இவன் கையில் தற்செயலாய் கயிறகப்பட்டது. அகப்பட்டுமுபயே கப் பட்டிருக்காது. ஈசன்செயலாலது படகிலிருந்தவொரு இடுக்கில் சிக்கிக்கொண்டிருந்தது. ஆகையால் கயிற்றைப்பிடித்துக்கொண்டு படகிலேறினான்.

ஏறினவுடன் கயிற்றை யிடுக்கினின்றெடுத்து மறுபடியுமிடுக்கிலேந்தாறுதடவை யெறிந்து சிக்கிக்கொள்ளுகிறதாவென்று பார்த்தான். சிக்கிக்கொள்ளவில்லை. ஆகையால் சிக்கிக்கொண்டது கடவுள்செயலென்றும் தான் உயிர்தப்பிப் பிழைத்தது மவ்வீசன் செயலேயொழிய வேறில்லையென்று நன்குணர்ந்தான். அப்பொழுதுதான் தனக்கு மாலுமிவேலை தகுதியற்றதென்றும், அந்தவேலையைவிடச்சிறந்தவேலை செய்யலாமென்றும், தன் தாயார்சொன்னது சரியென்றுமறிந்தான். தன்னுடைய தாயாரொவ்வொரு தினமும் ஜேம்ஸ் க்ஷேமத்தையே பிரார்த்திக்கொண் டிருந்ததாற்றானப்படியவன் கடவுள்கிருபையால் காப்பாற்றப்பட்டானென்று அவனுக்குத் தோன்றிற்று. அப்படித்தோன்றவே, அவன் அவ்விதமான அருமைத்தாயார் சொல்மீறிநடந்ததற்கு மனம் வருந்தினான். கால்வாய்ப்படகு வேலையைவிட்டுவிடத் தீர்மானித்தான்.

கடைசியாகத் தண்ணீரில் விழுந்த சில வாரங்கட்குள் ஜேம்ஸுக்குக் காய்ச்சலடித்து அவனை வேலை செய்ய முடியாத பலவீனனாய்ச் செய்தது. இதைக் காரணமாய் வைத்துக்கொண்டு தான் முன் செய்த தீர்மானத்தின்படி வேலையை விட்டுவிட எண்ணங்கொண்டு, "படகு தலைவரே, நான் வீடுபோகவேண்டும்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"நீ நினைப்பது சரி. உன்னுடம்பு காய்ச்சலடித்துப் பலவீனமாயிருப்பதால், வேலை செய்வது கஷ்டம். மேலும் நோயாளிக்கு வீட்டைப்போற்றகுந்த விடமில்லை. உன்னைவிட்டுப்பிரிய எனக்கும் மனமில்லை. இங்குள்ள வேலைக்காரரும் மனம்வருந்துவார். ஆனால் உனக்கு வீட்டுக்குப் போவதே நலமெனத் தோன்றுகிறது."

"வேலையை விட்டுப்போக மனமில்லை; ஏனென்றால் வேலையிலெனக்கு திருப்தியுமானந்தமுமேயொழிய வேறில்லை. ஆனாலும் நீ சொன்னபடி நான் நடக்கலாமென நினைக்கிறேன்."

"நீ யப்படிச்செய்தல் சரி. உடம்பு சௌக்கியப்பட்டவுடன் பள்ளிக்குப்போய்ப் படிப்பதுதானுனக்குத் தகுந்தது."

ஜேம்ஸ் தனக்கு வரவேண்டிய சம்பளத்தை வாங்கிக்கொண்டு வீட்டைநோக்கிச் சென்றான். கையில் பணமிருந்து முடம்பில் பலமில்லை.

வீட்டையணுகினபொழுது இரவில் மணி பதினொன்றாய் விட்டது. சன்னல்வழியாய் விளக்கு வெளிச்சம் தெரிந்தது. உற்றுப்பார்த்தான். தாயார் முழந்தாளிட்டுத் தியானத்திலமர்ந்து, "ஈசா, என்மேல் கிருபைவைத்து, உன்னுடைய ஊழியக்காரியின் குழந்தைக்குத் தீங்கொன்றும் வராமல் காத்தருள்," என்று பிரார்த்திப்பதைக் கேட்டான், கேட்கவே வீட்டினுட் சென்றான். உடனே தாயார் மகனைத் தழுவி யணைத்துச் சந்தோஷமடைந்தாள்.

# 15-அத்தியாயம்.

"அலகுசால் கற்பினறிவு நூல்கல்லா
துலகநூலோ துவதெல்லாங் —கலகல
கூஉந்துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந்துணை யறிவாரில்.

"குழந்தாய், உன்னைப் பார்த்தால் நோயிலடிபட்டவன் போலிருக்கிறதே. அஃதெப்படி?" என்று தாயார் பையனைப்பார்த்துக் கேட்டாள்.

"உடம்பு சௌகரியமில்லை. ஆகையால்தான் நான் வீடுவந்தேன். நான் வீட்டுக்கு நடந்துவரக் கஷ்டப்பட்டேன்; என்னுடம்பில் அதிக பலமுமில்லை."

"உனக்கு எவ்வளவு நாளாய் உடம்பு அசௌகரியமாயிருக்கிறது?" என்று கவலையுடன் தாயார் கேட்டாள்.

"எனக்குக் குளிர்காய்ச்சல் ஒரு வாரமாயடித்து வந்திருக்கிறது."

"குளிர்காய்ச்சல்! கப்பலின்மீது குளிர்காய்ச்சலடிப்பதாய் நான் ஒருபொழுதுங் கேள்விப்பட்டதில்லை."

"நான் கப்பலிலிருக்கவில்லை. கால்வாய்மீது வேலையிலமர்ந்திருந்தேன்."

"கால்வாய்மீதா? நீ ஏரிக்கப்பலின்மீது வேலை செய்துகொண்டிருப்பதாக இதுவரையில் நானெண்ணிக்கொண்டிருந்தேன். நீ கால்வாய்மீது வேலையிலமர்ந்ததற்குக் காரணமென்ன?"

தனக்கு வீடுவிட்டுப்போனபிறகு நேர்ந்த விஷயங்களையெல்லாம் ஜேம்ஸ் தாயாரிடத்தில் சொன்னான்.

68169

ஜேம்ஸ் சொல்வதைக்கேட்டுத் தாயார் ஆச்சரியப்பட்டாள். அவன் சொல்லிமுடித்தவுடன், "கடவுள் என்னுடைய பிரார்த்தனைக்கிணங்கி உனக்கு யாதொரு தீங்குண்டாகாமல் என்னிடம் திரும்பியுன்னைக் கொண்டுவந்து சேர்த்தருளினர்," என்று கார்பீல்டு அம்மாள் சொன்னாள்.

தாயார் சொல்வதைக்கேட்டவுடன் ஜேம்ஸுக்கு மறுமொழியளிக்க நாவெழவில்லை. ஆனாலும், மிகவும் சிரமத்துடன், "நானொருவருக்குந் தெரியாமல் ஆற்றில் தவறி விழுந்த விரவில், என்னைக் காத்தருளியவர் கடவுளைத்தவிர வேறில்லை யென்பது திண்ணம்," என்று ஜேம்ஸ் சொன்னான். இப்படிச் சொன்னதைக் கேட்கவே கார்பீல்டு அம்மாளுக்கு ஆனந்த பரவசமுண்டாயிற்றென்றே சொல்லவேண்டும். ஜேம்ஸ் நற்குண நற்செய்கையுள்ள பிள்ளையாயிருந்தாலும், இதுவரையில் கடவுள் தனக்குச் செய்யுமுதவிக்குத்தானெப்பொழுதுமவரிடம் பக்திவைக்கவேண்டுமென்ற விஷயமறிந்தவனாய்க் காட்டிக்கொள்ளவில்லை. ஆகையால் தெய்வபக்தி ஜேம்ஸுக்குண்டாய்விட்டதென்று நினைக்கத் தாயாரானந்தக்கடலில் மூழ்கினாள்.

"இரவில் நேரமாய்விட்டது. நீ படுத்துக்கொள். காலையில் ஆகவேண்டியதைக் கவனிப்போம்," என்று தாயார் சொல்ல இருவரும் துயிலமர்ந்தார்கள்.

ஜேம்ஸ் நன்றாய்த் தூங்கினான். கார்பீல்டு அம்மாள் தூக்கமில்லாமல் தன்னருமை மகனைக் காப்பாற்றிக் கொணர்ந்த கடவுளைத் தியானித்துக்கொண்டும், கடவுள் கிருபையால் தன் மைந்தன் பெறக்கூடிய நல்ல பதவியைப்பற்றி யோசித்துக்கொண்டுமிருந்தாள். தன்பிள்ளை ஜேம்ஸ் மதவிருத்தி செய்வதிலமர்ந்து நற்பதவியடையவேண்டுமென்ற அவா அவளுக்கதிகமுண்டாயிற்று. இவ்விதமான யோசனையிலுந் தியானத்திலும் இரவுமுழுவதுங் கழித்தாள்.

வைகறையெழுந்து பிள்ளையிடம் வந்தாள். அவன் நன்றாய்த் தூங்கிக்கொண்டிருந்தான். பிறகு துயில் நீங்கியெழுந்தான்.

அன்றையதினம காய்ச்சலில்லை. ஆனால் மறுநாள் காய்ச்சல் மறுபடியு மடிக்கத் தொடங்கிற்று. அப்பிராந்தியத்திலகப்படக் கூடிய வைத்தியம் செய்து, தாயார் நன்றாயவனைக் கவனித்துப் பார்த்து வந்தாள்.

அக்காய்ச்சலவனை யனேகநாள் விடவில்லை. உடம்பு மிகவும் மெலிந்து குழந்தைக்கிருக்கிற பலமவ்வளவவனுக்கில்லாமல் வருந்தினான். இம்மாதிரி இதுவரையில் நோய்வந்து அவன் வருந்தினதில்லை. ஆயினும் தாயார் சரியாய்ப்பார்த்து வந்தமையால் அதிக வருத்தப்படாமலிருந்தானென்றே சொல்லவேண்டும்.

மேற்சொல்லியவிதம் ஜேம்ஸ் காய்ச்சலடித்து வருந்தின பொழுது, "குழந்தாய், நீ இச்சமயம் வீடுவந்து சேர்ந்தது நல்ல விஷயந்தான்," என்று கார்பீல்டு அம்மாள் சொன்னாள்.

"நீ சொல்வது சரியே. ஆயினும் நான் உடம்பு நோய் படாமலிருந்தாலும்சீக்கிரத்தில் வீடுவந்துவிடுவதில்சந்தேகமில்லை."

"அப்படியானால், நீ கால்வாய் வேலையை விட்டுவிட நினைத்தாயா?"

"ஆம்; எனக்குக் கால்வாய்வேலை செய்தது போதுமென்று தோன்றிற்று. அது நிற்க, என்னாலதைவிடச் சிறந்தவேலை செய்யக்கூடியபொழுது, நானந்த வேலையைச்செய்வது புத்தியீனமென்று ஆமாஸ் சொன்னான்."

"என்னுடைய வபிப்பிராயமு மதுவேயென்பதுனக்குத் தெரியும்."

"அவ்விரவில் என்னுயிரைக்கடவுள் காப்பாற்றியருளியது தகுந்த காரியத்திற்கென்றெண்ணுகிறேன்."

"நீ மாலுமித்தொழில் செய்வது கடவுளுக்குத் திருப்தியில்லை. ஆகையால் அவர் அந்தக் கப்பற்றலைவனை நீ காணும்படி செய்தாரென்று நினைக்கிறேன்."

"ஒருக்காலவ்விதமிருக்கலாம்."

"கடவுள் என் பிரார்த்தனையின் பிரகாரம் கிருபைசெய்வா ராகில், நீ கல்வி பயின்று ஒரு உபாத்தியாயர் அல்லது மதப்பிர சங்கஞ்செயபவர் வேலையிலமரக்கூடும், அப்பொழுது யான் ஆனந்தக்கடலில் மூழ்குவேனென்பதற் கையமில்லை."

"நான் வக்கீல் வேலையிலமர்ந்தாலென்ன?"

"நீ ஒழுங்காய் நடந்தால் எனக்கு யாதொரு ஆக்ஷேபமு மில்லை. ஒழுங்கற்ற வக்கீல் வேலை மாலுமி வேலைக்கு மேலல்ல. அது நிற்க, எல்லாவற்றையும்விட நீ கடவுள் வேலையிலமர்ந்து மத அபிவிர்த்தி செய்வதில் பிரவேசிப்பது சரியென்று உனக்குத் தோன்றவில்லையா?" என்று கார்பீல்டு அம்மாள் தான் எப் பொழுதும் நினைத்துக்கொண்டிருந்த விஷயத்தை வெளியிட்டாள்.

இப்படிக்கேட்கவே, ஜேம்ஸ் என்பவனைத் தாயார் இவ்விதம் பன்முறை கேட்டிருந்தபடியால், "நீ சொல்வதைப்பற்றி யடிக்கடி யோசித்துக்கொண்டும் வருகிறேன்," என்று ஜேம்ஸ் விடை யளித்தான்.

"நீ அப்படிச்செய்வது எனக்கு மனத்துக்குப்பிடித்த காரிய மாயிருக்கும்," என்று தாயார் சொன்னாள்.

இவ்விதமாகப் பலவாரங்கள் சென்றன. மாரி காலமும் தொடங்கிற்று. டிசம்பர் மாதத்தில் இவர்களிருந்தவிடத்திற் கருகாமையிலிருந்த மாரி காலப்பள்ளிக்கூடத்தில் பேட்ஸ் (Mr. Bates) என்பவர் உபாத்தியாயராயிருந்து கல்வி கற்றுக் கொடுத்து வந்தார்.

பேட்ஸ் என்பவர் தன் வேலையில் புத்தி யுக்தி யுற்சாக மூக்க மிவைகளனைத்தையு மூன்றி வேலை நடத்தினார். ஆகையால் அவ ரிடத்தில் மாணாக்கர்கள் பிரியமாயிருந்தார்கள். மேலும், இவர் மதவிஷயத்தில மிக்க கருத்துக்கொண்டு மதசம்பந்தமான வேலை யிலமர்ந்து கடவுள் காரியத்தைப் பார்க்க எதிர்பார்த்துக் கொண் டிருந்தார்.

கார்பீல்டு அம்மாள் பேட்ஸ் என்பவரைக்கண்டு பழகினதில் அவர் தகுந்த புத்தி ஜேம்ஸுக்குச் சொல்லி யவனை மேல்கல்வி கற்க செய்யக்கூடியவரென வறிந்தாள்.

ஆகையால் அவரிடத்தில் ஜேம்ஸ் விஷயத்தையெல்லாம் நன்ருய்த் தெரிவித்து அவரை ஜேம்ஸுக்குப் புத்திசொல்லிப் படிப்புப் படிக்கும் விதம் செய்யும்படி யவரைக் கேட்டுக்கொண்டாள். அவரும் தடையொன்றுஞ் சொல்லாமல் காலதாமதமன்றி வந்து ஜேம்ஸைப் பார்த்தார். ஆனல் வந்தவுடன் தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிடாமல், பொதுவாய்ப் பேசிவிட்டு விடைபெற்றுச் சென்ருர்.

அவர் சென்றவுடன், "குழந்தாய், பேட்ஸ் என்பவர் மிகவும் நல்லவர். அவரை மாணுக்கர்களெல்லோரும் நேசிக்கிருர்கள்," என்று கார்பீல்டு அம்மாள் சொன்னள்.

"எனக்கும் அவரைக்காண அவரிடத்தில் நேசம் உண்டாகிறது. அவர் இங்கு அடிக்கடி வருவாரென்று நம்புகிறேன்," என்று ஜேம்ஸ் சொன்னன்.

இவ்விதமாகப் பேசிக்கொண்டிருந்தபொழுது ஜேம்ஸ் தனக்கு மாலுமியாய்ச் சமுத்திரத்தின்மீது செல்ல அவாவிருப்பதாகச் சொன்னன். இது தாயார் எதிர்பார்க்காத விஷயம். ஆனல் அவனுக்கிருந்த மாலுமியாகவேண்டுமென்ற அவா முன்னிருந்த நிலைமையிலேயே யிருப்பதாகத் தாயாருக்குத் தோன்றினதால் கோடைகாலத்தில் மாலுமித்தொழில் செய்து, மாரிகாலத்தில் வாத்தியார் வேலைபுரிதல் அவனுக்குத் தகுதியாயிருக்கலாமென்று ஒருவாறு ஜேம்ஸ் மனத்துக்கிணங்கச் சொல்லி முடித்தாள்.

பேட்ஸ் என்பவர் அடிக்கடி ஜேம்ஸ் வீட்டிற்குவந்து அவனுக்குப் புத்திகற்பித்து, அவனை ஞானமார்க்கத்தில் போகும்விதம் செய்தார். கடவுளிடத்தில் பக்தியுண்டாகவே, ஜேம்ஸ் தனக்கு ஈசன்கிருபை இன்றியமையாத விஷயம் என்று சொன்னன்.

உடனே பேட்ஸ் என்பவர் ஜேம்ஸ் முதலில் வாசிப்பதற்குத் தீர்மானஞ் செய்துகொள்ள வேண்டுமென்று சொன்னர். ஜேம்ஸ்

அப்படியே செய்வதாகச் சொன்னான். அடுத்த மார்ச்சுமாதத்தில் செஸ்டர் (Chester) என்னுமிடத்திலுள்ள வித்தியாசாலைக்குப் போவதாக ஜேம்ஸ் நிச்சயித்துக்கொண்டான்.

இதைக்கேட்க கார்பீல்டு அம்மாளுக்கு அளவிறந்த சந்தோஷம் பிறந்தது.

"கையில் கொஞ்சம் பணமிருக்கிறது; பக்கத்தில் வரவேண்டிய பணத்தையுஞ்சேர்த்தால், முதலில் பள்ளிக்குப் போவதற்குப் போதுமான பணமிருக்கும்," என்று கார்பீல்டு அம்மாள் சொன்னாள்.

"பள்ளியில்லாதபொழுது . வெளியில் வேலைசெய்து செலவுக்கு வேண்டிய பணஞ் சம்பாதித்துக்கொள்ளுவேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"எல்லா மீசன் செயலால் சரியாய் முடியும்," என்று தாயார் சொன்னாள்.

"வில்லியம் என்பவனும் ஹென்ரி என்பவனும் என்னுடன் பள்ளிக்கு வரக்கூடுமென்று நினைக்கிறேன். அவர்கள் வந்தால் நாங்களெல்லோரு மோரறையிலிருந்து வாசிக்கலாம். ஆகையால் அதைப்பற்றியவர்களைக்கேட்க விரும்புகிறேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"நீ சொல்வது சரி. அவர்களும் பள்ளிக்கு உன்னுடன் வருவார்களென்று நினைக்கிறேன்."

வில்லியம் ஹென்ரி என்பவர்கள் ஜேம்ஸ் அம்மான் ஆமாஸ் பாயின்டன் என்பவரின் பிள்ளைகள். பள்ளிக்கூடந் திறக்க மூன்றுவாரமிருந்தபொழுது ஜேம்ஸ் தன்னுடைய வபிப்பிராயத்தை வில்லியம் ஹென்ரியென்பவர்களிடம் சொன்னான்.

பேட்ஸ் என்பவரையவர்கள் கேட்டார்கள். அவரும் அவர்கள் பள்ளிக்குப்போவது உசிதமென்று சொல்லவே, மூன்று

பெயர்களும் செஸ்டர் (Chester) வித்தியாசாலைக்குப் போவதாக நிச்சயம் செய்யப்பட்டது.

இவ்விதமாய்ச் செஸ்டர் வித்தியாசாலைக்குப்போவது நிச்சயமா யேற்பட்ட பிறகு, அவர்களிருந்தவிடத்திற் கருகாமையில் ஜே. பி. ராபின்ஸன் (J. P. Robinson) என்னும் பெயருள்ள வைத்திியர் வருவதாகக் கேள்விப்பட்டு, ஜேம்ஸ் அவரைப் பார்த்துத் தனக்குப் படிப்பு வரக்கூடிய புத்தியிருப்பதையவரிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்பியவரிடம் சென்றான்.

அவர் ஜேம்ஸுக்குப் படிப்புக்குத்தகுந்த புத்தியும் சக்தியும் வேண்டிய அளவு இருப்பதாகச் சொல்லிப் பையனைத்தைரியப்படுத்தியனுப்பினார்.

ஜேம்ஸுக்குப் பள்ளிக்குப் போகத்தகுந்த சட்டைகளில்லை. இருந்த சட்டைகள் கிழிந்திருந்தன. தாயார் கிழிந்த சட்டைகளை நன்றாய்த் தைத்துக்கொடுத்தாள்.

அந்தச் சட்டைகளைப் போட்டுக்கொண்டே பள்ளிக்குப் போகத்தீர்மானித்தான்.

அவர்கள் தாங்களே சமையல்செய்து சாப்பிடுவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொருவரும் தனக்கு வேண்டிய பாத்திரங்களும் சாமானும் கொண்டுபோவதாகத் தீர்மானம் செய்யப்பட்டது.

ஜேம்ஸ் புறப்பட்டுப் போவதற்குச் செலவுக்குப்பணம் 11 டாலர் தாயார் சேகரித்துக் கொடுத்தாள்.

" இது போதுமானது. வேண்டியபொழுது பணஞ்சம்பாதித்துக்கொள்ளுகிறேன்," என்று ஜேம்ஸ் தாயாரிடம் சொன்னான்.

# 16- அத்தியாயம்.

"தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும்வினை."

வித்தியாசாலை திறக்கும் முதல்நாள் மார்ச்சுமாதம் 5வ ஜேம்ஸ், வில்லியம் ஹென்ரி ஆகியமூவரும் கால்நடையாய்த் தங்களுக்கு வேண்டிய பாத்திரங்கள் பதார்த்தங்களைச் சுமந்துகொண்டு செஸ்டர் பட்டணத்திற்குச் சென்றார்கள். அப்பட்டண மவர்களிருந்து புறப்பட்டவிடத்திற்கு 10மயில் தூரத்திலிருந்தது. போகும்வழியோ நடப்பதற்குக் கஷ்டமாயிருந்தது. ஒவ்வொருவருக்கும் சுமையோவதிகம். தரித்த உடுப்புகளோ கந்தைகள். இக்காலத்திலிவ்விதமாய் மூன்று சிறுவர்கள் பாத்திரங்கள் முதலியவற்றை சுமந்துசென்றால் திருட்டுப்பிள்ளைகளென்று கைதிகளாக்கப்படுவார்களென்பதற் கையமில்லை. ஆயினுஞ் சந்தோஷமாயவர்கள் செஸ்டர் பட்டணத்திற்குப் போனார்கள்.

அப்பட்டணத்திற்குச் சென்றவுடன் வித்தியாசாலைத் தலைவராகிய டேனயல் பிரான்ச் (Daniel Branch) என்பவரிடம் அவர்கள் சென்றார்கள்.

"உங்களுடைய வித்தியாசாலையில் கல்விபயில நாங்கள்வந்திருக்கிறோம். எங்களுக்குச் சொந்த இடம் ஆரெஞ்சு (Orange)," என்று ஜேம்ஸ் வித்தியாசாலைத் தலைவரிடஞ் சொன்னான்.

"உன் பெயரென்ன?" என்று உபாத்தியாயர் கேட்டார்.

"என்னுடைய பெயர் ஜேம்ஸ், ஏ. கார்பீல்டு; இவர்கள் என்னுடைய அம்மான்பிள்ளைகள். அவர்களுடைய பெயர்கள் வில்லியம் பாயின்டன், ஹென்ரிபாயின்டன்."

"பிள்ளைகாள், உங்களைப்பார்க்க எனக்குச் சந்தோஷம் நீங்கள் தேடிவந்த காரியம் சிறந்தது. இவ்விடத்திலிருந்து படிக்

னும் பிள்ளைகளைப்போல் நீங்களும் ஏழைகள் போலெனக்குத் தோன்றுகிறது," என்று அந்தவுபாத்தியாயர் இவர்களைப்பார்த்துச் சொன்னார்.

"ஐயா, நீங்கள் சொல்லுவது சரியே. நாங்கள் வரும்பொழுது தங்கநாணயங்களையும் வெள்ளிநாணயங்களையுஞ் சுமந்துவரவில்லை; ஆனால் சமைப்பதற்குப் பாத்திரங்களும் பண்டங்களும் சுமந்துகொண்டு வந்திருக்கிறோம்," என்று ஜேம்ஸ் மறுமொழி கூறினான்.

"அப்படியானால், நீங்களே சமயல்செய்து சாப்பிடப்போகிறீர்களா?"

"ஆம், ஐயா; எங்களுக்கு ஒரு அறை வேண்டும். அது அகப்படக்கூடியவிடங் காண்பித்தாலெங்களுக்குச் சௌகரியமாயிருக்கும்."

"அருகாமையி லிடமிருக்கிறது. இவ்விடத்தில் படிக்கும் சிறுவர் சிறுமியர் அனேகர் சமயல்செய்து சாப்பிட்டுக்கொண்டு கல்வி கற்றுவருகிறார்கள்;" இருபது முப்பதுகோல் தூரத்திலிருந்த ஒரு பழையவீட்டைச் சுட்டிக்காட்டி, "அதோபார், ஒரு பழையவீடு இருக்கிறது, பார்த்தாயா? அறையொன்று அங்கு அகப்படும். ஒருகிழவி யதில்வசிக்கிறாள். அவளைக் கேட்கவேண்டும்," என்று உபாத்தியாயர் சொன்னார்.

"ஐயா, உங்களுக்கு வந்தனம்," என்றுசொல்லி யவரிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு மேற்சொல்லப்பட்ட பழையவீட்டை நோக்கிச சிறுவர் மூவரும் சென்றனர். வீட்டிலிருந்த கிழவியைப்பார்த்து ஒருஅறை வாடகைக்கு அமர்த்திச் சாமான்களையிறக்கிவைத்துச் சமயல்செய்து முதல் முதலவ்விடத்தில் சாப்பிட்டார்கள்.

அந்த வித்தியாசாலையில் நூறு வித்தியார்த்திகள் வித்தை கற்றுவந்தனர். அந்த வித்தியாசாலையிருந்த பட்டணம் சிறிது

அப்பட்டணத்தில் வெளிப்புறத்தார் மனத்தைக்கவரக்கூடிய தப் பள்ளிக்கூடமொன்றே.

பள்ளிக்கூடந்திறந்தது. ஜேம்ஸ் பல விஷயங்களோடு இலக்கணமும் கற்கத்தொடங்கினான். இதுவரையில் ஜேம்ஸ் ஒரு பள்ளியில் நூறுமாணாக்கர்கள் சேர்ந்திருந்ததைப் பார்த்திலன். மேலும் சிறுவர் சிறுமியர் சேர்ந்து படிக்குமிடத்தில் ஜேம்ஸ் முதன் முதல் சங்கோசப்பட்டான். ஆயினும் பாடங்களை நன்றாய் வாசித்து ஒருவருக்கும் பின்வாங்காமல் வேலை செய்யத்தலைப்பட்டான்.

மேற்சொல்லிய வித்தியாசாலையில் தலைமைநடாத்திய உபாத்தியாயர் இலக்கணப்புத்தகங்களில் சொல்லியபடி சொல்லாமல், தனக்குத்தோன்றியபடி தாறுமாறாய்ச் சொல்லத்தொடங்கவே, ஜேம்ஸ் தான் முன் கற்றதைப் பிழையென்று ஒப்புக்கொள்ளாமல் தனக்குத்தெரிந்த நியாயங்களை யெடுத்துச்சொன்னான். இவ்விதமாக இலக்கணப்பாடம் நடந்த பொழுதெல்லாம் ஜேம்ஸுக்கும் உபாத்தியாயருக்கும் வாக்கு வாதமேற்பட்டது. அப்படி வாக்குவாதமுண்டாவது மாணாக்கர்களுக்குச் சந்தோஷம், வாத்தியாருக்கு உபத்திரவம். இவ்விஷயத்திலிருந்து வாத்தியார் ஜேம்ஸ் சாதாரணமான பிள்ளையல்லவென்றுநினைத்தார்.

சிறுவர் மூவரும் சிறிது காலம் சமயல் செய்து சாப்பிட்டார்கள். பிறகு வீட்டிலிருந்த கிழவியை சமயலுக்குதவியாய்ச் சொற்பச் சம்பளத்துக்கு அமர்த்தினார்கள். அவர்கள் உடைகளை அந்தக் கிழவியே வெளுத்துக் கொடுத்தாள். ஆயினும் இந்த விஷயத்தில் பணம் அதிகம் செலவாகவில்லை.

புத்தகங்கள் வாங்கி, வேறு நீக்கமுடியாத சில செலவுகள் செய்து ஜேம்ஸ் தான் கொணர்ந்த 11-டாலரும் செலவாய்விடுவதைப் பார்க்கவே, "நான் வேலைதேடிப் பணம் சம்பாதிக்கவேண்டும்," என்று அவன் தன்னுடைய உறவினரிடத்தில் சொன்னான்.

"இந்தச் சிறு ஊரில் உனக்கு என்னவேலை யகப்படப்போகிறது?" என்று வில்லியம் கேட்டான்.

"தச்சுவேலை யகப்படலாமென்றெண்ணுகிறேன். அதோ இருக்கிற தச்சுக்கடையைச் சில நாட்களாய்ப் பார்த்துக்கொண்டு வருகிறேன். வேலை நிரம்ப நடக்கிறதுபோற் றோன்றுகிறது. நாளையதினம் போய்க் கேட்டுப்பார்க்கிறேன்."

மறுநாட்காலையில் பள்ளிக்குப் போகுமுன்னர் ஜேம்ஸ் தச்ச னிடம் சென்று வேலை தனக்குக் கொடுக்க வேண்டுமென்று அவ னைக் கேட்டான்.

"இந்த வேலையைப்பற்றி யுனக்கென்ன தெரியும்?" என்று தச்சன் கேட்டான்.

"நான் ஆரெஞ்சு என்னுமிடத்திலிருக்கும் ட்ரீட் என்பவரி டம் வேலை செய்திருக்கிறேன்."

"அவரை யெனக்கு நன்றாய்த் தெரியும்; நீ என்ன வேலை செய்வாய்?"

"வேண்டுமென்றால் களஞ்சியங் கட்டுவேன். உமக்குப் பல கைகளிழைத்துக் கொடுக்ககூடும்."

"இழைப்புவேலை செய்யத்தகுந்த தேகவலிமையுள்ள பிள்ளை யாய் நீ தோன்றுகிறாய். நீ பள்ளிச்செலவுக்குப்பணம் சம்பாதிக்கப் போகிறாயா?"

"ஆம், ஐயா; நான் வரும்பொழுது 11-டாலர் கொணர்ந் தேன். அப்பணம் அதிகநாட் செலவுக்குப் போதாது."

"இவ்விடத்தில் சாப்பாட்டுச் செலவை நினைத்துப் பார்த்தால், நீ கொண்டுவந்த பணம் அதிக நாள் நில்லாதுதான்."

"நானே சமயல்செய்து சாப்பிடுகிறேன்."

"அப்படியா! அநேகர் அவ்விதம் செய்கிறபோதிலும், அது மிகக்கஷ்டம்."

"அதைவிடக் கஷ்டமானவை பலவுள."

"ஒருக்காலிருக்கலாம்; ஆனால் அந்த வேலை கஷ்டமான தென்பதற்கையமில்லை. நீ பள்ளிகலைந்தபின் மாலையில்வா; நான் உனக்கு என்ன செய்யலாமென்று பார்க்கிறேன்."

"உமக்கும் என்ன செய்யலாமென்று பாரும். நான் செய்கிற வேலை யுமக்குப் பயன்படாமலிருக்குமேல் நீர் என்னை வேலைக் கமர்த்துவதில் இலாபடைய மாட்டீர். அப்படியிருந்தால் நான் வேலைசெய்ய விரும்பேன். நீர் எனக்குத் தயாவிஷயமாக வேலை கொடுக்க வேண்டியதில்லை."

"சரி, நான் முன்சொன்னபடி மாலையில்வா; என்னாலிய ன்றமட்டுஞ் செய்கிறேன்."

"நான் நாளொன்றுக்கு இரண்டு அல்லது மூன்று மணி நேரம் வேலைசெய்வேன். சனிக்கிழமைதினம் நாள்முழுவதும் வேலைசெய்யக்கூடும். நான் வேலைசெய்வதைப் பார்த்துக்கொண்டு பிறகு எனக்கு நீர் சம்பளம் ஏற்படுத்தலாம்"

தச்சன் ஜேம்ஸை வேலைக்கமர்த்தினான். காலையில் பள்ளிக் குப்போகுமுன்னர் வேலைசெய்வான், பள்ளிக்கூடம் விட்டவுடன் மாலையில் நான்கு மணிக்குத் தச்சனிடம் வேலைக்கேகுவான். சனிக்கிழமைதினம் நாள்முழுவதும் வேலைசெய்வான். இவ்வித மாக ஜேம்ஸ் மற்றையமாணுக்கர் அனுபவித்த விளையாட்டும் வேடிக்கையுமில்லாமல் அந்தப்பக்ஷம் முழுவதும் வேலைசெய்து பணம் சம்பாதித்தான். விளையாட்டென்றால் மற்றைய பிள்ளை களுக்கு எவ்வளவு பிடிக்குமோ, அதைவிட ஜேம்ஸ் அதில் மோகங்கொண்டவன். ஆனால் விளையாட்டைவிட்டுத் தன் செல வுக்குப்பணம் சம்பாதித்துக் கடனில்லாமலிருத்தல் சிறந்தது. பக்ஷம் முடிந்தபொழுது செலவெல்லாம் போகக் கையில் வீட்டி ற்குக்கொண்டுபோக இரண்டு மூன்று டாலர் பணமிருந்தது.

இந்தப்பள்ளியில் 150-புத்தகங்களடங்கியவொரு புத்தக சாலை யிருந்தது. அதைக்கண்ட ஜேம்ஸ் மனங்களித்தான். புத்தகங்களை யெடுத்துப் பார்த்துத்தனக்கு வேண்டியவைகளையும் வாசித்துக்கொ ண்டேயிருப்பான். இரவில் தூக்கத்தைத் துறத்திப்படுத்துக்கொ

ண்டிருப்பது அவனுக்கு வழக்கம். பகலில் வேலை செய்துவிட்டு இரவில் நெடுநேரம் வாசிப்பது சிரமம். அவனுக்கு வாசிப்பு என்றால் போதும், மற்றொன்றையும் கவனியான்.

பள்ளியிலேற்படுத்தப்பட்ட விதிப்படி ஜேம்ஸ் மாதத்துக்கிரண்டு முறை வியாசமெழுதும்படி நேர்ந்தது. சிற்சில சமயங்களில வியாசமெழுதினவர்கள் தாங்களெழுதிய வியாசத்தை பள்ளியிலிருந்த பிள்ளைகளின் முன்னர் மேடையின்மீது நின்று வாசிப்பது வழக்கம். முதன் முதலில் ஜேம்ஸ் தானெழுதிய வியாசத்தை மேற்சொல்லியவாறு வாசித்தபொழுது நடுநடுங்கினான்.

“என் அதிருஷ்ட வசத்தால் மேடையினருகில் ஒரு திரை கட்டியிருந்தது,” என்று ஜேம்ஸ் தன்னுடைய சிநேகிதர்களிடஞ் சொன்னான்.

“அஃதெப்படி?” என்று வில்லியம் கேட்டான்.

“நான் வியாசம் வாசித்த பொழுது எனது கால்கள் நடுங்கினதை யொருவரும் பார்க்க விடாமல் திரை மறைத்தது.”

“நீ அப்படி நடுங்குவாயென்று ஒரு பொழுதும் நினைத்திருக்க மாட்டேன்.”

“நீ நினைத்தாலும் நினைக்காவிட்டாலும், நான் நடுங்கினது மெய்தான். இதுவரையிலப்படி நான் நடுங்கினதில்லை.”

“அப்படியானால் நீ வெருண்டு விட்டாயென்று தோன்றுகிறது.”

“நீ சொல்வது சரிதான்.”

“ஜிம், உன்னுடைய வியாசம் வெருளவில்லை. நிரம்பவும் சிறந்ததாயிருந்தது. நீ யெழுதிய வியாசத்தைப்போல் நானுமொரு வியாசமெழுத வல்லமையுள்ளவனா யிருந்தேனானால், யானும் நடுநடுங்க விரும்புவேன். உன்னைப்போல் கந்தையுடுப்புத் தரித்த

ணைப்பின் அவ்வளவு சிறந்த வியாசமெழுதியதைப்பார்க்க எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்,'' என்று வில்லியம் சொன்னான்.

"நீ சொல்வதற் குனக்கு வந்தனம், என்னுடைய வியாசத்தைப்புகழ்வதோடு என்னுடைய உடுப்பை அவமதித்துப்பேசுகிறாய். உடுப்புவாங்குவதைவிட வியாசமெழுதுவதெனக்கெளிது. வியாசமெழுத யோசனையும் பிரயாசமும் வேண்டும்; உடுப்புவாங்கவோ பணம் வேண்டும்,'' என்று ஜேம்ஸ் மறுமொழி கூறினான்.

புத்தகசாலையினின்று ஜேம்ஸ் ஹென்ரி. வி. ரைட் என்பவர் சரித்திரம் (Life of Henry. C. Wright) எடுத்து வாசிக்கத் தொடங்கினான். அதில் ரைட்என்பவர் கல்வி கற்கப்பட்ட பாடெல்லாம் நன்றாய் எழுதப்பட்டிருப்பதை வாசிக்க வாசிக்க ஜேம்ஸுக்கு அவரைப்போல் தானும் செய்யக்கூடுமென்று தோன்றிற்று.

"நாம்இப்பொழுது ஊண்மீது செலவுசெய்வதைவிடக்குறைத்துச் செலவு செய்யக்கூடும். அடுத்த பக்ஷத்தில் ரைட் என்பவர் சாப்பிட்டு வந்தபடி நாமும் செய்ய வேண்டும்,'' என்று ஜேம்ஸ் தன்னுடைய உறவினர்களிடஞ் சொன்னான்.

"அஃதென்ன ?''

"பால்.''

"பால்மட்டுமா?''

"ரொட்டியும் பாலும்.''

"அவர் எவ்வளவு நாள் அப்படிச்சாப்பிட்டு வந்தார்?''

"அவர் படித்த நாள் முழுவதுமப்படிச்செய்தார்.''

"நாமிப்பொழுது செய்வதைவிட சகாயமுள்ளதா?''

"சகாயமிருப்பது மட்டுமன்று; அதைவிடச் சிறந்தது, உடம்புக்கு மிகவும் சௌக்கியமானது.''

"அது எப்படியவருக்குத்தெரிந்தது?''

"அவ்விதம் சாப்பிட்டு வந்த பொழுது அவருக்கு அதற்கு முன்னிருந்ததைவிட தேகம் சௌக்கியமாயும் புத்திதெளிவாயுமிருந்ததாகப் புத்தகத்திலெழுதப்பட்டிருக்கிறது."

"ஆயினும், நமக்கு அது பொருந்தாது," என்று வில்லியம் சொன்னான்.

"நாம் பரீக்ஷித்துப்பார்த்தாலொழிய நமக்குத்தெரியாது; அடுத்த பக்ஷத்தில் அதையுபயோகித்துப் பார்க்கப்போகிறேன். இப்பொழுது இந்தவிஷயத்தில் நமக்குச் செலவு அதிகமாகிறது; அதைக் குறைக்கவேண்டும். நான் பிறரிடத்தில் வாங்கிச்செலவு செய்தாய் விட்டது. இனி நான் என் செலவுக்குச் சம்பாதித்துக்கொள்ளப் போகிறேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"உன்னாலப்படிச் செய்யமுடியாது," என்று ஹென்ரி சொன்னான்.

"அப்படியானால் புடிப்பைவிட்டு விடுகிறேன். அது என்னால் செய்யமுடியும். என்னுடைய தாயாருக்கு வருகிற பணமெல்லாம் எனக்குதவிசெய்யாமலே அவளுக்கு வேண்டியிருக்கும்."

"நீ சொல்வது உன்சிறந்த குணத்தைவிளக்குகிறது. ஆனால் நீ நினைக்கின்றபடி செய்வது முடியாதென்று சீக்கிரத்திலறியப் போகிறாய்."

"இப்பொழுது நான் பணம் சம்பாதிப்பதனால் என் செலவை நான் பார்த்துக்கொள்ளக்கூடும். நான் சொல்லியபடி ரொட்டியும் பாலும் சாப்பிட்டுவந்தால் செலவு சிறிது குறையும்."

"சாப்பிடாமலேயிருந்தால், நீ செலவு குறைத்து விடக்கூடும்," என்று ஹென்ரி பரிகாசமாய்ச்சொன்னான்.

"உன்னிஷ்டப்படி நீ நகைக்கலாம். உடம்பு சௌக்கியமாயிருத்தலுக்கு மாமிசம் வேண்டியதில்லை. அது எனக்கு நன்றாய்த் தெரிகிறது. நல்ல ரொட்டியும் பாலும் சாப்பிடுவதில் மாமிசச்சாப்பாட்டி லிருப்பதைவிடப் புஷ்டியிருக்கிறது,"

"கிடைத்தால் மாமிசஞ்சாப்பிடவிரும்புவேன். குழந்தைகளுக் கல்லவோ பாலூண், நான் குழந்தையல்ல," என்று வில்லியம் சொன்னான்.

"பாலூண் மாணுக்கர்களுக்குத் தகுதியென்று சொல்ல வேண்டும். பால்சாப்பிட்டுவந்தால் ஒருவன் மாமிசஞ்சாப்பிட்டு வருவதிலிருப்பதைவிடச் சிறந்த கல்விமாணுவான்."

"நீ யெழுதியவிபரசம் மாமிசம் சாப்பிட்டெழுதியது. அது நிரம்பவும் சிறந்ததாயிருந்தது. ஆகையால் மாமிசத்தை நிந்திப்பது உனக்குத்தகுதியல்ல," என்று ஹென்றிசொன்னான்.

ஜேம்ஸ்வாசித்த வித்தியாசாலையில் பிள்ளைகள் தர்க்கப்பிரசங்கஞ்செய்யக் கற்றுக்கொள்வதற்கு ஏற்படுத்தப்பட்ட சங்கம் ஒன்று இருந்தது. அந்தச்சங்கத்தில் மாணுக்கர்கள் ஒரு விஷயத்தைப் பற்றி இருதிறத்தாராகநின்று தர்க்கித்துத் தங்களுடைய பேசுந் திறமையையும் தர்க்கிக்கும் திறமையையும் விருத்தி செய்துவந்தனர். ஜேம்ஸ் ஒருவிஷயத்தைப்பற்றிப் பேசுமுன்னர் நன்றாக அவ்விஷயத்தைப்பற்றிப் படித்து யோசித்துக்கொண்டு சங்கத்துக்குப்போவான். பேசும்பொழுது விஷயத்தைக்கேட்போர் நன்றறியும்படி சொற்சுவை பொருட்சுவையுடனெடுத்துச்சொல்வான். அவன் சொல்வதை மாணுக்கரும் வாத்திமாரும் கேட்டு வியந்தனர். பிறகு காங்கிரஸ் (Congress) மகாசபையில்பேசிக் கேட்போரெல்லாம் தாங்கள் கேட்பதுசரியென்று நினைக்கும்விதம் பேசிக் கீர்த்திபெற்றதற்கு அஸ்திவாரம் இச்சங்கத்தில் ஏற்படுத்தப்பட்டதென்று சொல்லலாம். ஜேம்ஸ் பேசுவதைச் சிறுவர் பெரியோர் யாவருங்கேட்க விரும்பினர். அவன் பேசுவதைக் கேட்டவரெல்லோரும் அவன் பிரசித்திபெற்ற சபாபண்டிதனுவானென்று சொன்னார்கள்.

# 17-அத்தியாயம்.

"ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்."

கோடைகாலத்தில் வித்தியாசாலை இரண்டுமாதம் சாத்தப்பட்டது. மாணாக்கரெல்லோரும் அவரவர் ஊர் சென்றார்கள். ஜேம்ஸும் வீடுவந்து சேர்ந்தான். அக்காலத்தில் அவன் தமயன் தாமஸும் வீட்டிலிருந்தான். தாமஸ் தாயாருக்கு ஒரு களஞ்சியங் கட்டிவைக்கத் தீர்மானித்தான். தாமஸ் தான் வீட்டிற்குவந்த சமயங்களில் வேண்டியமரம் வெட்டிச்சேர்த்துக் களஞ்சியத்துக்கு வேண்டிய அளவு வைத்திருந்தான். தம்பியுந் தமயனும் களஞ்சியங்கட்டி முடித்தார்கள்.

களஞ்சியங் கட்டி முடிந்தவுடன் ஜேம்ஸ் பக்கத்திலிருந்த குடியானவர்களிடம் வேலைசெய்து தனக்குவேண்டிய உடுப்பு முதலியவைகள் வாங்குவதற்கும் மற்றுமுள்ளசெலவுக்கும் பணம் சம்பாதித்தான். வேலைசெய்து மிருந்தவேளையில் கணக்குப்போட்டுக்கொண்டும் புத்தகம் வாசித்துக்கொண்டுமிருப்பான். காலத்தை யொருபொழுதும் வீணாய்க்கழித்திலன்.

பள்ளிக்குத்திரும்பிப் போவதற்கு முதல்நாள் தாயார், "குழந்தாய், உனக்குக் கையிலெடுத்துக் கொண்டுபோகப் பணங்கொஞ்சம் வேண்டுமென்று நினைக்கிறேன்," என்று சொன்னாள்.

"அம்மா, என் கையில் கால்டாலரிருக்கிறது, அதுபோதுமானது. செஸ்டரில் தச்சுவேலைசெய்து பணஞ்சம்பாதித்து என் செலவுகளைச் செய்துகொள்வதாக ஏற்பாடு செய்துவந்திருக்கிறேன்."

"நீ சொல்லும்விதம் செய்யக்கூடும். ஆயினும் பக்ஷம் ஆரம்பிக்கும்பொழுது கையில் கொஞ்சம் பணமிருந்தால் சௌகரியமாயிருக்குமென்று எண்ணுகிறேன்."

"முதலில் கையிலொன்றுமில்லாமல்போய் முடிவில் கையில் பணத்துடன் வருவது, கையில் முதலில் பணங் கொண்டுபோய் முடிவில் வெறுங்கையாய் வருவதைவிடச் சிறந்தது," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"அப்படிச்செய்ய உன்னாலாகுமா?" என்று தாயார் வினவினாள்.

"அம்மா, என்னாலாகுமென்றுநினைக்கிறேன். அடுத்த மாரிகாலத்தில் உபாத்தியாயர் வேலை செய்யப்புகின் கையில்கொஞ்சம் பணம் எனக்கு வேண்டுமல்லவா?"

"அப்படி உபாத்தியாயர் வேலை செய்ய உனக்குத்திறமை வந்ததாக நினைக்கிறாயா?"

"அவ்வித மெண்ணுகிறேன். ஈசன் செயலெவ்விதமிருக்குமோ?"

"ஈசனெல்லாம் சரியாய்ச்செய் தருள்வாரென்பதற்கையமில்லை."

வித்தியாசாலைதிறந்தவுடன் ஜேம்ஸ் மேற் சொல்லிய கால் டாலருடன் செஸ்டர் பட்டணம் வந்து சேர்ந்தான்.

ஜேம்ஸ் செஸ்டர் பட்டணத்திற்குச்சென்ற வாரத்தில் ஞாயிற்றுக்கிழமைதினம் தர்மச் செலவுக்காகப் பணம் சேகரிப்பவர் அவனிடம் உண்டியைக் கொண்டுவரவே தன் கையிலிருந்த கால் டாலரை அதில் போட்டுவிட்டான்.

ஜேம்ஸு அவனுடைய வுறவினர்களும் முன் சொல்லப்பட்ட பால் ரொட்டி சாப்பாடு சாப்பிட்டுவந்தார். அதனாலவர்கட்குச் சிறிது பணம் மிகுந்து வந்தது.

"தலைக்கு வாரத்திற்கு 31-செண்டு செலவாகிறது," என ஜேம்ஸ் தன்னுடைய உறவினர் இடம் தாங்கள் ஒரு மாதம் பால் ரொட்டி சாப்பிட்டு வந்த பிறகு சொன்னான்.

"செலவு எவ்வளவு குறைந்ததோ அவ்வளவு பலமுமெனக்குக் குறைந்திருக்கிறது," என்று ஹென்றி சொன்னான். "குறைந்த செலவுள்ளது எப்பொழுதும் மலிவானதென்று சொல்வது பிழை," என்று வில்லியம் சொன்னான்.

"எனக்குக் கொழுத்த சாப்பாடு சாப்பிட்டு வருகிறாற் போற் றோன்றுகிறது. உங்களிருவரையும் ஒரேகாலத்தில் என்னாலடிக்க முடியும்," என்று சிரித்துக்கொண்டு ஜேம்ஸ் சொன்னான்.

"அதைப் பற்றிச்சந்தேகமென்ன? களிமண்ணையும் சாப்பிட்டு நீ தேகபல முள்ளவனாய் வளருவாய். இம்மாதிரி ஒரே விதமாய் உண்ணல் எனக்குப்பிடிக்கவில்லை," என்று ஹென்றி சொன்னான்.

"வேற்றுமையின்றி வாழ்நாள் சுவைப்படாதென்று நினைப்ப வரில் நீயொருவன். எனக்கோ ஒன்றே நன்றாயிருந்தால் போது மானது," என்று ஜேமஸ் சொன்னான்.

இவ்விதமாக மூவரும்பேசி யிறுதியில் வாரத்திற்கு 50-சென்டு செலவுசெய்வதாய் ஏற்பாடு செய்தனர்.

தான் மாரிகாலத்தில் உபாத்தியாயர் வேலைசெய்ய நினைத்த தைப்பற்றி வித்தியாசாலைத் தலைவரிடங் கேட்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தான். அவ்வித்தியாசாலைத் தலைவருக்கு ஜேம்ஸ் மிகவும் ஏழையென்றும், புத்திகூர்மையுள்ளவனென்றும், மேல்வாசிக்கத் தகுந்தபிள்ளையென்றுந் தெரியும். ஆனதுபற்றி யொருநாள் உபாத்தியாயர், "மாரிகாலத்தில் வாத்தியார்வேலைசெய்ய உனக்கு இஷ்டமிருக்கிறதா?" என்று ஜேம்ஸைக்கேட்டார்.

"வேலைகிடைக்குமேல், அவ்விதஞ் செய்யலாமென்று நினைக் கிறேன். எனதுதாயார், யான் மாரிகாலத்தில் வாத்தியார்வேலை புரிந்து பணஞ்சம்பாதித்தால், மேல்கல்விகற்று நான் கல்விமா னாகலாமென்று எப்பொழுதுஞ் சொல்வதுண்டு."

"அது நல்ல ஏற்பாடு; உனதுதாயார் நினைக்கும்வண்ணம் நானும் நினைக்கிறேன். நீ தாயார் வார்த்தையைக் கவனிப்பதா கத்தெரிகிறது. அது எனக்குச் சந்தோஷத்தை யுண்டுபண்ணு

கிறது; மேலும், தாய்சொல் கேட்போர் தரணியாள்வார். அது நிற்க, பள்ளிக்கூடத்தில் பிள்ளைகட்குக் கல்விகற்பித்தல் சிறந்த விஷயம். உனக்கு நன்மையுண்டாவதோடு பிறருக்கும் நன்மையக்காரியத்தாலுண்டாகும்; இம்மண்ணுலகில் நாம் நம்காரியத்தை மட்டும் பார்க்கப் படைக்கப்பட்டோமில்லை. பிறர்க்குதவிசெய்தல் பெரும்பேறு. பிறர்க்குதவி செய்யாமல் சுயநயம் பாராட்டிச் சோம்பித்திரிதல் மனிதருக்குத் தகுதியன்று."

"எனக்கு எளிதில் பள்ளிக்கூடவேலை கிடைக்குமா?"

"அதற்கையமென்ன? வேண்டிய பள்ளிகளிருக்கின்றன. நீ வாத்தியார்வேலை சரியாய்ச் செய்வாயென்பதெனதபிப்பிராயம். எல்லோரு மவ்வேலையைச் சரியாய்ச் செய்வதருமை."

"நீங்கள் ஏனந்தவேலையைச் சரியாய்ச் செய்யக்கூடுமென்றெண்ணுவதற்குக் காரணமென்ன?"

உனக்கு விஷயங்கள் நன்றாய்த்தெரியும். தெரிந்தவிஷயங்களை ஐயந்திரிபறச்சொல்லும் திறமுன்னிடத்திலிருக்கிறது. காரியங்கட்குக் காரணங்களை ளெளிதிலறியும் திறமுன்னிடத்திலுண்டு. சுயமாய் உனக்கு புத்தி கூர்மையிருக்கிறது, பள்ளியிலுள்ள பிள்ளைகளைப் பழக்கியாண்டு கல்வி நீ போதிப்பாய். இக்காரணங்கள்பற்றி நீ சிறந்தவாத்தியாகலாமென நினைக்கலானேன்," என்று வாத்தியார் சொல்லிமுடித்தார்.

அந்தப்பக்ஷத்தில் வித்தியாசாலையில் ஒருவிஷயம் நேர்ந்தது. எக்காலத்திலும் மாணாக்கர்கள் ஒரே விதமாய்த்தானிருந்துவருகிறார்கள். ஆகையால் வாத்தியார்கள் பிள்ளைகள் தவறும்பக்ஷத்தில் தண்டித்துச் சீர்திருத்தவேண்டியவர்களாயிருக்கிறார்கள். வித்தியாசாலைத் தலைவரிந்தவிஷயத்தில் சமர்த்தர். வித்தியார்த்திகளுக்கு வாத்தியாரைக்கண்டால் பயபக்தியுண்டு.

குறும்புள்ளபையனொருவன் செஸ்டர் பட்டணவாசியொருவனைத் தூஷித்துப் பேசிவிட்டான். அந்நகரவாசி வாத்தியாரிடம் விஷயத்தைத் தெரிவித்தான். அவ்விஷயத்தை நன்றாய்விசாரி

த்து. அவ்விதம் பிறர்கடக்காவண்ணம், பிழை செய்தவனைத் தண்டிக்கவேண்டியது வாத்தியார் கடமை.

பெரிய பள்ளிக்கூடங்களில் குற்றஞ்செய்த மாணுக்கன்பக்கம் பல மாணுக்கர்சேர்ந்து நிற்பதுவழக்கம். நியாயம் தவறுமென்றவ் விஷயத்தைச் சிறுவர்கள் கவனிக்கிறார்களில்லை.

மேற்சொல்லிய பிழைசெய்த பிள்ளையின்பெயர் பெல். (Bell)

"பெல் என்பவனைப் பிழைசெய்ததற்காக வாத்தியார் பள்ளியிலிருந்து தள்ளிவிட்டால், நானும் பள்ளியைவிட்டுப்போவேன்," என்று ஒருபையன் சொன்னான்.

"நானும் பள்ளியை விட்டுவிடுவேன்," என்று மற்றொருவன் உரைத்தான்

"நானும் விடுவதுநிச்சயம்," என்று வேறொருவன் மொழிந்தான்.

"என்னையு மழைத்துக்கொண்டுபோ," என்று ஒருபையன் அவர்களோடு சேர்ந்துசொன்னான். இவ்விதமாகப் பிள்ளைகள் பலர்சேர்ந்து பேசிக்கொண்டு பெல் தள்ளப்பட்டால் தாங்களும் விட்டுவிடுவதாக நிச்சயித்தார்கள், அவர்கள் தாங்கள்செய்திருந்த தீர்மானத்தை ஜேம்ஸிடம் சொல்லவந்தார்கள். அவர் சொல்வதைக்கேட்டு, "மற்றொருபிள்ளை பள்ளியிலிருந்து தள்ளப்பட்டால் நான் பள்ளியைவிடுவதற்குக் காரணமென்ன?" என்று ஜேம்ஸ் வினவினான்.

வந்தவர்களுக்குக்காரணமொன்றுஞ்சொல்லமுடியாமலிருக்கும் பொழுது, ஒருவன் "நமக்குண்டாகும் வருத்தத்தைக் காண்பிப்பதற்காக அப்படிச் செய்யவேண்டும்." என்றான்.

"எதைப்பற்றி வருத்தம்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"பெல் என்பவனைப் பள்ளியிலிருந்தனுப்பிவிடுவதைப் பற்றித்தான் வருத்தம்."

"அவனிதுவரையி லனுப்பப்படவில்லை; அவனைத் தள்ளாமலே முடியக்கூடும்."

"நம்முடைய் தோழனொருவன் சங்கடத்திலகப்பட்டுக் கொண்டால் நாமெல்லோரும் பக்கத்திலிருந்துதவிபுரிய வேண்டும்."

"தோழன் தவறினால் கூடவா அப்படிச் செய்யவேண்டும்?"

"வேண்டுமானால் அப்படியும் செய்யவேண்டியது நமது கடமை."

"எனக்கு அப்படித் தோன்றவில்லை. தோழனொருவன் சங்கடத்தில் அடிபடுவானாயின், ஒழுங்காய் அவனுக் குதவிபுரிய முடியுமானால் நாம் செய்யலாம். இல்லாவிடின் நானுதவிசெய்பச் சம்மதியேன்."

"ஒருவன் யோசிக்காமல் தவறு செய்துவிட்டால், நாம் அவனைக் காப்பாற்ற முயலவேண்டும்."

"நீ சொல்லும்விதம் நானும் செய்ய விரும்புவேன். ஆனால் பிழைசெய்தவன் பிழையை யொப்புக்கொண்டு, ஒழுங்கான விதத்தில் உதவிபெற விரும்பவேண்டும்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"அப்படியானால் நாங்கள் செய்ய நினைக்கும் விதத்தை நீ சரியல்லவென்று நினைக்கிறாய்போலிருக்கிறது?" என்று பெல் சினேகிதன் கூறினான்.

"நீங்கள் செய்ய நினைப்பது சரியல்ல. அது என் மனத்துக் கிசையவில்லை. பெல் என்பவன் நிந்தித்த நகரவாசியை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு நம் உபாத்தியாயரிடம் தான்செய்த தவறுக்கு வருத்தப்படுவதாகக்காட்டி யவ்விதம் பிறரை யொருபொழுதும் நிந்திப்பதில்லையென்று சொல்லும்பட்சத்தில், அவனைப்பற்றி நம் உபாத்தியாயரிடத்திலவனை மன்னிக்கும்படி கேட்கத் தயாராயிருப்பேன்," என்று ஜேம்ஸ் சொல்லிமுடித்தான்.

இவ்விதமாகப் பிள்ளைகள் செய்ய நினைத்த கலகம் முடிந்தது. ஜேம்ஸ் தன்னுடைய வபிப்பிராயத்தை யனுசரித்துத் தனக் கொழுங்கென்று தோன்றியவிதம் செய்வான். பிறர் என்ன சொல்லிச்செய்ய முயன்றாலும் ஒழுங்கற்றகாரியம் அவனொரு பொழுதும் செய்யவிரும்பான்.

அந்தப்பட்சத்தில் ஜேம்ஸ் கல்வியிலபிவிர்த்தியடைந்தான். பள்ளியில் எல்லாவிதத்திலும் முதல் மாணுக்கனானன். தச்சு வேலைசெய்து பணம்சம்பாதித்துச் செலவெல்லாம் செய்துகொண்டு வீடுபோகும்போது கையில்நிரம்பப் பணம் கொண்டுபோனன்.

# 18. அத்தியாயம்.

"துன்புறூஉ நீதுவ்வாமையில்லாதும்யார்மாட்டு
மின்புறா உமின்சொலவர்க்கு."

பட்சத்தினிறுதியில் ஜேம்ஸ் வீடுவந்து சேர்ந்தான். மறு நாள் வாத்தியார்வேலை சம்பாதிக்கப் புறப்பட்டான்.

"நீ யெப்பொழுது திரும்பிவருவாய்?" என்று தாயார் கேட்டாள்.

"வேலை கிடைத்தவுடன் வருவேன். வேலை கிடைப்பதரு மையா யிருக்கும்போற் றோன்றுகிறது," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"உனக்கெளிதில் கிடைக்குமென்று நினைக்கிறேன்."

"நானுமப்படி நினைத்தேபோகிறேன், என்றாலியன்றமட்டும் பார்க்கிறேன். நான்வருகிறதற்குப் பல நாட்களாகலாம்."

ஜேம்ஸ் கால்நடையாகப் புறப்பட்டுப்போனான். முதன்முத லில் பத்துமயில் தூரத்திலிருந்த விடத்திற்குப்போய் வேலையகப் படுமா வென்றுகேட்டான்.

"உனக்கு வாத்தியார் வேலைசெய்ய வயதுபோதாது. பள்ளி யில் வாத்தியார் வேலைபுரிய உன்னைப்போலொத்த சிறுபிள்ளையை அமர்த்தமாட்டோம்," என்று பள்ளி அதிகாரிகள் சொன்னார்கள்.

இதைக்கேட்க ஜேம்ஸ் அதைரியமடைந்தான். அடுத்த விடத்தில் ஜேம்ஸ் போய்க்கேட்டபொழுது, "நீ யொருவாரத்திற்கு முன் வந்திருந்தால், உன்னை யமர்த்தியிருப்போம்," என்று அவ்விடத்திலுள்ளவர் சொன்னார்கள்.

வயது போதாதென்று சொல்லாமல் இவ்விதம் அவர்கள் சொன்னது ஜேம்ஸுக்குத் தைரியங்கொடுத்தது.

இவ்விதமாய் ஜேம்ஸ் பலவிடங்களிற் பார்த்தும் வேலையொன்றுங் கிடைக்கவில்லை. இரண்டு நாள் கஷ்டப்பட்டுத் திரிந்து பார்த்து பயனொன்றுமின்றி ஜேம்ஸ் மனத்தளர்ச்சியடைந்து வீடுவந்து சேர்ந்தான்.

வீடுவந்தவுடன் தாயாரிடம் நடந்த விஷயங்களையெல்லாம் நன்றாய்ச் சொல்லிமுடித்தான்.

"ஒருக்கால், ஈசன் உனக்கு நீ தேடிப்போனதைவிடச் சிறந்த காரியம் வைத்திருக்கலாம். ஆகையால் நீ அதைரியப்பட வேண்டாம்," என்று கார்பீல்டு அம்மாள் மைந்தனிடம் சொன்னாள்.

மறுநாட் காலையில் படுக்கைவிட்டெழுந்திருக்கு முன்னர்; சாலையிலிருந்து தாயாரை யொருவன் கூப்பிட்டு, "உங்களுடைய பையன் ஜிம் எங்கேயிருக்கிறான்?" என்று கேட்டான்.

"வீட்டில்தான் இருக்கிறான்; படுக்கையைவிட் டெழுந்திருக்கவில்லை."

"நம்முடைய பள்ளிக்கூடத்தை யவன்வைத்துக் கல்விபோதிக்க விரும்புவானா?"

பள்ளிக்கூடமென்ற வார்த்தை காதில்விழவே ஜேம்ஸ் படுக்கைவிட்டெழுந்து வந்தவன் முன் போய் நின்றான்.

"ஜிம், உனக்கு நம்முடைய பள்ளிக்கூடத்தில் வேலைசெய்யப் பிடிக்குமா?"

"எனக்கு வேலைசெய்ய ஒரு பள்ளிக்கூடம் வேண்டும்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"நம்மூர்ப்பிள்ளைகள் முரட்டுக்கழுதைகள்; அது உனக்குத் தெரியுமல்லவா?"

"நன்றாய்த்தெரியும். அப்பள்ளியில் கல்விபோதிப்பதுசிரமம். நான் பள்ளியை நடத்தமுடியுமென்று நீர் நினைக்கிறீரா? எல்லாப்பிள்ளைகளும் எனக்குத் தெரிந்தவர்கள்."

"உனக்குத் தெரிந்தவர்கள்தான்; மனம்வைத்தால் நீ யெல்லாரையும் சாட்டைவாங்கி விடுவாயென்று மவர்களறிவார். அந்தப்பள்ளியை நன்ருய் நடத்தத்தகுந்தவன் நீயே. இரண்டு மாரிகாலமாயவர்கள் வந்தவாத்தியாரைப் போகும்படியுபத்திரவஞ் செய்து அவர்களைத் துரத்திவிட்டார்கள். இந்த மாரிகாலத்திலாவது யாராவதுஒருவன் பிள்ளைகளையடக்கி வைத்துக்கொண்டிருந்தால்போதுமானது. மாதமொன்றுக்கு சம்பளம் 12-டாலர். சாப்பாடு நாங்கள் போட்டுவிடுவோம. உன்னபிப்பிராயமென்ன?"

ஜேம்ஸ் விடையளிக்குமுன் தாயார், "ஜேம்ஸ் நீர் சொல்வதை யெதிர்பார்க்கவில்லை. ஆகையால் யோசித்துக்கொண்டின்றிரவில் பதில் சொல்லச்சொல்லுகிறேன்," என்று சொன்னுள்.

"எனக்கு அப்படிச் செய்யச் சமமதம்," என்று ஜேம்ஸ் சொன்ஞன்.

"அதுபோதுமானது. நீ தவருமலவ்வேலையை யொப்புக்கொள்ளுவாயென்று நம்புகிறேன்," என்று சொல்லிவிட்டு, வந்தவர் வீடுநோக்கிச் சென்ருர்.

தாயார் சொற்படி ஜேம்ஸ் தன்னுடைய அம்மானிடம்போய் இந்த விஷயத்தைப்பற்றி யவருடைய வபிப்பிராயத்தைக் கேட்டான். அவரும் நன்ருக விஷயத்தைப்பற்றி யோசித்து, ஜேம்ஸ் இந்த வேலையை யொப்புக்கொண்டு சரியாய் நடத்திஞல், அவன் வாத்தியார்வேலைக்குத் தகுந்தவனென்று எல்லாரும் அறியபெயருண்டாகுமென்பதைக்காட்டி, வேலையை யொப்புக்கொண்டு வேலைபுரிவது சரியென்று சொல்லிமுடித்தார். ஜேம்ஸும் அம்மான் வார்த்தைக்கிணங்க வேலையை யொப்புக்கொள்வதாகச் சொல்லி வீடுதிரும்பிஞன்.

ஜேம்ஸ், தான் சொல்லியபடி யன்றையதினம் மாலையில் வேலையைப்பற்றிக் காலையில் பேசவந்தவரிடம் தான் வேலையை யொப்புக்கொள்ளத் தயாராயிருப்பதாகத் தெரிவித்தான். உடனே ஜேம்ஸ் அந்தப்பள்ளிக் கூடத்தில் வாத்தியார் வேலைசெய்யப்போகிறதாக வதந்தியுண்டாயிற்று. சிலர் ஒருவிதம்சொன்ஞர்; பிறர்

மற்றோர்விதம் கூறினர். மாணுக்கருமவ்விதமே பற்பலவிதம் சொன்னர்.

ஜேம்ஸ் வேலையொப்புக்கொண்டான். பிள்ளைகளுடன் இன்சொல்லாடியவர்கடமை யவர்க்குத்தெரியும்விதம் சொன்னன். மாணுக்கரும் ஜேம்ஸ் சொல்வதை நன்குணர்ந்து கல்வி பயிலத் தொடங்கினர். பிள்ளைகளுக்கும் வாத்தியாருக்கும் ஐக்கமேற்பட்டுப் பிள்ளைகள் தங்கள் வேலையைக் கவனிக்க வாரம்பித்தார்கள். வாத்தியார் சொன்மீறி மாணுக்கர்கள் நடவாமல் படிப்பிலமர்ந்து தங்கள் வேலையைப்பார்க்கவே, பள்ளியில் விஷமமும் கலகமும் இல்லாமல் இருந்தன. பள்ளி கலைந்தபின்னர் மாலையிற் பிள்ளைகள் விளையாடும்பொழுது ஜேம்ஸுமவர்களுடன் சேர்ந்து விளையாடி யவர்களை யொழுங்காய் நடக்கச்செய்தான்.

ஜேம்ஸ் ஒவ்வொரு வாரம் ஒவ்வொரு குடும்பத்தில் சாப்பிட்டு வந்தான். சாப்பிடும் வீட்டிலிருந்த மாணுக்கனை ஜேம்ஸ் அவன் வீட்டில் சாப்பிடும்வரையில் சரியாகப்படிப்பிலும் நல்வழியிலும் செலுத்த முயன்று வந்தான். சாப்பிடும் வீட்டிலிருப்போர்க்கும் கதைகள் சரித்திர விஷயங்கள் முதலியவைகளைச் சொல்லியவர் கட்குச் சந்தோஷமுண்டாக்குவான். இவ்விதமாக ஜேம்ஸ் மாணுக்கராலும் அவர்களுடைய பெற்றோர்களாலும் நன்குமதித்துக்கொண்டாடப்பட்டான். ஞாயிற்றுக்கிழமைதினம் ஜேம்ஸ் தாயாருடனிருந்து அந்நாளை மதவிசாரணையிலும் தியானத்திலும் கழிப்பான். இந்த விஷயம் தாயாருக்கு மனக்களிப்புண்டாக்கிற்று. மாரிகாலம் முடிந்து பள்ளிக்கூடம் கலையும்பொழுது பிள்ளைகளும் பெற்றோர் களும் ஜேம்ஸ் நிரம்பவும் சிறந்த உபாத்தியாயரென்றும், அதுவரை யிலவர்களுக்கவ்வளவு மேன்மையுள்ளவுபாத்தியாயர் கிடைத்தாரில் லையென்றும் சொல்லி ஜேம்ஸைப்புகழ்ந்தனர். அடுத்தபக்ஷத்தில் செஸ்டர் வித்யாசாலைக்குத் திரும்பிப்போய்ச் சேர்ந்தான். அந்தப் பக்ஷத்தில் ஜேம்ஸ் தான் தச்சு வேலை செய்த வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு வாசித்தான். வேலை செய்த கூலியில் சாப்பாட்டுச் செலவுபோக பாக்கியிருந்த பணத்தைக்கொண்டு மற்றைய செலவுக்கு பயனாக்கித்தான். அடுத்த மாரிகாலத்தில் ஜேம்ஸ் வாரென்ஸ்வில் Warrensville என்ற விடத்திலிருந்த பள்ளியில் வாத்தியார் வேலை

புரிந்தனன். அந்தப்பள்ளிக்கூடம் எல்லா விதத்திலும் முதலில் ஜேம்ஸ் கல்வி போதித்த பள்ளியைவிடச் சிறந்தது.

அப்பள்ளியில் ஒரு பிள்ளை இரேகாகணித சாஸ்திரம் (Geometry) கற்க விரும்பினான். ஜேம்ஸ் அந்த விஷயம் நன்றாய்க்கற்றவனல்ல. ஆகையாலவனுக்கு நன்றாகத்தெரியாத விஷயமாயிருந்தது. ஆனால் அதை வெளியிடாமல் அவன் ஒரு புத்தகம் வாங்கி இரவில் புத்தகத்தை நன்றாகப்படித்து விஷயத்தை நன்குணர்ந்து, பகலில் பள்ளியில் அப்பிள்ளைக்குச் சொல்லிக்கொடுத்துத்தனக்கு அக்கணித சாஸ்திரம் தெரியாமையை வெளியிடாமலே வேலை செய்து முடித்தான். இவ்விதமாகச்சமயம் நேரிட்டவிடத்துத் தனக்குத்தெரியவில்லையென்று சொல்லாமல் தெரிந்தவன் செய்யும்விதம் தான் இரவில்படித்து, கல்வி கற்றுக்கொடுத்தது சிறந்த விஷயம்.

இந்தப் பள்ளிக்கூடம் விட்டுப்போகும்பொழுதும் ஜேம்ஸ் சிறந்த உபாத்தியாயரென்று பெயரெடுத்து வீடுபோய்ச்சேர்ந்தான்.

# 19-அத்தியாயம்.

"ஒன்றை நினைக்கினது வொழிந்திட் டொன்றாகு
மன்றி யதுவரினும் வந்தெய்து-மொன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கு
மெனையாளு மீசன் செயல்."

ஜேம்ஸ் செஸ்டர். வித்தியாசாலையில் மூன்று வருடங்கள் கழித்தான். அங்கு வாசித்த மூன்றாம் வருடத்தில் நியூ இங்கிலெண்டு மகாவித்தியாசாலை (New England College)யில் வித்தியாப்பட்டம் பெற்ற ஒரு சிறுவனைக் கண்டான். அச்சிறுவன் ஜேம்ஸ் மகாவித்தியாசாலை (College)யில் படித்து வித்தியா பட்டம் பெறக்கூடுமென்று சொன்னான். அது செய்யும் விதமெப்படி யென்று கேட்க அச்சிறுவன் மாரிகாலத்தில் உபாத்தியாயர் வேலை புரிந்து சம்பாதித்தும் மகா வித்தியாசாலையில் கல்வி கற்பதிலமர்ந்திருக்கும்பொழுது ஒழிந்த வேளையில் கிடைத்த வேலையைச் செய்து சம்பாதித்தும், ஏழைகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் திரவிய சகாயமடைந்தும், ஏழைத்தனமுள்ளவன் வித்தியாபாரகனாகக்கூடு மென்று மொழிந்தான். இதைக்கேட்கவே ஜேம்ஸ் தானும் மகா வித்தியாசாலையில் கல்வி கற்கக்கூடுமென மனந்துணிந்தான்.

வித்தியாப்பட்டம்பெற ஒருவன் எவ்வளவுகாலங்கழிக்க வேண்டுமென்று அச்சிறுவனைக்கேட்க, அச்சிறுவன் எட்டு அல்லது ஏழு வருடமாகுமென்று சொன்னான். இதைக்கேட்க ஜேம்ஸ் மகா வித்தியாசாலையில் கல்விகற்று வித்தியாப்பட்டம் பெறத் துணிந்ததாக அச்சிறுவனிடம் சொன்னான்.

"நீ தவறாமல் செய்வாயென்று நம்புகிறேன். அப்படிச் செய்தலுனக் கொருபொழுதும் நஷ்டமுண்டாக்காது. அவ்விதம் செய்தாலுனக்கு எங்கு போனாலும் மரியாதை கிடைக்கும்," என்று அச்சிறுவன் சொல்லி முடித்தான்

மேற்குறித்த பட்சத்தில் ஜேம்ஸ் மதவிஷயத்தில் பிரசங்கஞ் செய்யவாரம்பித்தான். கேட்போர் ஜேம்ஸ் பேசுந்திறத்தையும் பேச்சிலடங்கிய விஷயத்தின் திறத்தையும்கேட்டு ஆனந்தமடைந் தார்கள். இவ்விதம் ஜேம்ஸ் பலர்நடுவில் பயமின்றி பயன்படு விதம் பன்முறைபேசவே, எல்லோரும் அவன் மதகுருவாகப் பிரசங்கஞ்செய்யுந் தொழிலிலமர்ந்து கடவுள்காரியத்தில் காலத் தைக் கழிப்பானென்று சொல்லத்தொடங்கினர். மூன்றாம்வருடம் கோடை விடுமுறைநாளில், ஜேம்ஸும் அவனுடன்கல்விபயின்ற மற்றொருமாணக்கனும் குடியானவர்களிடத்தில் வேலைசெய்து சம் பாதிக்கப்போனார்கள்.

இருவருமொரு குடியானவனிடம்போய் வேலைகேட்டார்கள். அப்பொழுது பின்வரும் சம்பாஷணைநேர்ந்தது.

"உங்களுக்கு விவசாயவேலையைப்பற்றி யென்னதெரியும்?" என்று குடியானவன் கேட்டான்.

"விவசாயவேலை செய்திருக்கிறோம்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"உங்களுக்கு அறுப்பறுக்கத்தெரியுமா?"

"ஐயா, எங்களுக்குத்தெரியும்."

"நன்றாகச் செய்யமுடியுமா?"

"எங்களை வேலைசெய்யச்சொல்லி நாங்கள் செய்கிற விதத் தைப் பார்த்து நீரறிந்துகொள்ளலாம்."

"என்னசம்பளம் நீங்கள் கேட்கிறீர்கள்?"

"உமக்கு நியாயமெனத் தோன்றுவ தெங்களுக்குப் போது மானது."

"நீங்கள் சொல்வதுசரி; எவ்விடத்திலிருந்து நீங்கள் வந்தி ருக்கிறீர்கள்?"

ஜேம்ஸ் தாங்களிருந்துவந்த ஊரும் தாங்கள் கல்விகற்க முய ன்ற விதத்தையும் அவனிடத்திலுரைத்தான்.

அதைக்கேட்டு, "நீங்கள் ஊக்கமுள்ளபிள்ளைகள். நீங்கள் வேலைசெய்வதென்மனதுக் கிசைந்தகாரியம்," என்று குடியானவன் மொழிந்தான்.

அவர்களை வயலுக்கு அழைத்துக்கொண்டுபோய், அவர்கள் கையிலரிவாளைக்கொடுத்து அங்கு அறுப்புவேலை செய்துகொண்டிருந்த மூன்று மனிதர்களைநோக்கி, "இதோ இரண்டு பிள்ளைகள் உங்களுடன் அறுப்பறுத்துதவிசெய்ய வந்திருக்கிறார்கள்," என்று குடியானவன்சொன்னான்.

சிறுவர்களிருவரும் ஒருவருக்கொருவர் கண்ணால் சாடை காட்டிக்கொண்டு அறுப்புவேலையிலமர்ந்திருந்த மூன்று மனிதர்களைவிடச் சிறந்த வேலை செய்யத் தொடங்கினார்கள். ஒருமணி காலமிவ்விதம் சென்றது. குடியானவனுமங்கிருந்து பார்த்துக் கொண்டிருந்தான். அங்கு வேலைசெய்த மனிதர்களை நோக்கியவர்கள் செய்தவேலை பிள்ளைகள் செய்த வேலையைவிடத் தாழ்ந்ததென்று சொல்லியவர்களைக் கண்டித்தான். அவர்கள் மறுமொழியொன்றுங்கூறாமல் வேலையைக் கவனித்துப் பார்த்தார்கள். சம்பளம் பிள்ளைகளுக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டிய தருணத்தில் குடியானவன், "பிள்ளைகாள், உங்களுக்குச் சம்பளம் என்ன போடவேண்டும்?" என்று சொன்னான்.

"உமக்குச் சரியென்று தோன்றுகிறவிதம் செய்யலாம்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"வயது முதிர்ந்தவர் சம்பளம் உங்களுக்குப் போடுவது நியாயமா?"

"வயது முதிர்ந்தவனவ்வளவு பிள்ளைகளும் செய்தால், வித்தியாசம் என்ன?"

"பெரியவர்களுக்குச் சம்பளமதிகமும் சிறுவர்களுக்குச் சம்பளங் குறைவாகவு மேற்பட்டிருக்கிறது."

"நீர் சொன்னவிதம் நாங்கள் பெரியவர்களைவிட வதிகவேலை செய்திருந்தால், சம்பளமேன்குறைச்சலாகப் போடவேண்டும்?

வேலைக்குத்தகுந்தகூலி என்பது உலகப்பிரசித்திபெற்ற பழமொழி உமக்கு நன்குதெரியக்கூடும்,'' என்று ஜேம்ஸ் மொழிந்தான்.

ஜேம்ஸ் சொன்னதைத் தடுத்துச்சொல்லக் குடியானவனுக்கு முடியாமல், பெரியவர் சம்பளம்பிள்ளைகளுக்குங் கொடுத்தான். கொடுத்தபொழுது, “பிள்ளைகாள், இதுவரையிலும் சிறுவர்களுக்கிவ்விதம் பெரியவர் சம்பளம் நான் கொடுத்தேனில்லை. அப்படிச் சம்பளம் வாங்கினவர்கள் நீங்கள் முதல் சிறுவர்கள்.''

“எங்களைப்போல் செய்பவர் இனிமேல் இல்லாமல் போக மாட்டார்களென்று நான் நம்புகிறேன்,'' என்று ஜேம்ஸ் விடையளித்தான்.

“நீ அறுப்புவேலை செய்ததுபோல் நன்றாகப் பிரசங்கம் செய்யும்பொழுது நான் வந்துகேட்க விரும்புவேன்,'' என்று அந்தக் குடியானவன் சொன்னான்.

அவ்விருவரும் குடியானவனைவிட்டுத் திரும்பிப் போகும்பொழுது, “என்னைப் பார்த்தவரெல்லாம் நானொரு மதாபிவிருத்தி செய்வதற்குப் பிரசங்கஞ் செய்பவனாகப்போகிறேன் என்று சொல்லுகிறார்கள் அதற்குக் காரணம் விளங்கவில்லை,'' என்று தன்னுடைய தோழனிடத்தில் சொன்னான்.

“மற்றையவேலையைவிட அந்தவேலைக்கு நீ தகுதியுள்ளவனாயிருக்கலாமென்று நினைக்கிறேன். நீ எந்தவேலை செய்யப்போகிறாயென்று ஒருபொழுதுஞ்சொல்லி நான் கேட்டதில்லை,'' என்று தோழன் மொழிந்தான்.

“நீயுங்கேட்க இடமில்லை. மற்றொருவரும் கேட்டாரில்லை. அதற்குச் சமயம்வரும்பொழுது சிறந்ததாகத்தோன்றுவதை நான் எடுத்துக்கொள்வேன். எனக்கு மதாபிவிருத்திசெய்யப் பிரசங்கம் செய்யப்பிடிக்கும்; உபாத்தியாயர்வேலை செய்யவும் பிடிக்கும். ஒருக்கால் வக்கீல்வேலை பிடித்தாலும் பிடிக்கலாம். ஆனால் ஒருநாளும் ஒருவைத்தியன் வேலைசெய்ய நான் விரும்பேன்,'' என்று ஜேம்ஸ் சொன்னான்.

அக்காலத்தில் அடிமை செய்தலைத் தள்ளவேண்டுமென்ற அபிப்பிராயம் நாடுமுழுவதும் பரவியிருந்தது. பலர் அது கூடா தென்று சொன்னார்கள். ஆகையால் இருதிறத்தாருக்கும் வாக்கு வாதம் நடந்துகொண்டிருந்தது. இந்த விஷயத்தைப்பற்றி எவ் விடத்திலும் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தார்கள். ஜேம்ஸ் வாசிக்கும் வித்தியாசாலைச் சங்கத்திலும இந்த விஷயம் தர்க்கிக்கப் பட்டது. ஜேம்ஸ் அடிமைசெய்தல் நியாயத்துக்கு விரோதமென் றுணர்ந்து அதைப்பற்றி நன்றாகப்படித்து நன்குயோசித்துச் சங் கத்திற்கு வந்தான். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட ஜனங்கள் தங் களைப்போல் சிருஷ்டிக்கப்பட்டுள்ள ஜனங்களை அடிமைசெய்து இரக்கமன்றி வருத்துவது அநியாயமென்றும், மனிதர் பிறர் அவர்களிடத்தில் எவ்விதம் நடக்க வேண்டுமென்று விரும்புகிறார் களோ அவ்விதமே அவர்களும் பிறரிடத்தில் நடக்கவேண்டுமென்ற பொற் பிரமாணத்தை மறக்கக்கூடாதென்றும், ஒழுங்காக நடந்தா லொருபொழுதும் குறையுண்டாகாதென்றும், ஒழுங்காக நடக்க ஒருபொழுதும்ஒருவரும்பயப்படவேண்டியதில்லையென்றும், தனக் குச் சரியென்று தோன்றினவற்றையெல்லாம் கேட்போர் மனத் தைக் கவரும்படி எல்லோரும் ஆச்சரியப்படும்விதம் பேசினான்.

அந்த வருடத்தில் இரண்டாம் பட்சத்தில் அப்பள்ளிக்கூடத் திற்கு லுக்ரீஷியா ருடால்ப் (Lucretia Rudolph) என்ற பெய ருள்ள ஒரு பெண் கல்விகற்கவந்தாள். அவள் மிகப் புத்திகூர்மை யுள்ளவள். அதைக்கண்டு ஜேம்ஸ் அவளிடத்தில் கல்விகற்கும் மற்றைய பெண்களைவிட அதிகமரியாதையும் அன்பும்காட்டி நடந் தான். இருவரும் படிப்பில் சிறந்தவர்கள். ஆனதுபற்றி யவர்க ளடிக்கடி சேர்ந்து வாசிப்பார்கள். அப்பொழுது ஒருவருக்கொரு வருதவி செய்துகொண்டு அந்தப்பட்சத்தைக் கழித்தனர். பட்சத் தினிறுதியில் ஜேம்ஸ் தன் வீட்டுக்குப்போனான். அந்தப்பெண் ணும் தன் வீட்டைநோக்கிச் சென்றனள். இவர்களிருவரும் பிறகு சந்திக்கும்படிநேரிடும். ஆனதுபற்றி இந்தவிஷயத்தை இவ் விடத்தில் சொல்லும்படி நேர்ந்தது.

மகாவித்தியாசாலையில் கல்விகற்கத் தீர்மானம்செய்தது முதற் கொண்டு ஜேம்ஸ் லாடின் (Latin) கிரீக்கு (Greek) பாஷைகளைக்

ஏற்கத் தொடங்கினான். ஒழிந்த வேளைகளில் ஜேம்ஸ் மேற்சொல்லிய பாஷைகளைக் கற்றுக்கொண்டுவந்தான். அப்பாஷைகளில் அபிவிருத்தியடைந்தான். அந்தப்பட்சம் முடிவதற்குமுன் ஹைராம் (Hiram) என்னுமிடத்தில் ஏற்படுத்தப்பட்ட வித்தியாசாலையில் படித்துக்கொண்டிருந்த சிறுவனொருவனை ஜேம்ஸ் சந்தித்தான்.

மகாவித்தியாசாலையில் படிக்க விரும்பும் ஏழையான பிள்ளைகளுக்குக் கல்விபோதித்து மகாவித்தியாசாலையில் சேரத்தகுந்த கல்வி அந்த ஹைராம் வித்தியாசாலையில் கற்றுக்கொடுப்பதாக அச்சிறுவன் சொன்னான்.

அச்சிறுவனவ்விதம்தான் ஹைராம் வித்தியாசாலையில் வாசித்துக்கொண்டிருந்தானென்றும், அவனுடைய உபாத்தியாயர்களெல்லோரும் கல்வியில்சிறந்தவர்களென்றும் ஜேம்ஸனும் அவ்விடத்தில் மகாவித்தியாசாலைப் படிப்புத் தயார்செய்யலாமென்றும் சொன்னான். அதைக்கேட்டு ஜேம்ஸ் தானுமங்குபோய் வாசிக்க உடன்பட்டான்.

இவ்விதத்தில் ஜேம்ஸ் ஒரேபட்சத்தில் இருவரைச் சந்தித்தனன். அவர்களிலொருவன் ஜேம்ஸை மகாவித்தியாசாலையில் போய்க் கற்கும்படித் தீர்மானம் செய்யச் செய்தான்; மற்றவன் அதற்குதவியாக அவனை ஹைராம் வித்தியாசாலைக்குப் போகச் செய்தனன். இப்படி நேர்ந்தது கடவுள் செயலென்றே கார்பீல்டு அம்மாள் சொல்லுவாள். ஜேம்ஸனும் அவ்விதந்தான் எண்ணினான்.

அந்த வருஷம் ஜேம்ஸ் செஸ்டர் வித்தியாசாலையைவிட்டு அடுத்த வருஷத்தில் ஹைராம் வித்தியாசாலைக்குப் போகும்படி நேர்ந்தது. அவ்வித மவ்வித்தியாசாலையைவிட்டு நீங்குமுன்னர், 1850-ஆ நவம்பர் மாதத்தில் ஒரு பிரசங்கம் செய்தான். அதைக் கேட்டவரெல்லோரும் தாங்கள் கேட்டதைவியந்து ஜேம்ஸ்கல்வித் தேர்ச்சியடைந்த புத்திகூர்மையுள்ள கல்விமானென்று அவனைப் புகழ்ந்தனர்.

ஜேம்ஸ் வீடுவந்தவுடன் தாயாரிடத்தில் தான் மகாவித்தியாசாலைக்குப் படிக்கப்போகத் தீர்மானித்திருப்பதையும், அப்படித்

நிர்மானித்ததற்குண்டான காரணங்களையும் சொன்னான். அதைக் கேட்டதாயார் சந்தோஷித்து அவன் சொல்லும்விதம் செய்தல் சரியென்று மொழிந்தனள்.

பிறகு தாயாரும் பிள்ளையும் மஸ்கிங்கம் (Muskingum) ஜில்லாவிலிருந்த தங்களுடைய உறவினர்களைப் பார்க்கப் போனார்கள். போகும்பொழுது இருப்புப்பாதைமீது செல்லும் புகைவண்டியா லிழுக்கப்பட்ட வண்டித்தொடரில் பிரயாணம் அவர்கள் செய்தார்கள். அப்பொழுதுதான் ஜேம்ஸ் முதன் முதல் இருப்புப் பாதையைப் பார்த்தான். அது மனிதரின் புத்தி கூர்மையாலும் ஊக்கத்தினாலும் செய்து முடிக்கக்கூடியதை நன்கு விளங்கச் செய்தது.

கொலம்பஸ் (Columbus) என்னுமிடத்திலிறங்கியவர்கள் தங்களுடைய உறவினர்களிருந்த இடத்திற்கு நாட்டுவண்டியில் போக வேண்டியதாயிருந்தது. மேற்சொல்லிய கொலம்பஸ் என்னுமிடத்தில் அந்நாட்டின் சட்ட நிரூபண சபாமண்டபம் கட்டப்பட்டிருந்தது. அச்சபாமண்டபத்தில் சட்ட நிரூபணசபையார் கூடித் தங்கள் வேலையிலமர்ந்திருந்தனர். ஜேம்ஸ் அந்தக் கட்டடத்தைப்பார்த்து வியப்படைந்தான்; சட்ட நிரூபண சபையார்கூடி வேலை செய்வதைப்பார்த்துச் சட்ட மேற்படுத்தும் விதமெப்படியென்றுணர்ந்தான்.

போகும் வழியிலிருந்த மற்றுமுள்ள காட்சிகளையும் பார்த்து அவைகளைப்பற்றித் தாயாரும் பிள்ளையும் உரையாடிக்கொண்டு தாங்கள் போய்ச்சேரவேண்டிய இடத்தைச்சேர்ந்தனர். அவ்விடம் சென்று சிலநாட் செல்லுமுன்னர், ஜேம்ஸ் அவ்விடத்திற் கருகாமையிலிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் வாத்தியார் வேலை செய்யத்தொடங்கினான். பிள்ளைகளும் பெற்றோர்களும் மனங்களிக்கும்விதம் வேலைசெய்து அவ்விடத்தை விட்டுத் திரும்பி வீட்டுக்குப் புறப்பட்டபொழுது கையில் பணமும் அவர்களுடைய விசுவாசமும் பெற்றுத் தாயாரும் பிள்ளையும் வீடுவந்து சேர்ந்தனர்.

## 20- அத்தியாயம்.

"செய்வன திருந்தச்செய்."

ஜேம்ஸ் வீடுவந்து சேர்ந்த பிறகு ஹைராம் (Hiram) வித்தியாசாலை திறக்கச் சிலவாரமிருந்தமையால், அப்பக்கத்திலகப்படக்கூடிய வேலையைச்செய்து பணம் சம்பாதித்தான். அவ்வித்தியாசாலைக்குப் போகும்வரையில் வேலைபகப் படவே, கிடைத்த வேலையைச் செய்து காலத்தை ஜேம்ஸ் பயனின்றிக் கழித்தானில்லை.

1851-ஆம் ஆகஸ்டு மாதக்கடைசியில் ஜேம்ஸ் ஹைராம் என்னுமிடத்திற்குச் சென்றான் உடனே வித்தியாசாலைக்குப் போனான். அப்பொழுது அவ்வித்தியாசாலையதிகாரிகள் வித்தியா சாலைத்தலைவர் சேர்ந்து வித்தியாசாலை விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அங்கிருந்த வேலைக்காரனொருவனிடம் தான் வித்தியாசாலை யதிகாரிகளையாவது, தலைவரையாவது பார்க்கவேண்டுமென்று ஜேம்ஸ் சொன்னான்.

வேலைக்காரன் போயவர்களிடம் சொல்லவே, அவர்கள் ஜேம்ஸை வரும்படி சொன்னார்கள்.

ஜேம்ஸ் வணக்கத்துடன் அவர்கள் முன்போய், "கனவான்களே, யான் கல்வி கற்க விரும்பி யிங்கு வந்திருக்கிறேன். ஆகை யால் உங்களைப்பார்க்க வந்தேன்," என்று சொன்னான்.

"சரி; இந்த இடம் கல்வி கற்கத்தகுந்தவிடம் தான். நீ யெவ்விடமிருந்து வந்திருக்கிறாய்?" என்று ஒருவர் கேட்டார்.

"எனது ஊர் ஆரெஞ்சு (Orange,) எனது பெயர் ஜேம்ஸ் அப்ரஹாம் கார்பீல்டு. எனக்குத் தந்தையில்லை; நான் குழந்தை யாயிருந்தபொழுது அவர் பரலோகஞ்சென்றார். என்னுடைய தாயார் எலிஸா கார்பீல்டு அம்மாள்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"இங்கு கற்கக்கூடிய கல்வி கற்கவந்தாய் போலும்?"

"ஐயா, நீங்கள் சொல்லும்விதம் எண்ணித்தான் வந்தேன்: ஆனால் என்செலவை யான் சம்பாதித்துச் செய்ய வேண்டியதா யிருக்கிறது."

"அப்படியானால் நீ ஏழையா?"

"ஐயா, யான் ஏழைதான். ஆனால் வேலைசெய்து செலவு செய்ய என்னால் முடியும். ஒருக்கால் வித்தியாசாலையில் மணி யடிக்கும் வேலையும் தரையைப்பெருக்கிச்சுத்தமாய் வைக்கும வேலையும் செய்து எனது செலவினொரு பகுதியைத்தீர்த்துக் கொள்ளலாமென்றெண்ணி வந்தேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"நீ பள்ளிக்கூடத்தில் எவ்வளவுபடித்திருக்கிறாய்?"

"செஸ்டர் வித்தியாசாலையில் மூன்று வருஷம் வாசித்து மாரிகாலங்களில் வாத்தியார் வேலை செய்திருக்கிறேன்."

"அவ்விதமிருக்கும் பக்ஷத்தில், நீ கல்வியில் மிகவும் தேர்ச்சி யடைந்திருக்கக்கூடும்."

"அதிகத்தேர்ச்சி யடைந்திருப்பதாகச் சொல்வதற்கிடமில்லை. லாடின் கிரீக்கு பாஷைகள் கற்கத் தொடங்கியிருக்கிறேன்."

"அப்படியானால் மகாவித்தியாசாலையில் போய்ப் படிக்க விரும்புகிறாயா?"

"அதற்காகத்தான் நான் முயற்சிசெய்கிறேன்."

இவ்விதம் ஜேம்ஸ் சொல்வதைக்கேட்கவே வித்தியாசாலை யதிகாரிகள் அவனை யமர்த்தலாமெனத் தீர்மானித்தார்கள். அப்பொழுது அவர்களிலொருவர், "யெங்களுக்குப் பிடித்தவிதம் தரையைப்பெருக்கி மணியையடிப்பாயென்று நீ சொல்லக்கூடுமா?" என்று ஜேம்ஸைக் கேட்டார்.

"நீங்கள் அந்த வேலையை யெனக்குக்கொடுத்து இரண்டு வாரம் நான் செய்யும் விதத்தைப் பாருங்கள். நான் வேலை செய்

வது உங்களுக்குப் பிடிக்காவிட்டால் நான் ஒன்றும் சொல்லாமல் வேலையைவிட்டு நீங்கிவிடுகிறேன்,'' என்று ஜேம்ஸ் விடையளித்தான்.

ஜேம்ஸ் சொன்னது சரியாகத்தோன்றவே, அவர்கள் அவனை அந்த வேலைசெய்ய அமர்த்தினார்கள்.

ஹைராம் என்னுமிடம் ஒரு சிறு பட்டணம். அவ்விடத்தில் மேற்சொல்லிய வித்தியாசாலை ஜேம்ஸ் அவ்விடம் வருவதற்கு இரண்டு பக்ஷத்திற்குமுன் ஏற்படுத்தப்பட்டது. ஜேம்ஸ் வந்தபொழுது அவ்விடத்தில் வாசித்துக்கொண்டிருந்தவர்களெல்லோரும் அவனுக்குமேல் கல்வியில் சிறந்தவர்களாயிருந்தார்களில்லை. சீக்கிரத்தில் ஜேம்ஸ் எல்லோரையும்விடத் திறமையிலும் கல்வியிலும் சிறப்புள்ளவனென்பது தெரியலாயிற்று.

வித்தியாசாலைக்குப் போனவுடன் ஜேம்ஸ் வித்தியாசாலைத் தலைவரைக்கண்டு தான் வாசிக்கவேண்டிய விஷயத்தைப்பற்றி அவரைக் கேட்டான்.

அவர் ஜேம்ஸ் அதிக ஊக்கத்துடன் கேட்பதைப்பார்த்து, "நீ இப்பொழுது தொடங்கியிருக்கும் விஷயங்களைக் கற்றுக்கொண்டிரு. சமயம் உண்டாகும்பொழுது வாசிக்கவேண்டிய மற்றைய விஷயங்களை யெடுத்துச் சொல்லுகிறேன்,'' என்று சொன்னார்.

"வாசிப்பதோடுகூட, வாசிக்கும் நேரம் ஒழிந்த வேளையில் வேலைசெய்து செலவுக்குப்பணம் சம்பாதிக்கவேண்டியவனாயிருக்கிறேன்,'' என்று ஜேம்ஸ் சொன்னான்.

"உனக்கு ஏதாவது வேலையகப்படும் வழியிருக்கிறதா?''

"இங்கு இருக்கும் தச்சனைப் பார்த்தேன். அவர் எனக்கு வேலை கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்.''

"அது உன்னதிர்ஷ்டந்தான். என்னாலியன்றமட்டு முனக்குதவிசெய்யத் தயாராயிருக்கிறேன். நீ நன்றாகப் படிக்கவேண்டும். கடவுள் உதவிசெய்வார்,'' என்று வித்தியாசாலைத் தலைவர் சொன்னார்.

"ஐயா, உங்களன்பையான் ஒருபொழுதும் மறவேன்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"ஜேம்ஸும் வேறு நான்கு மாணக்கரும் ஒரு அறையில் வாசிக்கத் தொடங்கினர். ஐந்து பிள்ளைகளொரு அறையிலிருப்பது சௌகரியமானதல்ல. ஆனால் பணச்செலவைக் குறைக்க வேண்டியிருந்ததால் அவர்களவ்விதம் செய்தனர். மணியடிக்கும் வேலை யொப்புக்கொண்டபடியால் ஜேம்ஸ் அதிகாலையில் எழுந்திருக்க வேண்டியதாயிருந்தது. பெருக்கும் வேலை செய்வதற்கும் வைகறைத்துயிலெழுந்து விரைந்து வேலை புரிய வேண்டியதாயிருந்தது. மணியடிக்கும் பிள்ளை ஏற்பட்ட சமயத்தில், ஒரு நிமிஷம் முந்தியேனும் ஒரு நிமிஷம் பிந்தியேனுமில்லாமல், சரியாக அடிக்கவேண்டும். அப்படிச் செய்தல் ஜேம்ஸுக்கு வருத்தமொன்றுமில்லை. செய்யவேண்டிய காரியத்தைச் செய்யவேண்டிய காலத்தில் செய்வது ஜேம்ஸினது சுபாவம். "செய்வன திருந்தச் செய்" என்று சொல்வதை அவன் நன்றாயறிந்து அவ்விதம் நடந்துகொண்டு வந்தவனானபடியால் மணியடிக்கும் வேலையும் பெருக்கும் வேலையும் தனக்கு வேலை கொடுத்தவர்கள் மனங்களிக்கும் விதம் சரியாகச் செய்தான்.

அவனுடன் வாசித்துக்கொண்டிருந்த பையன் "ஜேம்ஸ், நீ பாடம் சொல்லும் விதம்? நன்றாகப் பெருக்கும் வேலையும்போல செய்கிறாய்," என்று சொன்னான்

"நான் ஏனப்படிச் செய்யாமலிருக்கவேண்டும்?" என்று ஜேம்ஸ் கேட்டான்.

"சிலர் முக்கியமான காரியங்களை நன்றாகவும், மற்றைய காரியங்களைக் குறைவாகவும் செய்கிறார்கள். பெருக்குவதைவிடப் பாடம் முக்கியமானது."

"ஒவ்வொன்றும் முக்கியமானதுதான். பாடம் எவ்வளவு முக்கியமோ, பெருக்குவது மவ்வளவு முக்கியம். பாடத்தை நன்றாகச் செய்வதுபோல பெருக்கும் வேலையையும் நன்றாகப் பார்க்க வேண்டுமென்பதை நீ மறப்பது பிழை," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"நீ சொல்வது சரிதான். நான் சொன்னது சரியல்ல."

"பெருக்கும் வேலை சரியாகச் செய்யாத பிள்ளை படிக்கும் வேலை நன்றாகச் செய்யமாட்டான். ஆனால் அவ்விதமில்லாமலிருப்பவர் சிறுபான்மையோரிருக்கலாம். பெரும்பான்மையோர் நான் சொல்லும் விதந்தானிருப்பார்."

"நீ சொல்வது சரி; அனேகர் சில விஷயங்களில்மேலெழுந்தவாருகச் செய்து, மற்றைய விஷயங்களில் நன்ருக ஒன்றும் விடாமல் செய்கிருர்கள்."

"அது உண்மையாயிருக்கலாம். அனேகர் தாங்கள் செய்யும் விஷயங்களின் பலனடையாமற் போவதற்கொரு காரணம். "செய்வன திருந்தச் செய்ய" வேண்டுமென்பதை யொருவரும் மறக்கக்கூடாது."

"அக்காரணம்பற்றித்தானே நீ படிப்பதுபோல் நன்ருகப் பெருக்கும் வேலையையும் செய்கிருய்?"

"அதற்கையமென்ன? ஒன்றைச் செய்யும் விதம் மற்றொன்றை யொருவன் ஏன் செய்யக்கூடாது? அரைகுறையாக வேலை செய்வது நன்ருகச் செய்வதைவிடக் கடினம். பாடமரை குறையாகச் சொல்லுவது மிகக் கஷ்டமென்பது நானறிவேன்; பிழையின்றி நன்ருகச் சொல்லுவது எளிது."

"நீ சொல்லுவது நானுமறிந்தேன். அரைகுறையாகச் சொல்லும் பாடம் மனத்துக்குக் கஷ்டமுண்டுபண்ணுகிறது."

"பெருக்கும் வேலையினு மவ்விதமே. அரைகுறையாகப் பெருக்கப்பட்ட விடம் எப்பொழுதும கண்ணுக்குப் புண்ணாகவிருக்கும்."

மேற்சொல்லிய விதம் ஜேம்ஸுக்கும் அவன் சினேகிதனுக்கும் நேர்ந்த சம்பாஷணையிலிருந்து ஜேம்ஸ் செய்த வேலையெல்லாம் குறைவொன்றுமில்லாமல் செய்யப்பட்டது. என அறியலாம். வித்தியாசாலையதிகாரிகள் ஜேம்ஸ் வேலையை யொழுங்குபடச் செய்வதைப்பார்த்து, அந்த மணியடித்துப் பெருக்கும் வேலையிலமர்த்தினர்கள்.

அந்த வேலை மிகவும் கஷ்டமான வேலையென்று வேலை செய்தவர்களெல்லோரும் சொல்லியிருக்கிறார்கள். ஜேம்ஸ் அந்த வேலை செய்வதில் வருத்தப்பட்டதாகக் காணப்படவில்லை. வித்தியாசாலையில் படித்தவர்களைக் காணும்பொழுதெல்லாம் சாந்த குணத்துடன் அவருடன் இன்சொல்லாடி, புத்தி கூர்மையுடன் கேட்போர் மனங்களிக்கப்பேசி, யாவருமவனிடமன்பு வைத்து நடக்குமாறு செய்தான். செய்த வேலை யீனமானதாயிருந்தும் அவ்வேலையைச்செய்த ஜேம்ஸ் எல்லோராலும் நன்குமதித்து அன்பு பாராட்டிக்கொண்டாடப்பட்டான். அந்த வேலையைச் செய்ய நினைக்காதவர்கள், ஜேம்ஸ் செய்து அந்த வேலைக்கு மரியாதையுண்டாக்கிய பிறகு, அவ்வேலையைச் செய்ய விருப்பங்கொண்டார்கள். அவசியமான உபயோகமுள்ள வேலை செய்வது மரியாதைக் கொடுக்குமென்பதை ஜேம்ஸ் பிறரறியும்படி நடந்து காட்டினான். இந்தவிஷயத்தைச் சிறுவரொருபொழுதும் மறக்காதிருக்கக்கடவர்.

இவ்வித்தியாசாலையிலிருந்த புத்தகசாலையில் 2000-புத்தகங்களிருந்தன. ஜேம்ஸ் வேலைசெய்து மிகுந்தவேளையில் புத்தகம் வாசிப்பதிலமர்ந்து காலத்தை வீணாகக்கழித்திலன். வாசித்தவிஷயம் ஒருபொழுதும் மறவான்.

ஒரு புத்தகம் வாசிக்கத்தொடங்கினால், அப்புத்தகத்திலுள்ள முக்கியமான விஷயங்களைக் குறிப்புப்புத்தகத்தில் எழுதிவைத்துக்கொண்டு பிறகு வேண்டியகாலங்களில் அவ்விஷயங்களைப்பார்த்து உபயோகப்படுத்துவான். இவ்விதம் செய்வது படிப்போர்களுக்கு விஷயங்கள் நன்றாகத்தெரிவதோடுகூட அவ்விஷயங்கள் தேவையானபொழுது சிரமமன்றி யவைகளைப்பற்றிச் சொல்லும் சக்தியுண்டாகிறது. இவ்விஷயம் எப்படிப்புக்கும் பொருந்தும்.

முதல் வருடக்கடைசியில் நேர்ந்தவிஷயத்தைக்கூறி இவ்வத்தியாயத்தை முடிப்போம்.

பந்துவிளையாட்டென்றால் ஜேம்ஸுக்குப் பிடிக்கும். ஒருநாள் பந்துவிளையாடப் போனபொழுது, அவன் கிட்டியை

யெடுத்து விளையாடப்போனான். அப்பொழுது அனேக பொடிப் பிள்ளைகளிவர்களுடன் விளையாட ஆசையுள்ளவர்கள்போல் பார்த்து நின்றார்கள்.

"அதோ நிற்கிற சிறுவர்கள் விளையாட்டில் சேரவில்லையா?" என்று ஜேம்ஸ் விளையாடுகிறவர்களைக் கேட்டான்.

"அப்பொடிப்பிள்ளைகளா? அவர்களை நம்முடைய விளையாட்டில் சேர்ப்பது சரிப்படாது. அவர்கள் வந்தால் விளையாட்டைக் கெடுத்துவிடுவார்கள்," என்று ஒருவன் சொன்னான்.

"நம்மைப்போல் அவர்களும் விளையாட ஆசைப்படுவார்கள். அவர்களையும் விளையாடச் சேர்த்துக்கொள்வோம்," என்று ஜேம்ஸ் சொன்னான்.

"அது சரிப்படாது. விளையாட்டு கெட்டுப்போம். அவர்கள் வரக்கூடாது," என்று ஒருவன் சொன்னான்.

"அவர்கள் வரக்கூடாவிட்டால், நானும் வரச்சம்மதியேன்," என்று ஜேம்ஸ் சொல்லிக் கிட்டியைக் கீழேயெறிந்தான்.

"சரி, அவர்களும்வந்து விளையாடுவதற்கு நாம் தடைசொல்ல வேண்டாம்," என்று மற்றொருவன் சொன்னான்.

"நாம் அதை யெல்லோருமனுபவிக்கும்படி நடத்துவோம். விளையாட்டை விதிப்படி நடத்தாவிட்டாலும், எல்லோரும் சந்தோஷமடைவார்கள். அதற்கல்லவோ விளையாட்டென்பது?" என்று ஜேம்ஸ் சொல்லி சிறுவர்களையும் கூப்பிட்டு விளையாடச் சொன்னான்.

மேற்சொல்லிய விஷயத்திலிருந்து ஜேம்ஸினது சுபாவம் நன்கு விளங்குகிறது. எல்லாவிஷயங்களிலும் சுயநயம் பாராட்டாமல் தனக்குச் சரியெனத்தோன்றினதைப் பயமின்றிச் சரியென்று சொல்லி நடப்பதவன் சுபாவம்.

# 21-அத்தியாயம்.

"அன்பீனு மார்வமுடைமையது வீனு
நண்பேன்னு நாடாச்சிறப்பு."

ஹைறாம்வித்தியாசாலைக்குப்போய் ஜேம்ஸ்ஒருவருடம் கழித்தான். அவ்வருடத்தில் மணியடித்துப்பெருக்கிறவேலைபுரிந்தான். இரண்டாம் வருடத்தொடக்கத்தில் ஜேம்ஸுக்கு அந்த வித்தியாசாலையில் உதவிவாத்தியார் வேலைகொடுக்கப்பட்டது. ஆனது பற்றி ஜேம்ஸ் கல்வி கற்பதோடு கல்விபிறருக்கும் போதித்து வந்தான். இவ்விதம் வாத்தியார் வேலையவனுக்குக் கொடுத்ததிலிருந்து அவன் படிப்பில் நிரம்ப அபிவிருத்தியடைந்திருக்க வேண்டுமென்பது நன்கு விளங்குகிறது. இரண்டாவது வருடத்தில் ஜேம்ஸ் மூன்று வேலைகள் செய்து வந்தனன். கல்வி கற்றுவந்தான். கல்வி பிறருக்குப்போதித்தான், தச்சுவேலைசெய்து பணம் சம்பாதித்தான். ஒவ்வொரு வேலையிலும் ஊன்றி வேலைசெய்து யாவரும் வியப்பும் களிப்பும் அடையும்படிச்செய்தனன். "செய்வன திருந்தச் செய்தல்" அவனுக்கியல்பாக அமைந்துள்ள விஷயம்.

பள்ளியில் வேலை செய்து மிகுந்த வேளையில் தச்சுவேலை செய்து வந்தான். நேர்ந்த சமயங்களில் விவசாய வேலையும் செய்து பணம் சம்பாதித்து மகா வித்தியாசாலைப் படிப்புக்கும் பணம் சேர்த்து வந்தனன்.

இந்த வருடத்தில் ஜேம்ஸ் பூத் அம்மாள் (Miss Booth) என்று பெயருள்ள வித்தியாசாலையில் வாத்தியார் வேலைசெய்து வந்த மாதுடன் பழகவே, அந்த அம்மாள் புத்தி கூர்மையுள்ளவளானபடியால் ஜேம்ஸுடைய சிறந்த குணங்களை நன்குணர்ந்து தன்னாலியன்றமட்டும் ஜேம்ஸுக்குதவி புரிந்து வந்தனள். பூத் அம்மாளுக்குப் புத்தகங்களிலுள்ளவைகள்நன்றாகத்தெரியும். ஆகையால் ஜேம்ஸ் வாசிக்கக்கூடிய புத்தகங்களை யெடுத்துக் கொடுப்பாள். மேலும் நேர்ந்த சமயங்களில் இருவரும் ஒரு புத்தகத்தை

வாசித்து அதிலடங்கிய விஷயத்தைப்பற்றித் தர்க்கம் செய்வார்கள். ஒருவருக்கொருவர் படிப்பில் உதவி செய்துகொண்டு வந்தார்கள்.

ஜேம்ஸ் ஒரு தடவை வியாசம் எழுதும்படி ஏற்பட்டது. அதற்கு பூத் அம்மாளுடன் விஷயத்தை நன்றாய் யோசித்து ஜயந்திரி பறச்செய்துகொண்டு, யாவரும் வியக்கும் வண்ணம் சொற்சுவை பொருட்சுவை பொருந்த வியாசமெழுதினான்.

ஜேம்ஸ் பலர் கூடிய சபையில் மிகவும் சாதுரியமாகப் பேசுவான். ஆனதுபற்றி பெண்ட்லே (Father Bentley) என்னும் பெயருள்ள கிரிஸ்தவ மதபோதகர் பிரசங்கஞ்செய்யும் பொழுது ஜேம்ஸைப்பக்கலில் வைத்துச் சில சமயங்களில் பேசச்சொல்லுவார். அது நிற்க, அவருக்கு பதிலாகச் சிலவேளைகளில் ஜேம்ஸ் பேசி வந்தான்.

எந்த விஷயத்தைப்பற்றிப் பலர்முன்னர் பேசவேண்டியிருந்தாலும் ஜேம்ஸ் அச்சமின்றிப் பேசுவான். ஆனதுபற்றி ஜேம்ஸையவ்விதம் பேசுவதற்காகப்பலர் அழைத்துக்கொண்டு போவது வழக்கம். அவ்விதம் போய்ப்பிரசங்கம் செய்யும்பொழுது கேட்போரெல்லோரும் வியப்பும் களிப்புமடையும்விதம் பேசுவான். அவன் பேச்சைக் கேட்டவரெல்லோரும அவன் அமெரிக்கா தேசத்து ஐக்கிய மாகாணங்களுக்கு அதிபதியாவானென்று சொன்னார்கள்.

ஜேம்ஸ் இந்த வித்தியாசாலையிலிருந்த சங்கத்தில் விஷயங்களைப்பற்றித் தர்க்கம்செய்து, அவ்விதம் தர்க்கம் செய்தலில் நிபுணனெனப் பெயர்வாங்கினான். வழக்கம்போல் எவ்விஷயத்திலுமவன் நன்று யோஜித்து விஷயங்களைக் கேட்போர் எளிதிலறியும்படி பேசுவான். ஒழுங்கற்ற காரியத்தைக் கண்டால் கண்டாலும் காதால் கேட்டாலும், அவனுக்குண்டான வெறுப்பைப் பிறரறிந்து அவர்களும் ஒழுங்கற்றகாரியம் செய்யாமலிருக்கும்படி அவன் பேசுவான்.

ஜேம்ஸ் உதவிவாத்தியார் வேலைபுரியத் தொடங்கினபொழுது, செஸ்டர் வித்தியசாலையில் படித்த லுக்ரீஷியா ருடால்ப் (Lucretia Rudolph) என்ற பெயருள்ள பெண் ஹைராம் வித்தியாசாலைக்குப்

மேற்சொல்லியபடி ஜேம்ஸனும் லுக்ரீஷியா ருடால்பும் கல்லியாணம் செய்துகொள்ளுவதாகத் தீர்மானித்தது ஜேம்ஸ் படிப்புக்குக் கெடுதியுண்டாக்கும் என்று சிலர் சொன்னார்கள். அப்படிச் சொன்னவர்கள் ஜேம்ஸனுடைய குணங்களை யுணர்ந்தார்களில்லை. இவ்விதமாகக் கல்லியாண ஏற்பாடு செய்தது ஜேம்ஸனுக்கு மேல் படிப்புப்படிக்கத் தூண்டுகோலாயிற்று. ஜேம்ஸ் அவ்வளவு சிறந்த மாதை. மணம்புரியத்தக்க யோக்கியதை தனக்குண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்று படிப்பில் முன்னிலும் அதிக ஊக்கத்துடன் பிரவேசித்தான்.

செஸ்டர் வித்தியாசாலையில் படிக்கப் புகுந்த பொழுது பெண்களைக்கண்டால் ஜேம்ஸ் சங்கோசப்பட்டான் என்று சொன்னோம். ஹைராம் வித்தியாசாலையில் ஜேம்ஸ் சிறுவர் சிறுமியர் இருபாலரிடத்தும் பழகிச் சங்கோசமின்றி அவர்கட்கு மனங்களிக்கும்விதம் நடந்துவந்தான். படிப்பிலமர்ந்த வித்தியார்த்திகள் சிலரைப்போலிராமல், சமயம் நேர்ந்தபொழுது வேடிக்கை விநோதமாகத் தன் சிநேகிதர்களிடம் பேசி யவர்களை மனங்களிக்கச் செய்வான்.

யாரைக்கண்டாலும் முகமலர்ச்சியுடன் கைகுலுக்கி இனிய வார்த்தைகள் அன்புடன் அவன் பேசுவான். பலர் சேர்ந்து ஒரு இடமிருந்து மற்றொருஇடம் செல்லும்பொழுது ஜேம்ஸ் யாவரும் அவன் வாயைப்பார்த்துக்கொண்டு செல்லும்படி வேடிக்கையாகப் பேசுவான். சொல்லும் விஷயங்களோ கேட்போர்களுக்குப் புத்திகற்பிக்கக்கூடியவைகளா யிருக்குமேயொழிய வேறுவிதமிருக்கமாட்டா. சிலர் வேடிக்கைப் பேச்சென்றால் பயனற்றமொழிகள் பேசுவார்கள். அவ்விதம் ஒருபொழுதும் அவன் செய்தானில்லை.

பலவிஷயங் கற்றிருந்ததோடுகூட ஜேம்ஸ் சித்திரமெழுதுவதும் கற்று அதில் தேர்ச்சியடைந்து, அவ்வித்தையைப் பிறருக்குக் கற்றுக்கொடுத்துவந்தான். கண்பார்த்தது கைசெய்யும், என்பது அவனுக்குப் பொருந்தும். எவ்விஷயத்திலும் ஊக்கத்தோடு அவன் முயற்சிசெய்தபடியால் எல்லாவிஷயங்களிலும் தேர்ச்சியடைந்தான். செய்யத்தொடங்கிய வேலையை செய்தே முடிப்

பான். முடியவில்லையென்று ஒருபொழுதும் நடுவிலொன்றையும் கைவிடான்.

வாசிப்பில் எவ்வளவு சிறப்புள்ளவனோ, வாத்தியார் வேலையிலுமவ்வளவு சிறப்புள்ளவனெனப் பெயர்வாங்கினான். ஆனதுபற்றி ஹைராம்வித்தியாசாலை யதிகாரிகள் அவன் மகாவித்தியாசாலைப் படிப்புமுடிந்துவித்தியாப்பட்டம் பெற்றவுடன் அவ்வித்தியாசாலைக்கு வாத்தியாராக வரும்படி யேற்பாடு செய்யவேண்டுமென்று நினைத்து அவனைக்கேட்டார்கள். அவனும் அதற்குச் சம்மதித்தான்.

ஹைராம் வித்தியாசாலைப் படிப்பு முடிந்தவுடன் மகாவித்தியாசாலைப் படிப்புப்படிக்க ஜேம்ஸ் மூன்று மகாவித்தியாசாலைத் தலைவர்களுக்குத் தான் படித்திருந்த படிப்பைச்சொல்லி மகாவித்தியாசாலையில் படிக்கவேண்டிய படிப்பைப்பற்றியும் அங்கு செய்யவேண்டிய பணச்செலவைப்பற்றியும் எழுதிக்கேட்டான். அவர்கள் பதிலனுப்பினார்கள். அனுப்பிய விஷயமொன்றாயிருந்தும் அவர்களிலொருவர் மற்றையவிஷயங்களை யெழுதிவிட்டு, "நீ வரும்பட்சத்தில், எங்களாலானதை யுனக்குச் செய்யத் தயாராயிருக்கிறோம்," என்று சேர்த்து எழுதியிருந்தார். இப்படி யெழுதினவர் வில்லியம்ஸ் மகா வித்தியாசாலைத் ( Williams College ) தலைவர். இவ்விதம் அவர் எழுதினது ஜேம்ஸுக்கு அவர் அன்புடன் எழுதினாரெனத் தோன்றிற்று. ஆனதுபற்றி அந்த வில்லியம்ஸ் மகாவித்தியாசாலைக்கு மேற்படிப்புக்குப் போவதாக நிச்சயித்தான்.

ஜேம்ஸ் மகாவித்தியாசாலைப் படிப்புக்குச் சென்றால் செலவுக்குபாயமென்ன செய்கிறதென்று யோசித்துக் கொண்டிருந்தபொழுது, அவன் தமையன் தாமஸ், "தம்பி, படிப்புச்செலவுக்குப் பணத்துக்கு என்ன செய்யப்போகிறாய்? இதுவரையில் நீ சேர்த்து வைத்திருக்கக்கூடிய பணம்போதாதென்று நினைக்கிறேன்," என்று சொன்னான்.

"அண்ணா, நீ சொல்வதுசரி; என்னிடத்திலிருக்கும்பணம் பாதிச்செலவுக்குக்கூடப்போதாது. ஆனால் மாரிகாலத்தில் வாத்தியார்வேலைசெய்து சம்பாதிக்கலாம். படிக்குங்காலத்திலும்வேலை

யக்ப்பட்டால் ஒழிந்தவேளையில் வேலைசெய்து பணம் சம்பாதிக்கக் கூடும் ஈசன்கிருபையால் இதுவரையில் செலவுக்குத்தட்டுப்படாமல் பணம் சம்பாதித்துச் செலவு நடத்திவருகிறேன்."

"ஆனால் நீ நான்குவருடப்படிப்பை இரண்டுவருடங்களில் முடிக்க விரும்புகிறபடியால், படிக்குங்காலத்தில் வேலைசெய்வது முடியாதகாரியமாகும். படிப்புக்கே உன்காலம்முழுவதும் வேண்டியிருக்கும்."

"வேலைசெய்யாமல், எப்படி எனக்குச் செலவுக்குப்பணம் கிடைக்கும்?"

"உனக்குச் செலவுக்கு வேண்டிய பணம் நான் கடனாகக் கொடுக்கிறேன்."

"நான் திரும்பக்கொடுக்கிறவரைக்கும் நீ காத்திருக்கமுடியுமா?"

"நீ படிப்பு முடிந்தவுடன், வாத்தியார்வேலையி லமர்ந்தால், சீக்கிரத்தில் எனக்குப்பணத்தைக் கொடுத்துவிடக்கூடும்."

"நான் படிக்குங்காலத்தில் இறந்துபோய்விட்டால், நீ பணத்துக்கு என்னசெய்வாய்?"

"அதைப்பற்றி நீ கவனிக்கவேண்டாம்."

"நீ அப்படிச் சொல்லக்கூடாது. என்னால் நீ பணமிழப்பது சரியல்ல."

"எனக்கு அது சம்மதமாயிருந்தால் உனக்கென்ன?"

"எனக்கொன்று தோன்றுகிறது. நீ எனக்குப் பணம் கடனாகக்கொடு. நான் இறந்தால், 500-டாலர் கொடுப்பதாக உத்திரவாதஞ்செய்கிற நிதியில் பணம்கட்டிவருகிறேன். அப்படிச்செய்தலால், நானிறந்தால் உனக்கு நஷ்டம்ஏற்படாது,"

"உன்னிஷ்டப்படிசெய். எனக்கு எவ்விதம் செய்தாலும் சரிதான்," என்று தாமஸ் சொன்னான்.

ஹைராம் வித்தியாசாலையில் ஜேம்ஸ் ஆறுவருடப்படிப்பை மூன்றுவருடங்களில்படித்து, ஒழிந்தவேளையில் வேலைசெய்துபணமும் சம்பாதித்தான்.

# 22-அத்தியாயம்.

"பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்."

வில்லியம்ஸ் மகாவித்தியாசாலையில் ஒவ்வொருவருடமும் வாசிக்கவந்தவர்களைப் பரீக்ஷைசெய்து தகுதியுள்ளவர்களாக இருந்தால் சேர்த்துக்கொள்வது வழக்கம். ஜேம்ஸ் மற்றவர்களைப்போல மகாவித்தியாசாலையில் சேர்வதற்குப் போனான். போனபொழுது ஜேம்ஸ் வழக்கம்போல் மிகவும்தாழ்ந்த உடுப்புத் தரித்துக்கொண்டு சென்றான். வித்தியாசாலைத்தலைவர், ஹாப்கின்ஸ் (Hopkins) என்பவர் ஜேம்ஸ் படிப்பைக்கவனித்தவனென்றும் உடுப்புமுதலியவற்றைக் கவனித்தானில்லை யென்றுமறிந்தார்.

ஜேம்ஸ் அவரிடம் போய், "ஐயா, என்பெயர் கார்பீல்டு எனக்கு இருப்பிடம் ஒஹியோ," என்று சொன்னான். உடனே அவர் அன்புடன் ஜேம்ஸ் மனங்களிக்கும்வித மவனுடன் பேசினார். தகப்பனார் பிள்ளையிடம் பேசும்விதம் ஜேம்ஸிடம் அவர் பேசினார். அவரிடத்தில் ஜேம்ஸுக்கு விசுவாசமுண்டாயிற்று. ஆனதுபற்றி ஜேம்ஸ் வில்லியம்ஸ் மகாவித்தியாசாலைக்குச் சென்றதைப்பற்றி மனங்களித்தான்.

அம் மகாவித்தியாசாலைத்தலைவர் ஹாப்கின்ஸ் எழுதியிருந்த புத்தகமொன்று அவன் வாசித்திருந்தான். அவரைப் பார்க்கவே அவர் புத்தியிற்சிறந்த பெருந்தன்மையுள்ள வித்துவானென அவனுக்குத்தோன்றிற்று.

பரீக்ஷையில் ஜேம்ஸ் நன்றாகச்செய்து மகாவித்தியாசாலையில் சேர்ந்தான். இதுவரையில் ஜேம்ஸ் கற்றது அவனே பிறருதவியின்றி முயற்சிசெய்து கற்றதாயிருந்தும், அவன்கற்ற ஒவ்வொரு விஷயமும் செம்மையாகக் கற்றறியப்பட்டதாயிருந்தது. எந்தக் காரியத்திலும் திருந்தச்செய்தலவன்சுபாவம்.

மகாவித்தியாசாலையிலிருந்த புத்தகசாலையில் எண்ணிறந்தபுத்தகங்களிருந்தன. புத்தகமென்றால் ஜேம்ஸுக்குப் போதுமானதென்பது நமக்குத் தெரிந்தவிஷயம். வித்தியாசாலைத்தலைவர், "ஜேம்ஸ், கோடைகால விடுமுறைநாட்களில் நீ இங்கு தங்கியிருந்தால், புத்தகசாலையிலுள்ள புத்தகங்களை யெடுத்து வாசிக்க உனக்குக்காலம் நிரம்ப இருக்கும்," என்றுசொன்னார். அப்படியவர்சொல்வதை யவன்கேட்கவே, உடனே கோடைகாலவிடுமுறைநாட்களில் சொந்தஊருக்குப் போகாமல் அவ்விடத்திலேயே இருந்து வாசிப்பதாக ஹாப்கின்ஸ் என்பவரிடம்சொன்னான்.

விடுமுறைநாட்கள் தொடங்கின. ஹாப்கின்ஸ் சொன்னவிதம், ஊருக்குப்போகாமல், புத்தகசாலையிலுள்ள புத்தகங்களையெடுத்து வாசிக்கஆரம்பித்தான்.

வாசிக்க வாசிக்க விஷயங்கள் அவன் நன்றாக அறியலானான். விஷயங்கள் பலதெரியவே மேன்மேலும் விஷயங்கள்கற்க அவா ஏற்பட்டது. இவ்விதம் புத்தகம்புத்தகமாக வாசித்துமுடித்தான். இப்படி வாசித்தபுத்தகங்களில் ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்ற பெயருள்ள நாடகக் கவிராயரால் எழுதப்பட்ட புத்தகம் ஒன்று ஸம்ஸ்கிருதபாஷையில் காளிதாஸன் எவ்வளவுசிறந்தவித்துவானோ ஷேக்ஸ்பியர் என்பவர் ஆங்கிலபாஷையில் அவ்வளவு சிறந்த வித்துவானென்பது ஆங்கிலபாஷை படித்துள்ளவர்களெல்லாம் அறிந்தவிஷயம். கட்டுக்கதை ஒன்றுகூட அவன்வாசித்தானில்லை. ஆகையால் அவன் வடுமுறைநாட்களைப் பயன்படும்விதம் கழித்தான்.

பணம்சம்பாதித்துச் செலவு முன்செய்தவிதம் மகாவித்தியாசாலையில் படித்தபொழுது அவன்செய்யாமல் படித்து மிகுந்த காலத்தைத் தேகப்பயிற்சிசெய்வதிலும் விளையாடுவதிலும், சுற்றிலுமிருந்த வயல்வெளியின் வனப்பையும் மலையின் வனப்பையும் போய்ப்பார்ப்பதிலும் கழித்தான். இவ்விதம் வெளியில்போய்க் காட்சிபார்த்து நேர்ந்தசமயத்தில் காட்டிற்குள்சென்றும், மலைசிகரத்தின்மீது ஏறியும் சுற்றிலுமுள்ள விடங்களை நன்றறிந்தான்.

மகாவித்தியாசாலை மாணாக்கர்கள், ஜேம்ஸ் சிறந்த உடுப்புப் போடாதபோதிலும் படிப்பில் ஊக்கமுள்ளவனென்றும், கல்விகற்

கத் தன்னுலியன்றமட்டும் செய்யத்துணிந்தவனென்றும், சிறந்த புத்திமானென்றும் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். அவர்கள் ஜேம்ஸிடத்தில் பிரியத்துடன் பழகினுர்கள். ஆனது பற்றி சிலவாரங்கள் செல்லுமுன்னர், ஜேம்ஸைப்போல் நல்லவனில்லையென்று எல்லோரும் சொல்லத்தொடங்கினர்.

"ஜேம்ஸ் விஷயங்கள் ஐயந்திரிபற அறிந்திருக்கிறுன். சொல்லுவதில் ஒன்றிலும் தவறுகிறுனில்லை. கேட்ட கேள்விகளெல்லாவற்றிற்கும் விடையளிக்கச் சித்தமாக இருக்கிறுன்." என்று ஹில், (Hill) என்பவன் லீவிட் (Leavitt) என்பவனிடம் சொன்னுன்.

"அதற்குக்காரணம் அவனுக்குத் தெரிந்தவிஷயம் ஐயந்திரிபறக்கற்கப்பட்டதே. ஒரு விஷயத்தைக் கற்கத்தொடங்கினுல் அதை முழுவதும் கற்றுக்கொண்டபிறகுதான் அவன் அதைவிடுவான். அவன் படித்தவையெல்லாம் அவன் மறக்கிறுனில்லை," என்று லீவிட் சொன்னுன்.

"அவனுக்குப் பேசுந்திறமைப் பிறப்பிலேயே அமைந்திருக்கிறதெனச் சொல்லலாம். அவன் நம்முடையவகுப்பில் படிப்பில் முதன்மாணுக்கனுக விருப்பானென்பதற் கையமில்லை," என்று ஹில் சொன்னுன்.

மேற்கண்ட சம்பாஷணையிலிருந்து மகாவித்தியாசாலைமாணுக்கர்கள் ஜேம்ஸைப்பற்றி யெவ்விதமெண்ணினுர்களென்பது நன்குவிளங்குகிறது.

ஜேம்ஸ் வாசித்த வகுப்பில் நாற்பது மாணுக்கர்களுக்கு மேலிருந்தனர். அவர்களில் ஜேம்ஸ் எழுதுவதிலும், காரியத்திற்குக் காரணம் கண்டு பிடிப்பதிலும், பிறருடன் தர்க்கம் செய்வதிலும், முதன் மாணுக்கனெனப் பெயரெடுத்தான். ஒரு விஷயத்தையெடுத்தால் அதை நன்கு ஆராய்ந்து அவ்விஷயத்தைப் புதுமையாகத்தோன்றும்படி யெடுத்துரைப்பான். வேலை செய்வதிலூக்கம் வைத்து சிரமத்தைப்பாராமல் உழைப்பது அவன் சுபாவம். ஆனுல் எப்பொழுதும் கையில் புத்தகத்தை வைத்து வாசித்துக்கொண்டு பிறருடன் பழகாமல் ஏகாங்கியாக அவன் இருந்தானில்லை; பிறருடன் கூடியுரையாடி வேடிக்கையாகப் பேசிப் பிற

ருக்குந் தனக்கும் சந்தோஷமுண்டாகும்படி செய்வான். அது நிற்க, பிறருடன் பேசும்பொழுது பிறரிடமுள்ள விஷயங்களை யறிந்து தன்னறிவை விருத்திசெய்து கொள்ளுவான். அவனைக் கண்டவர்கள் அவனைச்சுற்றிக்கொண்டு அவன் பேசுவதைக்கேட்டுக்கொண்டிருப்பார்கள். காந்தமிரும்பை யிழுப்பதுபோல் ஜேம்ஸைப் பார்த்தவர்களவனிட மிழுக்கப்பட்டனரெனச் சொல்லலாம்.

மற்ற விஷயங்கள் கற்றதோடுகூட ஜேம்ஸ் ஜர்மன் (German) பாஷையும் கற்கத்தொடங்கினன். ஒருவருடம் செல்லுமுன் அப்பாஷையில் பேசப்படிக்க நன்குணர்ந்து விட்டான்.

ஒழிந்த வேளையில் ஜேம்ஸ் விளையாடப்போவான். உற்சாகமென்ப துருவெடுத்தாற்போல் ஜேம்ஸ் விளையாடுவதைக்கண்ட பெயர்கள் தாங்களுமுற்சாகத்துடன் விளையாடியானந்த மடைந்தனர்.

அந்த மகாவித்தியாசாலையில் மூன்று மாதத்துக்கொருதரம் ஒரு பத்திரிகையச்சிட்டு வந்தனர். அந்தப்பத்திரிகையில் ஜேம்ஸ் எழுதிய வியாசங்களும், பாட்டுக்களும், பன்முறை அச்சிடப்பட்டு வந்தன. விடுமுறை நாட்களும் வந்தன. ஜேம்ஸ் அக்காலத்திலெழுதுவதில் சிறந்தவனெனப் பெயர் பெற்றவன். ஆகையால் எழுதும்விதம் கற்பிக்கும் சாலையொன்று வைத்தான். அதில் அவனுக்குப்பணம் கிடைத்ததோடு சினேகிதர் பலரவனுக்கு ஏற்பட்டனர்.

அடுத்த மாரிகால விடுமுறை நாட்களில் மேற்சொல்லியவிதம் ஒரு எழுதும் விதம் கற்பிக்கும் சாலை ட்ராய் (Troy) என்றவிடத்தில் ஏற்படுத்தினன். அங்கிருந்த மதபோதகர் ஜேம்ஸினுடைய சிறந்த குணங்களைக்கண்டு ஞாயிற்றுக்கிழமைதோறும் பிரசங்கம் செய்ய அவனை அழைத்துக்கொண்டு போகத்தொடங்கினர். ஜேம்ஸ் ஒரு முறை பேசவே அங்கிருந்தவர்கள் ஒவ்வொருதடவையிலும் ஜேம்ஸைப்பேசும்படி வேண்டிக்கொண்டனர். இவ்விதம் ஜேம்ஸ் அவ்விடத்தில் சிறந்த புத்திமானெனப் பெயரெடுக்கவே, அவ்வூரிலிருந்த வித்தியாசாலையதிகாரிகள் ஜேம்ஸை வருஷத்திற்கு 1200 டாலர் சம்பளத்துக்கு வாத்தியார் வேலை யொப்

புக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டனர். அப்பொழுது ஜேம்ஸ் கையில் பணமில்லை. ஆயினும் அப்படி வேலை யொப்புக்கொள் ளும் பட்சத்தில் ஜேம்ஸ் வித்தியாப்பட்டம் பெறுவதைவிட்டுவிட வேண்டியதாயிருந்தது. மேலும் அவன் நினைத்தவிதம் ஹைறாம் வித்தியாசாலைக்கு வாத்தியாராகப்போக இடமிருந்திருக்காது. ஆன துபற்றி அவ்வேலையை யொப்புக்கொள்ளத் தன்னால் முடியவில்லை யென்று வித்தியாசாலையதிகாரிகளிடம் வணக்கத்துடன் சொன் னான்.

மேற் சொல்லியவிதம் தீர்மானஞ்செய்து முடித்தபொழுது ஜேம்ஸுக்குத் தரித்துக்கொள்ளத்தகுந்தஉடுப்பு இல்லாமலிருந்தது. ஒரு சிநேகிதன் சொன்னதின்பேரில் தையற்காரனொருவன் ஜேம் ஸுக்குக் கடனாக வொரு உடுப்புத் தைத்துக்கொடுத்தான். அதைப் போட்டுக்கொண்டு கல்வி கற்கப்போனான். தையற்காரன் கட னையும் சீக்கிரத்தில் தீர்த்தான்.

இரண்டாம் வருடச்செலவுக்கு ஜேம்ஸ் கடன்படவேண்டி யதாக ஏற்பட்டது. கடனதிகரிக்கவே ஜேம்ஸ் டாக்டர் ஜே. பி. ராபின்ஸன் (Dr,. J. P. Robinson) என்பவருக்கு எழுதித் தன் னுடைய நிலைமையைத் தெரிவித்தான். உடனே அந்த உதார குணமுள்ளவர் ஜேம்ஸுக்கு வேண்டிய பணம் கடனாகக் கொடுத் துதவினார்.

மகா வித்தியாசாலையில் படித்துக்கொண்டிருந்த பொழுது ஜனங்களையடிமை செய்தல்பலர் பிழையென்றும் சிலர் சரியென் றும் சொல்லவே, இருதிறத்தாருக்கும் வாக்குவாதமும் சண்டை யும் ஏற்பட்டன. மனிதர்களையடிமை செய்தல் நியாயமன்றென்று ஜேம்ஸ் பன்முறை மகா வித்தியாசாலையிலும் மற்றைய இடங் களிலும் பிரசங்கம் செய்தான். அவன் பிரசங்கத்தைக் கேட்ட வர்களெல்லோரும் ஜேம்ஸ் ஒருநாளும் அடிமைத்தொழில் செய் பவர்க்கிடங்கொடானெனச் சொல்லிக்கொண்டனர்.

ஜேம்ஸ் கட்டுக்கதைகள் வாசித்தானில்லை. அவன் மகாவித் தியாசாலையில் பாதிப்படிப்பு முடிப்பதற்கு முன்னர் அவனுக்கு வாசிப்பில் பிரியக்குறைவும், வாசித்ததைக் கிரகிக்கும் திறமைக்

குறைவும் ஏற்பட்டன. அதற்கு என்ன செய்கிறதென்று பெரியோரைக்கேட்டான். அவர்கள் அவனைக் கட்டுக்கதைகள் மிதமாக வாசிக்கும்படி விடையளித்தனர். உடனே அவ்விதம் ஜேம்ஸ் செய்யத்தொடங்கினான். சீக்கிரத்தில் அவன் சாதாரணமான நிலைமையையடைந்தான்.

1856 வருடத்தில் ஜேம்ஸ் வித்தியாப்பட்டம் பெற்றான். மகா வித்தியாசாலையிலேற்பட்டிருந்தசம்மானங்களையவனேயடைந்தான். ஜேம்ஸ் மகா வித்தியாசாலைக்குப் போனது முதற்கொண்டு படிப்பிற் சிறந்தவனென்றும் பேசுந்திறமை பெற்றவனென்றும் பெயரெடுத்து அவ்வித்தியாசாலையைவிட்டு வித்தியாப் பட்டம் பெற்று வெளியில் செல்லும் வரையில் எடுத்தபெயர் மாறாமல் அவ் விஷயங்களில் சிறந்தவனென்றே பெயர் வாங்கினான். அவன் வாசிக்குங்காலத்தில், அவன் சன்மார்க்கமுள்ளவனென்றும், ஒழுங் கற்ற காரியமொருபொழுதும் செய்யானென்றும், ஒழுங்கற்றவ னவனிடத்தி லணுகானென்றும் அவனுடைய உபாத்தியாயர்கள் நினைக்கும்வண்ணம் நடந்துவந்தனன். பள்ளியில் பிள்ளைகள் நியாயமென்று ஒழுங்கற்றகாரியம் செய்வதுண்டு. ஜேம்ஸ் ஒழுங்கற்றது எவ்விடத்திலும் எப்பொழுதும் ஒழுங்கற்றதென்று கண்டித்துத் தன்னுடனிருந்தவரவ்விதம் செய்யாமலிருக்கும்படி செய்துவந்தனன். அவன் மாணாக்கனாக விருந்தகாலத்தில், தூய்மை, வாய்மை, தெய்வபக்தி, புத்திகூர்மை, ஊக்கம், தைரியம், முதலிய உத்தமகுணங்கள் அவனிடத்தில்விளங்கி, அவன் அடையப்போகும் சிறந்த பதவியை முன்குறித்துக் காட்டினவென்று சொல்லலாம்.

# 23-அத்தியாயம்.

" அன்பு நாணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றியதூண்."

ஹைராம் வித்தியாசாலையதிகாரிகள் ஜேம்ஸ் அவ்வி டத்திற்குத் திரும்பி வருவதற்குமுன் ஜேம்ஸை யவ்வித்தியாசாலையிலொரு உபாத்தியாயராக நியமித்தனர். ஜேம் ஸை யதிகாரிகள் எவ்வளவு மனமகிழ்ச்சியுடன் வேலைக்கு நியமித்த னரோ அவ்வளவு மகிழ்ச்சியுடன் ஜேம்ஸனும் அவ்வேலையை ஒப்புக் கொண்டு அங்கு வேலைசெய்ய வந்தனன்.

அவன் கால்வாய்ப்படகில் வேலை செய்து இப்பொழுது ஒன்பது வருடங்கள் ஆயின. இப்பொழுதவன் மிகவும் சிறந்த பதவியடைந்தான். மேற்குறித்த ஒன்பது வருடகாலத்தில் அவன் பட்டசிரமம், கஷ்டம் முதலியவைகள் அளவிறந்தன. அக்காலத்தி லடைந்தபயனோ, சொல்லிமுடியாது. இவ்விதம் எந்த மனிதன் சரித்திரத்திலும் காண்பதரிது.

" என் எண்ணம் நிறைவுபெற்றது. எனக்கு வித்தியாப்பட் டம் கிடைத்துவிட்டது. இங்கு உபாத்தியாயர் வேலையும் அடைந் திருக்கிறேன். இந்த வேலையைச் சரியாகச்செய்து வித்தியா சாலைக்குப் புகழுண்டாக்கவேண்டும்," என்று ஜேம்ஸ் ஒரு சிநே கிதனிடம் சொன்னான்.

மதவிஷயத்தில் பிரசங்கஞ்செய்து வேலைசெய்ய ஜேம்ஸ் விரும்பினானில்லை. உபாத்தியாயர் வேலை செய்வதைத்தவிர வேறு வேலை செய்ய அவனுக்குப் பிரியமில்லை.

டாக்டர் ஹாப்கின்ஸ் என்பவரிடம் கற்றது பயன்படும் விதம் ஜேம்ஸ் ஹைராம் வித்தியாசாலையில் உபாத்தியாயர் தொழில் யாவரும் வியப்பும் திருப்தியும் அடையும்படி செய்துவந்தனன். வித்தியாசாலை யதிகாரிகள் ஜேம்ஸ் திறமையைக்கண்டு முதல் வருடக்கடைசியில் கல்வி போதிக்கும் சங்கத் தலைவராக

ஜேம்ஸை நியமித்தனர். அடுத்த வருடக்கடைசியில் ஜேம்ஸை வித்தியாசாலைத்தலைவராக நியமித்தனர்.

உபாத்தியாயர் வேலை புரிந்துவந்த காலத்தில் ஜேம்ஸ் தன்னிடத்தில் கல்வி கற்றுவந்த பிள்ளைகளில் புத்தி கூர்மையுள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்களை மேல் படிப்புப் படிக்கும் விதம் செய்வதுண்டு. இப்படிச்செய்வதில் அவர் சில உபாயங்கள் செய்ய வேண்டியதா யேற்பட்டது. சிற் சில சமயங்களின் பிள்ளைகளின் தகப்பனார்கள் பணச்செலவு செய்யமுடியாமல் படிப்பை நிறுத்த முயலுவதுண்டு. அக்காலங்களில் ஜேம்ஸ் தன்னுடைய புத்தி கூர்மை விளங்க அவர்கட்கு உபாயம் தேடியவர்கள் பிள்ளைகளைப் படிக்கச்செய்யும்படி செய்வார். மனிதனியற்கைக்குத் தகுந்தபடி பேசித் தான் எண்ணினவிதம் பிறரைச்செய்யும்படி செய்துவந்தனர். இப்படிச்செய்தல் தன்னுடையமாணுக்கர் நன்மையின் பொருட்டேயொழிய வேறில்லை. மேலும் இது அவர் மனத்துக்குச் சந்தோஷமும் திருப்தியும் கொடுத்தது.

காந்தம் ஊசியையிழுப்பதுபோல் ஜேம்ஸ் மாணுக்கரின் மனத்தைக் கவர்ந்தார். ஜேம்ஸென்றால் மாணுக்கர்களுக்குப்போதும், மற்றொன்றையும் அவர்கள் விரும்பார்கள். தந்தையிடத்தில் தனயனுக்கிருக்கும் ஆர்வமும் அன்பும் ஜேம்ஸிடத்திலவருடைய மாணுக்கருக்கிருந்தன. எந்த மாணுக்கனைக்கண்டாலும் புன்சிரிப்பும், இனிய சொல்லும் அன்பு பெருகும் பார்வையும், அவர் முகத்தில் விளங்கும். இப்படியிருப்பதவருக்கு இயற்கையாகத்தோன்றுமே யொழிய வேறில்லை.

ஒரு நாள் ஒரு மாணுக்கன் பள்ளியில் பாடம் சரியாகச்சொல்லத்தவறினான். உடனே ஜேம்ஸ் அவர்களிருந்த அறையில் அழுக்குத்தங்கிய ஓரிடத்தைச்சுட்டிக்காட்டி, "அதோ பார்," என்று பையனை நோக்கிச்சொல்லி, அவர் சிரித்தார். வகுப்பிலுள்ள பிள்ளைகளும் சிரித்தனர். இவ்விதந்தான் பிள்ளைகளைக் கண்டித்துப் புத்தி கற்பிப்பது அவருக்குச் சுபாவம்.

ஒருமுறை ஒரு பிள்ளைக்குப் பாடம் கொடுத்தார். அப்பையன், "என்னால் முடியாது," என்று சொன்னான்.

“முடியாதா?” என்று ஜேம்ஸ் கேட்டார்.

“முடியாது,” என்று பையன் கூறினன்.

“குழந்தாய், எனக்கு எளிதில் செய்யக்கூடிய வேலையேற்பட்டால், எப்பொழுதும் எனக்கு அதைவிட்டுவிட்டுக் கஷ்டமதிகமுள்ள வேலையைச்செய்ய அவா உண்டாகும்,” என்று ஜேம்ஸ் சொல்லித் தான் நன்னிலைமைக்கு வந்த இரகசியத்தை வெளியிட்டார். பையனுமறிந்துகொண்டான். கார்பீல்டு எப்பொழுதும் மேன்மையான கருத்து வைத்துக்கொண்டு அக்கருத்தை நிறைவேற்றுவார். அவ்விதம் செய்துதானவர் சிறந்த பதவியடைந்தார்.

ஒரு தடவை மாணுக்கர்களை நோக்கி, “பிள்ளைகாள், அடுத்த வாரம் தொடங்கிச் சரித்திரத்தைப்பற்றி யுங்களுக்குப் பிரசங்கஞ் செய்யப்போகிறேன். உங்களுக்காகமட்டும் நானிதைச் செய்யவில்லை. பிரசங்கம் செய்வதற்குச் சரித்திரத்தைப்படிக்க எனக்கு முடையுண்டாகும்,” என்று ஜேம்ஸ் சொன்னர்.

இப்படிச் சொல்லுவதில் பிள்ளைகளும் ஒன்றைப்படிக்கமுடையேற்பட்டால் அதை நன்ருகப்படிக்க வேண்டியிருக்குமென்பதையறியவேண்டுமென்பது அவர் அபிப்பிராயம். அவர் ஒரு விஷயத்தைப்பற்றி நன்ருகப்படிக்கவேண்டுமென்றெண்ணினல் அதைப்பற்றிப் பிரசங்கம் செய்ய ஏற்பாடு செய்துகொண்டு அதைப்படிக்கத்தொடங்குவார். இப்படிச்செய்தல் அவர்க்கு நன்மை தருவதோடு கூடப் பிள்ளைகளுக்குமப்படிச்செய்தலாலுண்டாகும் பயன் விளங்கவேண்டுமென்பது அவர் எண்ணம்.

எந்தக் காரியஞ் செய்தாலும் ஜேம்ஸ் கார்பீல்டு காரியஞ் செய்வதற்கு ஏற்பட்ட இடத்தில் குறித்தகாலத்திலிருப்பார்; சற்று முன்னும் அங்குவாரார், சற்றுப்பின்னும் செல்லார்.

இதைப்பற்றி மாணுக்கர்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர் செய்ததுபோல் எல்லோரும் செய்யவேண்டுமென்று சொல்வார். தான் செய்யமுடியாத காரியத்தைப் பிறரையும் செய்யச்சொல்லமாட்டார். தான் நடந்துகாட்டிப் பிறரை யவ்விதம் நடக்கச்செய்துவந்தனர்.

ஒருநாள் அருகாமையிலிருந்த பட்டணத்திற்குப் பிரசங்கஞ் செய்யப்போனூர். மறுதினம்பள்ளிக்குச் சரியானகாலத்தில் வர அவருக்குமுடியவில்லை. ஆனதுபற்றி மற்றொரு உபாயத்தியாயர் இவர் நடத்தவேண்டிய பாடத்தை நடத்தத்தொடங்கினூர். சற்று நேரத்திற்கெல்லாம் கார்பீல்டுவந்தார். அப்பொழுது பாடம் நடத்திய உபாத்தியாயர் ஒருகேள்வி ஒருமாணுக்கனைக் கேட்டார். அம்மாணுக்கன் விடையளித்தவுடன் கார்பீல்டு அடுத்தகேள்விமுன்கேள்விப் பின்வரக்கூடியதாக ஒன்று கேட்டார். அப்பொழுது அங்கிருந்த உபாத்தியாயர் சிரித்துக்கொண்டு கார்பீல்டென்பவரிடம் விடைபெற்றுச் சென்றூர். கார்பீல்டு மேல் பாடம்நடத்தினூர். இவருடைய சமய உசிதபேச்சையும் நடத்தையையுங் கண்டு யாவரும்வியந்தனர். கார்பீல்டு பலவிஷயங்களைப்பற்றிப் பன்முறை மாணுக்கர்முன்னும் மற்றவர் முன்னும்பிரசங்கம் செய்தனர். பிரசங்கத்துக் கெடுத்துக்கொண்ட ஒவ்வொரு விஷயத்தையும்நன்கு ஆராய்ந்து கேட்போர் விஷயத்தை நன்றாக அறிந்து பலனடையும் விதம் சொற்சுவைபொருந்தும்படி யெடுத்துக்கூறுவார். அவர் பிரசங்கித்த விஷயங்கள் பிள்ளைகளுக்குபயோக முள்ளவைகளெல்லாமடங்கிஇருந்தன. அனேகவிஷயங்களைப் பற்றி ஆயத்தமின்றிப் பன் முறை அவர் பலர் வேண்டு கோளுக்கிணங்கப்பேசினூர்.

இவ்விதம் வேலை செய்து வந்தநாளில் ஒழிந்தவேளையில் சட்டப்படிப்புப் படித்துவந்தார். உபாத்தியாயர் வேலையை விடுவதற்குமுன்னர் வக்கீல் வேலைக்குத் தகுந்தவரெனப்பட்டம் வாங்கினூர். இப்படிச் சட்டங்களைப்பற்றி வாசித்தது வக்கீல் வேலை செய்யவேண்டுமென்ற ஆசையால் உண்டாகவில்லை. ஆனூல்சட்டங்களும் அவைகளின் நியாயங்களும் தெரிந்து அறிவில் சிறப்படையக் கருதி அவர் அவ்விதம் செய்தார்.

மதவிஷயத்தில் அவர் செய்த பிரசங்கங்கள் மற்றையப் பிரசங்கங்களைவிடத் தாழ்ந்தவைகளில்லை. அவரிருந்த பிராந்தியம் முழுவதும் அவர் பிரசங்கித்துவந்தார். அவர் அப்படிப் பிரசங்கம் செய்யவே வித்தியாசாலை கீர்த்தியடைந்தது. அவ்விடத்திலுள்ளவர்களெல்லோரும் ஹைராம் வித்தியாசாலை சிறந்ததெனச் சொல்லிக் கொண்டாடினூர்கள். அவருடைய மாணுக்கர்களோ அவ

ரைப்போல் எல்லா விஷயங்களிலுமிருக்க முயன்றனர். உபாத்தியாயர் சிறந்தவராயிருந்தால் பிள்ளைகளும் சிறந்தவர்களாவது எவ்ரும் எதிர்பார்க்கக்கூடிய விஷயம். தெய்வ பக்தியில் கார்பீல்டு மிகவும் சிறந்தவர். பிள்ளைகளும் அவ்விதமிருக்க முயன்றனர்.

1858-ஞ நவம்பர்மாதம் 11-ட கார்பீல்டு லுக்ரீஷியா ருடால்ப் (Miss Lucretia Rudolph) என்னும் மாது சிரோமணியை மணம் புரிந்தார். அந்த மாது அவருக்கு எல்லாவிஷயங்களிலும் உதவிபுரிந்து வந்தாள். ஒரு விஷயத்தைப்பற்றிப் பிரசங்கஞ் செய்யவேண்டியிருந்தபொழுது கார்பீல்டு பார்க்கவேண்டிய புத்தகங்களைப்பார்த்துக் குறிப்பெழுதி அந்த அம்மாள் அவருக்குக் கொடுத்து அவர் வேலையைச்சிறிது தான் செய்துதவுவாள். கார்பீல்டு வாசித்த புத்தகங்களை யெண்ணிட்டு முடியாது. புத்தகசாலையினின்றும் கட்டுக்கட்டாகப் புத்தகங்களைடுத்துக்கொண்டு போய் வாசித்துச் சீக்கிரத்தில் திரும்ப அனுப்பிவிடுவார்.

கார்பீல்டு அவரிடத்தில் வாசித்த மாணுக்கர்களைத்தன் குழந்தைகள் போலன்புடனழைத்துப்பேசுவார். பிள்ளைகளோடு விளையாடுவார். ஆனால் பிள்ளைகளவரைக்கண்டு பய பக்தியுடன் நடப்பார்கள்.

எளிய பையனுகவிருந்தாலும் அன்பும் ஆதரவும் விளங்க அவனிடம் உரையாடி யவனுக்கும் மற்றவர்களுக்கும் அவர் மனத்தில் வித்தியாசமில்லையென்று நினைக்கும்விதம் நடப்பார். ஆனது பற்றி மாணுக்கரெல்லோரும் கார்பீல்டுஇடத்தில் பயபக்தி விசுவாசம்வைத்துத் தங்களுக்குண்மையான சிநேகிதர் தங்கள்உபாத்தியாயர் தானென்ன நினைத்தார்கள்.

ஒருநாள் ஒருமாணுக்கன் ஒருவிஷயத்தைப்பற்றிப் படிக்கவேண்டுமானுல் அதற்குச் சிறந்தவழியென்னவென்று அவரைக் கேட்டான்: அந்தவிஷயமடங்கியுள்ள பலபுத்தகங்களைப் படிப்பதே சிறந்ததென்று அவர் விடையளித்தார்.

எவ்விடஞ்சென்ருலும் அவ்விடத்திலுள்ள விஷயங்களையெல்லாம் நன்ருகப்பார்த்து மனத்தில்வைப்பது அவருக்குவழக்கம். பலர் கண்களைவிழித்துக்கொண்டு போகும்பொழுது வழியிலுள்ள

வைகளைப் பாராமல் கண்ணில்லாதவர்களைப் போலச்செல்லுகி றார்கள். அனேகர் தாங்கள் வசிக்கும்வீட்டிலிருக்கும் தூண்க ளெவ்வளவென்று அறியார். கார்பீல்டென்பவரோ தான்சென்ற விடங்களிலுள்ளவைகளெல்லாம் நன்றாகப்பார்த்து அவைகளை மன த்தில் வைப்பார். தெரியாத விஷயமொன்று ஏற்பட்டால் அதை யறியக்கூடிய சமயம் நேர்ந்தவிடத்தில் அதையறிந்து முடிப்பார்.

# 24-அத்தியாயம்.

"மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மேனநான்கே யேமம் படைக்கு."

கார்பீல்டைப்போல் பிரசங்கிக்குந்திறமையுள்ளவர் அமெரிக்கா ஐக்கியமர்காணக்குடியரசு நாட்டில் இராஜதந்திரத்தில் பிரவேசிக்காமலிருப்பது அருமை. இராஜாங்கத்தி லிரு திறத்தாரிருந்தனர். ஒரு திறத்தார் மனிதர்களையடிமை செய்தல் பிழை யெனக்கூறினர். மற்றைய திறத்தார் அது நியாய மெனச் சொல்லி யதைநிலைநிறுத்த முயன்றனர். கார்பீல்டு ஜனங்களை அடிமைசெய்தல் கடவுளுக்கடுக்காத காரியமென்று நினைத்தவரென்பது நமக்குத்தெரிந்தவிஷயம். ஆகையால் ஜனங்கள் அவரை யடிக்கடிப்பிரசங்கம் செய்யும்படி வேண்டிக்கொண்டனர். அவர் பலர் கேட்டுக்கொள்ளும்பொழுது வேண்டுகோளுக்கிணங்க நடந்து வந்தனர்.

ஆல்பான்ஸோ ஹார்ட் (Alphonso Hart) என்னும் பெயருள்ள அடிமை செய்தல் நியாயமென்று கொண்ட திறத்தாரிலொருவர் ஹைராம் என்ற பட்டணத்தில் தன் கட்சியைச்சரியென்று ஒரு சிறந்த பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தைக் கார்பீல்டும் அவரைப்போல் அடிமை செய்தல் பிழையென்று எண்ணின அனேக மனிதர்களும் கேட்டார்கள்.

அவ்வூரில் செல்வாக்குள்ள ஒருவர், "அவர் சொன்னதற்குப் பதில் சொல்லியவரைத் தோல்வியடைய நீர் செய்யவேண்டும்," என்று கார்பீல்டை நோக்கிச் சொன்னார்.

"அப்படிச் செய்தலெளிது. அது உசிதமா?" என்று கார்பீல்டு கேட்டார்.

"பிழையைக் கண்டனஞ்செய்தல் எப்பொழுது முசிதம்."

"எனக்குமவருடைய பிழையை யெடுத்துக்காண்பிக்க இஷ்டந்தான்," என்று கார்பீல்டு சொன்னார்.

"அப்படியானால் நீங்கள் தாமதிக்கக்கூடாது. அப்படிச் செய்தல் நம்முடைய திறத்தாருக்கு அளவிறந்த நன்மை பயக்கும்," என்று ஒருவர் கூறினர்.

இவ்விதம் பலர் வேண்டுகோளுக்கிணங்க ஜேம்ஸ் கார்பீல்டு பேசத்தொடங்கினர். அவர் எதிர்க்கட்சிக்காரரை நிந்திக்காமல், விஷயங்களை இருந்தபடிகூறிக் காரணகாரியங்கள் விளங்கச்சொன்னர். எதிர்க்கட்சிக்காரர் அதுவரையில்நடந்துவந்த வழியைக்காட்டி அவர்கள் செய்துவந்த செய்கைகளைச்சொல்லி, அவைகள் நியாயமற்றவைகளென்று யாவருமறியும்வண்ணம் பேசிமுடித்தார். அவர் அப்படிச்செய்த பிரசங்கம் அவருடைய புத்தி கூர்மையையும் சாதுரியத்தையும் எடுத்துக்காட்டவே, அவர் பிரசித்தி பெற்றவரானர்.

அவர் புகழ்பரவவே, பலர் பலவிடங்களிலிருந்து அவரைப் பிரசங்கஞ்செய்ய வேண்டிக்கொண்டனர். கடைசியாக எல்லோரும் சேர்ந்து, கார்பீல்டு என்பவருக்கும், ஹார்ட் என்பவருக்கும் ஒரு சம்வாதம் நடக்கும்விதம் ஏற்பாடு செய்தனர். அதற்கு ஒரு நாள் குறிக்கப்பட்டது. அவ்விருவருக்குமுண்டாகும் தர்க்கத்தைக்கேட்க அனேகர்கூடினர். வாக்குவாதம் ஆரம்பித்தது. ஹார்ட் தன் கட்சியைப் புகழ்ந்துபேசினர். கார்பீல்டு எதிர்க்கட்சியினுடைய நடத்தைகள் ஒழுங்கற்றவையென யாவருமறியும்விதம் எடுத்துச்சொல்லித் தன் கட்சிக்காரர் சரியாக நடந்தனரெனக் காரணகாரியமூலமாகத் தெரிவித்தார். ஹார்ட் என்பவர் வெட்கித் தலைகுனிந்து சபையைவிட்டு நீங்கினர். உடனே ஜேம்ஸ் கார்பீல்டு என்பவர் இராஜதந்திர விஷயங்களைப்பற்றிப் பிரசங்கம் தர்க்கம் செய்வதில் நிகரற்றவரெனப் பெயர் வாங்கினர். அவரையெல்லோரும்புகழ்ந்தனர். ஒருவர் அவர் சட்டநிரூபணச்சபைக்குத் தகுந்தவரெனச் சொன்னர். மற்றொருவர் அவர் மகாசபை (Congress)க்குத் தகுந்தவரெனக் கூறினர். ஒருவர் அவர் தேசாதிபதியாவரென மொழிந்தார்.

மாகாண சட்டநிரூபணச்சபைக்கு அவர் ஜனங்களுக்குப் பிரதிநிதியாகப் போகவேண்டி, ஒருநாள் ஒருவர் அவரைக் கேட்டபொழுது, அவர், "என்மனம்இந்த வித்தியாசாலையிலிருக்கிறது; எனக்கு வேறுவேலைசெய்ய மனமில்லை," என்று சொன்னர். மேற்சொல்

லியவிதம் பன்முறையவரை யங்குள்ளவர்கள் கேட்டனர். அவர் அவ்விதங் கேட்போருக்கு ஓரேவிதமாகத் தனக்கு வித்தியா சாலையைவிட்டு வேறுவேலையிற்புக மனமில்லையென்று சொல்லிக் கொண்டுவந்தார்.

1859-வருடத்தில் வில்லியம்ஸ் மகாவித்தியாசாலையில் ஜேம்ஸ் கார்பீல்டு வித்தியாப்பிரசங்கம் செய்யும்படி வேண்டிக்கொள்ளப் பட்டார். அவரும் அவர்மனைவியும் வில்லியம்ஸ்டவுன் (Williams Town) என்ற விடத்திற்குச் சென்றனர். வழக்கம்போல் பிர சங்கத்திற்குத் தகுந்தபடி வாசித்து, யோசித்துக்கொண்டு சென்று, கேட்போர் மனமுவக்கும்படி அவரை வேண்டிக்கொண்டவர் மனமகிழ்ச்சியடையும்விதம் பிரசங்கஞ்செய்தார்.

அவர் திரும்பி வந்தபொழுது நகரவாசிகள் சிலர் அவர் எதிர்ப்பார்க்காத விஷயமொன்று அவரைக் கேட்டனர்.

"நீங்கள் மாகாண மந்திராலோசனைச் சபையாரில் ஒருவராக ஆகவேண்டும்," என்று கார்பீல்டை நோக்கி அவர்கள் சொன் னார்கள்.

"அப்படியா! பிரன்டிஸ் (Mr. Prentiss) என்பவர் அந்த விஷ யத்தி லமர்ந்திருந்தாரென்றெண்ணியிருந்தேன்," என்று ஜேம்ஸ் ஆச்சரியத்துடன் சொன்னார்.

"பிரன்டிஸ் என்பவர் திடீரென்று உயிர்துறந்தார்," என்று வந்தவர் கூறினர்.

பிரன்டிஸ் என்பவர் வயதுமுதிர்ந்தவர். ஜனங்களால் நேசிக் கப்பட்டவர். அவர் ஒருமுறை ஆலோசனைசபையிலிருந்து வேலை பார்த்துவந்தவர். மறுபடியுமவரைச் சபைக்கு நியமிப்பதாக ஜனங் கள் நினைத்திருந்தனர். அவர் திடீரென்று பரலோகஞ்செல்லவே, எல்லோரும் ஹைராம்வித்தியாசாலைத் தலைமைநடத்திவரும்வயதில் சிறுவராயிருந்தும் அறிவில் பெரியவராயிருந்த கார்பீல்டு என்ப வரை அவருக்குப்பதிலாக நியமிக்க எத்தனித்தார்.

"நம்முடைய கட்சிக்காரர் உம்மைத்தான் முதல் முதலில் நியமிப்பதாக நினைத்தார்," என்று ஒருவர் சொன்னார்.

"அப்படி நீங்கள் என்னைப்பற்றி நினைத்ததற்கு நான் வந்தனமளிக்கிறேன். ஆனால் எனதுவேலையை நினைக்கும்பொழுது நான் உங்களுடைய வேண்டுகோளுக்கிணங்குவது சாத்தியமான காரியமில்லையென எனக்குத் தோன்றுகிறது," என்று கார்பீல்டு கூறினார்.

"உங்கள்பெயரைக் கேட்டமாத்திரத்தில் இந்த ஜில்லாவிலுள்ளவர்களெல்லோரும் நீர் ஆலோசனைசபையாராகச் சம்மதிப்பார். ஆகையால், நீங்கள் இந்த விஷயத்தைப்பற்றி யோசித்து விடையளிக்கவேண்டும்," என்று ஒருவர் மொழிந்தார்.

"நீர் சொல்லுவது சரிதான். ஆனால் வித்தியாசாலையைப் பற்றி நான் யோசிக்கவேண்டியதாயிருக்கிறது. நீர் சொல்லும் விதம் நான் செய்தால் வித்தியாசாலை வேலையை நான் சரியாகச் செய்யமுடியுமா?" என்று ஜேம்ஸ் கேட்டார்.

"மந்திராலோசனைசபையில் செய்யவேண்டிய வேலைக்காக நீர் வருடத்தில் சிலவாரங்கள் ஊரைவிட்டு வெளியே போகவேண்டியிருக்கும். எல்லாவற்றிற்கும் நீர் வித்தியாசாலையதிகாரிகளிடம் இதைப்பற்றி யோசித்துவிட்டு ஒருவாரங்கழித்துப் பதில் சொல்லலாம்," என்று ஒருவர் புகன்றனர்.

இவ்விதம் சொன்னவர் வித்தியாசாலையதிகாரிகளில் சிலர் கார்பீல்டு அந்த வேலையை யொப்புக்கொள்ளவேண்டுமென்ற அபிப்பிராயமுள்ளவரென்று அறிந்தவர்.

கார்பீல்டு அவர்களுக்கு "அவ்விதமாகட்டும்," என்று சொல்லி வித்தியாசாலையதிகாரிகளிடம் இந்தவிஷயத்தைச் சொன்னார். அதிகாரிகளெல்லோரும்சேர்ந்து கார்பீல்டு ஜனங்கள் வேண்டுகோளுக்கிணங்க நடப்பது சரியென்றும் அவர்களும் அவரை அந்த வேலை யொப்புக்கொள்ளும்படிக் கேட்டுக்கொண்டனர். இது கார்பீல்டுக்கு வியப்பையுண்டாக்கிற்று. பள்ளியிலிருந்த உபாத்தியாயர்கள் தங்களுக்கிருந்த வேலையுடன் அதிக வேலைசெய்து கார்பீல்டு என்பவர் வெளியில் சென்றகாலத்தில் தாங்கள் வித்தியாசாலையில் அவர்வேலையைச் சேர்த்துப் பார்த்துக்கொள்ளுவதாகக் கூறினர்.

இவ்விதம் இராஜதந்திரவேலையில் கார்பீல்டு என்பவர் பலநாள் அமர்த்தப்பட்டார். இப்படியந்த வேலைக்கு நியமிக்குங்காலத்தில் அவரை யப்பொழுதுதான் முதல்முதல் பார்த்த ஒருவர், "இச்சிறுவனை ஆலோசனைசபையாராகச் செய்யமுயலுவது பிழையல்லவா?" என்று பக்கத்திலிருந்த ஒருவரைக்கேட்டார்.

"வயதில் சிறுவர், சக்தியில் சிறந்தவர்," என்று அவர் பதில் சொன்னார்.

"இச்சிறுவனுக்கு அனுபோகம்போதாதென எனக்குத்தோன்றுகிறது," என்று முன்கூறியவர் சொன்னார்.

"சற்றுப் பொறுத்துப்பாரும். இந்த வேலை முடிந்தவுடன் அவர்பேசுவார். பேச்சைக்கேட்கும்போது அவர் வயதிற் சிறுவராயினும் சக்தியில் பெரியவரென்று நீர் நினைப்பீர்," என்று மற்றவர் கூறினர்.

அந்த வேலை முடிந்தவுடன், கார்பீல்டு ஒரு பிரசங்கம் செய்தார். அவரைச்சிறுவரென்று சொன்னவர், "நான் நினைத்தது பிழை. அவர் சிறுவராயினும் அவர் கட்சிக்குப் பலம் கொடுக்க வல்லவர். எனக்கு அவரை இந்த வேலைக்கு ஏற்படுத்தினதில் மிகவுஞ் சந்தோஷம்," என்று கூறினார்.

கார்பீல்டு ஜனங்களால் மந்திராலோசனை சபையாராக நியமிக்கப்பட்டார்.

1860-ஆம் ஜனவரி மாதத்தில் மாகாண மந்திராலோசனை சபையில் ஜேம்ஸ் கார்பீல்டு சபையாரிலொருவராக உட்கார்ந்தார். அப்பொழுது வடக்கு மாகாணங்களுக்கும் தெற்கு மாகாணங்களுக்கும் அடிமை செய்தலைப்பற்றி பெரிய வழக்கு ஏற்பட்டது. வடக்கு மாகாணங்களிலுள்ளவர் அடிமை செய்தல் கூடாதென்று சொல்லத் தெற்கு மாகாணங்களிலுள்ளவர்கள் அது வேண்டுமெனத் துணிவாகக் கூறினர். அவ்விதமான காலத்தில் சபையிலிருக்கத் தகுந்தவர் ஜேம்ஸ் கார்பீல்டுதான். அவருடன் அவர் நினைத்தவிதம் நினைத்தவர் வயதிலும் சிறுவராக இருவர் இருந்தனர். ஒருவர் ஜேகப் டி. காக்ஸ் (Jacob D. Cox) என்ற பெயருள்ளவர். மற்றவர் மன்ரோ (Professor Munroe) என்று பெய

ருள்ள் கல்வியிற்சிறந்த உபாத்தியாயர். இம்மூவரும் ஒன்றுசேர்ந்து அடிமை செய்தல் நியாயமல்லவென்று உணர்ந்து அதற்காகத் தங்களாலியன்றமட்டும் செய்யத்தயாராக இருந்து செய்து வந்தனர்.

மந்திராலோசனை சபையில் கார்பீல்டு பேசுந்திறமையில் சிறந்தவரிலொருவரெனச் சீக்கிரத்தில் எல்லோரும் அறிந்தனர். கஷ்டமான விஷயங்கள் யோசிக்கப்பட்டபொழுதெல்லாம் கார்பீல்டு தன்னுடைய சிறந்த புத்தி கூர்மை விளங்க விஷயங்கள் எளிதில் நடத்தும் விதத்தைக் காட்டிவந்தனர். ஆண்டுபற்றிச் சபையில் கஷ்டமான விஷயங்கள் வந்தபொழுதெல்லாம் கார்பீல்டு இன்றியமையாதவராக ஏற்பட்டார்.

முன்னொரு அத்தியாயத்தில் கார்பீல்டும் அவர் தாயாரும் கொலம்பஸ் என்னுமிடத்திற்குப்போய் அங்கு நடந்த சட்ட நிரூபண சபை நடந்துகொண்டிருந்ததைப் பார்த்தார்களெனச் சொன்னோம். அப்படிப் போய்ப்பார்த்துப் பத்து வருடங்களாவதற்கு முன் ஜேம்ஸ் அந்தச் சபையிலேயே முக்கியமானவர்களி லொருவராகத் தன்னுடைய புத்தி கூர்மையும் சொற்சுவை பொருட்சுவையும் விளங்கச் சிறந்த வேலை புரிந்தாரெனச் சொல்லுவது மிகவு மாச்சரியமான காரியம். இவ்விதம் முன்னுக்கு வருவது அருமையான காரியம்.

1861 வருடத்தில் லிங்கன் (Licoln) குடியரசுக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டார். தென் மாகாணங்களிலுள்ளவர்கள் வட மாகாணங்களை விட்டுப்பிரிய எத்தனித்துக்கொண்டிருந்தனர். ஆகையால், இருதிறத்தாருக்கும் சண்டை நேரிடும்போலத் தோன்றிற்று. இந்த விஷயத்தைப்பற்றிச்சபையில் யோசனை நடந்தபொழுது கார்பீல்டு இரவில் நெடுநேரம் விஷயத்தை நன்றாகப் படித்துச் சபைக்குப்போய்ப் பேசுவார். அடிமைத்தொழில் நியாயமென்று சொன்ன தென்மாகாணத்தார்பக்கம் பேசியவர்களை இராஜாங்கத் துரோகிகளென்று பயமன்றித் துணிவாகச்சொன்னார்.

மகாசபை (Congress) யார் சிலர் யோசியாமல் தென்மாகாணங்களிலுள்ளவருக்குச் சகாயமாய்ப் பேசினபொழுது கார்பீல்டும் அவர் போலியரும் அது சரியல்லவென்று கண்டனஞ்செய்து

ணர். நியாயமற்ற அடிமைத்தொழிலைக் கைகொண்ட தென்மாகாணத்தாருடன் சமாதானம் செய்வது பிழையென்று பயமின்றி உறுதியாகச்சொன்னூர்.

இருதிறத்தாருக்கும் சண்டை நடப்பது நிச்சயமென்பது கார்பீல்டுக்குத் தெரிந்தவிஷயம். ஒருநாள் இரவில், தன்னுடனிருந்த காக்ஸ் (Cox) என்பவரைப்பார்த்து, "சண்டை நடப்பது நிச்சயம்," என்று கார்பீல்டு சொன்னூர்.

"அதற்கையமென்ன?"

"நாமிருவரும் சண்டை போடவேண்டும்."

"இல்லாவிடில், நாம் பயங்காளிகளாகவேண்டும்."

"இதோ நாம் நம்முடைய நாட்டுக்குச் சண்டை போடுவதாகப் பிரதிக்கினை செய்வோம்," என்று இருவரும் சொல்லிப் பிரதிக்கினை செய்தனர்.

சம்டர் (Sumter) கோட்டையை துப்பாக்கி முதலியவைகளுடன் எதிர்த்த சமாசாரம் வரவே, லிங்கன் (Lincoln) தேசாதிபதி 75,000 மனிதர் சண்டைக்கு வேண்டுமென்று மாகாணங்கட்குச் சமாசாரமனுப்பினூர். உடனே அந்த விஷயம் ஒஹியோ சபையில் வந்தவுடன் கார்பீல்டு, "நம்மாகாணத்துக்கு 20,000 மனிதர்களும், 3,000,000 டாலரும் நாம கொடுக்கவேண்டும்," என்று மிகுந்த சாதுரியத்துடன் சொல்லவே, சபையோரெல்லோரும் சரியென்று ஒப்புக்கொணடனர்.

சம்டர் கோட்டை பிடிப்பட்டவுடன், ஒஹியோமாகாணத் தலைவர் டென்னிஸன் (Dennison) என்பவர் கார்பீல்டு என்பவரை ஒஹியோ ஏழாவது எட்டாவது காலாட்பட்டாளங்களை ஏற்படுத்தச் சொன்னூர். அப்பட்டாளங்களை யேற்படுத்திவிட்டு வந்தவுடன் அவரையே அவைகளிலொன்றுக்குத் தலைவராக நியமிக்க டென்னிஸன் எத்தனித்தார். அதற்குக் கார்பீல்டு தனக்கு அனுபோகம் போதாதென்று சொல்லி வேறு ஒருவரை நியமித்தால் அவருக்குக் கீழிருந்து வேலை செய்வதாகச்சொன்னூர். அதற்குப் பிறகு கார்பீல்டு மேற்குத்தேசத்திற்குச்சென்று ஒரு பட்டாளம் ஆள் சேர்த்து நியமித்தார். அப்படி யேற்பட்ட பட்டாளத்துக்குத்

தலைவர் ஒருவருமகப்படவில்லை. அப்பட்டாளத்தில் ஹைராம் வித்தியாசாலையில் மாணாக்கராக இருந்தவர் பலர் இருந்தனர். பலர் வேண்டுகோளின்பேரில் கார்பீல்டு அந்தப்பட்டாளத்துக்குத் தலைமை வகித்தார்.

சாதாரணமாகச் சமாதானமிருந்தபொழுது எடுத்தகாரியத்தில் ஜயித்துவந்ததுபோல சண்டையிலும் தான் சென்றவிடமெல்லாம் ஜயமும், சிறப்பும் கார்பீல்டு அடைந்துவந்தார். 1862ஆ ஜனவரிமீ 10உ ஒரு சண்டையில் எதிர்க்கட்சி சேனைத்தலைவனை யோடச்செய்தார். அதற்குப்பிறகு பல இடங்களில் எதிரிகளைத் தோர்க்கடித்தார். இவ்விதம் சண்டையில் ஜயம் அடைந்ததற்காக அதிகாரிகள் ஜேம்ஸ் கார்பீல்டை சேனைத்தலைவரில் உயர்ந்த பதவிக்கு நியமித்தனர்.

பிறகு சிக்கமாகா (Chickamaga) சண்டையில் கார்பீல்டு எதிரிகளைத் தோல்வியடையச்செய்தார். அதற்காக கார்பீல்டு அடுத்த மேல்பதவிக்கு உயர்த்தப்பட்டார்.

சண்டைக்குப் போவதற்குமுன் ஜேம்ஸ் தானிறந்தால் தன்னுடைய தாயார், மனைவி, குழந்தையினுடைய நிலைமையையும்; தான் அவர்கட்கு விட்டுவிட்டுப் போகக்கூடிய அற்ப சொத்தைப் பற்றி நினைத்து, வேதபுத்தகத்தைத் திடீரென்று திறந்து பார்த்தார். பார்த்தவிடத்தில், "போ, போ" என்று அகப்பட்டது. ஆனதுபற்றி அவர் கடவுள் தன்னைச் சண்டைக்குப்போக விரும்புகிறாரென எண்ணிச் சண்டைக்குப் போகத்துணிந்தார்.

சண்டைக்குப் போனபொழுது இவருக்கு காலாட்களை யுத்தாப்பியாசஞ் செய்யத்தெரியாது. அதற்காக முதலில் மரத்துண்டுகளால் பட்டாளம்போல் எதிரில் வைத்துக்கொண்டு, அந்தத்துண்டுகளை யுத்தாப்பியாசத்துக்கு வேண்டியவிதம் அங்குமிங்கும் வைத்துப்பார்த்து அந்தவிஷயத்தை நன்று கற்றுணர்ந்தார். தன்னுடைய பட்டணத்திலுள்ளவர்களுக்கு யுத்தாப்பியாசம் கற்றுக்கொடுப்பதற்காக ஒரு பள்ளிக்கூடம் ஏற்படுத்தி அவர்களை நாளொன்றுக்குச் சுமார் ஏழுமணிகாலம் அந்தவேலையில் பழகச் செய்தார். சின்னாள் செல்லுமுன்னர் கார்பீல்டு படையாட்கள் அந்த விஷயத்தில் சிறந்தவரெனப் பெயர் வாங்கினார்கள்.

ஒருமுறை கொலம்பஸ் என்னுமிடத்தைவிட்டு அவருடைய பட்டாளம் இருப்புப்பாதைமீது செல்லுவதாகத் தீர்மானிக்கப்பட்டது. வண்டி புறப்பட்டபிறகு கார்பீல்டு அவ்விடம் வரும்படி நேர்ந்தது. இவ்விதம் ஒருபொழுதுமவர் குறித்தகாலத்திற்குப்பின் வந்தாரில்லை. ஆகையால் ஒரு புகைவண்டி தனக்காக அமர்த்திக்கொண்டு தன்னுடைய பட்டாளத்தை யொருமணிநேரத்தில் எட்டிப்பிடித்தார்.

கார்பீல்டு ஒருமுறை க்ரேனர் (Colond Cranier) என்ற சேனைத்தலைவரிடம் சமாசாரமனுப்பித் தானும் வரும் சேனைகளை யொன்றுசேர்த்துக்கொள்ளும்படி யுத்திரவு பெற்றார். அப்பொழுது கார்பீல்டு இருந்தவிடத்திற்கு க்ரேனர் நூறுமயிலுக்கப்பாலிருந்தனர். ஆன்துபற்றித் தகுந்த மனிதன் ஒருவன் சமாசாரம் கொண்டுபோக வேண்டியதாக இருந்தது. மூவர் (Colond Moore) என்ற சேனைத்தலைவரை நோக்கி; "உம்மிடத்தில் கொடுத்த வேலையைத் தவறாமல் செய்யக்கூடிய மனிதனிருக்கிறானா ?" என்று கார்பீல்டு கேட்டார்.

"என்னிடத்திலொருவனிருக்கிறான். அவன் பெயர் ஜான் ஜார்டன் (John Jorden); அவனிட்ட வேலையைச் செய்துமுடிப்பான்," என்று மூவர் பதில்சொன்னார்.

அவனை அவர்கள்முன் வரவழைத்தார்கள். அவன் அந்த வேலையைச் செய்யத் தகுந்தவனென்று அவனைப் பார்த்தமாத்திரத்தில் கார்பீல்டு அறிந்தார்.

கார்பீல்டு சமாசாரத்தை மெல்லியகாகிதத்திலெழுதித் துப்பாக்கி குண்டைப்போல் சுருட்டி யதன்மேல் கரீயத்தைப்பூசி ஜார்டன் என்பவனிடங்கொடுத்தார். அவனுக்கு வேண்டிய ஆயுதங்களையுங் கொடுத்தனுப்பினார்.

ஒருநாள் ஒரு வேலைக்காரன் கார்பீல்டுமுன்வந்து அவர் கையைப்பிடித்துக்கொண்டு "ஜிம் !" என்று அவரைக் கூப்பிட்டான். அவன் யாரென்று கார்பீல்டு அறியாமல், ஆச்சரியத்துடன், "நீ யார் ?" என்று கேட்டார்.

"ஜிம், உன் பழைய கூட்டாளி," என்று அவன் கூறினான்.

"என்னுடைய பழைய கூட்டாளியா!" என்று கார்பீல்டு ஆச்சரியத்துடன் கேட்டார்.

"ஆம், உன்னுடைய பழைய சிநேகிதன்தான். நான் சேனையில் வேவுகாரத் தொழில் செய்துவந்தேன். இந்த யுத்தத்தில் ஜேம்ஸ். ஏ. கார்பீல்டு சேனைத்தலைமை நடத்துகிறாரெனக் கேள்விப்படவே, அவர் என்னுடன் கால்வாய்ப்படகில் வேலைசெய்தவராகத்தானிருக்கவேண்டுமென்றெண்ணி நான் இங்கு தேடி வந்தேன்," என்று அவன் கூறினன்.

அவன் சொல்லி முடித்தவுடன், "ஹாரி!" என்று சொல்லிக்கொண்டு அவனை கையைப் பிரியத்துடன் கார்பீல்டு குலுக்கினார். அவன் முழுப்பெயர் ஹென்ரி எஸ் ப்ரௌன் (Henry S. Brown). அவன் கால்வாய்ப்படகில் கார்பீல்டுடன் வேலைசெய்தவன். அவன் கார்பீல்டு இடத்தில் மிகவும் பிரியம்வைத்தவன்: ஆகையால் அவனுக்குக் கார்பீல்டு இடத்தில் வேலைசெய்ய அவா ஏற்பட்டது.

உடனே கார்பீல்டு ப்ரௌன் என்பவனை எதிரியின் பலத்தைப் பார்த்துக்கொண்டு வரும்படியனுப்பினார்.

மறுநாள் இரவில் ஜார்டன் வேலையை முடித்துக்கொண்டு திரும்பிவந்து கார்பீல்டு தூங்கிக்கொண்டிருந்தபொழுது அவரை யெழுப்பினன். அவர் அவனைக்கண்டு அவன் சொன்ன சமாசாரத்தைக்கேட்டு மகிழ்வுந்தார்.

ப்ரௌன் என்பவனையும் ஜார்டன் என்பவனையும் வேவுகார வேலையிலனுப்பினதிலிருந்து கார்பீல்டு சண்டைபோடும்பொழுது வேவுகாரவேலை செய்வதற்காகச் சிலரைத் தயார்செய்து அவர்களை யந்தவேலையைச் சரியாகச்செய்யும்படி யேற்பாடு செய்தார்.

வித்தியாசாலையில் கல்வி கற்றபொழுதும், பள்ளிக்கூடத்தில் வாத்தியார்வேலை நடத்தினபொழுதும், சண்டையில் படைத்தலைமைவகித்த பொழுதும், ஒரே விதமாக அவரைச்சுற்றிலுமிருந்தவரெல்லோரும் அவர் பக்கலில் அவர் சொல்லும்விதம் செய்து வந்தனர்.

சண்டையில் கார்பீல்டு செய்த சில அற்புதமான செயல்களை யிங்கு கூறுவோம்.

கார்பீல்டு ஜயித்த மிடில்கிரீக் (Middle Greek) சண்டையில் ஹைராம் வித்தியாசாலையில் படித்த மாணாக்கர் அனேகர் சண்டை செய்ய வந்திருந்தனர். எதிரிகளிருந்தவிடத்திற்கும் கார்பீல்டு இருந்த விடத்திற்கும் நடுவில் ஒரு ஆறு ஓடிற்று. எதிரிகள் ஒரு குன்றின்மீது தங்கியிருந்துகொண்டு சண்டையிட்டு வந்தனர். நேரில் சண்டைக்கு வந்தாரில்லை.

அவர்களையப்படிச் செய்வதற்காகக் கார்பீல்டு தன்னுடைய ஹைராம் வித்தியாசாலை மாணாக்கர்கள் நூறு பெயர்களையழைத்து அவர்களை வில்லியம்ஸ் என்பவருக்கீழிருந்து வேலை செய்யும்படி சொல்லி எதிரிகளிருந்த குன்றின்மீது எதிரிகளைச் சண்டைக்கு வெளியில்வரும்படி செய்யச்சொன்னார். அவர்கள் உடனே ஆற்றைத்தாண்டிக் குன்றின்மீது ஏறினர். பாதிவழி செல்வதற்கு முன் 2,000 எதிரிகள் தங்கள் துப்பாக்கிகளைக்கொண்டு இவர்களின் பேரில் குண்டுபோடத் தொடங்கினார்கள். அதைக்கவனியாமல் நூறு வீரர்களும் குன்றின் சிகரம்போய்ச்சேர்ந்தனர். போய்ச் சேர்ந்தவுடன் அங்கு பதுங்கியிருந்தவரனேகர் இவர்களின்பேரில் குண்டு போடத்தொடங்கினர். இவர்கள் ஒரு நிமிஷம் மயங்கினார்கள். உடனே இவர்கள் தலைவர் வில்லியம்ஸ், "ஒவ்வொருவருமொருமரத்தண்டை செல்லுங்கள். அவர்கள் அனுப்புவதற்குப் பதில்சரியாக அனுப்புங்கள்" என்று உரக்கச்சொன்னார். அவ்விடத்தில் பெரியமரங்களிருந்தன. ஒவ்வொரு மரத்தின் பின் ஒவ்வொருவர் தங்கி எதிர்க்குண்டுக் ககப்படாமல், எதிரிகளை தங்களுடைய குண்டுகளால் எமலோகமனுப்பினர்.

இப்படிச் சண்டை செய்ததில் நூறு வீரர்களில் சிலர் உயிர் துறந்தனர். அதைக்கண்டு கார்பீல்டு 500 வீரரை யவர்களுக்குதவி செய்ய அனுப்பினார். அவர்கள் ஆற்றைத்தாண்டினவுடன் 4,000 எதிரிகளும், 12 பீரங்கிகளும் அவர்களின்மேல் குண்டு சரமாரியாகப் பொழியத் தொடங்கினதைப் பார்த்த கார்பீல்டு சேனைத்தலைவர் மூவர் (Colonel Moore) என்பவரை யவருதவிக்கனுப்பினார். சண்டை மிகவும் கடுமையாக நடந்துகொண்டிருந்தது. கார்பீல்டு உயர்ந்த குன்றின்பேரில் நின்றுகொண்டு பார்த்துக்கொண்டிருந்தார். அவருக்குதவிக்காக ஷெல்டன் (Sheldon) சேனைகொண்டு வருவதை யெதிர்பார்த்துக்கொண்டு நின்றார். கடவுளைத்தியா

ணித்துக்கொண்டு நிற்கையில், அவருக்கு ஜயம் கிடைக்காது போற்றோன்றிற்று. அவர் உடனே தன் பக்கத்தில் வைத்துக் கொண்டிருந்த நூறு பெயர்களைக்கூப்பிட்டு, "வாருங்கள், நாம் போய் நம்மாலியன்றமட்டும் சண்டை போடுவோம்," என்று சொன்னார். அப்பொழுது சூரியாஸ்தமனசமயம். உடனே வெஷல்டன் சேனைக்கொடி கண்ணுக்குப்புலப்பட்டது. சமயத்தில் உதவி வந்து சேர்ந்தது. உடனே எதிரிகள் ஓடத்தொடங்கினர். இவ்விதம் அந்தச்சண்டையில் கார்பீல்டு ஜயமடைந்தார்.

மேற்சொல்லிய சண்டை நடந்தபிறகு கார்பீல்டுக்குக்கீழிருந்த யுத்தவீரர்கள் களைப்படைந்து சாப்பாட்டுக்கு வேண்டிய உணவு குறைந்து கஷ்டப்பட்டார்கள். உணவு கொண்டுவருவதற்குப் பாதைகளோ ஆழ்ந்த மண்ணுள்ளவைகளாக இருந்தன. பக்கத்திலிருந்த ஆற்றின் வழியாகக் கொண்டுவர நினைத்தால், ஆற்றில் வெள்ளம் அதிகமாகப்பெருகி, அப்படிச்செய்வது முடியாமலிருந்தது. அத்தருணத்தில் எவ்விதமேனும் உணவு கொண்டு வரவேண்டியது முக்கியமாக இருந்தது. ஆகையால் கார்பீல்டு அந்த ஆற்றின்வழியாகப் போய்க்கொண்டுவர யோசித்தார். பக்கத்திலிருந்த படகோட்டிகளெல்லோரும் அது முடியாத காரியமென்று கூறினர். அப்பொழுது அங்கு வேவுகாரவேலை செய்துவந்த முன் கால்வாய்ப்படகில் அவருடன் வேலைசெய்த ப்ரௌன் என்பவனை யதைப்பற்றிக் கேட்டார். அவன் உயிருக்கபாயம் நேர்ந்தபோதிலும் உணவு கொண்டுவரச் சம்மதித்தான். உடனே கார்பீல்டும், ப்ரௌனும் ஒரு படகில் குதித்து அந்த வெள்ளம் பெருகியிருந்த ஆற்றில் செல்லத்தொடங்கினர். அது மிகவும் துணிச்சலான காரியம். இருவரும் படகுவேலையிற் தேர்ச்சியடைந்தவர்களானபடியால், ஆற்றின் முகத்துவாரத்தைச் சேர்ந்தனர். அங்கு ஒரு பழைய புகைக்கப்பல் இருந்தது. கப்பற்றலைவன் எதிர் கட்சியைச் சேர்ந்தவன். ஆனபோதிலும் கார்பீல்டு அவனைக் கூப்பிட்டு, அந்தக்கப்பலில் தன்னுடைய யுத்தவீரருக்குணவு கொண்டுபோவதற்காக அதைத் தான் கொண்டு போகவேண்டியதாக இருக்கிறதென்று சொன்னார். கப்பற்றலைவன் ஆற்றில் கப்பலைச் செலுத்தமுடியாதென்றான். கார்பீல்டு கப்பற்றலைமை தான் வகித்து, கப்பற்றலைவனையும் வேலை

யாட்களையும் கப்பலில் செல்லச்செய்து, வேண்டிய உணவு கப்பலில் ஏற்றிக் கப்பலைச் செலுத்தச்சொன்னார். இரவில் காற்றும் மழையும் கடுமையாக அடித்தன. கப்பற்றலைவன் கப்பலைச் செலுத்த முடியாதென்றான். கார்பீல்டு தான் தலைமை வகித்துக்கொண்டுவிட்டபடியால் அவர் சொற்படி மற்றவர் நடக்க வேண்டுமென்று சொல்லிக் கப்பலை நடத்தும்படி செய்தார். மிகவும் கஷ்டப்பட்டுக் கப்பலையுணவுடன் பஞ்சத்திலடிபட்டிருந்த யுத்தவீரருக்குக் கொண்டுவந்து சேர்த்தார். அவர் வரவைக்கண்ட யுத்தவீரர்கள் அவரை மிகவும் பிரியத்துடன் கொண்டாடினர்.

ப்ரௌன் அதிக நாகரீகமற்றவனாக இருந்தபோதிலும் கார்பீல்டு இடத்தில் பிரியம் உண்மையாக வைத்தவன். மேற்சொல்லியவேலை ப்ரௌன் இல்லாமல் நடந்திருக்கமாட்டாது. ப்ரௌன் கார்பீல்டுக்குக் கீர்த்தியுண்டாவதில் திருப்தியும் ஆசையுமுள்ளவனாகவிருந்தான். ஆனால் அவன் பெரும் குடியன். அவ்விடத்தில் கார்பீல்டுக்கு முழு நம்பிக்கையுண்டு. அவனுமவரிடத்தில் ஒழுங்காக நடந்துவந்தான். ப்ரௌன் என்பவனுக்கு வேண்டின பொழுதெல்லாம் கார்பீல்டு பணங்கொடுத்துதவிவந்தார். கடைசியாக ஒரு தர்மவைத்தியசாலையில் ப்ரௌன் நோயிலடிபட்டு உயிர்துறந்தான். அவனை யடக்கம்செய்யவேண்டிய செலவும் கார்பீல்டு செய்தார்.

கார்பீல்டு எந்தக்காரியம் செய்யப்புகுந்தாலும் தன்னுடைய தேக சௌகரியத்தைப் பார்த்துக்கொள்ளாமல் காரியத்திலே கண்ணாக இருந்து அபாயத்திற்கஞ்சாமல் காரியத்தைச் செய்து முடிப்பார். ஒருமுறை ரோஸ்கிரான்ஸ் (General Rosecrans) என்ற சேனைத்தலைவர் யுத்தத்தில் தோல்வியடைந்தார். அப்பொழுது அந்த ஸமாசாரம் தாமஸ் (General Thomas) என்ற சேனைத்தலைவருக்கு அனுப்பவேண்டியதாக இருந்தது. அப்பொழுது அந்த விஷயத்தைச்செய்ய ஒருவரும் துணிந்தாரில்லை. ஜேம்ஸ் கார்பீல்டுதான் சமாசாரம் கொண்டுபோவதாகச் சொன்னார். அப்படிச் செல்லுவதில் உயிருக்கபாயம் நேரிடாமலிருப்பது அரிது. ஆயினும் கார்பீல்டு குதிரையின்மீது சென்று காரியத்தைச் செய்துமுடித்தார்.

அவர் சென்றபொழுது கா (Captain Gaw) என்ற யுத்த வீரனும் இரண்டு சேவகர்களும் வழிகாட்டுவதற்கு அவருடன்

குதிரையேறிச் சென்றனர். போகும் வழியில் எங்கும் எதிரிகளி ருந்து சண்டை செய்துகொண்டிருந்தனர். தாமஸ் என்ற சேனைத் தலைவர் இருந்த இடத்திற்குப்போகக் காட்டின்வழியாகச் சுற் றிக்கொண்டு எட்டு மயில் தூரம் போகவேண்டியதாக இருந்தது. மிகவும் ஜாக்கிரதையுடன் அவர்கள் எதிரிகள் கண்களிற்படாமல் கொஞ்சதூரம் சென்றனர். அவர்கள் போகும்வழி ஒரு சந்து. ஒருபக்கத்தில் அடர்ந்த காடும், ஒருபக்கத்தில் பஞ்சுச் செடிகள்வைத்த வெளியான தோட்டமும் இருக்க, அவர்கள் போகும்பொழுது திடீரென்று ஆயிரக்கணக்காக அவர்களின்மீது குண்டுகள் விழத்தொடங்கின. இரண்டு சேவகர்களும் உயிர்துறந் தனர். கார்பீல்டு ஏறியிருந்த குதிரை மிகவும் சிறந்தது. அது ஜாதிக்குதிரையானபடியால் தன்னுடைய எஜமான் நிலையறிந்து சரியாக நடக்கக்கூடியது. கார்பீல்டு தோட்டத்து வேலியைத் தாண்டிக் குதிரையைத் தட்டிக்கொடுத்து நேராகக் குதிரை யைச் செலுத்தாமல் வளைந்து வளைந்து குதிரையைச் செலுத்தி எதிரிகளுடைய துப்பாக்கிகளுக்கு இலக்காகாமல் போனார். ஒரு சார்வாக உயர்ந்த பூமியின்மீது அவர் செல்லவேண்டியதாக விருந்தது. அந்தப்பூமியின் சிகரத்தைத்தாண்டிவிட்டால் அபா யம் இருக்கமாட்டாது. ஆனால் அவ்விதம் தாண்டிச்செல்லுவதற் குள் எதிரிகள் இருமுறை குண்டுபோடக்கூடும். அவர் பிழைப் பது அரிதென்று பார்த்தவர் நினைத்தார். இருபக்கத்திலும் குண்டு கள் சரமாரியாகப்பொழிய அவர் சென்றார். ஒருதடவை ஒரு குண்டு அவரது குதிரைமேற்பட்டு அதற்குக்காயம் உண்டாக் கிற்று. அதைக்கவனியாமல் குதிரைவேகமாய்ச் சென்றது. கட வுள் கிருபையால் கார்பீல்டு எதிரிகள் குண்டாலடிபடாமல் கண் டோர் வியக்கும்விதம் படைத்தலைவர் தாமஸ் என்பவரிடம் சமா சாரம் கொண்டுபோய்க் கொடுத்து அந்தச் சேனையைக் காப்பாற் றினர். அவர் அப்படித் தாமஸ் என்பவரிடம் சேர்ந்தவுடன் அவர் ஏறிச்சென்ற குதிரை கீழ்விழுந்து உயிரைவிட்டது.

ஒரு சமயத்தில் ஒரு அடிமை அவன் எஜமானிடமிருந்து கார்பீல்டும், அவர் யுத்தவீரர்களும் தங்கியிருந்த விடத்திற்கு ஓடி வந்து பதுங்கினன். உடனே எஜமானன் அவனைத்தேடிக்கொண்டு பின்வந்தான். கார்பீல்டுக்கு மேல் அதிகாரிகளிடமிருந்து அந்த அடி

மையைத் தேடித் தன்வசம் கொடுக்கும்படிக் கார்பீல்டுக்கு உத்தரவு அந்த எஜமானன் வாங்கிக்கொண்டு வந்தான். அதற்குக் கார்பீல்டு தன் யுத்தவீரர்கள் அடிமையைத் தேடிக்கொடுக்க ஏற்படவில்லையென்றும், தேடுவோருக்குத் தடை பொருவரும் செய்யவில்லையென்றும், ஆகையா லதனிடத்திலிருப்பவர்களைத் தேடவிடமுடியாதென்றும் பதில் அனுப்பினார். பக்கத்திலிருந்தவர்கள் அப்படி மேலதிகாரிக்கு எழுதுவது சரியல்லவென்று சொன்னார்கள். ஒழுங்குபடச்செய்தல் ஒருபொழுதும் குற்றமாக மாட்டாதென்று கார்பீல்டு சொன்னார். புத்தக ஆரம்பத்தில் கார்பீல்டு குழந்தைப்பருவத்தில் வாசிக்கச்சென்றபொழுது ஒரு உபாத்தியாயர், "நீ நன்றாகப் படித்தால் ஒரு சேனைத்தலைவனுவாய்," என்று சொன்னார் என்று சொன்னோம். அந்த உபாத்தியாயர் சொல்லியவிதம் கார்பீல்டு சேனைத்தலைவர் வேலை வகித்துப் புகழுமடைந்தார்

# 25-அத்தியாயம்.

" துணைநல மாக் கந்தருஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்"

1862ஆ கோடை காலத்தில் ஓஹியோவில் ஒரு ஜில்லாவுக்கு கார்பீல்டைக் குடியரசுமகாசபை (Congress) க்குப் பிரதிநிதியாக அனுப்புவதற்கு மேற்குறித்த ஜில்லாவிலுள்ளவர்கள் நியமித்தனர். அவர் சண்டையில் ஜயமடைந்து கீர்த்திபெற்றதும் அவரது சாமர்த்தியமும் அப்படிச் செய்வதற்குக் காரணங்களாயின. அவ்விதம் நியமனம் செய்தது அவருக்குத்தெரியாது நடந்துவிட்டது. அதையவர் கேள்விப்பட்டபொழுது அவர் சண்டையில் தானமர்ந்திருந்தபடியால் அதைவிடாமலிருக்கவேண்டுமென்றெண்ணினர். ஆனதுபற்றி யிந்த வேலையை யொப்புக்கொள்ளமுடியாதென்று முதலில் எண்ணினர். மேலும் படையில் எல்லோராலும் அவர் நேசிக்கப்பட்டுவந்தார். சம்பளம் மகாசபையில் கிடைப்பதில் இருமடங்கு சேனையில் அவருக்குக் கிடைத்தது. அவரோ ஏழை, அவருக்குப்பணமதிகம் கிடைப்பது அவசியமாக விருந்தது. சேனையிலேயே வேலையிலிருந்தால் அவருக்குக் கீர்த்தியும நற்பதவியும் கிடைக்கும். இவ்விதமாக இருந்தபொழுது அவர் மகாசபைக்குப் போவதற்குயொப்புக்கொள்ளுதல் அவருக்கு நஷ்டமான காரியம். ஆனால் குடியரசுக்கதிபதியாகிய லிங்கன் (President Lincoln) என்பவர் கார்பீல்டு மகாசபைக்குச் சண்டையில் திறமையையும் அனுபோகமும் உள்ள பிரதிநிதியாக வரவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டதின்பேரில் கார்பீல்டு சம்மதித்தார்.

1868ஆ டிசம்பர் மாதத்தில் கார்பீல்டு இரண்டு வருடம் மூன்று மாதம் சேனையில் வேலைசெய்துவிட்டு மகாசபையில் பிரதிநிதியாக உட்கார்ந்து வேலை செய்யத்தொடங்கினர்.

இக்காலமெல்லாம் ஹைராம் வித்தியாசாலையதிகாரிகள் கார்பீல்டு வித்தியாசாலைத்தலைமை நடத்தத் திரும்பி வருவாரென

நினைத்திருந்தனர். ஓஹியோ சட்ட நிரூபண சபையோரிலொருவராக இருந்தபொழுது சபைவேலை யொழிந்த வேளையில் வித்தியாசாலையில் வேலைசெய்து வந்தார். மகாசபையில் பிரதிநிதியாக விருந்த முதல் இரண்டு வருஷமும் அவர் பெயர் வித்தியாசாலைத்தலைவரென்று ஹைராம் வித்தியாசாலைப்புத்தகத்தில் விளங்கிற்று. பிறகு ஹைராம் வித்தியாசாலையதிகாரிகளிலொருவராக அவர் தன் வாழ்நாள் முழுவதும் இருந்தனர். 17-வருஷம் மகாசபையில் தன்னுடைய ஜில்லாவுக்குப் பிரதிநிதியாக வேலை புரிந்தனர். அக்காலத்தில் அவர் மகாசபையில் எல்லோருக்கும் தலைவராகத் தான்பிறந்த மாகாணத்திற்கும் குடியரசு நாட்டிற்கும் திலகம்போல் விளங்கினர்.

மகாசபையில் கார்பீல்டு பிரதிநிதியாக உட்கார்ந்து வேலை பார்க்கத் தொடங்கியபிறகு நடந்த முக்கியமான விஷயங்களில் முதல் முதல் வந்த மந்தண விஷயபத்திரம் படை வீரர்களுக்குச் சம்பளத்துடன் இனமாக ஒரு தொகைப்பணம் கொடுத்து அவர்களை வேலை செய்யும்படி செய்யவேண்டுமென்றும் மனிதர்களைக் கட்டாயப்படுத்தி வேலையிலமர்த்த வேண்டியதில்லையென்றும் கார்பீல்டு சேர்ந்த கட்சிக்காரர்களால் கொண்டுவரப்பட்டது. அப்படிச்செய்தல் எல்லோருக்கும் பிடித்த காரியமாக விருந்தபோதிலும் இராஜாங்கத்திற்குச் செலவு அதிகமாக ஏற்படுவதாக இருந்தது. கார்பீல்டு அது தனது கட்சிக்காரருக்கும் பிடித்ததாக விருந்தபோதிலும், அதற்கு விரோதமாகப் பேசத் தொடங்கினர். அப்படிச்செய்தலால் தகுந்த போர்வீரர் அகப்படமாட்டார்களென்றும், செலவு இராஜாங்கத்தால் தாங்கமுடியாதென்றும், உடம்பில் பலமுள்ளவர்கள் 18-வயது முதற்கொண்டு 45-வயது வரைக்கும் எக்காலத்தில் வேண்டப்பட்டாலும் நாட்டுக்குச் சண்டை செய்யச் சித்தமாக இருக்கவேண்டுமென்றும் சொல்லி, ஆனது பற்றி யவ்விதம் செய்யக்கூடாதென்று பயமின்றிப் பிரசங்கஞ் செய்தார். மகாசபையில் பிரதிநிதிகளுடைய அபிப்பிராயம் எடுத்தபொழுது அவர் தன் கட்சிக்காரருக்கு விரோதமாகச் சொன்னர்.

மேற்சொல்லியவிஷயம் நடந்தபிறகு சிலநாட்கழித்து ஒரு சிநேகிதர், “ஐயா, நீர் அன்றையதினம் உம்முடைய அபிப்பிராயம் கொடுத்ததைப்பற்றி நான் மனமகிழ்ச்சியடைந்தேன். ஒரு

வரும் உம்மை யெதிர்த்து ஜயிக்கமுடியாது. ஆனல் நானுமக்குச்சொல்வ தொன்றுண்டு. மகாசபையில் பிரதிநிதியாக இருந்துகொண்டு தன்னுடைய கட்சிக்காரருக்கு விரோதமாக அபிப்பிராயம் கொடுத்தல் அபாயமான செயலென்பதை நீர் மனத்தில் வைக்கவேண்டும்,'' என்று கார்பீல்டை நோக்கிச் சொன்னர்.

"ஐயா, ஒருவன் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் செய்வது அபாயகரமானதென்று சொல்லுகிறீர்! ஒருக்கால் அவனைச் சேர்ந்தவர்கள் அவனைப் பிரதிநிதிவேலைக்கு மறுபடியும் நியமிக்காமல் போய்விடலாம். ஆனல் மனச்சாட்சிக்கு விரோதமாக நடத்தலைவிட அந்த வேலையையிழத்தல் பெரிதல்ல,'' என்று கார்பீல்டு மறுமொழி கூறினர்.

தன் மனச்சாட்சிக்குச் சரியாகத் தோன்றுவதை யெப்பொழுதும் கார்பீல்டு செய்யத் துணிந்தவர். ஒருமுறை குடியரசுத் தலைவர் லிங்கன் (President Lincoln) ஒருவிஷயம் செய்யவேண்டுமென்று சொன்னர். அது சரியெனக் கார்பீல்டுக்குத் தோன்றிற்று. உடனே அதைப்பற்றி யெல்லோரும் ஒப்புக்கொள்ளும்விதம் பேசிக் காரியத்தை நடத்த உதவிபுரிந்தார். மற்றொரு சமயத்தில் லிங்கன் (President Lincoln) என்பவர் ஒருகாரியம் செய்தார். அப்படிச்செய்தது சிலருக்குப் பிடித்ததாயில்லை. அவ்விதம் கார்பீல்டு லிங்கன் செய்த விஷயம் சரியல்லவென்று பயமின்றி உரைத்தார். அப்படிச்சொன்னது அவரைப் பிரதிநிதியாக அனுப்பியிருந்தவர்கட்குப் பிடிக்கவில்லை. ஆகையால் அவர்கள் அவரை மறுமுறைப் பிரதிநிதியாக நியமிக்கிறதில்லையெனத் தீர்மானித்தனர். பிறகு ஓஹியோவில் பிரதிநிதிநியமிக்கும் சமயம் வந்தபொழுது ஜனங்கள் சபை கூடினர்கள். கார்பீல்டைக் கூப்பிட்டு அவர் செய்ததற்கு நியாயம் சொல்லச்சொன்னர்கள். அப்படிச் சொன்னவர்கள் கார்பீல்டு தான் செய்ததற்காகத் தங்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளுவாரென நினைத்தார்கள். ஆனல் ஜனங்கள் நின்றுபேசும் மேடையின்மீது அவர் சென்று பின்வருமாறு பேசினர்:—

"கனவான்களே, யான் சொன்னதில் பிழையொன்றுமில்லை; ஆகையால் நான் உங்களிடத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளக்

சாரணமொன்றுமில்லை. மகாசபையில் பிரதிநிதி உத்தியோகம் செய்வதற்காக, என் மனச்சாட்சிக்கு விரோதமாக என்னால் நடக்கமுடியாது. என்னை மகாசபைக்கு நியமித்தனுப்பின கனவான்களாகிய உங்களுடைய அபிப்பிராயங்களுக்கு நான் நிரம்பவும் மரியாதை வைத்திருக்கிறேன். ஆனால் என்னுடைய மனச்சாட்சிக்கு அதைவிட அதிக மரியாதை எனக்கிருக்கிறது. என்னுடைய சுயபுத்திக்கும் மனச்சாட்சிக்கும் ஒத்தபடி உங்களுடைய பிரதிநிதியாக மகாசபையில் நான் உங்களுடைய காரியத்தைச் செய்ய நீங்கள் விரும்பினால், நான் அப்படிச்செய்யச் சித்தமாகவிருக்கிறேன். அவ்விதமில்லாவிடில் நீங்கள் என்னை நியமிக்க வேண்டியதில்லை. நான் சாதாரணமான சுவேச்சையாக நடக்கும் மனிதனைக் காலங்கழிக்கப் பிரியப்படுவேன்."

மேற்சொல்லிய பேச்சில் கார்பீல்டு என்பவருடைய நிதானமும் விஷயங்களைப் பயமின்றி மறைக்காமல் சொல்லும் திறமும் நன்கு விளங்குகின்றன மேற்சொல்லியவிதம் பேசிவிட்டு அச்சபையினின்று வெளியில் சென்றார். அவர் வெளியில் புறப்பட்டவுடன் அச்சபையோரிலொருவர் எழுந்திருந்து, "கனவான்களே, நமக்குமுன் அவ்வளவு தைரியமாகப்பேசுந் தன்மையுள்ளவர் நம்மால் நியமிக்கத்தகுந்தவர். ஆகையால் நாம் எல்லோரும் கார்பீல்டு என்பவரையே நமக்கு மகாசபையில் பிரதிநிதியாக நியமிக்க வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறேன்," என்று சொன்னார்.

உடனே சபையோரெல்லோரும் ஒன்றுசேர்ந்து குதூகலத்துடன் கார்பீல்டைத் தங்களுக்குப் பிரதிநிதியாக நியமித்தனர்.

1868ஞு கோடைகாலத்தில் கார்பீல்டு ஐரோப்பாகண்டத்தில் தன் தேக சௌக்கியத்திற்காக யாத்திரை செய்துவந்தார். அவர் திரும்பி ஊர்வந்து சேர்ந்தபொழுது அவருடைய சிநேகிதர்களெல்லோரும் அவருக்கு விருந்துபண்ணி யவரது வரவைக்கண்டு தங்களுக்குண்டான சந்தோஷத்தைக் காட்ட விரும்பினர். அவர் அதற்குச் சம்மதித்தார். அச்சமயத்தில் பிறர் எவ்விதம் நினைத்தாலும் அதற்குப் பயப்படாமல் அவர் செய்த பிரசங்கத்தில் தனக்கு ஒழுங்காகத் தோன்றினதை யெடுத்துச்சொன்னார்.

1865ஆம் ஏப்ரல் மாதம் 14உ குடியரசுக்கதிபதி லிங்கன் (President Lincoln) சதிகாரனொருவனால் கொலை செய்யப்பட்டார். அவர் எல்லோராலும் நேசிக்கப்பட்டவர். ஆனதுபற்றி எல்லோரும் மனம் வருந்தி அவரைக் கொலைசெய்த பாதகனைச் சித்திரவதை செய்வதற்கும் அக்கொலைக்கு எவ்விதத்திலும் இடங் கொடுத்தவர்களைத் தண்டிப்பதற்கு பதினாயிரக்கணக்காய்க் கூடினர். இறந்த லிங்கன் என்பவரைத் தூஷித்தவன் ஒருவனை ஜனங்கள் உடனே கொலை புரிந்தனர். எல்லோரும் கோபாவேசமாகக் கூடிப்பேசிக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் ஒரு தந்தி சமாசாரம் வாசிக்கப்பட்டது. ஸேவார்ட் (Seward) மரணாவஸ்தைப்பட்டுக்கொண்டிருக்கிறார். ஸேவார்ட் என்பவர் இறந்த லிங்கன் என்பவருக்குக் காரியதரிசியாக இருந்தவர். இதைக் கேட்கவே ஜனங்களுக்கொன்றுந் தோன்றாமல் மதிமயங்கி நின்றார்கள். கலகம் நேரிடும்போற்றோன்றிற்று.

அச்சமயத்தில் கார்பீல்டு கையில் ஒரு சிறு கொடியைப் பிடித்துக்கொண்டு, "சிநேகிதர்காள், நீங்கள் மனங்கலங்கவேண்டாம். எல்லாம் படைத்த ஈசனிருக்கிறார். வாய்மை, தூய்மை, தயை முதலியவைகட்குக்காரணமான கடவுள் அரசாட்சி ஒருக்காலும் அழியாது. யாருக்கு எது நேரிட்டபோதிலும் வாஷிங்டன் (Washington) நகரத்திலுள்ள இராஜாங்கம் அழியாமலிருக்குமென்பதை மறக்காதீர்," என்று சொல்லி ஜனங்கள் மனக்கலக்கத்தைத் தீர்த்தார். அவர் பேச்சைக்கேட்ட ஜனங்கள் கலக்கமற்று நிதானமடைந்தனர். இதில் அவருடைய சமய உசிதமும், புத்திகூர்மையும், பிறர் மனத்தைக் கவரும் சக்தியும் நன்கு விளங்குகின்றன.

கார்பீல்டு படிப்பில் சிறந்தவர். தனக்கு என்னவேலையிருந்தபோதிலும் படிப்பிற் கொஞ்சநேரங் கழித்து வந்தார். எது நேரிட்டபோதிலும் அதற்குத்தகுந்தபடி செய்யவேண்டிய விஷயத்தைக் கண்டறியும்படியான புத்தி கூர்மையுள்ளவர்; பேச்சிலோ அவருக்கீடு ஒருவருமில்லை. எவ்விஷயமும் கற்றறியுந் திறமையும் விருப்பமுமுள்ளவர். அவ்வளவு சிறந்த புத்தியோடு கார்பீல்டு பரிசுத்தமுள்ள மனமும், அன்பு பெருகும் இருதயமும், கர்வமில்

லாக்குணமும், பெருந்தன்மை யுருவெடுத்தாற்போன்ற சுபாவமு முள்ள குணசாலி.

1880ஹு ஜனவரிமாதத்தில் கார்பீல்டு என்பவரை மகாசபை (Congress) க்கு மேற்பட்ட சபை (Senate) க்கு நியமிக்க ஓஹியோவிலுள்ளவர்கள் நினைத்தார்கள்.

ஒரு சிநேகிதர் இந்த விஷயத்தைப்பற்றி யவரைக்கேட்ட பொழுது, "உங்களிஷ்டப்படி நீங்கள் செய்யலாம். நான் அந்த வேலைக்குத் தகுதியுள்ளவனென்று நீங்கள் நினைத்தால், நானதற்குத் தடையொன்றும் சொல்லேன்," என்று அவர் பதில் மொழிந்தார்.

"நீர் கொலம்பஸ் (Columbus) என்னுமிடத்திற்கு நியமனம் நடக்கும்பொழுது போகவேண்டும்," என்று அந்த சிநேகிதர் சொன்னார்.

"நான் அதற்குச் சம்மதியேன். அந்த வேலைக்கு நான் முயற்சி செய்யமாட்டேன். ஹைராம் வித்தியாசாலையில் பெருக்கி மணியடிக்கும் வேலைக்குமாத்திரம் நான் முயற்சி செய்தேனே தவிர, இதுவரையில் வேறொரு வேலைக்கும் முயற்சி செய்தே னில்லை. ஜனங்கள் நான் வேலை செய்யவேண்டுமென்று விரும் பினால் என்னை நியமிப்பார்கள்," என்று கார்பீல்டு கூறினார்.

"நீர் சொல்வது மெய்தான். முயற்சியொன்றும் நீர் செய்ய வேண்டாம். உம்முடைய சிநேகிதர்கள் உம்முடன் கலந்து பேசு வதற்காக உம்மைக் கொலம்பஸ் என்னுமிடத்திற்குப் போகச்சொல் லுகிறோமேதவிர வேறில்லை," என்று அந்த நண்பர் சொன்னார்.

"நான் எக்காரணம்பற்றி அங்குபோனபோதிலும் ஜனங்கள் நான் வேலைக்கு முயற்சி செய்வதற்காகத்தான் வந்திருப்பதாக நினைப்பார்கள். அது என் மனத்துக்கிசையாத விஷயம். ஆகை யால் நான் கொலம்பஸுக்குப் போகமாட்டேன். அதைப்பற்றி நீர் இனிமேல் சொல்லவேண்டாம்," என்று கார்பீல்டு உறுதி யாகச் சொல்லிமுடித்தார்.

கார்பீல்டு கொலம்பஸுக்குப் போகாமலே அந்த வேலைக்கு நியமிக்கப்பட்டார். நியமிக்கப்பட்டபிறகு கொலம்பஸுக்குப் போய் அவர் அவ்வூர்ச்சபையாரின் முன் ஒரு பிரசங்கம் செய்தார். அந்தப் பிரசங்கத்தினிறுதியில் பின்வருமாறு பேசினார்.

"இருபது வருடகாலமாக நான் நமது தேசத்து வேலை பார்த்து வந்திருக்கிறேன். அதில் பதினெட்டு வருடகாலம் ஐக்கமாகாண மகாசபையிலிருந்திருக்கிறேன்.

அப்படி நான் வேலை செய்து வந்தபொழுது எப்பொழுதும் ஒரு காரியம் செய்ய முயன்றுவந்தேன். நான் தவறினாலும் இல்லாவிட்டாலும் என் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நான் நடந்து வந்திருக்கிறேன். அப்படிச் செய்வதால் எனக்கு என்ன நஷ்டம் ஏற்பட்டாலும் நான் கவனித்தேனில்லை. அனேகவருடகாலமாக ஒரு ஜில்லாவுக்குப் பிரதிநிதியாக அனுப்பினவர்களுக்குத் திருப்தியுண்டாகும்விதம் நடக்க எனக்கு மிகவும் விருப்பமுண்டு; ஆனால் நான் சொல்வது தற்புகழ்ச்சியாகத் தோன்றினபோதிலும், எப்பொழுதும் எல்லாவற்றையும்விட ஒருவனுடைய உவப்பையடைய நான் விரும்பினேன்; அவர் பெயர் கார்பீல்டு. அந்த மனிதனுடன் நான் தூங்கவும், சாப்பிடவும், வசிக்கவும், இன்பதுன்பங்களை யனுபவிக்கவும் வேண்டியிருக்கிறது. அவனுடைய சம்மதியில்லாவிடின் எனக்கு ஒருபொழுதும் சரியற்ற தோழமை யேற்பட்டுவிடும்."

மேற்கூறிய பேச்சில் கார்பீல்டு வேடிக்கையாகத் தனக்குப்பிடிக்காத காரியத்தை யொருபொழுதுஞ் செய்ய முடியாதென்று கூறினார்.

அச்சபை (Senate) வேலை யவருக்குக் கொடுத்ததில் அவருடைய கட்சிக்காரருக்குத் திருப்தியிருந்ததோடுகூட, எதிர்க்கட்சிக்காரருக்கும் மிகுந்த உவப்பு ஏற்பட்டது. இருதிறத்தாரும் அவர் அந்த வேலைக்கு வந்ததைப்பற்றி ஒரேமனமுள்ளவர்களாகச் சந்தோஷமடைந்தார்கள்.

இவ்விதம் நம் கதாநாயகராகிய ஜேம்ஸ் கார்பீல்டு சிறந்த பதவிக்குவந்தார். இந்தவேலைக்கு மேற்பட்டது ஒன்றுதானிருந்தது. அது குடியரசுக்குத் தலைமை வகித்தல். அதுவும் சீக்கிரத்தில் தொடர்ந்தது. ஸெனெட் மகாசபையில் உட்காருவதற்கு முன் அந்தவேலையுமவருக்குக் கிடைத்தது.

ஐந்து மாதங்கழித்து ஜனங்களுடைய பிரதிநிதிகள் அமெரிக்கா ஐக்கமாகாணக் குடியரசுக்கதிபதி (President) வேலைக்கு ஒருவரை நியமிக்கக் கூடினார்கள். அவர்கள் ஜேம்ஸ் கார்பீல்டு என்பவரை அந்தவேலைக்குத் தகுந்தவரென நியமனம் செய்தார்கள். இந்தவிஷயம் நாடெங்கும் பரவியது. எல்லோரும் கார்பீல்டு குடியரசுக் கதிபதியாவதைப்பற்றி மனமுவந்தனர்.

1880-ஞு நவம்பர் மாதம் 2உ ஜேம்ஸ் கார்பீல்டு அமெரிக்கா ஐக்கமாகாணக் குடியரசுக்கு அதிபதியாக நியமிக்கப்பட்டார்.

இதைக்கண்டு எல்லோரும் சந்தோஷப்பட்டு நம்முடைய கதாநாயகரிடத்தில் அன்பும் பெருமையும் பாராட்டி வந்தனர். இவ்விதம் இதற்குமுன் ஒருபொழுது மிருந்ததில்லை.

---

# 26-அத்தியாயம்.

"என்றபொழுதிற பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய்."

**1881**-ஆம் மார்ச்சுமாதம் 4-தேதியில் ஜேம்ஸ் கார்பீல்டு அமெரிக்கா ஐக்கமாகாணக் குடியரசுக்கு அதிபதியாக முடிசூட்டப்பட்டார். அன்றையதினம் காலையில் புயல்காற்றடித்தது; வானங்கறுத்து மேகத்தால் மூடப்பட்டிருந்தது. அன்றையதினம் பொழுதுவிடிந்ததைப் பார்த்தவர்கள் அன்று நடக்கும் முடிசூட்டும் மகோற்சவத்தின் சிறப்பு சிறிது குறைபடுமென்றெண்ணினர். ஆனால் 10-மணிநேரத்திற்குப் புயல்காற்று அடங்கி, வானத்தில் மேகங்கள் வெளிச்சத்தை மறைக்காமல் சற்று ஒதுங்கின.

அன்று வாஷிங்டன் (Washington) நகரம் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வெளியூர்களினின்றும் அனேகர் அந்தக் காக்ஷியைக் கண்குளிரக் கண்டு மனங்களிக்க அங்கு வந்திருந்தனர். கார்பீல்டு எல்லோருக்கும் வேண்டினவர். அவர் கட்சிக்காரர் அவரிடத்தில் அன்புவைத்தாரென்பது சொல்லவேண்டியதில்லை. எதிர்கட்சிக்காரரும் அவரிடத்தில் தகுந்த மதிப்புவைத்து அவர் க்ஷேமத்தைப் பிரார்த்தித்தனர். ஆனதுபற்றி வந்த ஜனங்களின் கூட்டம் பெரிதிலும் பெரிது.

அங்கு அவ்விதம் வந்தவர்களில் கார்பீல்டுடன் மகாவித்தியா சாலையில் படித்தவர்களிருபதுபெயர்கள் அவருக்கு முதல்நாள் ஒரு விருந்துசெய்து அவருக்குக்கிடைத்த சிறந்த பதவியைக் கண்டு தங்களுக்குண்டான உவப்பைத் தெரிவித்தனர். அப்பொழுது கார்பீல்டு பின்வருமாறு பேசினர்:—

"நண்பர்காள், இன்றிரவு நாமெல்லோரும் வெகுகாலம் பிரிந்திருந்து மறுபடி ஒன்றுசேர்ந்திருப்பதை நினைக்க எனக்கு மனம் உருகுகிறது. என் முன்னிருக்கிற ஒவ்வொரு கண்ணிலும் நண்

பும் நேசமும் பெருகுகின்றன. அவ்விதமே என்னிருதயத்தி னின்று நண்பும் நேசமும் உங்களிடம் பெருகி நிற்கின்றன. சென்ற 22-வருடகாலமாக நான் நாட்டுவேலைபார்த்து வந்திருக் கிறேன். இன்றிரவு நான் சாதாரணமான மனிதன். நாளைய தினம் புதுவேலை ஒப்புக்கொள்ளப்போகிறேன். மறுநாள் உலகி லுள்ளவர்கள் நான் செய்வதைப்பற்றிக் கோபிக்கலாம். அப்படிக் கோபித்தால் அவர்கள் என்னை வருத்தப்படுத்தலாம். அது எனக் குத் தெரிந்தவிஷயம், நீங்களும் அறிவீர்கள். இனிமேல் எனக்கு என்ன நேர்ந்தாலும், நான் சரியாகச் செய்தவற்றைக் கண்டு உவப்படைவதற்கும், என் வேலைசெய்வதில் ஏற்படும் குறைகளைக் கண்டு பொறுமையாக எண்ணிக் கோபியாம லிருப்பதற்கும், 56-ம் வருடத்தில் என்னுடன் மாகாவித்தியாசாலையில் கல்விகற்ற என்னருமை நண்பர்களாகிய உங்களை யெதிர்ப்பார்க்கலாமென்று நான் நினைக்கிறேன். நான் செய்யக்கூடிய பிழைகளையெல்லாம் நீங்கள் உங்கள் புத்தகங்களில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். கடைசியில் நீங்கள் நான்செய்த பிழைகளைப் பார்க்கும்பொழுது நீங்களெழுதியவைகளை விட நான்செய்த பிழைகள் அதிகமாகவே இருக்கும்.

இந்தப் பெருமைதங்கியவேலை நான் தேடாமல் வந்திருக் கிறது. ஒருநாட்கூட நானந்த ஆசைபிடித் தலையவில்லை. இந்த வேலை எனக்குக் கிடைத்திருப்பதைப்பற்றி இறுமாப்பு ஒன்று மில்லை. இந்தவேலை யெடுத்துக்கொள்ளாமல் நான் மகாசபை யிலாவது ஸெனெட் சபையிலாவது என் மனப்படி நடக்கும் ஒருவனாக இருந்தால் நான் மனங்களிப்பேன். ஆனால் ஈசன் கிருபை யிவ்விதமிருக்கிறது. ஆகையால் அந்த வேலையை யொப் புக்கொண்டு என்னா லியன்றமட்டும் சரியாகநடக்க முயலுவேன். நீங்களெல்லோரும் நான் செய்வது சரியாக இருக்கிறது என்று சொல்லும்படியாக நான் நடக்க விரும்புகிறேன். நானந்தவேலையை விட்டு மறுபடியும் சாதாரணமான மனிதனாக வரும்பொழுது நாமெல்லோரும் இம்மாதிரி மறுபடியும் சந்திப்போமென் றெண் ணுகிறேன்”

கார்பீல்டு என்பவரை தேசாதிபதியாக முடிசூட்ட நியமிக்கப்பட்டவேளை பகல் பன்னிரண்டுமணி. அந்த வேளைவருவதற்குமுன் தெருக்களி லெல்லாம் கூட்டம் கூட்டமாக ஜனங்கள் அந்த மகோற்சவத்தைப் பார்த்துக்களிக்க நின்றுகொண்டிருந்தனர். அப்படி நின்றவர்களில் அநேகர் நம் கதாநாயகரின் நண்பர்கள்.

அந்த முடிசூட்டும் மகோற்சவம் இராஜரீக மண்டபத்தில் நடப்பதாக ஏற்படுத்தப்பட்டிருந்தது. குடியரசுக்கதிபதி வசிக்கும் அரண்மனையாகிய வெண்மாளிகை (The White House) யிலிருந்து புது அதிபதியையும் அவரைச்சேர்ந்தவர்களையும், மற்றுமுள்ள அதிகாரிகளையும் தகுந்த விருதுகளுடன் இராஜரீக மண்டபத்துக்கு அழைத்துக்கொண்டுபோவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பத்தரை மணியானவுடன் எக்காளகோஷம் நம் கதாநாயகரும் மற்றுமுள்ளவர்களும் வெண்மாளிகை வந்து சேர்ந்ததைத் தெரிவித்தது. அங்கிருந்தவர்களும் வந்தவர்களும் முகமன் வார்த்தையாடினபிறகு கேஸி (Col. Casey) என்னும் சேனைத்தலைவர் ஊர்கோலம் புறப்பட எல்லாம் தயாராய்விட்டதென்று கூறினர். பின்வரும் முறையில் குதிரைவண்டிகளில் நம் கதாநாயகர் அவரைச்சேர்ந்தவர்கள், அதிகாரிகள் முதலியவர்கள் ஊர்கோலத்துக்குச் சித்தமானார்கள். முதல் வண்டியில் கார்பீல்டு தாயாரும், மனைவியும், பெண்ணும், ஹேஸ் (President Hayes) என்பவர் மனைவியும் பெண்ணும் உட்கார்ந்திருந்தனர். இரண்டாவது வண்டியில் சில அதிகாரிகளும் அவர்களைச்சேர்ந்த ஸ்திரீகளும், இருந்தனர். அதற்குப்பின் நான்கு வண்டிகளில் அதிகாரிகளும், கார்பீல்டு சிநேகிதர்களும் பிள்ளைகளும் சென்றனர்.

பிறகு ஊதா நிறமுள்ள நான்கு குதிரைகள்கட்டிய திறந்த வண்டி வந்தது. அதில் கார்பீல்டு, ஹேஸ், ஸெனெட்சபையார் அந்தோனி (Antony), பேயார்ட் (Bayard) ஆகிய நான்குபெயர்களும் சென்றனர். அடுத்த நான்கு சாம்பல் நிறமுள்ள குதிரைகள்கட்டிய வண்டியில் உபாக்கிரசனாதிபதி (Vice Prsident) யாக ஆர்தரும் (Arthur), ஸெனெட்சபையோரி லொருவராகிய பெண்டில்டன் (Pendleton) என்பவரும் சென்றனர். ஆகவே

எட்டு வண்டிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சென்றன. முன் இராணுவ வீரர்கள் வரிசை வரிசையாய்ச் சென்றனர். எட்டா வது வண்டிக்குப்பின்னும் இராணுவவீரர் வரிசை வரிசையாய்ச் சென்றனர். இவ்விதமாக ஊர்கோலம் புறப்பட்டுச் செல்லுகை யில் ஜனங்களெல்லோரும் கை கொட்டினர். அனேகர் தங்க ளுடைய கைக்குட்டைகளை அசைத்தனர், எங்கும் ஒரேவிதமாக ஜனங்கள் களித்திருந்தனர்.

இராஜரீகமண்டபத்திலோ கண்கொள்ளாக்காட்சி. பார்ப் போர் கண்களைக்கவர்ந்து பார்க்கத்தெவிட்டாமலிருந்தது. ஜேம்ஸ் கார்பீல்டும் அவருடன் வந்தவர்களும் சபாமண்டபத்தில் சென்ற வுடன், அன்னியதேசங்களிலிருந்து அங்கு தூதர்களாக வந்தி ருந்தவர்களெல்லோரும் தங்கள் தங்களுடைய அலங்காரமான உடை களைத் தரித்துக்கொண்டு உபாக்கிராசனாதிபதி வலது பக்கத்தில் போட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்தனர். பிறகு பிரதான நியாயஸ்தலத்திற்குரிய நியாயாதிபதிகள் தங்களுடைய உடைகளை யணிந்துகொண்டு அவர்களுக்கு ஏற்பட்டிருந்த ஸ்தானங்களில் உட்கார்ந்தனர். பிறகு கார்பீல்டு புதிதாக அமைத்திருந்த மேடை யின்மீது சென்று அங்கு கூடியிருந்தவர்களெல்லோரும் கேட்கும் படி சொற்சுவை பொருட்சுவை பொருந்திய வேலை யொப்புக் கொள்ளும்பொழுது செய்யும் பிரசங்கம் செய்தார். அவர் பிர சங்கத்தை முடிக்குமுன்னர் வானத்தில் மேகங்கள் கலைந்து சூரியன் நன்று பிரகாசித்தது.

அவர் பேசி முடித்தவுடன் வேயிட் (Judge Waite) என்ற பெயருள்ள நியாயாதிபதி வேதபுத்தகத்தைக் கார்பீல்டு கையில் கொடுத்து வழக்கம்போல் அதிபதி வேலை யொப்புக்கொள்ளும் பொழுது செய்யவேண்டிய பிரமாணிக்கம் செய்யச்சொன்னார். கார்பீல்டும் அவ்விதம் செய்துவிட்டுப் பக்தியுடன் அந்தப் புத்த கத்தை முத்தமிட்டுத் திருப்பி நியாயாதிபதி கையில் கொடுத்தார். அப்பொழுது பக்கத்தில் அவர் தாயாராகிய கார்பீல்டு அம்மாள் "ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந், தன் மகனைச் சான்றோ னெனக்கேட்டதாய்," என்று திருவள்ளுவ நாயனார் திருவாய் மலர்ந்தருளியவிதம் இனிது வந்து ஆனந்தக்கண்ணீர் விட்டாள்.

அதைக்கண்ட கார்பீல்டு தன் தாயார் கன்னத்தில் அன்புடன் ஒரு முத்தமும், தன்னுடைய மனைவியின் கன்னத்திலொரு முத்தமும் கொடுத்துத் தனக்கடுத்தபடியில் அந்த நாள் நடந்த விஷயத்தில் திருப்தியடைந்தவர்களிருவரிடத்திலும் தனக்கிருந்த பிரியத்தைக் காட்டினர். பிறகு கார்பீல்டு வெண்மாளிகை முன் கட்டப்பட்டிருந்த உன்னதமான இடத்திலிருந்து இராணுவவீரர் வரிசையாய்ச் செல்லுதலையும், வேறு அதிகாரிகள் வரிசையாகச் செல்லுதலையும் பார்த்து மனமுவந்தார். அதற்கு மூன்று மணி நேரம் பிடித்தது.

பிறகு அவர் வெண்மாளிகையுட் சென்ருர். இவ்விதம் மரக்குடிசையிற் பிறந்த நமது கதாநாயகராகிய ஜேம்ஸ் ஏ கார்பீல்டு வெண்மாளிகையாகிய கோயினுட் சென்றர். அதுமுதற்கொண்டு அவர் வாஸஸ்தானம் வெண்மாளிகையாக ஏற்பட்டது. அதில் அவர் குடும்பத்துடன் வசிக்கத்தொடங்கினர்.

வில்லியம்ஸ் மகாவித்தியாசாலையிற் படித்த வாஷிங்டன்பட்டணத்திலுள்ளவர் சேர்ந்து ஒரு சங்கம் அங்கு நடத்திவந்தனர். அந்தமாளிகையுட்சென்றதினம் அந்தச்சங்கத்தாருக்கும் அங்கு அப்பொழுது வந்திருந்த வில்லியம்ஸ் மகாவித்தியாசாலையில் படித்தவருக்கும் ஒரு விருந்து செய்தார். அவர் வந்தவரை யுபசரித்தார். வந்தவர் அந்த உயர்ந்தபதவி கார்பீல்டுக்கு கிடைத்ததைப்பற்றித் தங்களுக்குண்டான மனக்களிப்பை வெளியிட்டார்.

அன்றிரவில் வாணவேடிக்கை வெகுசிறப்பாக நடந்தது. அதைப்பார்த்து யாவரும் மனங்களித்தனர்.

மேற்சொல்லியவிதம் ஜனங்களெல்லோரும் மனங்களிக்க நம் கதாநாயகர் அமெரிக்கா ஐக்கியநாகாணக் குடியரசுக்குத் தலைமை வகித்தார். தனக்கு இராசாங்கம் நடத்துவதற்கு மந்திரிமார்களேற்படுத்தினதைப் பார்த்தவர்கள் அவர் உண்மையாகவே அதிபதியாகவிருந்து அதிகாரஞ் செலுத்துவாரென நினைத்தனர். எல்லோரும் அவர் குடியரசுக் கதிபதிவேலை புரியத் தகுந்தவரென நினைத்தனர்.

இராச்சியபாரம்வகித்து வேலைபுரியத் தொடங்கிச் சின்னாட் சென்றபின் அவருடைய கட்சிக்காரர்களுக்குள்ளே அவருக்கு ஒரு சங்கடம் நேர்ந்தது. நியூயார்க் (New york) என்னும் துறைமுகத்தில் ஒரு அதிகாரி நியமிப்பதில் கார்பீல்டு தனக்குச் சிறந்தவரெனத் தோன்றிய ஒருவரை நியமித்தார். அந்த மாகாணத்து ஸெனெட் சபையார் அது சரியல்லவென்று அவரை யெதிர்த்தனர். அப்படிச் சொன்னவரில் காக்ளிங் (Mr. Cockling) என்பவர் முக்கியமானவர். தான் செய்தவிஷயம் தன் மனத்திற்கொத்தது, அவர்களபிப்பிராயப்படி ஸெனெட் மகாசபையில் அவர்கள் சொல்லலாமென்று கார்பீல்டு சொன்னார். ஆனதுபற்றி யிருதிறத்தாரும் ஒருவரையொருவர் எதிர்த்துக்கொண்டு நின்றனர். காக்ளிங் என்பவரும், மற்றொருவரும் ஸெனெட் வேலையிலிருந்து ராசிநாமாக் கொடுத்துவிட்டு மறுபடியும் அந்த வேலைக்கு முயற்சி செய்தனர். நியூயார்க் சபையோர் அவர்களையாவது அவர்களுக்குப் பதிலாகப் பிறரையாவது ஸெனெட் சபையாராக நியமிக்கவேண்டியவர்கள். அனேகவாரங்கள் கழிந்தபின் நியூயார்க் சபையோர் கார்பீல்டுக்கு ஒத்துநடக்கக்கூடிய இருவர்களை ஸெனெட் சபையாராக நியமித்தனர். ஸெனெட் சபையில் கார்பீல்டு நியமித்தவர் அந்த வேலைக்கு நியமிக்கப்பட்டார். இந்த விஷயத்தில் எல்லோரு மனமொத்து கார்பீல்டு செய்தது சரியென்று கூறினார்கள்.

# 27-அத்தியாயம்.

"ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடலி
ஞழி முகவாது நாஞழி-தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந்தந்தம்
விதியின் பயனே பயன்."

அடுத்த ஜூலைமாதத்தில் கார்பீல்டு வாஷிங்டன் நகரத்தைவிட்டு வெளியில் யாத்திரைசெய்து பலர் வேண்டுகோளுக்கிணங்கப் பலவிடங்களில் சென்று ஆங்காங்கு தங்கிவிட்டுத் திரும்பிவருவதாக நினைத்தார். ஆனதுபற்றி அந்த மாதம் 2-தேதியில் கார்பீல்டும் இராசாங்க காரியதரிசியாகிய ப்ளேன் (Mr. Blaine) என்பவரும் கைகோத்துக்கொண்டு புகைவண்டித்தொடரில் ஏறப்போனார்கள். அப்பொழுது ஒரு பாதகன் துப்பாக்கியைக்கொண்டு கார்பீல்டுபேரில் குண்டுபோட்டான். உடனே கார்பீல்டு உடம்பில் குண்டுசெல்லவே, அவர் பூமியின்மேல் சாய்ந்தார். இதைப்பார்த்தவரெல்லோரும் கலங்கி நின்றனர். உடனே குடியரசுக்கதிபதி சதிகாரனல் கொல்லப்பட்டார் என்ற சமாசாரம் பூமியெங்கும் பரவியது. தந்தியுள்ள விடங்களிலெல்லாம் அது எட்டியது பூமியிலுள்ளவர்களெல்லோரும் வருத்தமுற்றனர். அமெரிக்கா கண்டத்திலிருந்தவர்கள் குணத்தில் சிறந்தவரான நமது கார்பீல்டுக்குண்டான ஆபத்தைப்பற்றி வருத்தப்பட்டார்கள். அமெரிக்கா ஐக்கமாகாணங்களிலிருந்தவர்களெல்லோரும் முழந்தாளிட்டுத் தங்களுடைய அருமையரசைக் காப்பாற்ற வேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்தனர்.

நாம் மேற்சொல்லியவிதம் பாதகனல் சுடப்பட்டுக் காயப்பட்ட நமது கதாநாயகர் நிலைமையைச் சற்றுப் பார்ப்போம். காயப்பட்டவுடன் அவர் பூமியில் சாய்ந்தார் என்று சொன்னேம். உடனே அவருடன் யாத்திரைபோக வந்திருந்தவரெல்லோரும் அவரை ஒரு மணிநேரத்திற்குள் வெண்மாளிகைக்கு மிகவும் சாக்கிரதையுடன் கொண்டுவந்து சேர்த்தனர். அதற்குள் அவர் மனைவியாருக்குத் தந்திசமாசாரம் அனுப்பிவிட்டார்கள். அந்த மாதுசிரோமணி அதற்

குச்சற்று முன்னர்தான் வியாதியிலடிபட்டுக் கொஞ்சம் சௌகரிய மடைந்திருந்தாள். அந்த அம்மாள் அவ்விதம் பிழைத்ததற்குக் காரணம் கார்பீல்டு தன் வேலையைப் பார்த்துக்கொண்டே அல்லும் பகலும் கவனமாகப் பார்த்துவந்ததுதான்.

அவரை வெண்மாளிகையில் மெதுவாகப் படுக்கும்படி செய்ததவுடன், அவர் அங்கிருந்தவருடன் வழக்கம்போல் நிதானத்துடன் பேசத்தொடங்கினர். இதைக் கண்டவர் அவர் பிழைப்பாரென நினைத்தனர். வைத்தியர் பக்கத்திலேயே பார்த்துக்கொண்டிருந்தார். அன்றையதினம் பிற்பகலில் வேடிக்கையாகக்கூட கார்பீல்டு பேசினர். வைத்தியரைப் பார்த்துத் தன்னுடைய நிலைமையை உண்மையாகத் தனக்குத் தெரிவிக்கும்படி சொன்னர். அன்றைய தினம் சாயங்காலம் 4-மணிநேரத்துக்கு வைத்தியர் அவர் நிலைமையைக் கவனித்துப்பார்த்து அவர் அன்றையதினமே இறந்துபோக இடமிருந்ததென்று அவரிடம் பதில் சொன்னர்.

"ஈசன் கிருபைப்படி நடக்கச் சித்தமாக இருக்கிறேன்," என்று கார்பீல்டு விடையளித்தார்.

கார்பீல்டுமனைவி இந்தவிஷயம் கேட்டவுடன் தனியாக அமர்த்தபட்ட புகைவண்டியில் புறப்பட்டு வாஷிங்டன் நகரம்நோக்கி விரைந்து வந்தாள்.

அந்த அம்மாள் வருவதற்குள் கார்பீல்டு பன்முறை வந்துவிட்டாளா என்று கேட்டுவிட்டார். கடைசியில் அந்த அம்மாள் வண்டியில் வந்திறங்கினள். உடனே கார்பீல்டு வண்டியின் ஓசையைக் கேட்டு வந்திறங்கினது தன் மனைவியென்று சொன்னர்.

இருவரும் ஒருவரையொருவர் பார்க்கும்படி ஈசன் அருளினர்.

கார்பீல்டு அவர் மனைவியைப்பார்த்து ஒருவருக் கொருவர் சொல்லிக்கொண்ட விஷயம் ஒருவருமறியவிடமில்லை. ஆனல் அதுமுதற்கொண்டு அவர் நிலைமை சற்று உயிர்பிழைக்கலாமென நம்பத்தகுந்ததாக ஏற்படத்தொடங்கிற்று. அன்றிரவில்

அவர் அயர்ந்து தூங்கினர். மறுநாள் நாட்டிலுள்ளவர்களெல்லோரும் கார்பீல்டு உயிர்தப்பிப் பிழைக்கவேண்டுமென்று பிரார்த்தித்தனர். மறுநாள் வைத்தியர் கார்பீல்டு பிழைப்பதற்கிடமிருந்ததெனக் கூறினர்.

அப்படியவர் பிழைக்கக்கூடுமென்ற சமாசாரத்தைக் கேட்டவர் யாவரும் சந்தோஷித்தனர். உலகமெங்குமுள்ள அரசர்கள் அதைக்கேட்டுத் தந்திமூலமாகத் தங்களுடைய மனமகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். நமது காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியார் தனக்குண்டான சந்தோஷத்தைத் தந்திமூலமாகத் தெரிவித்தார்கள். அவ்விதம் ஒவ்வொரு மன்னரும் செய்தார். அமெரிக்கா கண்டத்திலுள்ளவர்கள் எல்லோருமவ்விதம் சந்தோஷப் பட்டார்கள். எல்லோரும் அவர் உயிர்தப்பிப் பிழைக்கவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

அந்த ஜூலைமாதம் முழுவதும் கார்பீல்டு நிலைமை பிழைப்பதற்கு இடமிருந்ததாகவே காட்டிற்று. வரவர உடம்பு சௌகரியமாய்க் கொண்டுவந்தது. ஆனால் ஆகஸ்டுமீ 26உ திடீரென்று உடம்பு அபாயநிலையிலிருப்பதாகத் தோன்றிற்று. உடனே அவர் உயிர்துறப்பார் என்று நினைக்க இடமுண்டாயிற்று. நாடெங்கும் ஜனங்கள் வருத்தமுற்றனர். கார்பீல்டு பிழைக்கவேண்டுமென்று யாவரும் கடவுளைத் தியானஞ்செய்தனர். மறுநாளும் அவர் அந்த் நிலைமையிலே இருந்தார். மூன்றுநாள் உடம்பு சௌகரியப்படும் போறறோன்றிற்று. இவ்விதம் ஸெப்டம்பர்மாதம் 5-தேதிவரையில் வாஷிங்டன் நகரத்தில் அவர் வெண்மாளிகையில் இருந்தார். வைத்தியர்களெல்லோரும் அவருக்கு அந்த ஊர்க்காற்று சௌகரியமில்லையென்று சொல்லி, உப்பங்காற்று வீசும் கடற்கரையோரத்திலிருக்கும் லாங்பிரான்ச் (Long Branch) என்ற இடத்திற்கு, அவரைப் படுக்கையோடே இருப்புப்பாதைமீது செல்லும் புகைவண்டியில் ஜாக்கிரதையுடன் எடுத்துக்கொண்டுபோய்ச் சேர்த்தனர்.

அவ்விடத்தில் சிலநாள் உடம்பு சௌகரியமாயிருப்பதுபோற்றோன்றிற்று. ஆனால் ஸெப்டம்பர்மாதம் 19உ கார்பீல்டு நிலைமை சரியாகத் தோன்றவில்லை. அவர் மிகவும் பலஹீனமாகவிருந்தார்.

அன்றிரவில் தூங்கிக்கொண்டிருந்தவர் திடீரென்று விழித்துக் கொண்டு பக்கத்திலிருந்தவரிடத்தில் மாரில் நிரம்ப வலியிருப்ப தாகச் சொன்னார். உடனே வைத்தியர் வந்து பார்த்து, "ஐயா, அவர் பிராணன் போய்விடும்போலிருக்கிறது. அவர் மனைவியைக் கூப்பிடுங்கள்," என்று பக்கத்திலிருந்தவரிடம் சொன்னார்.

அந்த அம்மாள் மேற்சொல்லியவிதம் அழைக்கப்பட்டு அவ்வி டம் வந்தாள். கார்பீல்டு அவர் மனைவிவந்து தன் பக்கம் உட் கார்ந்ததைப் பார்த்தார். வாயால் பேசவில்லை உடனே அவர் பெருமூச்சுவிட்டார். அந்த மூச்சில் அவர் ஆவி பரலோகஞ்சென் றது. இவ்விதம் கார்பீல்டு அன்றிரவில் உயிர்துறந்தார். அவர் மனைவி துக்கசாகரத்தில் மூழ்கிச் சிறிதுநேரம் ஒன்றும் தோன்றா மல் இருந்தாள். சீக்கிரத்தில் ஈசனிடத்தில் தன்னுடைய வருத்தத் தில் ஒரு பகுதியைக்கொடுத்துப் பின் இரண்டுமணிநேரம் அங்கு இருந்துவிட்டுப் பிறகு தன் அறைக்குச் சென்றாள்.

அவர் இறந்ததும் சமாசாரம் தந்திமூலமாக நாடெங்கும் பர விற்று. நாட்டிலுள்ளவரெல்லோரும் அந்த சமாசாரத்தைக் கேட் டுக் கண்ணீர் தாரை தாரையாய் விட்டனர். எல்லோரும் துக்கக்கட லில் மூழ்கினர். மாளிகைகளும் குடிசைகளும் ஒரேவிதமாகத் துக் கப்பட்டன. மாதாகோவிலிலுள்ள மணிகளெல்லாம் கார்பீல்டு இறந்தவிஷயத்தைத் தெரிவித்தன. உலகமெங்கும் ஒரேவிதமாக யாவரும் வருத்தமுற்றனர்.

உலகத்திலுள்ள ஒவ்வொரு அரசரும் தன்னுடைய வருத்தத் தைத் தந்திமூலமாய் அமெரிக்கா ஐக்கமாகாணத்தாருக்கும், கார்பீல்டு குடும்பத்தாருக்கும் தெரிவித்தனர். அமெரிக்கா கண்டத்திலுள்ள யாவரும் தங்களுக்குண்டான வருத்தத்தைக் கார்பீல்டு மனைவியா ருக்கும் குடும்பத்தாருக்கும் தெரிவித்தார்கள்.

கார்பீல்டு இறந்தபிறகு, செஸ்டர் ஏ ஆர்தர் (C. A. Arthur) என்பவர் இறந்தவர் வேலையை வகித்தார். அதிகாரிகள் ஒன்று சேர்ந்து யோசித்து முதன் முதலில் இராஜதானியாகிய வாஷிங் டன் நகரத்தில் ஸெப்டம்பர்மாதம் 23உ அவருக்கு உத்தரக்கிரியை கள் நடத்திவிட்டு, அவர் பிறந்த விடமாகிய ஓஹியோவில் அவ்வி

தம் 26உ நடத்திப், பிறகு அவ்விடத்திற்கு 7-மயிலுக்கப்பாலிருந்த ஒரு இடத்தில் அவர் உடலை யடக்கஞ்செய்வதாகத் தீர்மானித்தனர்.

அவ்விதமே கார்பீல்டு உடலை ஒரு பெட்டியில் வைத்து புகைவண்டியில் வாஷிங்டன் கொண்டுவந்து சேர்த்தனர். எங்கு பார்த்தாலும் கறுப்புநிறமுள்ள சீலைகளும் உடைகளும் அவர் இறந்துபோனதற்கடையாளமாகக் காணப்பட்டன. ஊரெங்கும் ஜனங்கள் ஓலமிட்டனரெனச் சொல்லலாம்.

வாஷிங்டன் சபாமண்டபத்தில் அந்தப்பெட்டியை வைத்து மூடியைத்திறந்து யாவரும் இறந்தவர் முகத்தைப்பார்த்துச் செல்லும்விதம் செய்தார்கள். ஒருநாட்பொழுதில் இலக்ஷம்பெயர்கள் வந்து இறந்தமகானுடைய முகத்தைத் தரிசித்துச் சென்றனர். பிறகு அந்தப்பெட்டியை மூடிவிடவேண்டியதாக ஏற்பட்டது. பெட்டிமுழுவதும் புஷ்பங்களால் மூடப்பட்டிருந்தது எல்லோரும் தங்களாலாகக்கூடிய புஷ்பமாலைகளையும் புஷ்பவேலைகளும் செய்துகொண்டுவந்து அந்தப்பெட்டியின்மீது மரியாதையுடன் வைத்தனர்.

வெள்ளிக்கிழமைதினம் அந்தப் பெட்டிபக்கத்தில் யாவரும் கூடிக் கிரிஸ்தவமதத்திற்குரியபடி வேதபுத்தகம் வாசித்து, இறந்தவர் ஆத்துமா மோக்ஷம் சேர்வதற்காகப் பிரார்த்தனை செய்தபிறகு, பவர்ஸ் (Dr. Powers) என்பவர் இறந்தவர் குணதிசயங்களை யெடுத்துச்சொல்லி, உலகத்தில் பிறந்தவர் இறப்பது இயல்பென்றும் கடவுள் பாதந்தான் தங்குவதற்குத் தகுந்த இடமென்றும் உரைத்து, இறந்தவர் சிறந்தபதவியை யடைந்தது திண்ணமென்றும் கூறிமுடித்தார்.

பிறகு அந்தப்பெட்டியை ஒஹியோ என்றவிடத்திற்குப் புகைவண்டியில் எடுத்துச்சென்றனர். போகும்வழி யெங்கும் ஜனங்கள் கண்ணீருங்கண்ணுமாயிருந்தனர். கடைசியில் க்ளீவ்லாண்ட் (Cleveland) என்றவிடத்தில் வண்டி சென்றபொழுது 50,000 ஜனங்கள் அந்தப்பெட்டியைப்பார்த்து அழுதார்கள். அங்கே அந்தப் பெட்டியைக்கொண்டுபோக நான்கு கறுப்புக்குதிரைகள்கட்டிய கறுப்புச்சீலையால் மூடப்பட்டவண்டி சித்தமாயிருந்தது. அந்தவண்

டியில் அந்தப் பெட்டியைவைத்து ஏற்படுத்தப்பட்டிருந்த இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். போகும்வழி முழுவதும் ஜனங்கள் கூட்டம் கூட்டமாகப் பின்சென்றனர். அதற்குச் செப்பனிட்ட இடத்தில் அந்தப்பெட்டியை வைத்தார்கள். அந்தப்பெட்டியைத் திறப்பதற்கு இடமில்லாமல்போயிற்று. ஆயினும் ஜனங்கள் அந்தப்பெட்டியையாவது தரிசித்துப்போக விரும்பி ஆயிரக்கணக்காக அங்குவந்து நான்கு நான்கு பெயர்களாகச்சென்று அதைப் பார்க்கத் தொடங்கினர். ஞாயிற்றுக்கிழமை காலை 6-மணிக்கு இது தொடங்கிற்று. இரவில் 9-மணிவரையில் ஜனங்கள் பார்த்துவந்தனர். சுமார் 75,000 ஜனங்கள் இவ்விதம் பார்த்துச் சென்றனர். அனேகர் பார்க்கமுடியாமல் மனம்வருந்தித் திரும்பி வீடுநோக்கியேகினர்.

திங்கட்கிழமை அவர் பிறந்தவிடத்தில் நடக்கும் உத்தரக்கிரியைக்காக, நாடெங்கும் ஜனங்கள் பிரார்த்தனை செய்யும்படி புது அதிபதி சேஸ்டர் என்பவர் உத்தரவுசெய்தார். அவ்விதமே ஜனங்கள் செய்தார்கள். அந்தப்பட்டணத்தில் எங்குபார்த்தாலும் ஒரே கறுப்புநிறமாக இருந்தது. வாஷிங்டன் என்றவிடத்தில் நடந்ததற்குப் பதின்மடங்கு சிறப்பாகக் காரியங்கள் நடந்தன. பிறகு அடக்கம் செய்யுமிடத்திற்கு அந்தப்பெட்டியைப் பன்னிரண்டு கறுப்புக்குதிரைகள்கட்டின வண்டியில்வைத்து நாட்டிலுள்ள பெரியோர்களெல்லோரும் வரிசையாகச்சென்று எடுத்துக்கொண்டு போனார்கள். அந்தஇடத்திற்கும்க்ளீவ்லாண்டுக்கும் 7-மயில் தூரம். அந்தஇடம் அந்தவண்டி சென்றபொழுது, அதன்பின் வரிசையாகச் சென்றவர்கள் ஏழுமயிலுக் கப்பாலிருக்கும் க்ளீவ்லாண்டில் வந்துகொண்டிருந்தார்கள் ஆகவே அந்தப்பெட்டியின் பின்சென்றவர்கள் ஏழுமயில்தூரம் வரிசையாகநின்று சென்றனரென்பது தெரியவருகிறது. பிறகு அந்தப் பெட்டியைப் பூமியிலடக்கஞ் செய்தார்கள். இவ்விதம் முடிமன்னருக்கு நடப்பது அருமை.

# 28-அத்தியாயம்.

"இனிது இனிது ஏகாந்த மினிது
அதனினு மினிது ஆதியைத் தொழுதல்
அதனினு மினிது அறிவினர்ச் சேர்தல்
அதனினு மினிது அறிவுள்ளோரைக்
கனவினு நனவினுங் காண்பதுதானே."

முன் அத்தியாயத்தில் கூறியபடி ஜேம்ஸ் ஏ. கார்பீல்டு காலஞ்சென்றார். அவருடைய அருமையான குணங்களை யிவ்வத்தியாயத்தில் கூறுவோம்.

அவர் நற்குண நற்செய்கைகளுள்ளவர்கள் வயிற்றில் குடிசையில் பிறந்தவர். பணமென்பது அதிகமாக அவர் தகப்பனார் அவருக்குச் சேர்த்துவைத்தாரில்லை. சிறுபிராயத்திலேயே தந்தையை யிழந்து தாயார்பார்வையில் விடப்பட்டுத் தனது குழந்தைப்பருவத்தைக்கழித்தார். குழந்தைப் பருவத்திலேயே அவரது புத்தி கூர்மை யாவருக்கும் புலப்பட்டது. அவர் தந்தையை யிழந்த போதிலும் அவருடைய தமயன் தமக்கைமார்கள் அவரைச் செல்வக்குழந்தையாகக் கொண்டாடி வந்தனர்.

குழந்தைப் பருவத்திலேயே பள்ளிக்கனுப்பப்பட்டு, உபாத்தியாயரும் பள்ளியிலிருந்த மாணுக்கரும் வியப்படையும்விதம் அவர் புத்திசாலியாக விளங்கினர்.

தமயன் வெளியில் வேலைக்குப் போகுமுன்னர் கார்பீல்டு தமயனுக்குப் பலவித உதவி புரிந்துவந்தனர். தமயன் வெளியில் வேலைக்குப் போனபொழுது அவன்செய்த விவசாய வேலையைச் சிறுபிராயத்திலேயே இவர் பார்த்துவந்தார்.

பிறகு தமயனும் தம்பியும் தச்சனுதவியுடன் தாயாருக்கு வீடுகட்டுவித்தார்கள். அச்சமயத்தில் கார்பீல்டு தச்சுவேலை கற்

கத்தொடங்கினர். அப்படி வேலைகற்று அந்த வேலைசெய்து பணமும் சம்பாதித்தார். வாய்த்த சமயங்களில் கற்கக்கூடிய விஷயங்களைக்கற்று அவ்விதம் கற்றவைகளாற் றனக்குப் பணம் சம்பாதிக்கும்வழி தேடிவந்தார். தச்சுவேலைசெய்வதில் தேர்ந்தவராய்ச் சிலவிடங்களுக்குப்போய்ப் பணஞ்சம்பாதித்துவந்தார்.

மேற்சொல்லியவிதம் போய் வந்தவிடங்களில் கார்பீல்டு எல்லாவிஷயங்களிலும் ஒழுங்குபட நடப்பவரெனப் பெயர்வாங்கிவந்தார். இக்காரணம்பற்றி யொரு உப்புவியாபாரி யிவரை தன்னிடம் வேலைக்கு அமர்த்தினன். அங்கு அகப்பட்ட புத்தகங்களை வாசித்து முடித்தார். அப்படிவாசித்தது அவரைச் சமுத்திரத்தின் மீது கப்பலேறிச்செல்ல அவாக்கொள்ளும்படி செய்தது. அந்த வியாபாரியின்பெண் ஒருசமயத்திலிவரைக் கூலிக்கு வேலைசெய்தவனென் றிழிவாகச் சொல்லவே இவர் வேலையைவிட்டு வீடு சென்ருர். பிறகு சப்பல்யாத்திரைப் பயித்தியம்பிடித்து தாயாரனுமதிபெற்றுக் கப்பலில் வேலைதேடச்சென்ருர். அங்கு போனவிடத்தில் ஒருகப்பற்றலைவ னிவரைத் தூஷித்துப்பேசி யவ்விடத்தைவிட்டு ஓடும்படிசெய்தான்.

அச்சமயத்தில் கால்வாய்ப்படகில் வேலையிலமர்ந்து படகு வேலையாளிகளுக்கு நன்னெறியில் வழிகாட்டி நல்லவனெனப் பெயர்வாங்கி யாவராலும் நேசிக்கப்பட்டு மானிடப்பிறப்புக்கு மகிமை யுண்டாக்கினரெனச் சொல்லலாம். பிறகு நோயிலடிபட்டு மெய்யில் பலங்குறைந்து மேல் படிப்பைத் தொடர்வது சிறந்ததென மனந்தெளிந்து வீடுவந்துசேர்ந்தார்.

மேற்சொல்லியவிதம் மேல்படிப்புப் படிப்பதே சரியெனக் கருதி வித்தியாசாலைக்குச்சென்று வித்தை கற்கத் தொடங்கினர். செலவுக்குப் பணம் சம்பாதித்துக் கொண்டுவந்தார். விடுமுறை நாட்களில் வாத்தியார்வேலைசெய்து பணம்சம்பாதித்துப் படிப்புச் செலவுக்கு உபயோகம் செய்தார்.

இரண்டு வித்தியாசாலையில் மகாவித்தியாசாலைப் படிப்புக்கு முன் கற்கவேண்டியவைகளைக் கற்று மகாவித்தியாசாலைக்குச் சென்று அங்கு யாவரும் வியக்கும்வண்ணம் கல்விபயின்று யோக்கியதாபத்திரமும் பெற்ருர்.

பெற்றவுடன் தான் முன்படித்த வித்தியாசாலையில் உபாத்தியாயராக அமர்ந்து, சீக்கிரத்தில் அவ்வித்தியாசாலையில் தலைமை நடத்தும் உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார்.

பிறகு அவர்பிறந்த மாகாண மந்திராலோசனை சபையோரிலொருவராக வேலைசெய்யலானார்.

அதன்பின்னர் சண்டையிலமர்ந்து சேனைத்தலைவராக யாவரும் புகழும்விதம் எதிரிகளைத் தோல்வியடையச்செய்து புகழ்பெற்றார்.

அதற்குப்பின், அவர் அமெரிக்கா ஐக்கமாகாணக் குடியரசு மகாசபையில அச்சபையோரி லொருவராக நியமிக்கப்பட்டார். சீக்கிரத்தில் அதற்கு மேல்பதவியாகிய ஸெனெட் மகாசபையோரிலொருவராக நியமிக்கப்பட்டார். அவ்வேலையை யொப்புக்கொள்வதற்குள், குடியரசுக்கதிபதியாக நியமிக்கப்பட்டு அந்த வேலையை யொப்புக்கொண்டு வெண்மாளிகைக்குச் சென்றார்.

இவ்விதம் குடிசையிற்பிறந்து கோயினுட்சென்றவர் குணங்களைச் சற்றுக் கவனித்துப்பார்ப்போம்.

"விளையும்பயிர் முளையிலே," என்ற பழமொழிக்கேற்க நம் கதாநாயகர் குழந்தைப் பருவத்திலேயே புத்திகூர்மையுள்ள பிள்ளையெனப் பெயர்பெற்று, அவரிருந்த விடத்திற்குத் திலகம்போல் விளங்கினார். தாய்க்கும் தமக்கைக்கும் தமயனுக்கும் மற்றுமுள்ள உறவினர்கட்கும், நண்பர்களுக்கும் ஜேம்ஸ் குழந்தைப் பருவத்திலேயே முன்னுக்குவருகிற பிள்ளையெனத் தோன்றினர்.

பள்ளியில் கல்வி கற்றுக்கொண்டிருந்தபொழுது வாத்தியாரும் மாணவர்களும் ஜேம்ஸைப்போல் நுட்பமான கேள்விகள் கேட்கும் பிள்ளை யில்லையெனச் சொல்லிவந்தனர். பள்ளியில் கற்கத் தொடங்கினது முதற்கொண்டு விஷயங்களைக் கற்பதிலமர்ந்து, தனக்கு விளங்காதவைகளைத் தெரிந்தவர்களிடமிருந்து தெரிந்துகொண்டு, அவ்விதம் தெரியாதவிஷயங்களைத் தாயாரிடத்தில் கேட்டுப் பலவாறு கற்றுவந்தனர்.

படிப்புக்கும் வேலைக்கும் வித்தியாசமில்லாமல் நம் கதாநாயகர் கல்விகற்பதும், வேலைகற்பதும், அவ்விதம் வேலைகற்று வேலை

செய்து பணம்சம்பாதிப்பதுமாக இருந்தது நமக்குத்தெரிந்தவிஷயம். அப்படிச் செய்துவந்தகாலத்தில் "செய்வன திருந்தச் செய்." என்று சொல்லியபடி வேலையைச் சரியாகச்செய்து வந்ததுமன்றி, நியாயத்துக்குத் தவறுமல் தானும் நடந்து பிறரையும் நடக்கும்விதம் செய்துவந்தனர். எச்சமயத்திலும் எக்காரியத்திலும் நன்னெறி தவறினவரைக்கண்டித்து, அந்நெறியிற் சென்றவரைப்புகழ்ந்து தானும் அவ்விதம் நடந்துவந்தார்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்," என்றுசொல்லியபடி கார்பீல்டு தாய்சொன்மீறி யொருபொழுதும் நடந்தாரில்லை. ஒருவேலை செய்யப்புகின் ஊக்கமென்ப துருவெடுத்தாற்போல் எடுத்தவேலையை செய்யத்தொடங்குவார். எடுத்தவேலை சிறிதாயிருந்தாலும் பெரிதாயிருந்தாலும் ஒருவிதமாகத்தான் சரியாகச் செய்துமுடிப்பார். எக்காலத்திலும் தனக்குத் தெரியாத விஷயங்களைக் கற்றுக்கொள்ளச் சித்தமாயிருந்தார்.

மதவிஷயத்தில் அவர் கிறிஸ்தவர். அவருடைய வேதபுத்தகத்திலுள்ள விஷயங்கள்யாவும் அவர் நன்குணர்ந்தவர். தெய்வ பக்தியிற் சிறந்தவர்.

அவர் பேசுந்திறமையைப்பற்றி முன் அத்தியாயங்களிற் சொல்லியிருக்கிறோம். ஒரு விஷயத்தைப்பற்றிப் பேசுவதற்கு முன் அதைப்பற்றி நன்கு ஆராய்ந்து. சிந்தனைசெய்துகொண்டு, கேட்போர் மனங்களிக்க சொற்சுவை பொருட்சுவை பொருந்த விஷயங்களெளிதில் விளங்கும் விதம் பேசுவார். அவர் பேசிமுடிக்கும் பொழுது அவர் சொன்னது கேட்பவர்யாவரும் சரியென நினைத்துப் போகச்செய்வார்.

சண்டைசெய்யப் போனபொழுது இவர் தைரியம் விளங்க "நன்மை கடைப்பிடி," யென்றுசொல்லியவிதம், நாட்டின் நன்மையைக்காப்பாற்ற உயிருக்குண்டாகக்கூடிய அபாயத்தைக் கவனியாமல் வேலைசெய்து எல்லோரு மிவரைப்போன்ற, ஆண்சிங்கம்போல் சேனைத்தலைமை நடத்தினவரில்லையென்று நினைக்கும் விதம் நடந்து கீர்த்தியடைந்தார்.

சபைகளில் பேசும்பொழுது தனக்கு வேண்டியவரென்றும்

எதிரிகளென்றும் நினையாமல், நியாயத்தை நியாயமென்று ஐயந் திரிபறச்சொல்லி மனச்சாட்சிக்கு விரோதமின்றிப் பயமில்லாமல் பேசிச் சத்தியவானெனப் பெயர்வாங்கினுர்.

குடியரசுக் காதிபத்தியம் வகித்தநாளிலும் நன்னெறி தவரு மல் ஜனங்களுடைய நன்மையைத் தலைமேற்கொண்டு சாதுக் களைக் காப்பாற்றித் துஷ்டர்களைக் கண்டித்து, நாடெங்கும் "இவ ரைப்போன்ற மனிதமாணிக்கம் எங்குண்டு?" என்று யாவரும் சொல்லும்படி, நம்கதாநாயகர் அரசாட்சிபுரிந்தார்.

இந்தவத்தியாயத்தை முடிக்குமுன், நம்கதாநாயகர் வாக்கி னின்றும் விழுந்த சிறுவர் பயன்பட அறியவேண்டிய சில புத்தி மதிச் சொற்களைக் கூறுவோம். அவைகளிலிருந்து நாம் மேற் குறித்த ஜேம்ஸ் கார்பீல்டு என்பவரின் குணங்களில் பல நன்கு விளங்கும்.

1. "சிறுவர்கள் தெரியாத்தன்மையாய் இனிமேல் ஏதாவது சம்பவிக்கும், அதைக்கொண்டு திடீரென்று புகழ்பெற்றவனுக ஆவது அல்லது பணக்காரனுக ஆவது ஆகக்கூடுமென்று நினைக்கிருர்கள். அது பிழை இம்மண்ணுலகில் விஷயங்கள் தானே சம்பவிக்கமாட்டா, அவைகளைச் சம்பவிக்கும்படி யொருவர் செய்யவேண்டும்."

2. "வயது முதிர்ந்த மனிசனைவிட ஒரு பையனைப் பார்க்கும் பொழுது நான் அதிக மரியாதை அவனிடங்காட்ட எண்ணம் கொள்ளுகிறேன். கந்தையுடுத்த பையனைப்பார்க்கும்பொழுது அப்பையன் பிறகு எந்த உயர்ந்த நிலைமைக்கு வருவானே வென்று நினைத்து அவனுக்கு வந்தனம் சொல்ல என்மனம் துணிகிறது."

3. "கல்விகற்று யோக்கியதாபத்திரம் பெற்றுப்புலவனெனப் பெயர்வாங்கினபோதிலும், வேண்டியிருந்தால் அப்புலவர்கள் குதிரைமீதேறிச் சவாரிசெய்ய முடியாமல் தவிப்பாராகில் அவர்களை விடப்பரிதாபப்படத்தக்க பிராணிகள் கடவுள் படை த்தாரில்லை."

4. "அதிட்டம் என்பது ஒரு கொள்ளிவாய்ப் பிசாசம். அதைத்

தொடர்ந்து பின்செல்பவன் நாசமடைவானே யொழிய ஜய மடையான்."

5. "செய்கிறவேலை யொன்றுதான் தெரியுமென்று சொல்லாமல், பலவேலைசெய்யுந் திறமையுள்ளவனு யிருக்கக்கடவாய்."

6. "கடுமையான வேலைசெய்யுந்திறமை சாமர்த்தியமல்லவென்று சொல்லும்பட்சத்தில், அது சாமர்த்தியத்துக்குத்தகுந்த பதலாகும்."

7. "ஒருவனுடைய குணமென்பது அவன் சுபாவமும் வாடிக்கையும் சேர்ந்துண்டானது."

8. "சிறுவராயிருக்குமபேறு பெரும்பேறு. நடுவயதில்ஒருவனை நாடாமல் தன்னிஷ்டப்படி நடப்பவனுதல் அதைவிடச்சிறந்த பேருகும்."

9. "ஒழுங்கற்றயுத்தத்தில் ஜயிப்பதைவிட, நியாயமான விதத்தில் அபஜயமடைய விரும்புவது பெரியோர்நெறி"

10. "நீ சம்பாதிப்பது உன்முயற்சியால் வரவேண்டும். அப்பொழுதுதான் அது உன்னுடையதாகும்."

11. "இவ்வுலகில் நாம் கண்டுகளிக்ககூடியவிஷயம்ஒன்றுளது. அது உள்ளது உள்ளபடி சொல்லும் தைரியசாலி."

12. "ஒருமாணுக்கன் தன்னை நன்குணரவேண்டும். பிறகு தன்னுடைய சுற்றத்தார், ஊரார், நாட்டார் முதலியவர்களுக்குந் தனக்குமுள்ள சம்பந்தத்தை யறியவேண்டும். கடவுளால் உண்டாக்கப்பட்ட வஸ்துக்களின் நிலையையும், மனிதர்களால் உண்டாக்கப்பட்ட விஷயங்களில் நிலையையும் நன்கறியவேண்டும். இவைகளைக்கொண்டு எல்லாவற்றிற்குங் காரணமான கடவுளினிடத்துத் தான் நடக்கவேண்டிய வழியை யறியவேண்டும்."

இவ்விதமான நம் கதாநாயகரின் குணங்களைப்பார்க்கும்பொழுது, ஒருவிஷயம் நன்கு விளங்குகிறது. வேலைசெய்தல் மனிதர்க்குரிமை, அதனுல் குறைவொன்றும் வரமாட்டாது.

"வேலைசெய்தவன் கூலிபெறுவான்." வேலைசெய்தலிற்சிறந்தவிஷயமொன்றுமில்லை. அது கொடுக்காதது ஒன்றுமில்லை. குடிசையில் பிறந்தாலும் வேலை சரியாகச்செய்தால் ஒருவரடையக்கூடாத நிலமை யொன்றுமில்லை. ஆகையால் வேலை செய்வது நல்லோருக் கிலக்ஷணம். நல்லோரெங்கேபிறந்தாலும்மேன்மையடைவர்.

"தாமரை பொன்முத்துச் சவரங்கோரோசனைபால்
பூமருதேன்பட்டுப் புனுகுசவ்வா—தாமழன்மற்
றெங்கேபிறந்தாலு மேள்ளாரே நல்லோர்கள்
எங்கேபிறந்தாலு மேன்."

சுபமஸ்து.

68169

முற்றிற்று.

கும்பகோணம்

இந்து எடுகேஷனல் டிரேடிங் கம்பெனியாரால்

வெளியிடப்பட்ட

## தமிழ் கதாவாசக புத்தகங்கள்.

துரைத்தனத்தாரால் பாடசாலைகளில்

உபயோகிக்கலாமென்று அங்கீகரிக்கப்பட்டவை.

——:O:——

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸுசீலா ஸ்வயம்வரம் ... ... | 0 | 2 | 0 |
| 2. | ஸமனஸன் நாடகம் ... ... | 0 | 3 | 0 |
| 3. | மார்த்தவி-பிரியவதன பரிணயம் ... | 0 | 1 | 6 |
| 4. | அரவிந்தன்-கமலாக்ஷி... ... ... | 0 | 2 | 0 |
| 5. | உல்லாஸன் சரிதம் ... ... ... | 0 | 5 | 0 |
| 6. | ஈனக்ஆர்டன் முதலியன ... ... | 0 | 3 | 0 |
| 7. | இஸபெல்லா சரித்திரம் ... ... | 0 | 2 | 0 |

## இதர புத்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | செல்லத்தம்மாள் சரித்திரம்... ... | 0 | 2 | 0 |
| 9. | மச்சரன் என்னும் மாரிகாலக் காதை... | 0 | 8 | 0 |
| 10. | சுந்தரகாண்டம் ... ... ... | 0 | 4 | 0 |
| 11. | இராமாயண அகவல் ... ... | 0 | 3 | 0 |
| 12. | ஹேமவர்மன் கதை / வெனீஸ்வர்த்தகன் கதை / லோஹிதன் | | | |
| 13. | வானசாஸ்திரம் ... ... ... | 1 | 0 | 0 |

இப்புத்தகங்கள் வேண்டுவோர்கள்

கும்பகோணம் ஸ்ரீ கிருஷ்ண விலாஸ பிரஸ்,

மானேஜரிடத்திலும்,

மேற்கண்ட

கம்பெனியிலும் பெற்றுக்கொள்ளலாம்.